
# எனக்குள் பேசுகிறேன்...



விசா பப்ளிகேஷன்ஸ்

பாலகுமாரன்

# எனக்குள் பேசுகிறேன்

பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்
புதிய எண்: 16 பழைய எண்: 55
வெங்கட்நாராயணா சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.

முதற்பதிப்பு : டிசம்பர் 1999
இரண்டாம் பதிப்பு செப்டம்பர் 2002
உரிமை : ஆசிரியருக்கு
**விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு**

---

ENAKKUL PEASUKIREAN
By : BALAKUMARAN
Second Edition : Sept 2002
Total Pages : 192
Paper used : 11.6 Cream wove

**விலை ரூ. 48-00**

கிடைக்குமிடம்:

**திருமகள் நிலையம்**
பழைய எண : 55, புதிய எண் : 16,
வெங்கட் நாராயணா சாலை,
தி. நகர், சென்னை-600 017
**போன் :** 4342899, Fax : 91-44-4341559
4327696

Available at :

THIRUMAGAL NILAYAM
New No. 16, Old No. 55,
Venkatnarayana Road,
T Nagar, Chennai-600 017
Phone : 4342899, 4327696
Fax : 91 - 044 - 4341559

அச்சிட்டோர் :

யோகி ராம்சுரத்குமார் பிரிண்டர்ஸ்
12, கஜபதி தெரு, சென்னை-5

12—1—2000
பம்பாய்

இனிய பாலகுமாரன்,

நேற்று குழந்தைகளோடு பம்பாய் வந்து சேர்ந்தேன். நீங்கள் சொன்னது போல குழந்தைகள் சிறிதும் படுத்தாமல் சந்தோஷமாக வந்தார்கள். உங்களிடம் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது உங்கள் வார்த்தைகள் பலிக்கின்றன.

பதினெட்டு வயதில் உங்களை நான் படிக்க ஆரம்பித்து, புரிந்தும் புரியாமலும் அதைப் பற்றி விவாதித்து, இன்று முப்பத்து நாலு வயதில் இரண்டு குழந்தைகளுக்குத் தாயான பிறகு உங்களைச் சந்தித்தது திகைப்பாகவும் சந்தோஷமாகவும் இன்னதென்று சொல்ல முடியாத ஒரு உணர்ச்சியாகவும் இருக்கிறது. இதைப் போல் வேறு யாரேனும் அனுபவித்திருப்பார்களா என்பது சந்தேகமே.

படிக்க ஆரம்பித்ததிலிருந்து நேற்று வரை உண்டான இடைப்பட்ட காலத்தில், பல்வேறு முறை பல்வேறு நிகழ்வுகளில் உங்களை நினைத்துக்கொண்டிருக்கிறேன். கதறி அழுகிற மனநிலையிலும், நல்ல இயற்கைச் சூழ்நிலைகளை பார்க்கும்போதும், செத்துப்போய் விடலாமா என்று நினைத்த வேதனையிலும், குதூகலத்திலும் சந்தோஷத்திலும் உங்களை நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

'பாலகுமாரன் இந்த விஷயத்தை எப்படி யோசிப்பார்' என்று யோசித்தே எனக்கு யோசிக்கத் தெரிந்து விட்டது. படபடப்பாகவும், பரபரப்பாகவும் இருக்கவே எனக்கு சொல்லித்தரப்பட்டிருக்கிறது. உங்களைப் படித்த பிறகு, உங்களைப்பற்றி யோசிக்க ஆரம்பித்த பிறகு என்னுள் நிறைய மாற்றங்கள். அந்த மாற்றங்கள் ஏதோ ஒரு தினத்தில், ஒரு நேரத்தில் உள்ளே சட்டென்று செயலாகி விட்டது. அதாவது ஆழமாகப் படிந்து விட்டது. எனவே, பாலகுமாரன் எப்படி யோசிப்பார்

என்பதை அடிக்கடி பயிற்சிசெய்து பிறகு உங்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு நானே நிதானமாய் யோசிக்கத் துவங்கி விட்டேன். என்னைப்பற்றி எதுவும் தெரியாமல் எனக்கு நீங்கள் செய்த மிகப்பெரிய உதவி இது. என் வாழ்க்கை நலமாகவும், அமைதியாகவும் இருப்பதற்கு நீங்களே காரணம். குருவே நமஹ உங்களை நான் குருவாக மனசுக்குள் வரித்துக் கொண்டிருப்பதற்கும் இதுவே காரணம்.

இந்த தேசத்து குழந்தைகளுக்கு இப்படி சொல்லித் தர வேறு யார் இருக்கிறார்கள் 'சினிமா சினிமா என்று டி வி. பெட்டிக்கு முன்னால உட்கார்ந்து வாழ்க்கையை பாழாக்கிக்கொண்டிருக்கிற இளைஞர்களுக்கு ஒருமுறை உங்கள் புத்தக அறிமுகம் கிடைத்தால்,' கிடைத்து நெஞ்சில் பதிந்துவிட்டால் பிறகு அவர்கள் வாழ்க்கை வேறுவிதமாக மாறிவிடும். உங்களைத் தெரியும் வரை இந்த மாற்றம் வேறு எவராலும் ஏற்பட வாய்ப்பில்லை.

ஆனால். உங்களைப் படிப்பதற்கும், ஒரு அமைதி, ஒரு தலையெழுத்து தேவைப்படுகிறது. வேறு ஒரு சூழ்நிலையில் நான் இருந்திருப்பின், உங்களை நான் படிக்காமல் விட்டிருப்பது மட்டுமல்லாமல், உங்களைப்பற்றி அலட்சியமாய், கேலியாய்க்கூட நினைத்திருப்பேன். தொலைதூரம் பம்பாய்க்கு குடித்தனம் வந்ததும், இங்குள்ள மனிதர்களோடு போராடியதும், வெறித்துப் போனதும், சே...என்ன செய்வது' என்று தனித்துப்போய் உட்கார்ந்திருந்ததும், அந்தநேரம் உங்கள் இதை கிடைத்ததும், படித்து "உற்சாகமானதும் தலையெழுத்து சம்பந்தப்பட்டதுதான் என்று தோன்றுகிறது. சென்னையிலேயே இருந்திருந்தால் வெறும் அரட்டைக்கல்லிப் பெண்ணாக போயிருப்பேன் கடவுளுக்கும் நன்றி.

இந்த விஷயத்தைத்தான் நீங்கள் என்னோடு நேரில் பேசும்போது, 'வாழ்க்கையில் அதிருப்தி ஏற்பட்ட

வருக்கே ஞானம் வருகிறது' என்று சொன்னீர்கள் 'வாழ்க்கையில் திருப்தி ஏற்பட்டுவிட்டால் ஞானத்திலிருந்து வெகுதூரம் போய்விடுகிறோம்' என்றும் பேசினீர்கள். 'பட்டுப்புடவை, வைரத்தோடு, மெகந்தி' பார்ட்டி என்று சுற்றி சுற்றி வரும் பெண்களுக்கு எதுவும் தேவையில்லை. எவரும் தேவையில்லை. அவர்களையே அவர்கள் நிதானமாய் இடித்து ருசித்து தின்பார்கள்.' என்று புதுவிதமாய் விளக்கினீர்கள்.

உங்களுடைய ஜூனியர் விகடன் தொடர் 'எனக்குள் பேசுகிறேன்' இளைஞர்களுக்கு மிகவும் உதவிகரமானது. கிட்டதட்ட இதேமாதிரி தொடர்களை நீங்கள் வேறு சமயம் எழுதியிருக்கிறீர்கள். இந்த முறை இன்னும் கூர்மையாகி இருந்தது. இன்னும் தெளிவாக இருந்தது. ஜூனியர் விகடனை பம்பாயில் கூட பலபேர் கையில் வைத்துக் கொண்டு படிப்பதை பார்த்திருக்கிறேன். அது பரவலாய் பலராலும் படிக்கப் படுகிற பத்திரிகை. உங்கள் கட்டுரையைத் தாங்கிவந்து நிறைய இளைஞர்களுக்கு அது உதவி செய்கிறது

கட்டுரையின் இன்னபகுதி சிறப்பாக இருந்தது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. எல்லாமுமே எளிமையாய், நேரடிப் பேச்சாய், புரிந்து கொள் என்கிற சிறு அதட்டலாய் இருந்தது. இதுதான் பாலகுமாரன் ஸ்பெஷாலிட்டி, நிறையபேர் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து, 'அடப்போடா, போரடிக்குதுடா' என்று புத்தகத்தை மடக்கிவைக்கசெய்து விடுகிறார்கள். ஆனால் நீங்கள் மொழி ஆளுமையையும் கைவிடாது கட்டுரையின் கருத்தையும் கனமாக்கிக் கொண்டே போகிறீர்கள், எனக்குத் தெரிந்து இப்படி எழுத தமிழில் வேறு ஆளே இல்லை.

இன்னும் எனக்கு ஆச்சரியம் என்னவென்றால், கட்டுரையில் எழுதியது போன்று நீங்கள் நேரிலே இருக்க மாட்டீர்கள் என்ற பலத்த சந்தேகம் ஒன்று எனக்கு இருந்தது. ஆனால் உங்கள் கட்டுரையின் மொழியும்,

உங்களுடைய பேச்சும் ஒன்றே என்று சந்தித்த இரண்டு முறைகளில் தெரிந்து கொண்டேன்.

உங்களுடைய பலம் உங்கள் வீடு. உங்கள் வீடு அன்பானது. கலகலப்பானது. கண்டமேனிக்கு பரஸ்பரம் கேலி செய்து கொள்கிறீர்கள். அதே சமயம் அதை லேசாகவும் எடுத்துக் கொள்கிறீர்கள்.

சந்தித்த அந்த ஒரு வார காலத்தில் உங்கள் உடல் நலம் பற்றி உங்கள் வீடு அதிகம் கவலைப்பட்டது. ஒரு சிஸ்டம் இல்லாமல் நீங்கள் வேலை செய்கிறீர்கள். இது தவறு. மேலும் ஒரு கம்ப்ளீட் செக்கப் உங்களுக்குத் தேவைப்படுகிறது. மறுப்பு சொல்லாமல், தள்ளிப்போடாமல் தயவு செய்து உடனடியாய் இதை செய்து முடியுங்கள். சாப்பிடும் போது வியர்ப்பது நல்ல அறிகுறி அல்ல.

என் மகள் யோகேஸ்வரி யாரோடும் சட்டென்று அதிகம் ஒட்டமாட்டாள். உங்கள் முதுகை கட்டிக் கொண்டு இழைந்து தாடி மாமா, தாடி மாமா என்று கொஞ்சியது ஆச்சரியமாக இருந்தது இதே விதமாகத் தான் பேச்சாளர் வக்கீல் சுமதியின் குழந்தையும் உங்களோடு ஒட்டிக்கொண்டது என்றுவீட்டில்சொன்னார்கள்.

சத்தியம் எங்கிருந்தாலும் குழந்தைகள் அங்குபோய் நெருங்கி ஒட்டிக் கொள்ளும். உங்கள் எல்லா நலத்துக்காகவும் பம்பாய் சித்திவிநாயகர் கோயிலில் பிரார்த்தனை செய்வேன். அவர் வரப்பிரசாதி உங்கள் உடல்நலம் சீரடைய வேண்டும் என்பதுதான் என்முதல்பிரார்த்தனையாக இருக்கும். நீங்கள் உங்கள் உடல் நலனில் சற்று பொறுப்பற்று இருக்கிறீர்கள் என்பது என் எண்ணம். வார்த்தை கடுமைக்கு மன்னித்துக் கொள்ளுங்கள். மறுபடியும் சென்னை வரும்போது தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு வருகிறேன் மறுபடியும் நன்றி.

என்றும் அன்புடன்,

கோரேகான்

**சிவசங்கரி**

**சந்திரமோஹன்**

20-12-99
புதுக்கோட்டை

இனிய பாலா அவர்களுக்கு,

வணக்கமுடன் சீனிவாசன் எழுதிக் கொள்வது இங்கு நாங்கள் அனைவரும் நலம். அதுபோல் அங்கு உங்கள் நலத்தையும், குடும்பத்தார் நலத்தையும் அறிய ஆவல்.

நிற்க. நீங்கள் 'ஜூனியர் விகடனில்' எழுதிய 'எனக்குள் பேசுகிறேன்' என்னும் கட்டுரைத்தொடர் மிகவும் உபயோகமான வாழ்க்கைக்கு பயன்படும்படியான மிக நல்ல தொடர். காமம், கோபம், சோம்பல், அதிகமான பேச்சு போன்ற பல விஷயங்களை நமக்குள்ளே விசாரித்து நம்மைநாமேசெம்மைப்படுத்திவாழ்க்கையை தெளிவோடு வாழ சொல்லிக்கொடுத்து உள்ளீர்கள். இந்த உதவிக்கு உங்களுக்கு மிகவும் நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

இதைப்பற்றியெல்லாம் மூத்த தலைமுறை பெரியவர்களுக்கு தெரிந்திருந்தாலும் இப்படி புரியும்படியாக சொல்லிக் கொடுப்பது கடினம். இல்லையெனில் தெரிந்து இருந்தாலும் பட்டுத் தெரிந்து கொள்ளட்டும் என்று விட்டுவிடுவார்கள். ஆனால் தாங்கள் அதுபோல் அல்லாமல் நாங்கள் வாழ்க்கையில் அதிகம் அடிபடாமல், வாழ்வில் ஜெயிப்பதற்கான வழிமுறைகளை எங்களுக்கு போதித்து உள்ளீர்கள். மீண்டும் என்னுடைய மனம் கனிந்த நன்றியை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வளவு விரைவாக இந்த கட்டுரைத் தொடர் முடிந்தது எனக்கு மிகவும் வருத்தமாகி விட்டது. 'இது போல்சொல்ல இன்னும் அதிக விஷயங்கள் உள்ளன' எனக்கூறி கட்டுரையை முடித்து உள்ளீர்கள். அந்த சொல்ல வேண்டிய பல விஷயங்களை எங்களுக்கு சொல்லிக்கொடுங்கள் பாலா. அதுபோல் இக்கட்டுரைத்

தொடர் புத்தகவடிவில் வெளிவந்தால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அவ்வாறு இது வெளிவந்தால் பல்சுவைநாவலில் அறிவிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், நீங்கள் டிராக்டர் கம்பெனியில் இருந்து தானே எழுத்துலகிற்கு வந்தீர்கள். ஆனால் மேலே உள்ள கட்டுரைத்தொடரின் 25வது அத்தியாயத்தில், 'நான் அப்போது இன்சூரன்ஸ் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்த புதிது' என்று எழுதியுள்ளீர்கள். எனக்கு குழப்ப மாக உள்ளது பாலா. முடிந்தால் தெளிவுபடுத்தவும். மேலும் சுப்ரபாதம் இதழில் தியானம் கற்பதற்கான இடங்களின் விலாசங்களை. தெரியப்படுத்தி உள்ளமைக் கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

தங்களுடைய இனிய அன்பையும். ஆசீர்வாதத்தை யும் என்றென்றும் வேண்டி இக்கடிதத்தை முடிக்கிறேன். மீண்டும் சந்திப்போம்.

முகவரி : நன்றி.

**கா. ஸ்ரீனிவாசன்** என்றென்றும் அன்புடன்,

S/o S. காந்தி **கா.ஸ்ரீனிவாசன்.**

பிளாட் எண். 61, ஸ்ரீலட்சுமி பவனம்,
பாக்கியலட்சுமி நகர்,
புதுக்கோட்டை,
தூத்துக்குடி மாவட்டம்.
Pin : 628 103.

# எனக்குள் பேசுகிறேன்...

## 1

**காட்டாற்று**

**வெள்ளம்**

**போல்**

**பொங்கிவரும்**

**எண்ணங்கள்**

**உ**லகம் ஒரே குடும்பம் என்பது மிகப்பெரிய உண்மை. தொலைக்காட்சிப் பெட்டியின் வழியே உலகத்தை உற்றுப் பார்க்கிறபோது, மொழியாலும் மதத்தாலும் நிறத்தாலும் பலத்தாலும் மனிதர்கள் வேறுபட்டு இருந்தாலும் அவர்களின் சந்தோஷங்களும் துக்கங்களும் ஒன்றே.

எல்லா ஊரிலும் கல்யாணச் சந்தோஷமும் போலீஸ் தடியடியும் ஒரே விதம். போரில் கணவனைப் பறி கொடுத்த மனைவி, எல்லா ஊரிலும் நிற்க முடியாமல் இன்னொரு தோளில் சாய்ந்து கொண்டுதான் அழுகிறாள்

குழந்தையைக் குளிப்பாட்டும் அம்மா, காற்றில் உடை தூக்கிக் கொண்டதும் வெட்கப்படும் பெண், கார் லேசாக உரசிவிட சண்டைக்கு எகிறுகிற ஆள், 'அந்தக் காலத்துல எல்லா விஷயமும் ரொம்ப சீப்' என்கிற பெரிசு போன்றவை ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன.

அதிகார துஷ்பிரயோகம், லஞ்சம், விபசாரம், களவு, சூறையாடல், சிறுவர் கொடுமை, போக்குவரத்து மீறல்... இவை யாவும் எங்கும் சகஜமாக நடக்கின்றன.

சலூன், கையேந்தி பவன், தியேட்டர் வாசல், பார்க் பெஞ்சுகள், காய்கறி—மீன் மார்க்கெட் போன்றவை ஒரே சாயலில் இருக்கின்றன.

ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் 'சாம்பிள் மிட்டாய், கொடுப்பவள், தூசு உறிஞ்சும் மெஷின் விற்பவன். கட்டை விரலைப் பின்னியது போலக் கழுத்து ஒட்டி டை கட்டி பெரிய தட்டு நிறைய உணவு கொண்டு வரும் பேரர். ரயில்வே கார்டு, குண்டான வாயிற்காப்போன்' பதுங்குநடை மாடல் பெண்கள். அந்தப் பெண்களின் முக வெறுமை எல்லா தேசத்திலும் ஒன்றாகவே இருக்கிறது.

செல்வச் செழிப்பு சில இடங்களில் முன்பின்னால் இருந்தாலும் வாழ்க்கை வசதிகள் மேல்கீழாக இருந்தாலும் குடும்பஸ்தன் என்பவன் ஒரே மாதிரியான மனோநிலையில்தான் இருக்கிறான்.

விஞ்ஞானம் கைகொண்ட செய்தித் தொடர்பால் உலகம் சுருங்கி, எல்லா விஷயங்களும் எல்லாருக்கும் எளிதில் தெரிய ஆரம்பித்து விட்டது.

'ஐரோப்பிய பிரமுகர் சுட்டுக் கொலை'—தொலைக் காட்சி அலறியது. ''அடடே...நேத்துகூடப் பார்த் தேனே'' என் மனைவி கூவினாள். 'டி.வி—யிலே'

என்பது, அங்கே தொக்கி நிற்கும் வார்த்தை அடிக்குரலில் அமுங்கிவிட்ட அஸ்வத்தாம வார்த்தை.

டயானா என்கிற பெண். ஒரு இளவரசனைக் காதலித்து; அதை இளவரசர் வீடு எதிர்த்து, பிறகு சமாதானமாகி, திருமணமாகி, மனைவியாகி, தாயாகி, நல்லதாகி கெடுதலாகி, திசை திரும்பி, பால் திரிந்து தரையில் கொட்டப்படும் வரை நமக்குச் சொல்லப்பட்டது. 'அடிப்பாவி மகளே...' என்று அவர் மரணம் உலகம் முழுதும், அலற வைத்தது...அழவைத்தது.

"வரவர மனிதர்கள் நிறைய விஷயங்கள் தெரிந்து கொள்ளப் பதறுகிறார்களோ...?" என்று நான் நினைத்ததுண்டு. யோசித்துப் பார்த்தால், திரும்பத் திரும்ப ஒரே மாதிரி விஷயம்தான். காலம், இடம், நபர்தான் வேறு. உலகம் என் வீடு போலிருக்க, என் வீடு உலகம் போல் விரிய...உலகம் முழுவதும் என் குடும்பம் என்பதுபோல், அங்குள்ள நல்லது, கெட்டது என்னைத் தாக்குவது போல் உணர்ந்து, இங்கே எதிரொலிக்கிறேன்.

மனித வாழ்க்கையில் மனங்களை உற்றுப் பார்த்து யோசிக்கப் போகிறேன். 'என்ன இது, ஏன் இப்படி...?' என்று சிந்திக்கப் போகிறேன். யோசிப்பினுடைய இன்னொரு வடிவம் தனக்குள் பேசுதல். நீங்கள் வளர வளர, தனக்குள் பேசுவது அதிகரித்துவிடும். பொறுப்புகள் அதிகமாக, தனக்குள் பேசுவது விரைவாகும்.

தேர்தல் முடிவுகளைக் கேட்டுவிட்டு, 'நான் நினைச்சேன்...இப்படித்தான் நடக்கும்னு,' 'இப்படி நடக்காம இருக்கணும்னா, நான் நினைச்சா மாதிரி நடந்திருக்கணும்' என்று யோசிப்பது எல்லோருக்கும் இயல்பாகிவிட்டது.

'எனக்குள் பேசுகிறேன்' என்பது ஓர் உரத்த சிந்தனை ஓர் எதிரொலி. எது பற்றித்தான் என்பது இல்லாமல்

நெஞ்சைத் தாக்குகிற எதையும் நிறுத்தி யோசிக்கிற முயற்சி. உங்களையும் அவ்விதம் யோசிக்க வைக்கவே இந்தக் கட்டுரைத் தொடர்.

இதுவரை யாரும் எழுதாததை நான் எழுதப்போவதாய் நினைக்கவில்லை. ஒரு காலகட்டத்தில் நிகழ்ந்த சில சம்பவங்களுக்கு, ஒரு தனி மனிதனுடைய விருப்பு வெறுப்பற்ற அபிப்பிராயம்தான் இந்தக் கட்டுரை.

அபிப்பிராயம் என்று ஒன்று சொல்லப்பட்ட பிறகு, அந்த அபிப்பிராயத்தை ஒட்டியும் வெட்டியும் பேசிப் பிரச்னையை அணுகுவது எளிது. கண்முன்னே தோன்றிய பிரச்னையை அணுகுவதுதான் மனிதனின் தினசரிக் காரியமாக இருக்கிறது.

சில சமயம் அணுகுவதோடு மட்டுமல்லாமல், உடனடியாகச் சில நிமிடங்களில் பிரச்னைகளுக்கு முடிவு தேட வேண்டியிருக்கும்.

ஒரு நூறு பேர் உங்கள் வீட்டு முன் வந்து, 'உன்னைக் கொன்றுவிடுவேன்' என்று பயமுறுத்தினால், நீங்கள் என்ன செய்வீர்கள்...? நீங்கள் எப்படி எதிரொலிப்பீர்கள்...?

என்ன செய்ய வேண்டுமென்று என் அனுபவம் உங்களுக்குச் சொல்லித் தரக்கூடும். உங்களுக்கு அந்தக் கதி ஏற்பட்டால், நிச்சயம் என் அனுபவம் உதவக்கூடும்.

எவருக்கும் எங்கேயும் எதுவும் நேரலாம் என்பதுதான் இன்றைய வாழ்க்கை.

எனவே, அனுபவப் பகிர்வு என்பது மிகமிக அவசியம்.

நாம் நம்முடைய அனுபவத்தை மட்டும் பகிர்ந்து கொள்வதில்லை. எங்கோ, எவருக்கோ நேர்ந்த அனுபவத்தை நம் அனுபவமாகக் கொண்டு, நாம் பகிர்ந்து கொள்வதும் உண்டு.

"வரதன் ஹார்ட் அட்டாக்ல பூட்டான், தெரியுமா...?"

"ஐயோ, முப்பத்திரண்டுதானடா அவனுக்கு..."

"வாஸ்தவம்...ஆனா, குடி இருக்கே அது பொல்லாதது..."

"எல்லாரும்தான்டா குடிக்கிறாங்க..."

"அவனுக்கு ஷுகர் இருக்கே...சர்க்கரை இருக்கிறவன் குடிக்கக்கூடாதே...நான் கொஞ்சம் தூங்கறேன்டான்னான். தூங்கிட்டான்..."

"சர்க்கரை இருக்கிறவன் குடிக்கக்கூடாதா...?"

"மோந்துகூடப் பார்க்கக்கூடாது..."

"எனக்கு இருக்குடா..."

"டம்ளரைக் கீழே வை. வெளியே போ..."

திரவம் பிடுங்கப்பட்டது. தொட்டியில் ஊற்றப் பட்டது. அடுத்த ஒருமணி நேரத்தில் நீரழிவு நோய் பற்றி நூறு பக்கம் வியாசம் எழுதும் அளவுக்குப் பலபேரின் அனுபவங்கள் அவருக்குக் கொட்டப்பட்டன.

தாக்கப்பட்டவர்கள் செவிமடுத்தார்கள். சர்க்கரை நோயால் தாக்கப்படாதவர்கள் திசை திரும்பிக் கொண்டார்கள்.

"இந்த டயாபடிக் ஆளுங்களே லொள்ளும்மா... 'இத்தச் சாப்பிட ாதே. செத்துப் பூடுவே...அத்தச் சாப்பிடாதே. நாறிப் பூடுவே'னு எதனா சொல்லிக்கிட்டே இருப்பாங்க, நான் 'சரி'னு சொல்லிட்டு வேற பக்கம் போயிடறது. சங்காத்தமே வெச்சுக்கறது இல்லே..."

ஆக அனுபவம் பற்றிய ஆர்வம் இரண்டாகிறது. வேண்டுவது, வேண்டாதது.

பிரச்னையின் கத்தி நுனி, உங்கள் கழுத்தைக் கீற ஆர்வம் அதிகமாகும். பிரச்னையைச் சந்தித்து, வெட்டுப் பட்டத் தழும்பு இருந்தால், ஆர்வம் இரட்டிப்பாகும். அறிந்து கொள்ளவும் அறிந்ததைப் பற்றிப்பேசவும் மனம் துடிக்கும்.

இந்த அனுபவப் பகிர்தலின் பலம் எவ்வளவு என்பதையும் யோசிக்க வேண்டும். 'கருப்பு கருப்பா வாந்தியெடுத்தான்' என்பது, 'காக்கை காக்கையாய் வாந்தியெடுத்தான்' என்று பரவியதுபோலச் செய்திகளின் சாரம் தவறாக வந்து சேரலாம்.

நூறு வீடுகள் பற்றியெரிவதை நான் பார்த்தேன். அதை என்ன முயன்றாலும், நான் சொல்வது பாதியாகத்தான் முடியும். மீதியை, நீங்கள் பார்த்த நெருப்பு வைத்து ஈடு செய்து கொள்ள வேண்டும்.

இந்த ஆபத்து அனுபவப் பகிர்தலில் இருந்தாலும், அனுபவப் பகிர்வு நிறுத்தப்பட்டதே இல்லை அனுபவம் பகிர்ந்து கொள்ள, பகிர்ந்ததைப் புரிந்துகொள்ள வாழ்க்கை எளிதாகிறது.

எப்போதோ வரும் நீரிழிவுக்கு இப்போதே மனம் தயாராகிவிடுகிறது. தடுக்கத் திட்டங்கள் போடப்படுகின்றன. எதிர்த்து நூறு பேர் என்ன, ஆயிரம் பேர் வந்தாலும் அமைதியாக மனம் செயலில் இறங்குகிறது. காரணம், அனுபவம் பகிர்தல்.

'எனக்குள் பேசுகிறேன்' என்ற இந்தக் கட்டுரைத் தொடர், ஒருவிதமான அனுபவப் பகிர்தல். உங்கள் அனுபவம் பொறுத்து, இது உள்ளே போவதும் போகாமல் சிதறி விழுவதும் நடக்கும்.

இனி, தொடர்...

இந்த மாதிரி செய்திகள் ஆண்டுக்கு ஆயிரமாவது தினசரிகளில் வருகின்றன. ஆனால், இந்தச் செய்தி என்னைப் பாதித்தது. மனதில் ஒட்டிக் கொண்டு இறங்க மறுத்தது. உண்ணும் போதும் உறங்கும் போதும் தனித்திருக்கும் போதும் கும்பலிலும் இந்தச் செய்தியின் சாரமே என்னை வாட்டியது. இனம்புரியா தவிப்பு ஏற்பட்டது.

வளர்ந்து வேலைக்குப் போகும் நிலையிலுள்ள இரண்டு மகன்கள், கூலியாட்கள் வைத்துத் தந்தையை வெட்டிக் கொன்றார்கள். 'கொள்ளைக்காரர்கள் கைவரிசை' என்று நாடகமாடினார்கள். 'அரசியல் எதிரிகள்! என்று சந்தேகப்பட்டார்கள். வெகு எளிதில் போலீஸார் உண்மையைக் கண்டு பிடித்துவிட, கைதானார்கள்.

தந்தை கடுமையானவர். தேவையற்ற கண்டிப்பு உள்ளவர். அடிதடி ரகளை செய்பவர். அம்மாவை அடித்துத் துன்புறுத்துபவர் போன்ற காரணங்கள் சொல்லப்பட்டன.

அவர்கள் இருபத்தைந்து, இருபத்தோரு வயது வாலிபர்கள், மணவாழ்க்கைக்கு இன்னும் சில வருடங்களில் நுழையப் போகிறவர்கள். உழைக்கத் தெரிந்தவர்கள். சம்பாதிக்கத் தெரிந்தவர்கள். சோம்பல் இல்லாதவர்கள். பெரிதாகக் கெட்ட பழக்கங்கள் இல்லாதவர்கள்.

துபாய் வெயிலில் வறுபட்டுச் சம்பாதித்து, சென்னைப் புறநகரில் புல்தரை வாங்கி, வீடு கட்டி, ஐந்நூறு சதுர அடியில் ஆரம்பித்து, மெள்ள மெள்ள நிதானமாக அகலமாக்கும் ஆசை உள்ளவர்கள். தவறாமல் வோட்டுப் போடுகிறவர்கள். வரி கட்டுகிறவர்கள். 'இந்தியா ஜெயிக்க வேண்டும்' என்று பிரார்த்தனை செய்கிறவர்கள்.

ஆனால், எல்லாம் ஒரு வீச்சில் போயிற்று. சட்டம், அவர்கள் இரண்டு பேர் வாழ்க்கையையும் இழுத்துக் கொண்டு போய் இருட்டறையில் வைத்து விட்டது.

அந்தக் குழந்தைகளுக்கு என்றைக்குக் கதவு திறக்கும்? எப்போது விடியும்.... ஏன் இந்த விபரீதப் புத்தி...? யார் தூண்டுதல்...? என்ன வெறி...?

கோபத்தில் இழுத்த கத்தி அல்ல...திட்டமிட்டுச் செய்த கொலை

அப்படியானால் இது எத்தனை நாள் வேதனை...? எத்தனை ஆண்டுகளாக ஏற்பட்ட ரணம்...ஓர் இடை விடாத அமைதியின்மை என்னை வாட்டியது.

ஆசுவாசப்படுத்திக் கொண்டு யோசித்த போது ஒன்று புரிந்தது. அவர்கள் செய்து விட்டார்கள் நான் செய்ய வில்லை. நான் செய்திருப்பின், இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்க மாட்டேன். ஆயுள் தண்டனை முடிந்து, வடக்கே ஏதேனும் ஒரு ஆசிரமத்தில் பசுக்கள் மேய்த்துக் கொண்டிருப்பேன். தமிழில் கதை எழுதும் கனவு காய்ந்து, உலர்ந்து போயிருக்கும்.

அந்த இரண்டு இளைஞர்களுக்கும் எத்தனை கனவு கள் உலர்ந்து போயினவோ...யாருக்குத் தெரியும்...?

என் மனம், அவர்கள் மீது தாவி யோசித்தது. வீட்டில் ஒரு இடத்தில், ஒரு மனிதரிடம் வன்முறை இருந்தால் கூட விபரீதமாகிவிடுகிறது. திடீரென்று வீடு முழுவதும் வன்முறை பரவி, உச்சகட்டம் அடைந்து, சூறாவளியாகி சிதைத்துப் போட்டு விடுகிறது.

வன்முறை அமைதி கொடுத்ததாக வரலாறே இல்லை. வன்முறையால் ஏற்படும் அமைதி மிகக் குரூர மானது. அது அடிபட்ட நாகம். புதர் பதுங்கிய புலி தோப்புக்கு நடுவே அசையாது நிற்கும் ஒற்றைக்கொம்

பன் யானை கிணற்றுக்குள் உறங்கிக் கிடக்கும் விஷவாயு விரிசல் விட்டு, விழக் காத்திருக்கும் கோபுரக்கலசம் சாம்பல் கக்கும் எரிமலை வெளியே தெரியாமல், தனக்குள் முணுமுணுக்கும் பூகம்பம்.

'இந்த வீட்டில் நான் வெச்சதுதான் சட்டம். யாராவது வாயைத் தொறந்தா, அடிச்சுக் கொன்னுடுவேன், என்னை எதிர்த்துப் பேசினா, விட்டுருவேன்னு நெனைச்சியா...? துரத்தித் துரத்தி அடிப்பேன்...என்னை யாருனு நெனைச்சுக்கிட்டிருக்கே...?' இந்தக் கூச்சலை அடிக்கடி கேட்கும் வீடு, ஒரு நாள் தடம் புரளும். தரை உருளும். தாங்கமுடியாமல் தற்காப்புக்காக, அதுவும் பதிலுக்கு ஆயுதம் உருவும்.

ஆண்டானை அடிமை எதிர்த்துக் கேட்க. அடிமையை ஆண்டான் அடித்து நொறுக்க...ஏதோ ஒரு கத்தி ஏதோ ஒரு நெஞ்சில் வெறியாக இறங்கி, ரத்தம் ருசிக்கும்.

ஒரு வினையின் காலகட்டம் மூன்று முறை விரல் சொடுக்கும் நேரம்தான். விளைவு—பல வருடங்கள்... பல மனிதர்கள்...பாதிக்கப்பட்டுப் பரிதவித்தல் தொடரும்: 'இது நடக்காமல் இருந்திருக்கக்கூடாதா...?' என்ற ஏக்கம் பரவும்.

வீடு என்பது, கூடி வாழும் இடம். கூடி வாழும் இடத்தில் வன்முறைக்கு ஏது முகம்...? அப்படி ஒரு முகம் இருப்பின் என்னவாகும்...?

# 2

வீடு என்பது கூடி வாழும் இடம். கூடி வாழும் இடத்தில் வன்முறைக்கு ஏது முகம். அப்படி ஒரு முகம் இருப்பின் என்னவாகும்?

வீடு வெளிறிப்போகும்.

வெளிறிப்போதல் என்றால்? பயந்து மௌனமாகி, அடுத்த கோபத்தை எதிர்பார்த்து அதை எப்படித் தாங்கப்போகிறோம் என்று கவலையோடு இருத்தல்.

ஒரு வீடு இப்படியிருப்பின், அது எங்ஙனம் மேம்படும்...? எப்படி வளரும்...? வளர்ச்சியில்லாத எதுவும் உலகில் இறந்த விஷயம். இறந்து, உறைந்துபோன வீடுகள் சமுதாயத்துக்கு நஞ்சு.

சரி, வன்முறையின் அடிவேர் எது...?

அறியாமை வெளிபடுத்தும் தைரியம் எதனால்? அகங்காரம் அதிகரிப்பதால், அகங்காரம் என்ன செய்யும்? அதீத ஆளுமைக்கு ஆசைப்படும். அதீத ஆளுமை ஒருவர் ஏன் செய்ய வேண்டும். வேறு வேலை இல்லாததால்.

அடுத்தடுத்து வேலைகள் இருப்பின் மனம் அவற்றின் பின்னே ஓடுமேயொழிய, கோபத்துக்குத் திரும்பாது. ஏதும் தவறு கண்டு திரும்பினாலும் கணநேரம் பாய்ந்துவிட்டு வேலை நோக்கி ஓடும்.

திட்டமிட்டவன்முறைதான் மிகப் பெரிய கொடுமை. அதாவது வன்முறை என்கிற நாற்றம். கெட்டுப் போன மாமிசம் வெகுநாளாய்ப் புத்தியில் அழுந்திக் கிடந்

திருக்கிறது என்று அர்த்தம் இப்படி ஒரு வன்முறை உள்ளேயிருப்பின் சந்தோஷமாய் இருத்தல் இயலாது.

**தானும் சந்தோஷமாய் இராது, பிறரையும் சந்தோஷப் படுத்தாது** ஒரு அவல வாழ்க்கைதான் வன்முறையின் பரிசு.

வன்முறையின் வெளிப்பாடு தண்டித்தல். தண்டித்தலின் அடிநோக்கம் சொல்லித்தருதல்.

நான் சொல்வது உனக்குப் புரியவில்லை...இரண்டு அறை விட்டால்தான் உனக்குப் புரியும் என்று சொல்லித் தருதல்.

இரண்டு அறைவிட்டால் புரிந்துவிடுமா...?

சொன்னது மறந்துபோகும். மனதில் பதியாது போகும். அறைந்த விரல்களும் அவமானமும் மட்டுமே பதியும்.

அவமானப்பட்ட எவருக்கும் உடனடியாகத் தோன்றும் எண்ணம், பதிலுக்கு அவமானப்படுத்துவதே. பழிக்குப் பழிவாங்குவதே.

எதற்கு அவமானப்படுத்தப்படுகிறோம். என்பது உணராது, பட்டது மட்டுமே மனதில் நிற்கும். எனவே, சொல்லிக்கொடுத்தல் என்பது பலத்த தோல்வியடைகிறது.

வன்முறைக்கு வேகமாய் ஒரு மனிதர் இறங்க வேறு என்ன காரணம் இருக்க முடியும்.

எங்கு வன்முறை செல்லுபடியாகுமோ, எங்கு எதிர்ப்பு வராதோ, எவா பதிலுக்கு அடிக்க மாட்டாரோ, எவரால் அடிக்க முடியவில்லையோ. அவரிடம் வன்முறை காட்டவே மனிதர்கள் விரும்புவார்கள்.

கொன்னுடுவேன் என்று கூற, முகத்துக்குமுன் விரல் ஆட்ட, கேட்டவர் எழுந்து வந்து நீட்டிய விரலை

மடக்கிப் பிடித்து, வலிக்க வளைத்து, 'மறுபடி சொல்...' என்று சொன்னால் கொன்னுடுவேன் என்று கூறியவன் 'தப்பு சார்...தப்பு சார்...இனிமே யாரையுமே இப்படிச் சொல்ல மாட்டேன் சார்...' என்று பதறுவான்.

மடக்க மாட்டார் என்று தெளிவாய்த் தெரிந்து கொண்டுதான் இந்த வன்முறை பயமுறுத்தல் நடக்கிறது எளியார் என்று தேர்ந்தெடுத்து இந்த நாடகம் அரங் கேறுகிறது

வேறென்ன காரணம் வன்முறைக்கு? மன அழுத்தத் தின் வெளிப்பாடு. எங்கோ இடித்துக்கொண்டு, வலியில் பல் கடித்து கண்ணில் நீர்முட்டும் வேதனையைக் கோட மாக மாற்றி, மேஜையில் இடித்துக் கொண்டதற்கு, வீட்டு நாயை எட்டி உதைக்கும் ஆண்மை.

இந்த வெளிப்பாடுக்கு மனம் அலையும் காரணம் கண்டுபிடிக்கும் எளியாரை ஏற்கெனவே தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்டு, காரணம் கண்டவுடன் எரி மலையென வெடிக்கும் 'ஏன், என்னைவிட உயரமாக வளர்ந்தாய்?' என்று தண்டிக்கும் காரணங்கள் நியாயமாக இருக்க வேண்டுமென்ற அவசியமேயில்லை.

ஒரு வீட்டுத் தலைவன் கோபமானால், கோபத்தில் வன்முறையில் இறங்கினால், பாதிக்கப்படுவது குழந் தைகள்.

அவர்கள் திகைத்துப் போகிறார்கள். பேச்சற்று வெறித்துப் பார்க்கிறார்கள். அடியைவிட அது கொடுத்த வலியைவிட, மிரட்டல் வார்த்தைகள்தான் மோசமாகத் தாக்குகின்றன. மனதில் தங்கி விடுகின்றன. வலியை முழுமையாக நினைவுக்குக் கொண்டுவர இயலாது. வார்த்தைகளைக் கொண்டு வரலாம். கொண்டு வந்தால் வலி அதிகமாகும். நிரந்தரமாகும்.

தகப்பன் கோபமாகித் தாயைத் தாக்கி நொறுக்குகிற போது ஏற்படும் மனோ அவஸ்தையை, குழந்தைகளால பயங்கரக் கனவை அனுபவித்தவர்தான் புரிந்துகொள்ள முடியும். இந்த அனுபவம் இல்லாதவர்கள் பாக்ய வான்கள்.

அந்த இரண்டு இளைஞர்கள் வீட்டிலும் இதுதான் நடந்திருக்கும். தன்மீது தந்தை கோபப்படுவதைக்கூடப் பையன்கள் பொறுத்துக் கொள்வார்கள். தாய் தவித்தால், தளர்ந்து போவார்கள். மனம் சிதைந்து போவார்கள்.

வன்முறையாளர்கள் யாவருக்கும் இரட்டை முகம் இருப்பதை எளிதில் காணலாம். வீட்டில் வெறியாகச் சீறும் இவர்கள், வெளியே நல்லவனாக, வல்லவனாக, வேண்டியவர்களுக்கு வேண்டிய நேரத்தில் வேண்டியது வழங்கும் வள்ளலாக முகம் காட்டுவார்கள்.

தான் நல்லவன் என்று ஊருக்கு மட்டுமல்ல...தானே நம்புவதற்கான அசட்டு முயற்சி இது. இந்த இரட்டை வேடம் குழந்தைகள் இன்னும் அதிகம் தாக்கும் வெறுப்பு வளர்க்கும்.

வெறுப்புப் படிந்து, படிந்து, இறுகி, பாறையாகி ஏதோ ஒரு பலவீன நேரம் ஆயுதமாகிவிடும்.

இத்தனைநாள், இத்தனை முறை வலிக்கச் செய்திருக்கிறாயே...இதோ இப்போது உனக்கு வலிக்கும்படி செய்கிறேன் பார் என்று இருபது கத்திக் குத்து உடம்பு முழுவதும் விழ, உயிர் துடிக்க, ரத்தம் ஒழுகி, மூச்சுத் திணற, கண்கள் செருக, கைகள் இறுக, கால்கள் உதற, உன் உள்மனசில் எத்தனை பேரை நோகடித்திருக்கிறாய் என்று பார்...இதுதான் வலி, அனுபவி என்று அந்த இளைஞர்கள் திட்டமிட்டுப் பாடம் சொல்லிக் கொடுத்து விட்டார்கள்.

தண்டித்தல் என்பது சொல்லிக் கொடுத்தல், மரண தண்டனையும் இதுவே. இதுவன்றி வேறில்லை. மரண நேரத்தில், உயிர் பிரியும் அவஸ்தை மூலம் தெரிந்து கொள் என்கிற விஸ்தாரப் பாடம். கடைசிச் செய்தி. வன்முறைக்கு வன்முறை என்கிற நியமம். என்னாலும் முடியும் என்ற வீம்பு.

அந்த இளைஞர்கள் செய்தது சரியென்று நான் சொல்லவில்லை.

தங்களையும் தங்கள் தாயையும் இடையறாது துடிக்க வைத்த தகப்பனை கூலியாட்கள் மூலம் கூறுபோட்டது உத்தமம் என்று பேசவில்லை.

பட்டயம் எடுத்தவன் பட்டயத்தாலே சாவான் என்கிற வேத வாக்கியம். ஆன்றோர் மொழி மறுபடி உண்மையாக்கப்பட்டிருக்கிறது.

லாபம் என்ன?

கூடு கலைந்து போயிற்று.

சாதனை என்ன?

பிள்ளைகளை வளர்த்து சிறைக்கனுப்பியது. நம்பி வந்த ஒரு பெண்மணியை நட்டாற்றில் விட்டது.

எதற்குச் செத்தோம் என்று கூடத் தெரியாத ஒரு மரணம். ஏன் கத்தியால் நெஞ்சில் குத்துகிறார்கள் என்று புரியாத வெறும் பயம். காரணம் தெரியாது கண் மூடிய சாவு. மிக கோரமான இறப்பு.

தேவைதானா?

மகன்களே தகப்பன் மரணத்துக்குக் காரணமானார்கள்.

இங்கே யார் பக்கமும் நான் பேசவில்லை. எந்தச் சார்பும் கொள்ளவில்லை. வன்முறை ஆடியவர் வன்முறையால் அழிவர் என்பதற்கு இது இன்னுமொரு சாட்சி காலம் காலமாகச் சொல்லப்பட்டு வந்தாலும், மறுபடி களமேறி முகத்தில் அறையும் நிஜம்.

என்ன செய்திருக்க வேண்டும்?

எப்படி நடந்து கொள்ள வேண்டும். கோபம் வருகிறதே. பல் கடித்துப் பாய்ந்து தண்டிக்க பழகிவிட்டேனே...என்ன செய்வது...?

வழி உண்டு.

## 3

தண்டிக்க நாம்யார் என்கிற எண்ணம் வேண்டும்.

தண்டிப்பது கூடலைப் போலும் ஒரு சுவையான விஷயம், போதை மிகுந்த காரியம் ஒருமுறை தண்டித்துப் பழகி உங்கள் தண்டனை அங்கீகாரமடைந்து விட்டதெனில், அடுத்தபடி தண்டிக்க மனம் ஆள் தேடும். மீசை முறுக்கி, விழிகள் உருட்டி, உதடு முறுக்கி, கம்பீரம் காட்டும்.

நமக்கு நாமே போட்டுக்கொள்ளும் இதுபோன்ற நாடகங்கள்தான். நம்மைக் குப்புறக் கவிழ்க்கின்றன. உண்மையில் எல்லா அதிகாரமும் அபத்தம். அதிகாரத்தில் தலை விரித்தாடியவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தற்கொலை செய்து கொண்டுதான் இறந்திருக்கிறார்கள்.

எல்லா அதிகார ஆணவமும் சரிவில்தான் முடியும். சரிகிற நேரம், அதுவரை அதிகாரம் செய்தவருக்குக் கலவரம் ஏற்பட்டுவிடும். எப்படியெல்லாம் அதிகாரம் செய்திருக்கிறோம் எத்தனைப் பேரைப் புண்படுத்தியிருக்கிறோம் என்று புத்தி பட்டியல் போடும். மனம் நடுங்கும், பதிலுக்கு அவர்கள் சீறினால் என்னாகும் என்று பதறும். எவர் கையிலோ அடிபட்டுச் சாவதைவிட அவமானப்படுவதைவிட, தற்கொலை மேல் என்று முடிவாகும். நிறைவாகும்.

ஆனால், தற்கொலை போலும் கேவலம், வேதனை உலகில் எதுவும் இல்லை, 'மனிதன் அனுபவிக்கும் மிக உச்சகட்ட தண்டனை அது. வாழும் ஆசைகள் அத்தனையும் ஒதுக்கிவிட்டுப் போவது மிகப் பெரிய தோல்வி 'ஐயோ இப்படிபோகிறேனே...' என்று போகும் கடைசி விநாடி மனம் பதறும்.

எனவே, தண்டிக்கும் ஆசைக்கு அடிப்படையான அதிகார வெறியை உற்றுப்பார்த்து, அறுத்துக்கொள்ள வேண்டும். வலிவால் மட்டும் ஆட்சி செய்துவிட முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் வன்முறையைத் தொடர்ந்து பயம்தான் வருகிறது. வன்முறை செய்தவர்களுக்கும் பயம்தான் தூக்கலாக இருக்கிறது.

என் நண்பர் ஜெயில் அதிகாரி நிறைய உண்மைக் கதைகள் கூறுவார். வன்முறையில் நம்பிக்கை உள்ளவர் அடியாத மாடு படியாது என்பவர். என்தொழில் அப்படி அன்பு இங்கே எடுபடாது' என்பார்.

ஆறுநாட்கள் விடுப்பு எடுத்து மனைவி மகளோடு மைத்துனி திருமணத்துக்கு ரயிலேறினார். இரண்டாம் வகுப்புப் பதிவுப் பெட்டி வண்டி கிளம்பியதும் எதிர் பெஞ்சில் உள்ளவர் வணக்கம் சொன்னார்.

"ஐயா, ஞாபகம் இல்லீங்களா நான் வரதனுங்க. பேச்சேரி வரதன் ஏழுவருஷம் மெட்ராஸ்ல இருந் தேங்கே. ஐயாவத் தெரியுங்க ஆயிரமாயிரம் பேரு... என்னிய மறந்துருக்கும்..."

திகில் என்றது ஜெயிலருக்கு.

மனப்பதிவேடுகளை வேகமாகப் புரட்ட...எட்டி எட்டி வரதனை உதைத்தது ஞாபகம் வந்துவிட்டது. லாடம் கட்டியதும், நல்ல பல் பிடுங்கியதும், கன்னத்தில் அறைந்ததும் நினைவில் மின்னிற்று.

'ஞாபகம் இருக்கும். எங்க போறீங்க...' விவரம் கேட்டாலும் மனசு என்னடா இது என்று பதறத் துவங்கி விட்டது.

"தூக்கமேயில்லை பாலு. நல்லா தூங்கணும்னு நினைச்சு வண்டியேறினேன். எம்மேல இருக்கற கோவத்தை என் பொண்டாட்டிமேல காட்டிட்டான்னா என் மகளை சதக்னு குத்திட்டான்னா...

கத்தி வெச்சுருப்பானோ, நிக்க வெச்சுத் தடவி, செக் பண்ணலாமா, எப்படி பண்றது...நாலு பேர் கேட்பாங் களே என்ன பதில் சொல்றது.

தனியா கூட்டிட்டுப் போய், 'மனசுல ஒண்ணும் வெச்சுக்காதே வரதா'னு சொல்லி ஒரு நூறு, இரு நூறு தரலாமா. இது எங்கப்பன் குதிருக்குள்ள இருக்கான்றது போல ஆகுமா...

எல்லாரும் தூங்கிட்டாங்க. அவனும் நல்லா தூங்கிட் டான். நான் தூங்கவேயில்லை. என்னா பொழைப்பு. என்னா உத்தியோகம்னு நொந்துகிட்டேன். அவன்

கொஞ்சம் அசைஞ்சாலும், புரண்டு படுத்தாலும், பின் பக்கம் போனாலும் எனக்குள்ள பெரிய கலவரம்.

எனக்கும் அவனுக்கும் எந்தத் தனிப்பட்ட விரோதம் இல்லை. ஜெயில்ல எவன் கூடயோ சண்டை போட்டுட்டு என்கிட்ட அடிவாங்கினான் அவ்வளவுதான். ரெண்டு மூணு நாள் அவன் நினைப்பாவே இருந்திச்சு. இனிமே கைதிங்களை ஜாஸ்தி அடிக்கக் கூடாதுனு தீர்மானம் செய்தேன். ஆனா எங்க முடியுது...அடியாத மாடு படியாது.''

வன்முறை காட்டியே ஆகவேண்டிய இடத்தில் உத்தியோகமாய் இருப்பவர் நிலைமையே இவ்விதமெனில், வீட்டில் அன்பு செய்யவேண்டிய இடத்தில் அதிகாரவெறி காட்டினால் என்ன ஆகும் எதிர் விளைவுகள் என்ன ஏற்படும். யோசிக்க வேண்டும்.

வீடு சிறைச்சாலையல்ல. ஆயிரம் குற்றவாளிகள் கூடியிருக்கும் இடமல்ல. மன விகாரமுள்ள மனிதர்களின் கூட்டமல்ல.

வீடு என்பது விடு தலையான இடம்.

''என்ன விடுதலை...என்ன சுதந்திரம்? சம்பாதிச்சுக் கொட்ட வேண்டியிருக்கு. கொட்டினா ஒரு குணம்... கொட்டாட்டா ஒரு நடத்தை.

காசு, காசு, காசுதான்யா மனுஷன். அன்பெல்லாம் சும்மா'' புலம்புகிறவர்கள் அதிகம் உண்டு.

அன்பு, பழக நேரமாகும். அதிகாரம் நொடியில் பிரயோகம் செய்யப்படும். இந்தப் பழகும் நேரம் பொறுமையாய் இருத்தல் நலம். இந்தப் பழக்கத்தில் அன்பின் பலம் தெரியும்.

கோபமே கூடாது என்று சொல்லவில்லை. குறையுங்கள் என்கிறேன்.

கோபத்துக்கு ஈடாகக் கொஞ்சி, தலை தடவிப் பேசுங்கள் என்கிறேன்

''நான் கோபித்துக் கொண்டது உனக்கு புரிய வேண்டும் என்பதற்காக, உன் நெஞ்சில் உஷ்ண வார்த்தைகள் தைக்கும் என்கிற காரணத்துக்காக, இப்போது என் கோபமும் போயிற்று. உன் வலியும் குறைந்திருக்கிறது எனவே மறுபடி பேசுவோம்.

நான் என்ன சொல்ல நினைக்கிறேன் தெரியுமா...'' பரஸ்பரம் வசனம் துவங்குங்கள் கேட்பவரும் ஒருமுகப் படுவார் பிரச்னைகள் பாதியாய்க் குறையும் புரிதல் அதிகமாகும்.

அப்போது கோபித்துக் கொண்டது தேவையே இல்லையே என்று புலப்பட்டுவிடும். முதலிலேயே இவ்விதமாக பேசியிருக்கலாமே என்று தோன்றும். இதில் கவனம் வைத்தால், அடுத்த முறை கோபம் பொங்கும் போது சட்டென்று அதைத் தள்ளிவிட்டு, எப்படிப் பேச்சு துவங்கியது என்று யோசிக்க மனம் துவங்கி விடும்.

'எங்கப்பா எப்பவானா கோவப்படுவார் மத்த படிக்கு நல்ல மனுஷன்' யோசித்து வீட்டில் பேசியிருந்தால், அதை இரண்டு பிள்ளைகளும் கொண்டாடியிருப்பார்கள்.

ஆனால் ஒரு தனிமனித அகம்பாவம், தான் பெரிய கொம்பு என்கிற குணம், அதிகார அறியாமை ஒரு குடும்பத்தைக் கலைத்துப் போட்டு விட்டது. இரண்டு வாலிபர்களின் கனவுகளை கருக்கிவிட்டது.

அவர்களை எனக்குத் தெரியாது. நான் பார்த்ததில்லை. ஆயினும், அவர்களுக்கு நெஞ்சின் ஒரு மூலையில், இனி அம்மா நலமாய் இருப்பாள் என்கிற நிம்மதி படர்ந்திருக்கலாம். சிறையில் யாருக்கும் பயப்படத் தேவை

யில்லை. அமைதியாய் இருந்தால் போதும். வாழ்க்கை நிம்மதியாக ஓடும் என்று ஒருசுகம் சுடர்விட்டுக் கொண்டு இருக்கலாம்.

ஆனாலும், அப்பாவின் கொடுமைகள்... அதிகார வெறிச் செயல்கள் ஞாபகக் கழுமரமாய் உள்ளத்தை ஊடுருவியபடிதான் இருக்கும்.

"பக்கத்து வீட்டுக்காரன் பண்ற ரௌசு தாங்கலை. ரெண்டு தட்டுத் தட்டினாதான் பயப்படறான்." நம்புகிற வர்களை மாற்ற முடியாது.

இரண்டு தட்டுத் தட்டினா பிரச்னை முடியாது. வளரும். பத்து, இருபது, நூறு தட்டல்கள்...அடிதடி ரகளைகள் பெருகும்.

துஷ்டரைக் கண்டால் தூர விலகு.

துஷ்டத்தனம் பெருகிக்கொண்டே போகுமா. இல்லை எல்லா துஷ்டர்களும் நரகவேதனை பட்டுத்தான் சரிந் திருக்கிறார்கள், தெய்வம் நின்று கொல்லும்.

தர்மத்தின் பக்கம் நின்றவன்தான் வெற்றிச் சங்கு ஊதியிருக்கிறான்.

இல்லை, கெட்டவன் வளர்ந்ததைக் கண்ணாரப் பார்த்திருக்கிறேன். என்று சிலர் சொல்லலாம்.

கால இடைவெளிக்குக் காத்திராதவர்கள் இப்படிப் பயப்படுவார்கள்

மற்றபடிக்குப் பேசிப் புரிந்து கொள்ளுதல் போல்சுகம் எதுவுமில்லை. இது நிறைவான உணவு, நிம்மதியான தூக்கம் உடனே தரும். இவையிரண்டும் வலிவு அதிகம் வளர்க்கும். அந்த வலிவு, உழைப்பு உற்சாகத்தைத் தரும். உழைப்பே உயர்வு, உயர்வுக்குக் காரணம்—அன்பு, அனு சரணை.

என் நிலையில் இருந்து பார்த்தால், அன்பு செயல்படாது என்பது தெரியும் என்றும் சிலர் பேசலாம். செயல்படுத்த மனசில்லை என்றே பொருள். மௌனம் புரியவில்லை என்றே அர்த்தம். கூச்சலிட்டுத் திட்டினால், மௌனமாய் இருக்க...உள்ளே மனசில்கூட மௌனமாய் இருக்கப் பழக வேண்டும்.

மனசுக்குள் மௌனமாய் இருத்தல் பற்றி...

# 4

அவர், சொல் பொறுக்காத மனிதராக இருந்தார். நாற்பத்தேழு வயது. வளர்ந்த இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தகப்பன். மோசமில்லாத ஒரு உத்தியோகம். வேலை செய்த கம்பெனியில் இன்னும் சிறப்பான இடத்துக்கு அவர் வந்திருக்கக்கூடும். ஆனால், அவர் நடவடிக்கையினால் அவரின் பதவி உயர்வு, இடமாற்றம் எல்லாம் தடைப்பட்டன.

''அவன் நொய்யான்...தொட்டதுக்கெல்லாம் கத்துவான், அவனைப் பார்த்தாலே எனக்கு எரிச்சலா இருக்கு. தயவு செய்து அவனை என்கிட்டே தள்ளாதே...'' ஒதுக்குவார்கள்.

''என்ன செய்யறது. நான் ரொம்ப சின்ஸியர் ஆள். என் உண்மையான உழைப்பு மற்றவங்களுக்குப் பிடிக்கலே. தாளம் போடணும். கூட்டுக் கொள்ளைக்குத் துணை போகணும். எவன் கொலை செய்தாலும் உட்கார்ந்து பார்த்துட்டிருக்கணும். என்னால முடியாது. தட்டிக் கேட்பேன்'' என்று இவர் நிறைய பேசி அலட்டிக் கொள்வார்.

ஆனால், உண்மை அதுவல்ல. மிகமிக ஒழுக்கமான ஆளிடம்கூட இவரால் வேலை செய்ய இயலவில்லை.

"மிஸ்டர் வெங்கடேசன். பத்து நிமிஷத்துல அந்த வேலையை முடிச்சு எடுத்துட்டு வாங்க..."

உயர் அதிகாரி சொல்ல, சீற ஆரம்பித்துவிடுவார்.

"எப்படி முடியும்...பத்து நிமிஷத்துல முடியற வேலையா இது?"

"சரி...பொதுவா சொன்னேய்யா. அரை மணில முடிங்க..."

"தயவு செய்து, இனிமே பொதுவா என்கிட்டப் பேசாதீங்க. குறிப்பா, 'கட் அண்ட் ரைட்டாப் பேசுங்க." வெங்கடேசன் இரைவார்.

"சரி ஒரு மணி நேரம் எடுத்துக்கங்க"

பதினேழு நிமிடத்தில் வேலை முடிந்துவிட்டது. ஒரு மணி நேரம் அவர் காத்திருந்தார். அதற்குப் பிறகே அதிகாரியிடம் போனார்

"வேலை முடிஞ்சா வரவேண்டியதுதானே..."

"நீங்க 'ஒன் அவர்' சொன்னீங்க..."

"நான் சொன்னேன்யா... முடிஞ்சா வரலாமில்லையா..."

"ஒன் அவர்'னு சொன்ன பிறகு நான் எப்படி வர்றது? ஏன் வந்தேன்னா என்ன பதில் சொல்றது. வார்த்தை வார்த்தைதான்..."

இங்கே பேச்சு துவங்கும். இடைவிடாது அவர் பக்கம் நியாயம் சொல்லப்படும். அலுக்கும் அளவுக்கு, எரிச்சல் வரும் அளவுக்குப் பேசுவார்... அவரை அடிப்பதற்குக்கூட சில பேர் போயிருக்கிறார்கள்.

வீட்டில் இதைவிட மோசம்.

''ஏழாயிரம் சம்பாதிக்கிறேன்...'இது என்ன சம்பாத்தியம்?' னுட்டா என் மகள், அதனால இனிமே அவளோட பேச்சே இல்லை. எனக்கு சூடுசொரணை இல்லை. அதனால இனிமே வெறும் உப்பில்லாத மோர் சாதம் தவிர, எதுவும் சாப்பிடமாட்டேன்.'' பதினெட்டு நாட்கள் இப்படி இருந்தார்.

நான் கேள்விப்பட்டு அவரிடம் போனேன். 'ஒன்று வெகு சீக்கிரம் மரணமடைவீர். இல்லையெனில், பைத்தியம் பிடித்துத் தெருவில் அலைவீர்' இரண்டில் ஒன்று நிச்சயம்' என்று பயமுறுத்தினேன்.

அவரைப் பற்றி பலபேரின் அபிப்பிராயம் எடுத்துச் சொன்னேன். மிரண்டார்.

மனசின் மௌனம் பற்றி விளக்கினேன்,

''மனம் எப்போதும் கார் ஹாரன் கேட்ட கன்றுக்குட்டி போல கண்டபடி எகிறிக் குதித்து அலைகிறது. நின்று நிதானமாக யானையாய்த் திரும்பிப் பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள்' என்று விவரித்தேன்.

சிறிதளவு பயிற்சி கொஞ்சம் மனஉறுதி போதும்... இது பழக்கப்பட்டு விடும்.

என்ன சொல்கிறார்கள் என்று பார்த்தலைவிட ஏன் இப்படிப் பேசுகிறார்கள் என்று உடனே பார்த்துவிடுவது நல்லது. வார்த்தைகள்தானே பேசட்டும் என்று பேச விடுவது இன்னும் நல்லது.

கோபத்தில் உண்மையிருப்பின் தவறு நம்முடையதாக இருப்பின், சற்றுப் பொறுத்து (உடனே அல்ல) மன்னிப்புக் கேட்போம். உண்மையாய் வருத்தம் தெரிவிப்போம்.

உண்மையில்லையெனில், 'இவருக்கு உண்மையைச் சொல்ல வேண்டுமா' என்று யோசிப்போம். உரக்கக்கத்து வதில் விருப்பம் உள்ளவரா இவர் குற்றம் சொல்வதில் பிடித்தம் உள்ளவரா இவர், நாலு பேர் நடுவே கத்தி அலட்டும் ரசனை உள்ளவரா இவர்...என்று எதிராளி பற்றி எடை போடுகிறபோது ஒரு மௌனம் ஆரம்பமாகி விடும், பதிலுக்கு கூவுதல் யார் வேண்டுமானாலும் செய்ய லாம். வெறுமனே மௌனம் காப்பது திடமனம் உள்ளா ராலேயே முடியும்.

'பதில் சொல்லாட்டி, சுத்தி இருக்கற நாலு பேர் நம் மளைத்தான் சார் தப்புனு நினைப்பாங்க.'

நினைக்கட்டும் அந்த நாலு பேரும் சண்டை எப் போது பெரிதாகும் என்று காத்திருப்பவர்கள். நாலுபேர் பேசுகிறார்கள், நாலு பேர் பார்க்கிறார்கள் என்று நினைத்தே நாம். நம்மைப் பல இடங்களில் இழக்கி றோம். மௌனம் அவமானம் என்று சிந்திக்கிறோம். சுடச்சுடத் திருப்பிக் கொடுத்தாதான் புத்தி வரும் என்று கணக்குப் போடுகிறோம்

'எனக்குன்னு வந்து வாச்சிருக்கே ஒரு புருஷன், சரியான பைத்தியம்...' மனைவி சொல்ல வெங்கடேசன் தவித்துப் போனார்.

''உண்மையாக இருக்கலாம் அல்லவா? ஏன் பதட்டம்' நான் கேட்டேன். இன்னமும் முகம் சிறுத்தார்.

உண்மையாக இருப்பின், மாறுவோம், இல்லை யெனில், பிற்பாடு உண்மை நிலை சொல்லுவோம். அல்லது சொல்லாமலேயே இருப்போம் அவர்கள் பார் வையில் பைத்தியமாகவே வாழ்வோம் உங்களுக்கு உங் களை நன்றாத் தெரிந்தால் அது போதும் ஆனால், உங்களுக்கு உங்களைத் தெரியுமா? நீங்கள் பைத்தியமா?

கெட்டிக்காரரா? அமைதியானவரா? தயவுசெய்து யோசியுங்கள்.

உங்கள் மனைவி சொல்வதை ஏற்றுக் கொள்ளுங்கள்.''

''நான் என்ன மரக்கட்டையா? பிணமா? எதுக்கு ஏற்றுக்கொள்ள வேண்டும்''—வெங்கடேசன் சிடுசிடுத்தார்.

''பைத்தியம் என்று கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பைத்தியமாக மாறாமல் இருக்க மௌனமாய் இருங்கள்'' என்றேன்.

''என் தலையெழுத்து...பொண்டாட்டி கத்தறதைக் கேட்டுக்கத்தானே வேணும். அடங்கிப் போதலை நான் சொல்லவில்லை. ஏற்கவும் செய்யாது. மறுக்கவும் செய்யாத ஒரு நிலை. இதற்கு பெயர் மௌனம் அல்லது நடுநிலை.

எந்நேரமும் ஒரு தகதகக்கிற விழிப்போடு இருந்தால், இந்த நடுநிலை சாத்தியம்.

நம் புத்தி பல சமயம் தூங்கும். பாதித் தூக்கம் தூங்கும். வழக்கமான வேலைகளை அரைத்தூக்கத்தில் செய்து கொண்டிருக்கும் அல்லது இரட்டையாகப் பிரிந்து ஒரு பிரிவு கனவு காணும் மற்ற பிரிவு அலுவலக வேலை செய்யும். அதைவிட்டு, ஒரே புள்ளியில் ஒரே விஷயத்தில் மனம் இருப்பது நல்லது.

குறிப்பாக—டென்ஷனான நேரங்களில் கூர்மையாக இருப்பது, மன அமைதிக்கு வழிவகுக்கும். மனம் தூங்கினால்தான் கலவரம் அதிகமாகிறது. தடாலென்ற முடிவு எடுக்கப்படுகிறது

சண்டை, கோபம், அதீத வருத்தம், புலம்பல், அழுகை, தனக்குத்தானே பேசிக் கொள்வது போன்றவை பாதி புத்தியின் குதியல்கள்.

எதிராளியின் பேச்சை நடுநிலையில் நின்று மௌனமாய் கேட்க இதற்கு எப்போது பதில் சொல்வது, எவ்விதம் சொல்வது என்று உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரியும். வெங்கடேசன் முதலில் மௌனமாய் இருக்க முடியாமல் தடுமாறினார்.

''அறிவிருக்காய்யா உமக்கு. நீ பெத்த பெண் ஏதோ சொல்லிட்டானு சோறு திங்காத இருக்கியே. எவ்வளவு ஆங்காரம்'' நானே ஆரம்பித்தேன், கடுமையாக விமரிசித்தேன். நான் முடித்தபிறகு புன்னகை செய்தார். ''நல்லா இருக்கு சார்...ஒருத்தர் திட்டும்போது கூலா இருக்கறது ஐம்முனு இருக்கு. இன்னும் கொஞ்சம் திட்டுங்கனு சொல்லணும் போல இருக்கு.''

உண்மை இதுவே. இதுவே வெற்றியின் ரகசியம். அமைதி என்பது சோம்பலல்ல, பயமல்ல. இது மிகப் பெரிய பலம். படபடப்பு, நோய்க்கு இட்டுச் செல்கிறது. செயலைக் கெடுத்துக் கவிழ்க்கிறது. கெட்ட பெயர் தருகிறது.

இது மிக எளிதாக, சிறிய பயிற்சிக்குப் பிறகு இரண்டு மூன்று முயற்சிகளுக்குப் பிறகு கைகூடும்.

வார்த்தைகளுக்குக் குதிக்காமல், என்ன சொல்கிறார்கள் என்று சொன்னவரின் கோபத்தை எடுத்துப் போட்டுவிட்டு செய்தியை மட்டும் எடுத்துக்கொள்ளும் நிதானம் கைகூடும்.

வெறும் கட்டுரைக்கான விஷயமல்ல இது. இதைச் செய்யமுடியும். செய்தே தீரவேண்டும். இல்லையெனில், நம் கோபத்தில் தொலைந்து போவது நாமே மற்றாருமில்லை.

கோபம் போல் காமம் ஒரு சோதனை என்கிறார்கள். உலகில் காமத்தைக் கண்டு பயப்படுகிற ஒரு ஜீவன் மனிதன்தான்.

ஏனிந்தக் குழப்பம்?

# 5

"அந்த நீலப்புடவையில் நீ எவ்ளோ அழகா இருந்த தெரியுமா... அப்படியே இறுக்கிக் கட்டிப் புடிச்சிக் கொஞ்சணும் போல இருந்திச்சி போன வாரம் பச்சை ஒண்ணு கட்டினு வந்தியே... அதுதான் சூப்பர். அஞ்சு வயசு குறைஞ்சு போச்சு. வெச்ச கண்ணை மாத்தவே முடியலை. ஒரு ஒன்றரை நிமிஷம் நான் செத்துட்டேன். உனக்கு நான் என்ன பேரு வெச்சிருக்கேன் தெரியுமா... ஜில்லு. நாளைக்கு வெள்ளைப் புடவை கட்டிக்கிட்டு வர்றியா...

வெள்ளைப் புடவைன்னவுடனே தப்பா நெனைச்சுக்காத நாளைக்கு நிச்சயமா மழை வரும்னு பி.பி.சி-யில சொன்னான். நீ வெள்ளைப் புடவையில நடந்து வர்றதைப் பார்த்தா நான் வெறியாயிருவேன்.

உன் இளமை என்னும் இன்ப வெள்ளத்தில் நீந்துவதற்கு ஓடோடி வந்த என்னை ஏமாற்றாதே" அன்று காலை அவன் தொடர்ந்து பிதற்றினான் வரைமுறை இல்லாது பேசினான்.

அன்று காலை ஆறு மணியிலிருந்து அவளுக்கு வந்த ஏழாவது கால் இது.

ஏழுமுறையும் அவன்தான் பேசினான். இப்படித்தான் பேசினான்.

நீலாயதாட்சி நொந்து போனாள். 'என்ன எழவு இது?' என்று பதறினாள். இதைப் போய் யாரிடம் சொல்வது என்று தயங்கினாள்.

அவளுக்குத் திருமணமாகி ஐந்து வருடங்கள் முடிந்து விட்டன. மூன்று வயதில் ஒரு பெண் குழந்தை இருக் கிறது. மாமனார், மாமியார், திருமணமாகாத நாத்த னார் என்று பல உறவுகள் உண்டு. அவர்களையெல் லாம் மீறி, கடவுள் அருளாலும் நண்பர்கள் உதவியாலும் தனிக்குடித்தனம் வந்தாள். அப்படி வந்தும் பிரச்னைகள் இருந்தன. அவளுக்கும் அவள் புருஷனுக்கும் படுக்கை யறை சண்டைகள். அதிருப்திகள் இருந்தன.

எட்டு மணி நேரம் தனியார் கம்பெனியில் பேயாய் உழைத்துவிட்டு, இரவு நேரம் படுக்கையில் தேவதையாய் கும்மாளமடிக்க அவளால் முடியவில்லை சோறு தின்ற வுடன் தூக்கம் கண்ணைச் செருக்கி கொண்டு வந்து விடுகிறது.

ஐந்து மணிக்கு எழுந்தால்தான் எட்டரை மணிக்கு பஸ் ஸ்டாண்டு வர முடிகிறது. தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியைக்கூட நிம்மதியாய் முழுமையாய் பார்க்க முடிவதில்லை. மனம் ஒன்றி ரசிக்க முடிவதில்லை. குழந்தை மிகுந்த நேரத்தை எடுத்துக்கொள்கிறாள். புருஷ னுக்குப் பணிவிடைகள் செய்து, வீட்டையும் துப்புரவாக வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

முப்பத்தோரு வயதுக்குள் உடம்பு வெலவெலத்துப் போனது போல ஒரு கவலை, ஒரு பயம் வருகிறது. சில சமயம் முதுகு வலியும் உடல்சோர்வும் பார்க்கும்போது உடம்பில் ஏதோ தவறாகிவிட்டது என்று கலவரம் வரும்.

பிற்பகல் நேரம் நெஞ்சடைத்து மூச்சுத் திணறும். அதை உன்னிப்பாகக் கவனித்தால் இதயக் கோளாறோ என்று கவலை வரும். பக்கம் பக்கமாக எம்.பில். கட்டுரை எழுதியவள் நீலாயதாட்சி. இரண்டு பக்கம் கடிதம் எழுது வதற்குள் கைவிரல்கள் மரத்துப் போகின்றன. மாலையில் பஸ்ஸில் கூட்டமென்றால் நிச்சயம் தலைவலி வந்துவிடு

கிறது. வீட்டுக்குப் போனவுடனே சற்றுநேரம் படுத்தால் தான் நிம்மதியாகிறது.

இதைத்தவிர, காசு பற்றிய கவலை. வெறும் விநாயக சதுர்த்தி என்றால்கூட, இருநூறு ரூபாய் அதிகம் செலவாகிறது. எந்தப் பண்டிகையையும் 'அது கிடக்கட்டும் கழுதை' என்று விடமுடியவில்லை. கொண்டாடித்தான் தீர வேண்டியிருக்கிறது. கொண்டாடாது விட்டால் மனம் வெறிச்சோடி விடுகிறது. தெய்வம் கோபித்துக் கொள்ளுமோ என்ற பயம் வருகிறது.

தனிக்குடித்தன சௌகரியத்தில், ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய் தனியார் கம்பெனி சம்பளத்தில் நீலாய தாட்சி கண்ட ஒரே பலன் ஐம்பது நல்ல புடவைகள் மட்டுமே.

விதம்விதமான இந்தப் புடவைகள் இல்லையெனில், வாழ்க்கை பனங்காடாய், செம்மண் தேரியாய், பாலை வனமாய் மாறி இருக்கும்.

எத்தனை சண்டை இருந்தாலும் புருஷனுக்கு அவள் புடவை கட்டும் விதம் மிகவும் பிடிக்கும். அவள் புடவையைத் தேர்ந்தெடுக்கும் விதமும அவனுக்கு மிகப் பெரிய அதிசயம்.

''இந்தப்புடவை நானூறு ரூபாய்தானா...இல்ல 'டூப்' அடிக்கிறியா...நான் ஏதோ ஆயிரம், ஆயிரத்தைந்நூறு இருக்கும்னு நெனைச்சேன்...அள்ளுது. எங்க ஆபீஸ் லேடீஸே ரெண்டு மூணு பேரு கேட்டாங்க. 'எங்க புடிக்கிறாங்க உங்க மனைவி இந்த மாதிரி புடவைகள்னு இன்னிக்கு மத்தியானம் அரைமணி நேரம் உன்னைப்பத்தி தான் பேச்சு, எனக்குப் பெருமையா இருந்தது. ஆனா, புடவைல காட்டற அக்கறையைக் கொஞ்சம் என்மேலயும் காட்டலாம். ஆனா, என்னமோ உனக்கு காட்டமன

சில்லை.'' வாய் நிறைய வாழ்த்துச் சொல்லிவிட்டுக் கடைசியில் கத்தியால் கிழிப்பதுபோலப் பேசுவான்.

எத்தனை காட்டினாலும் போதவில்லை. எவ்வளவு அன்பு செலுத்தினாலும் நிறைவில்லை.

வீட்டோடு ஒரு பெண் இருந்தால் விதம்விதமாக அன்பு செய்யலாம். வேலைக்குப் போய், பரபரத்துக் கடுமையாக உழைத்து, பஸ் ஏறி, பதினோரு கிலோ மீட்டர் தாண்டி வீட்டில் நுழைந்தவுடன் அடுப்பு மூட்டி, சமையலில் இறங்கி, வீடு பெருக்கி, துணி மடித்து, சோற்றுக்கு அமரும்போது ஒன்பதாகி விடுகிறது.

மறுநாள் ஆபீஸில் பேசப் பயன்படுமென்று பத்தரை வரை தொலைக்காட்சித் தொடர்கள் பார்க்க...பத்து முப்பத்தியொன்றுக்குத் தூக்கம் வந்துவிடுகிறது.

புருஷன் என்ன சீண்டினாலும் புத்திக்குப் போவதே யில்லை எத்தனை கொஞ்சினாலும் மனசில் தைப்பதில்லை.

ஒரு நாள் ஆத்திரத்தில் மிக அதீதமாகப் புருஷன் பேசினான்.

''நீங்கள்லாம் சின்ன வயசுலேயே கெட்டு போயிட்டீங்கடி. பதிமூணு, பதினாலு வயசிலேயே எல்லாம் தெரிஞ்சு, முப்பத்தோரு வயசுல ஓய்ஞ்சுட்டீங்க. உன்கூட குடும்பம் நடத்தறதைவிட, திண்ணைக் கட்டிக்கிட்டுத் தூங்கலாம்'' என்று சிடுசிடுத்தான். அடாது பேசினான்.

அவன் கோபத்தின் நியாயம் புரிந்தது.

''என் ராஜா இல்ல...வேலை ஜாஸ்திப்பா. படுத்தவுடனே தூக்கம் வந்திடுது''—புருஷன் தலையை நீலாய தாட்சி வருடி விட்டாள். அவன் விலகிக் கொண்டான்.

''உண்மையான அன்பிருந்தா தூக்கம் வருமா... எனக்கு வேலை இல்லையா...நான் தூங்கறேனா...''

ஆனால், அவனுக்கு வேலை குறைவுதான். சொன்னால் ஏற்கமாட்டான். அதுவும் தவிர காலை ஏழு, ஏழரைக்குத்தான் எழுந்திருப்பான். அந்த விடியல் நேரத் தூக்கம் அவனுக்கு வேகம் கொடுத்தது. 'வேண்டும்' என்ற ஆசையைக் கொடுத்தது. இங்கே ஆரம்பித்த பிணக்கு பல்வேறு இடங்களில் எதிரொலித்தது.

''என்னா தோசை இது?...கல்லு, கல்லா...ஒரு டிபன் கூட உனக்கு செய்யத் தெரியலை.'' அவன் சரட்டென்று தட்டைப் புறம் தள்ளினான்.

''என்னா கேடு இதுக்கு?'' அவள் கேட்டாள். பேச்சு தடித்தது.

''சும்மா சும்மா வந்து கொஞ்சறதாலதாண்டி அலட்சியம் பண்றே. இந்த மடம் இல்லைன்னா சந்தை மடம். நீ இல்லன்னா செத்தாப் போயிடுவேன்...''

அவன் விஷம் கக்கிவிட்டு வெளியே போனான். அவள் சமையலறையில் உட்கார்ந்து பத்து நிமிடம் அழுதாள் பிறகு நேரமாகிவிட்டது தெரிந்து பரபரத்தாள்.

'என்ன வாழ்கை இது...உட்கார்ந்து அழக்கூட நேரம் இல்லை. மணியைப் பார்த்துத் தூங்கி, மணியைப் பார்த்து எழுந்து, மணியைப் பார்த்துக் குளித்து, மணியைப் பார்த்து சமைத்து, அழும்போதுகூட மணியைப் பார்த்து அழவேண்டியிருக்கிறதே...தேவைதானா இந்த உத்தியோகம்...' என்று யோசித்தாள்.

முகம் கழுவி, பொட்டிட்டு, உடுத்தி நிமிர்ந்தபோது அந்த புடவையின் வாசனையாலும் வழவழப்பாலும்

மனோநிலை மாறி இருந்தது. எட்டு மடிப்பு வைத்து நுனியை இறுக்கி, பக்கவாட்டில் தன் உடம்பைப் பார்த்த போது 'ஐயோ...என்ன அழகு' என்று தன்னைத்தானே வியக்கத் தோன்றியது. மேல் தலைப்பைப் போட்டு ஒயி லாக நின்றபோது உலகம் இன்னும் அழகாக மாறியது போல் தோன்றியது.

ஆள் பாதி, ஆடை பாதி என்பது எவ்வளவு உண்மை நல்ல உடை எவ்வளவு பெரிய மனமாற்றத்தை ஏற்படுத்து கிறது...பத்து நிமிடம் முன்பு அழுத கண்ணும், சிந்திய மூக்குமாக இருந்த நான் எப்படி மாறிப்போனேன்...என் உடம்பு லொக்கைதான். ஆனால், இந்த வயசுக்கு உண் டான ஒரு மதர்ப்பான பூச்சு இன்னும் அழகூட்டுகிறது. எல்லாம் ஈஸ்ட்ரோஜன் கருணை. அதன் விம்மிதம்.

இரவு நேர டி. வி. சீரியல் கதாநாயகிகூட தங்கத்தாலி தெரிய ஒற்றையாய்த்தான் போட்டுக்கொண்டு வரு கிறாள். 'கூலர் அஜய் நம்பர் டூ' என்று பார்த்தவுட னேயே கூவினாள்.

கதையை, சம்பாஷணையைக் கவனிப்பதை விட்டு விட்டு, சேலையையே கவனித்தாள். கூலர் அஜய் இரண்டு ஆறு, ஒன்பது வாங்க வேண்டும் என்று நினைத் துக் கொண்டாள். விளம்பரப் பெண்போல கண்ணாடி முன்பு விசிறிச் சுழன்றாள். அவளைவிட தான் அழ கென்று நினைத்துக் கொண்டாள் 'சேலையை ஒற்றை யாகப் போட்டுத் தெருவில் நடந்தாலென்ன...' யோசித் தாள் செயல்பட்டாள்.

வழியில் வெறுமே நின்று கொண்டிருந்த அவன் அவளைப் பார்த்ததும் திகைத்தான். வியந்தான் தாண் டியபோது வீசிய வாசனையை முகர்ந்து திண்டாடினான்.

அன்று மாலை அவள் திரும்பும்போது பின் தொடர்ந் தான். விலாசம் குறித்துக்கொண்டான். டெலிபோன் நம்பர் கண்டுபிடித்தான்.

'கன்னிப் பொண்ணுங்கதான் சிக்கறது கஷ்டம், கல்யாணமானதுங்க சுலபம் அவனுக்கு யாரோ உபதேசித் திருந்தார்கள். அவளை அடைவது மிகமிகச் சுலபம் என்று அவனுக்குத் தோன்றியது. எனவே போன் செய்தான். இந்தக் கட்டுரையின் ஆரம்ப வரிகளைப் பேசினான்.

'போடா பொறுக்கி' அவள் போனைத் துண்டித்தாள் எடுத்து வைத்துவிட்டாள். கண்ணாடிக்கு முன்பு நின்று மறுபடியும் தன்னைப் பார்த்துக்கொண்டாள், கொஞ்சம் சந்தோஷம், கொஞ்சம் கவலைப்பட்டாள்.

அவளைக் குலைநடுங்க வைக்கும்படி அவன் தொடர்ந்து பேசினான். 'உன் புருஷன் கொடுக்காத சுகத்தை நான் கொடுப்பேன்' என்று பிதற்றினான். 'உன் புருஷன் கொண்டாடாத அழகை நான் கொண்டாடு கிறேனே' என்று குறிப்பிட்டான்.

'யார் இவன், எப்படி இவனுக்கு இதெல்லாம் தெரிந் தது' அவள் திகைத்தாள்.

நூற்றுக்குத் தொண்ணூறு குடும்பத்தில் இந்தக் குறை கள் இருக்கத்தான் செய்கிறது என்று அவளுக்குத் தெரியா மல் இருந்தது. ஆனால், அவன் யார், எதற்கு தன்னை கவனிக்கிறான் என்று திகைத்தாள். யாரிடம் இதைச் சொல்வது என்று திண்டாடினாள்.

உண்மையில் அவன் யார்? அவனுக்கு ஏன் இந்த புத்தி?

# 6

அவன் இரவு நேரம் எதோ சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழிக்கையில், அவன் அப்பாவும் அம்மாவும் கட்டிப் புரண்டு சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அவனுக்கு வயது பத்து அவன் பயத்தில் உறைந்து போனான். விதிர்த்துப் போனான் எழுந்து சுவரோரம் உட்கார்ந்து, அவர்களைக் கலவரத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான். சத்தம் வராமல் அவன் அழத் துவங்கினான். நெஞ்சு அடைத்துக்கொள்ள, கேவிக் கேவி விசும்பத் துவங்கினான்.

அவன் அம்மா, 'சற்று நிறுத்துங்கள்' என்று கட்டளையிட்டாள். இருவரும் அமைதியானார்கள். விலகினார்கள். விளக்கைக் கொளுத்தினார்கள். அவன் அழுவதைப் பார்த்தார்கள்.

'அடி என் கண்ணே. ஏன் உட்கார்ந்திருக்கே...?'— அம்மா தாவி அணைத்துக் கொண்டாள். அப்போது தான் அது சண்டையில்லை என்று தெரிந்தது. ஏதோ ஒரு சந்தோஷ சமாசாரம் என்பது புரிந்தது.

''தூங்கு, தூங்கு, தூங்கு'—அவன் அப்பா அதட்டத் துவங்கினார், அவனைப் படுக்க வைத்து முதுகில் தட்டினார். 'தூங்காது போனால் அடிப்பாரோ...?' என்ற பயம் அவனுக்குள் எழுந்தது எனவே, அவன் தூக்கத்தில் ஆழ்வதற்கு மெள்ள முயற்சி செய்தான்.

மறுபடியும் அதைப்போல் சத்தம் கேட்டது. இந்த முறை அவன் எழுந்திருக்கவில்லை. எழுந்து சுவரோரம் உட்கார்ந்து தேம்பி அழவில்லை. மாறாகத் தலையை

மட்டும் சற்று உயர்த்தி, அவர்கள் இருவரையும் வேடிக்கை பார்த்தான்.

அதுவே வாழ்க்கையில் காமம் அவனுக்குள் நுழைந்த முதல்முறை. பயம் கலந்த ஒரு சந்தோஷம் அவன் வயிற்றில் படர்ந்தது. திகைப்பு கலந்த ஒரு குதூகலம் அவன் உடம்பெங்கும் நிறைந்தது.

பகலில் எழுந்ததும் அவர்களைப் பார்க்கக் கூச்சப் பட்டான். ஆனால், கூச்சமின்றி அவர்கள் அவனைக் கொஞ்சினார்கள். 'இவன் எங்கே பார்த்திருக்கப் போகிறான்' என்பது போல் நடந்து கொண்டார்கள்.

பள்ளிக்கூடம் இல்லாத விடுமுறை நாட்களில், அவன் தனியே போய் உட்கார்ந்து கொண்டான். வெறுமே திரும்பி வேடிக்கை பார்ப்பதுபோல அமர்ந்து கொண்டான். ஆனால், மனம் இரவு நடந்ததை மறுபடி நினைவுக்குக் கொண்டு வந்து, வேடிக்கை பார்க்கத்துவங்கியது. மறுநாள் இரவுக்கு மனம் பரபரத்தது. இன்று இரவும் பார்க்க வேண்டும் என்று திட்டம் தோன்றியது.

ஆனால், சாப்பிட்டு படுத்ததும் தூங்கிப் போனான். மறுபடி சத்தம் கேட்டு விழித்தான். இந்த முறை சத்தம் அருகில் வரவில்லை. 'அவன் எழுந்து பார்க்கிறானோ என்று சந்தேகப்பட்டு, அவர்கள் இருவரும் சமையலறைக்குப் போயிருந்தார்கள். சமையலறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது; கதவு ஒருக்களித்துச் சாத்தப் பட்டிருந்தது. அவன் வெறுமே சத்தத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான் துணிந்து எழுந்தான். என்ன செய்வது என்று யோசித்தான். மெள்ளத் தவழ்ந்து சமையலறைக்கு அருகே போனான். ஒருக்களித்த கதவின் ஊடே எட்டிப் பார்த்தான். குத்திட்டு உட்கார்ந்து கொண்டான். இன்னும் சற்று கதவை விலக்கி கவனித்தான்.

அங்கு கண்ட காட்சி, அவனை உலுக்கியது. உடம்பு முழுக்க உதற வைத்தது. அசிங்கமாகவும் அருவருப்பாகவும் இருந்தது.

அவன் அம்மா மிக அழகி. பட்டுப்புடவையில், வைர மூக்குத்தியில், ஜிமிக்கியில், சுருள் முடியில், நெற்றிக் குங்குமத்தில், வெள்ளை வெளேரென்ற பல்வரிசையில் மிக அழகாக இருப்பாள். ஆனால், துணியே இல்லாதபோது மிக அசிங்கமாக இருந்தாள். அவன் அப்பாவையும் அவ்விதமாகவே பார்த்தான். திரும்பத் தன் இடத்துக்கு ஓடி வந்தான். சுருண்டு படுத்துக் கொண்டான். இது, அவன் தாங்கிய இரண்டாவது தாக்குதல்.

விதி அவனுக்குள் விஷ விதையை இப்படித்தான் தூவியது. இது புதிதாய்த் தலை தூக்கியபோது, பிடுங்கிப்போட அவனுக்கும் தெரியவில்லை. இந்த ஊரும் சொல்லித் தரவில்லை இதைப் பற்றிக் கேள்வி கேட்டால் பேசினால் உதவி செய்ய ஒரு மனிதர்கூட முன்வரவில்லை. மாறாய், கேலி செய்தார்கள். கையை ஓங்கினார்கள. 'அடி செருப்பால...நாயே' என்று கண்ணில் கோபம் தெறிக்க முறைத்தார்கள்

'முளைச்சு மூணு இலை விடல...கேள்வி பாத்தியா? நசுக்கிக் கொல்லணும் படவா'...என்று சைகை செய்தார்கள்

"இவன் ரொம்ப கெட்ட பையன்...அசிங்க அசிங்கமாப் பேசறான். இவன்கூட யாரும் சேராதீங்க..."—இவனைவிட இரண்டு வயதுப் பெரிய பெண், மற்ற தோழர்களுக்குப் தோழிகளுக்கும் இவனைப் பற்றிப் புறம் கூறினாள்.

"அப்படி என்னா பண்ணான்...?"—அருகே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்த ஒரு கிழவன், புகார் சொன்ன பெரிய பெண்ணிடம் விசாரித்தான்.

"வயித்துக்குக் கீழே முடி முளைக்குமான்னு கேக்கறான்..."—அந்தப் பெண் பதில் சொல்லிற்று. மற்ற குழந்தைகள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அந்தக்கிழவன் வேகமாக எழுந்தான். அவன் முடியைக் கொத்தாகப் பிடித்தான். இரண்டு முறை அவன் கன்னத்தில் அடித்தான். மார்பில் கைவைத்து மல்லாக்கத் தள்ளினான். அருகே இருந்த எல்லோரும் சிரித்தார்கள்.

விளையாடுகிற அந்த இடத்தைவிட்டு நாடு கடத்தப்பட்டான் தனியே கால் போகிற போக்கில் அலைந்தான். தனித்து விடப்பட்டது அந்தப் புண் மேலும் வளர்வதற்கு உரமாயிற்று. திரும்பத் திரும்ப யோசிக்க வைக்கும் ஞாபக சக்தியே நீராயிற்று புல் செடியாயிற்று. செடியில் கிளைகள் வளர்ந்து. கிளைகளில் இலைகள் தழைத்து வளர்ந்தன. இலைகளுக்கு நடுவே பூக்கள் முகிழ்த்தன. செடி மரக்கன்றாயிற்று இள மரமாயிற்று. முற்றிப் பெரிய மரமாய் ஒரு பத்து வருடத்தில் வளர்ந்து விட்டது.

இருபது வயதில் மனதுக்குள் பிரமாண்டமான ஒரு மரத்தோடு அவன் வளையவந்தான். ஆரம்பத்தில் பள்ளிக்கூடப் பாடங்களில் மனம் போகாமல் இருந்தது. மதிப்பெண்கள் குறைந்தன. அப்பாவும் அம்மாவும் 'என்ன காரணம்...என்ன காரணம்...' என்று உலுக்க, சுதாரித்துக்கொண்டான். 'அடுத்தமுறை நல்ல மதிப் பெண்கள் வாங்குகிறேன்' என்றான் எனவே, பாடம் படிக்கிற நேரம், கற்பனையில் மூழ்குகிற நேரம் என்று இரண்டாகப் பிரித்துக் கொண்டான். தன் மனதில் ஓடும் கற்பனைகளை யாரும் கண்டுபிடித்துவிடக் கூடாது என்பதற்காகவே அவன் நன்கு படித்தான்.

'அந்தப் பையனா... ரொம்ப நல்லவனாச்சே... சைலண்ட்டா இருப்பானே...எந்த வம்புக்கும் போக மாட்டான்'—அவனைப் பற்றித் தெரிந்தவர்கள் இப்படித் தான் அபிப்பிராயம் சொல்வார்கள். மிக நல்லவன் என்று மற்றவருக்குப் பரிந்துரைப்பார்கள்.

ஆனால், உண்மையில் அவன் இடைவிடாது மனதுக் குள் வேட்டையாடினான். எந்தப் பெண்ணைப் பார்த் தாலும் மனதுக்குள் நிர்வாணமாக்கிக்கொண்டான். 'என் ஆசைக்கு இணங்குகிறாயா. இல்லையா...? என்று சவுக்குச் சொடுக்கினான்.

அப்பாவும் அம்மாவும் பிரியமாய் செய்த விஷயம். இவனுக்குள் வன்முறையாய்த் திசைமாறியது. காமத்தில் சித்ரவதை கலந்தது ஒரு குழந்தை பொம்மைக்குப் பேய் அலங்காரம் செய்ததுபோல, அது இரண்டுங்கெட்டானாய் இருந்தது.

அவன் நிஜப்பெயரைச் சொல்லக்கூடாது என்ற பத்திரிகை மரபு இருப்பதால், அவனுக்கு இப்போது உங்களின் சார்பாக ரமேஷ் என்று பெயர் சூட்டுகிறேன்.

ஊரோடும் பெயரோடும் ஒரு ஆளை மனதுக்குள் நினைத்துக் கொள்கிறபோது நெருக்கம் அதிகமாகும்.

ரமேஷ் அப்படித்தான் செய்வான் யாராவது அழகிய பெண்களைப் பார்த்தால், அவளுக்கு அவன் சார்பாக ஒரு பெயர் சூட்டுவான். தன் மனது மறந்து போகாமல் இருப்பதற்குச் சில ஊர் அடையாளங்கள் வைப்பான்.

தேனாம்பேட்டை மோகனா, மந்தைவெளி சௌம்யா அடையார் வசந்தி என்று அவனாகவே தினசரி பார்க்கிற பெண்களுக்கு நாமகரணம் இட்டு, அவர்களை நினைவில் அழுந்தப் பதித்துக்கொள்வான்.

அவன் எம். ஏ. சரித்திரம் படித்தான் சரித்திரத்தில் அவனுக்குப் பிடித்த பகுதி, ராபர்ட் கிளைவ் வாழ்ந்த சென்னை. ஆயிரத்து எழுநூற்றைம்பதிலிருந்து. ஆயிரத்து எண்ணூற்றைம்பது வரை உள்ள சரித்திரக் காலத்தை அவன் பலமாக ஞாபகத்தில் தேக்கிக் கொண்டான். அதில் ஒரு பாத்திரமாகவே தன்னை மாற்றிக் கொண்டான். கோட்டைக்குப் போகும் வழியில் ஒரு சிவப்புக் கட்டடத்தில் அவனுக்கு வேலை கிடைத்தது. கும்பினி வேலை கும்பினியிலிருந்து அரசாங்கம் அவனைத் தத்தெடுத்துக் கொண்டது. கெட்டிக்காரத் தமிழன் என்று பாராட்டியது.

அவன் தன்னை மட்டும் ராபர்ட் கிளைவ் காலத்துக்குக் கொண்டு போகவில்லை. தன்னைச் சுற்றியுள்ளவர்களையும்தான் விரும்பியவர்களையும் ராபர்ட் கிளைவ் காலத்துக்குக் கொண்டு போனான். பெண்களைப் பிரம்பால் அடித்து, துணியை அவிழ்க்கச் சொன்னான். ஆண்களை இடுப்பிலும் கழுத்திலும் சங்கிலிப் பூட்டி, வண்டி இழுத்துப் போகச் சொன்னான். மரண தண்டனைகள் பல விதித்தான். சிலரைச் சுட்டுக் கொன்றான். பீரங்கி வைத்துச் சில ஊரை அழித்தான்.

ராபர்ட் கிளைவுக்கு மட்டுமே அவன் பதில் சொல்ல வேண்டியிருந்தது. ராபர்ட் கிளைவும் அவனுக்கு மிகுந்த மரியாதை செலுத்தினார். அவன் புத்திசாலித்தனத்தை மெச்சினார். அவன் வீரத்தைப் பாராட்டினார். உள்ளே சற்று பயந்தார்.

நிஜத்தில், பார்த்தசாரதி கோயில் சுவாமி தரிசனத்துக்கு வரிசையில் நின்றிருப்பான் ஆனால், மனதுக்குள்... பூரண கும்பம் வைத்து அவனை உள்ளே அழைத்துக் கொண்டு போவார்கள். ஐயர்களும் கையெடுத்துக் கும்பிடுவார்கள். 'கோயில்ல வெள்ளையடிக்கணும் பத்து வருஷமாச்சு' என்று விண்ணப்பிப்பார்கள். அவன் தலை

யாட்டுவான். உடனே ஏற்பாடு செய்வதாகச் சொல்லு வான். கோயிலுக்கு வருகிற பெண்களைச் சுட்டிக் காட்டி 'இவள் யார், அவள் யார்...?' என்று கேட்பான்.

"ஐயா கூப்பிடறாரு...வாங்க உடனே...'' பெண் களை கோயில் அதிகாரிகள் அதட்டுவார்கள். அவனுக்குத் தனியறை கொடுப்பார்கள். அந்தப் பெண்களை உள்ளே அனுப்புவார்கள். பிரம்பால் மார்புச் சேலை விலக்கு வான் அவன்.

தரிசன வரிசை மெள்ள நகரும் அவனும் நிதானமாக அந்தப் பெண்களோடு சல்லாபம் செய்து கொண்டிருப் பான் .

ஒரு முறை மனம் முழுவதும் இப்படிக் கற்பனையாக யோசித்துக் கொண்டு நகர்ந்ததில், சுவாமி பார்க்கவே மறந்து போய் விட்டது. பார்த்தசாரதிக்கு அருகே போய் வெறுமே பார்த்துவிட்டு, உள்ளே கருவறைக்குள் நுழை யாமல் நேரே திரும்பி வாசல் வரைக்கும் ஒரு கொத்த வால் போல நடந்து போனான். கூட வந்தவர்கள் அவனை விநோதமாகப் பார்த்தார்கள்.

# 7

"என்னடா, முக்கால் மணி நேரம் கியூவுல நின்னுட்டு, திடீர்னு திரும்பி வந்துட்டே?!' என்று அதி சயமாய் கேட்டார்கள்.

அவனும் திடுக்கிட்டான். 'என்ன, இப்படி செய்து விட்டோமே' என்று கணநேரம் யோசிததான். சுதாரித் துக் கொண்டான்.

''சுவாமியைப் பார்த்தாச்சு. மனசுல பதிய வெச்சாச்சு. அதனால திரும்பிட்டேன். சுவாமி இப்ப மனசுல இருக்கார்'' என்று அவர்களுக்குப் பதில் சொன்னான். அவர்கள் அவனை வியப்போடும் மரியாதையோடும் பார்த்தார்கள்

மயிலை கபாலி கோயிலுக்குப் போனால், ''நீங்கள் சுற்றி வாருங்கள். நான் உட்கார்ந்து கொள்கிறேன்''— அவன் நிழலாக ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டான். கற்பனைக் கதவுகளைத் திறந்துவிட்டான் நண்பர்கள் கோயில் சுற்றப் போனார்கள்.

மயிலாப்பூர் கிராமத்தில் வடக்கு கோயில் வீதி முழுவதும் பெரிய கொத்தவாலுக்கு சாசனம் எழுதி வைப்பதாக முடிவு எடுக்கப்பட்டு, சாசனம் கல்லிலும் ஓலையிலும் தகட்டிலும் பொறித்துத் தரப்பட்டது.

தெற்குப் பக்கத்து மக்கள் இதற்குக் கடும் ஆட்சேபம் தெரிவிக்கிறார்கள் என்று வடக்குப் பக்கத்து மக்கள் சொன்னார்கள்.

''யாரது?''—அவன் கோபமானான். குதிரையேறினான். முப்பது அரசாங்க சிப்பாய்களுடனும் அவனுடைய ஐம்பது சொந்த அடியாட்களுடனும் மயிலையின் தெற்குப் பகுதியில் ஊடுருவினான். சந்து சந்தாக நுழைந்தான். எதிர்ப்பட்டவர்களையெல்லாம் அழித்தான்.

''எனக்கு எதிராகப் பேசுகிறாயாமே?''—வாயில் துப்பாக்கி நுழைத்துச்சுட்டான், மூளை சிதறும்படி பலரைச் சாகடித்தான். குழந்தைகளை கொத்தாகப் பிடித்து தூக்கிப் போட்டான். இன்னொரு குழந்தையைத் தூக்கியபோது, காலைக் கட்டிக்கொண்டு அழுத தாயை, 'அவிழ்த்துவிடு' என்று கட்டளையிட்டான். அவள்விரைவாகத் துணியை அவிழ்த்து, நிர்வாணமாக நின்றாள். குழந்தையை இறக்கி வைத்துவிட்டு அவளைக் குதிரையில்

தூக்கி வைத்துக் கொண்டான், குலுங்க குலுங்க அவளோடு பூந்தமல்லிக்குத் திரும்பினான்.

பத்து வயதில் அவன் நெஞ்சில் முளைத்த புல், செடியாடி, செடி இளமரமாகி, மரம் பெருமரமாகி, மரத்தில் இலைகளும் பூக்களும் முகிழ்த்து, இப்போது கனிகள் கனியத் துவங்கின ஒவ்வொரு பழமும் முழு விஷமாக இருந்தன, அந்தக்கனிகள் சேற்றில் விழுந்து மறுபடியும் செடிகள் முளைத்தன. அந்தத் தனிமரம் தோப்பானது. அடர்ந்த காடானது, அவனுக்குள் பெரிய விஷக்காடு இருப்பது வெளியில் எவருக்கும் தெரியாது

'இப்படியெல்லாமா இருப்பார்கள்...' என்று சிலர் பெரிய யோக்கியம் என்பதுபோல யோசிப்பார்கள் மிகுந்த சைவமான மனதுபோல நடிப்பார்கள்.

அநேகமாய் எல்லார் மனதிலும் ஓர் ஓரத்தில் இப்படி ஒரு விஷக்காடு இருக்கத்தான் செய்கிறது. காமமும் வன்முறையும் மனதுக்குள் நாடகமாய் நடக்கத்தான் செய்கிறது. நேரில் நிகழ்த்த முடியாத எதையும் மனம் கற்பனையில் நிகழ்த்திக் களிப்படைகிறது கற்பனையிலும் நிகழ்த்த வெட்கப்படும். மனம், கனவு கண்டு நிறைவேற்றிச் கொள்கிறது. உடைமையாக்கிக் கொள்கிறது.

விரும்பி ரசித்த எதையும் சாப்பிடாமல் வாழ்க்கை முடிவதில்லை. இதில் காமம் தனி ருசி. அதிக ருசி· கோதுமை அல்வாபோல வாய் முழுவதும் தித்திக்க வைக்கிற இனிப்பு ருசி. வன்முறை காரம். உப்பும் உறைப்பும் சேர்ந்த கலவை. காமமும் வன்முறையும் அருகருகே இருக்கிற ருசிகள். ஒருமாதிரி கைகோத்துக் கொண்டு நம்மை மயக்குகிற விஷயங்கள். இந்த மயக்கத்தைக் கண்டு பயந்துபோய்தான். இந்த ருசியை ஆரம்பத்திலேயே களைந்து எடுத்துவிட வேண்டும் என்று முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள்,

"ஏ அர்ஜுனா...புலன்களை அடக்க முடியாது அதன் வழி செல்பவன் எதற்கும் லாயக்கில்லாதவனாகிறான். என்னிடமிருந்து விலகிப் போகிறவனாகிறான். அவனால் எந்தவித திருப்தியும் அடையமுடியாது' என்கிற விதமாய் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'காமம்...அது என்ன. விசாரித்து அறி' சாதுக்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள் 'உன்னிலிருந்து முகிழ்த்தது. உன்னால்தான் அதைக் கண்டுபிடிக்க முடியும், நீ போட்ட முடிச்சு உன்னால்தான் அதை அவிழ்க்க முடியும்' என்றும் சொன்னார்கள்

ரமேஷ் ஏதேனும் ஒரு கட்டத்தில் இதை நிறுத்தியிருக்க வேண்டும். 'என்ன நடக்கிறது உள்ளே...ஏன் இப்படி தொடர்கதையாய்ச் சிந்திக்கிறேன் ஏன் இப்படி நாடகம் போடுகிறேன். ஏன் இப்படி உள்ளொன்றும், புறமொன்றுமாய் இருக்கிறேன்' என்று கவலைப்பட்டிருக்க வேண்டும். 'இது எப்போது ஆரம்பித்தது...எதனால் இது நடக்கிறது...யாருடைய தூண்டுதல், எங்கே இது முதன்முதலில் துவங்குகிறது' என்று யோசித்திருக்க வேண்டும்.

ஒருவர் தன்னைப் பற்றிக் கூர்மையாய் யோசிப்பதற்கு நிறைய வழிகள் இருக்கின்றன. அதையும் முன்னோர்கள் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், நம் குழந்தைகளுக்கு இவையெல்லாம் நாம் சொல்லித் தருவதில்லை. ஏனெனில், நமக்கே அப்படி யோசிக்கத் தெரியாது.

தலைமுறை தலைமுறையாய் கூர்மையாய் யோசிக்க சொல்லிக்கொடுத்த பயிற்சிகள் எல்லாம் நாகரிகம் என்ற பெயரில் மறைந்து ஒழிந்துவிட்டது.

'மூக்கைப் பிடிச்சுக்குனு உட்கார்ந்தா பெரியாளாயிடலாமா...எல்லாம் தெரிஞ்சவனாயிடுவியா ... என்னா

நெனைச்சிக்கினு இருக்கே' என்று ஆளை இழிவுபடுத்துவது போல் ஒரு நல்ல செய்கையை இழிவுபடுத்தினார்கள். எப்போது பார்த்தாலும் பேசினார்கள். மடியில் வானொலியைக் கட்டிக்கொண்டு இடைவிடாது பாட்டு என்கிற விஷயத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். உலகத்தைத் தெரிந்து கொள்கிறேன் என்கிற பெயரில், பத்திரிகையின் வாயிலாய் ஊர்வம்பு விசாரித்தார்கள். அதைத்திரும்பத் தெருவில் பேசினார்கள். அமைதியாய் இருக்கவே மறந்து போனார்கள்.

அமைதியாய் இருக்கவே முடியவில்லையென்றால், யோசிப்பதற்கு எப்படி முடியும். எனவே, விடிந்ததிலிருந்து இரவு சுருண்டு விழும்வரை வாழ்க்கை பரபரப்பாய், படபடப்பாய், கொதிப்பாய், குமுறலாகவே போய் விட்டது.

ரமேஷுக்கும் இது நேர்ந்தது. வெளிப்பார்வைக்கு அமைதியாய் நிதானமாய் நடந்து கொண்டாலும் உள்ளே மனம் பிசாசாய் ஆட்டம் போட்டது. பூதமாய் வளர்ந்து எல்லோரையும் அடித்து நொறுக்கியது.

படிப்பு முடிந்த பிறகு ரமேஷ் வேலை தேடினான் வேலை கிடைப்பது சிரமமாக இருந்தது. குறிப்பாக, அவன் படிப்புக்குப் பெரிய மரியாதை எதுவும் இல்லை. அவன் தினமும் வேடிக்கை பார்க்கத் துவங்கினான். தெருவில் நின்று போவோர் வருவோரை உற்றுப் பார்த்து மனசுக்குள் பேசத் துவங்கினான். வெகு குறிப்பாக, மத்திம வயதுப் பெண்களை அவன் கூர்ந்து கவனிக்கத் துவங்கினான். பத்து வயதில் அம்மாவைப் பார்த்த, அதே உருவத்தைத் தேடத் துவங்கினான். அந்த உடல் வாகு. அந்த முகம் அந்த தளர்ச்சி, அந்த பருமன், அந்த அசைவு என்று கவனிக்கத் துவங்கினான். இளம் பெண்களை அவன் பார்ப்பதே இல்லை. 'ஸ்வீட் சிக்ஸ்டீனை' அவன் கண்ணெடுத்தும் கவனிப்பதில்லை.

ஒருநாள் கோட்டை மியூஸியத்தில் ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டு வந்தபோது, கோட்டையிலுள்ள மாதா கோயிலின் சலவைக்கல் சிற்பங்களைக் கவனித்து வந்தபோது, அருகே வேடிக்கை பார்க்க வந்திருந்த பதினேழு வயது சிறுமிகளிடம் இந்தக் கவிதையைப் படித்துப் பாருங்கள்' என்று சுட்டிக்காட்ட...'ஐயே... இத பாருடி. ஏதோ பெனாத்துது' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்கள். அன்றிலிருந்தே இந்தச் சனியன்களைத் தொடக்கூடாது என்று அவன் தீர்மானித்துவிட்டான்.

நண்பர்கள் எல்லாருமே இளம்பெண்களால் கவரப் படும்போது அவன் முகம் திருப்பிக் கொள்வான். 'என்ன பெரிய ஒழுங்கா...?'' என்று நண்பர்கள் கேட்டபோது, ''எப்படி இவளைப் பாராட்டுகிறாய். இவளோடு பேசிப் பார்த்திருக்கிறாயா...? இரண்டு வார்த்தை ஆங்கிலம் பேசத் தெரியாதவள். எது பற்றியும் தெளிவான சிந்தனை இல்லாதவள்

இவளோடு பேசக் கூட என்னால் முடியாது. பிறகு எப்படி காதலிக்க முடியும்?'' என்று கடுகடுப்பாய் கேட்டான்.

நண்பர்கள் அவனை வியந்தார்கள். ரொம்பத் தெளிவான ஆள் என்று பாராட்டினார்கள்.

''அப்போ பொண்ணுங்களை டாவே அடிக்க மாட்டியா...?''

''இல்லே. இதுங்களைப் பார்த்தா எனக்குப் புடிக்கலை. நான் ஒதுங்கிக்கிறேன். என்னால இந்தப் பொண்ணுங்களோட பேசவே முடியலை ஒவ்வொரு மூஞ்சியிலேயும் வழியற மக்குத்தனத்தைப் பார்க்கறபோது, இதுங்க இருக்கறதும் ஒண்ணும்தான். இல்லாததும் ஒண்ணுதான் அப்படினு எனக்குத் தோணுது.''

''சத்தியமா அப்படி நினைக்கிறியா...''

''உன் மேல சத்தியமா. என் மேல சத்தியமா. இந்த ஹிஸ்டரி புக் மேல சத்தியமா, இந்த மாதிரி பொண்ணுங் களை நான் பார்க்கறதே இல்லை.''

எந்த மாதிரி என்று நண்பர்கள் கேட்கவில்லை. 'தன்னை விட வயது மூத்த தடிமனான பெண்களை ஒருவன் நேசிப்பான் என்று அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

இப்படிப்பட்ட ரமேஷ், நீலாயதாட்சியைப் பார்த்து மிரண்டு போனானான். ஏதோ ஒருஇடத்தில் தன் தாயின் சாயல் அவளிடம் இருப்பதைக் கண்டுக்கொண்டான். அவள் எங்கிருந்து வருகிறாள் என்று கண்டுபிடித்தான். எந்த இடத்தில் நின்றால் அவளை நன்றாகப் பார்க்கலாம் என்று யோசித்தான். திட்டமிட்டான். செயல்படுத்தி னான்.

முப்பத்தோரு வயது நீலாயதாட்சி, இருபத்தோரு வயது இளைஞன், ரமேஷைக் கலங்க அடித்தாள். இர வெல்லாம் காமக் கனலில் போட்டு வறுத்தாள். அவள் நினைவுகள் அவனைப் பைத்தியமாக்கின. மனசுக்குள் பேசிக் கொண்டிருந்தவன் சற்று உரக்கப் பேச ஆரம்பித் தான். அவளை நோக்கி, தன் வார்த்தைகள் போக வேண்டும் என்று நினைத்தான். அவள் வீடு கண்டுபிடித் தான். அவள் டெலிபோன் நம்பரைக் கண்டுபிடித்தான்.

ஒண்ணேகால் ரூபாய் கொடுத்து கண்ணாடிக் கூண்டுக்குள் போய் உட்கார்ந்து அவளுடைய நம்பரை டயல் செய்துவிட்டு, மணி அடிக்கக் காத்திருந்தான் மணி அடித்ததும் பரவசமானான. பரபரப்பானான். கண்கள் செருக அவளையே நினைத்துக் கொண்டிருந்தான்.

அவள்தான் போன் எடுத்தாள். ''யாரது?'' என்று சொன்னாள். அவன் அவளை வர்ணித்தான். ''ச்சீ...

நாயே...யார்ரா நீ?'' என்று அவள் கத்தினாள். அந்தக் கூச்சலையும் அவன் சந்தோஷமாக ஏற்றான். அவள் போனை அடித்து துண்டித்தாள், அவன் குதூகலமடைந் தான்.

'உன்னைக் கண்டு நான் ஆட, என்னைக் கண்டு நீ ஆட...உல்லாசம் பொங்கும் இன்பத் தீபாவளி' என்று பாட்டுப் பாடினான். சந்தோஷம் அவனை அப்படிப் பாட வைத்தது. 'இன்பம் பொங்கும் வெண்ணிலா வீசுதே' என்று முணுமுணுக்க வைத்தது.

'ஆ...தையர, தையா...தையர தையா...பிச்சுக்குவா' என்று மனம் அர்த்தமில்லாமல் ஆடிப்பாடி முழங்கியது. என்ன செய்வது என்று தெரியாமல் அரை கிலோ இனிப்புகள் வாங்கி தான் மட்டுமே உட்கார்ந்து தின்றான்.

# 8

அன்று அவள் அழகாக உடுத்திக் கொண்டு போனாள். கிறங்கிப்போய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்ப்பதை உற்றுக் கவனித் தாலும், அவன் உள்ளுக்குள் புயல்வீசிக் கொண்டிருக் கிறது என்பது எவருக்கும் தெரியாது. முகம் என்ற சிறிய முகமூடி போட்டு, மனம் என்ற பெரிய ராட்சஸனை இயற்கை மறைத்திருக்கிறது. மனிதனின் கெட்டிக்காரத் தனம் எல்லாம் நல்லவனாய் நடிப்பதில்தான் செலவாகிக் கொண்டு இருக்கிறது.

'இந்தத் தடவை நீ பிராவுக்குக் கொக்கி போட லையே...வெளியே நீட்டிக்கினு இருந்துதே...'

அவள் அப்போதுதான் ஆடிப்போனாள். அந்த உடையோடு அவள் வீட்டிலிருந்து மருந்துக் கடைக்குப் போய்த் திரும்பி வந்திருந்தாள். ஆகவே, 'அவன் இருக்கிற எல்லை தன் வீட்டிலிருந்து ஒரே ஒரு சுற்றளவு மட்டுமே. இங்கே எங்கோ இருந்து தன்னைக் கவனிக்கிறான் என்று அவள் புரிந்து கொண்டாள். என்ன செய்வது என்று யோசித்தாள்.

மறுநாளும் போன் வந்தது. இந்த முறை வர்ணனை கூடலைப் பற்றியதாக இருந்தது. அவள் இரைந்து திட்டி, போனை வைத்தாள். வெறுப்பானாள்.

''ஏண்டா, எல்லா ஆம்பளைங்களும் இப்படிச் சாவடிக்கிறீங்க?'' என்று கதறினாள்.

புருஷனிடம் சொல்லலாமா. வேண்டாமா என்று பலமுறை யோசித்தாள்.

''நான் அப்பவே சொன்னேன். விதவிதமா புடவை வாங்காதடி...வாங்கினாலும் இத்தனை சீரா கட்டாதடின்னு...நீ கேட்டியா. என்னமோ சினிமாக்காரி மாதிரி... நடக்கறதே சரியில்லை. ஏன் இப்படி ரதம் போற மாதிரி மெள்ள நடக்கறே...என்னிக்காவது இறுக்கி, பாந்தமா உடுத்தியிருக்கிறியா...தலைமுடி அதிகம்தான். அதுக்காக எப்ப பார்த்தாலும் கூந்தலை சரிபண்ணிக்கினே இருப்பியா...அப்ப கை தூக்க வேணாமா...கை தூக்கினா நாலு பேர் பார்க்காத இருப்பானா...?'' என்று கடுகடுப்பான். இந்தக் கண்றாவியை வேறு காது கொடுத்துக் கேட்டுக் கொள்ள வேண்டுமா...அவள் ஆழ்ந்து யோசித்தாள்.

ஆனால், ஏதோ ஒரு புள்ளியில் இதை நிறுத்த வேண்டும், இல்லையென்றால், அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிடும். இதற்கு மறுப்பு சொல்லாது போனால்,

அந்த பைத்தியக்காரன் தெருவில் ஏதோ ஒரு கோணத்தில் மானத்தை வாங்கி விடக்கூடும்.

'யார் தன்னைப் பார்ப்பது...யார் தன்னை வர்ணிப் பது...?' என்று அவள் யோசித்து, தெருவில் பார்த்துக் கொண்டே போனாள். யார், யார் மீதோ சந்தேகம் வந்தது. முற்றி, முதிர்ந்த ஆண்களையும் கிழவர்களையும் கூடச் சந்தேகித்தாள்.

அவள் போர்ஷனில் பக்கத்து போர்ஷனுக்கு அவனு டைய நண்பன் மின்சார வேலை செய்யும்போது ரமேஷ் உதவி ஆளாகப் போனான். அதில் ஏதும் சந்தேகம் வராமல் பார்த்துக் கொண்டான்.

"ரெண்டு பிளக்பாயிண்டு, பைப்பு. ஒயரு வாங்கினு வந்திடுறேன். நீ இருடா..." என்று அவனை நிறுத்தி விட்டுப் போனான். அந்த வீட்டில் இருந்து அவள் வீட்டைக் கவனிப்பது அவனுக்கு எளிதாயிற்று. இந்த வீட்டு வராண்டா வழியாய் அவள் வீட்டுச் சமையலறை தெரிந்தது. யாருமே இல்லை என்ற நினைப்பில் முன்னும் பின்னும் அவள் அலைந்தது கண்களுக்கு விருந்தாய் இருந்தது.

அவன், அவளைக் கவனித்தான் மனதுக்குள் கொத்த வால் ஆனான். அவளை நாட்டியக்காரி ஆக்கினான் 'ம்...ஆடு' என்று சவுக்கு சொடுக்கினான்.

அன்று மாலை அவன் டெலிபோனில் பேசினான். தெள்ளத்தெளிவாய் அவன் மிகமிக அருகிலே இருக்கிறான் என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது.

புருஷன் வந்ததும் அவள் 'ஓ'வென்று வாய்விட்டு அலறினாள். புருஷன் பயந்து போனான். 'என்ன?" என்று விசாரித்தான். அவள் விவரம் சொன்னாள். அவன்

லேசாகக் கடிந்து கொண்டான். 'என்ன செய்வது?' என்று யோசித்தான். நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் ஒரு எழுத்து வகை புகார் கொடுத்துவிட்டு வந்தான்.

ரமேஷுக்கு வலை விரிக்கப்பட்டது.

''என்ன கண்ணா...ராத்திரி தூங்கும்போது பல்லைக் கடிச்சிக்கிறே. கையைத் தூக்கித் தூக்கிப் போடறே... ஏதாவது சண்டை போடற கனவா...'' அம்மா ஆதுர மாக விசாரித்தாள்.

''தினம் தினம் சண்டை தினம் தினம் போர். தினம் தினம் வன்முறை, தினம் தினம் காமம் நடப்பதை அவளுக்கு அவன் சொல்லவில்லை. சொல்வதில் எந்த லாபமும் இல்லை.

நம் தேசத்தில் இளைஞர்களுக்குத் தன் உள் மன சுத்தம் பற்றித் தெரிவதில்லை. தமக்குள் காமம் புகுந்து தன்னை வாட்டி வதைப்பதை அவர்கள் உணர்ந்திருந் தாலும் அதை வெளியே சொல்ல முடிவதில்லை. காமம் மிக மோசமான விஷயம் என்று இவர்கள் தீர்மானித்து. அதைப்பற்றி மறைமுகமாகப் பேசவும் இருட்டில் பல் தெரியக் கண்விழித்துப் பார்க்கிற விஷயமாகவும் மாற்றி விட்டார்கள்.

இந்தத் தேசம் இன்னொரு பிரச்னையையும் அனுப வித்துக் கொண்டிருக்கிறது. காமத்தைப் பற்றிச் சிந்திக்கா மல், முழுவதுமாக மற்ற வேலைகளில் ஈடுபடுகிற வாழ்க்கை பலருக்கு வாய்ப்பதில்லை. ஓயாமல் வேலை செய்வதென்பது இவர்களுக்குத் தெரியவில்லை. அப்படி உழைப்பில் வேகம் காட்டினால், அயர்ந்து தூங்கமுடியும் என்ற வித்தையை இவர்கள் மறந்து போயிருந்தார்கள், எனவே, யோசிப்பதற்கு அதிக நேரம் கிடைக்க, உழைப்பு குறைவு இருக்க உள்மனம் பேயாட்டம் ஆடத்

துவங்க...தன் உள் மனத்தை இன்னும் நிறைய ஆடவிட்டு இவர்கள் பொழுது போக்கினார்கள்.

அவனைப் பிடிப்பது மிக எளிதாக இருந்தது. இத்தனை உணர்ச்சிவசப்பட்டு, டெலிபோனில் அடிமனக் குமுறலை ஆபாசமாக வெளியிடுகிறவன், ஒருநாளும் புத்திசாலி இல்லை. அவனை இன்னும் முட்டாளாக்குவது போலீஸாருக்கு எளிதாக இருந்தது.

''கவலையே படாதீர்கள். அவன் பேசுகிறபோது, அவன் பேச்சை முதலில் கேளுங்கள். பிறகு, 'ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்...? நீ என் தம்பியைப் போல...'' என்று ஆரம்பியுங்கள். 'இல்லை' என்று அவன் மறுப்பான். 'சரி, அப்படியென்றால் நீ யார்...?' என்று கொஞ்சலாகக் கேளுங்கள் நீங்கள் பேசுவதே அவனுக்குப் போதையாகிவிடும், நீங்கள் பேசத் துவங்கியதுமே, தான் இன்னவிதமாக உங்களோடு பழக விரும்புகிறேன் என்று அவன் பேசுவான். அவன் பேச்சில் ஆபாசமும் கலந்திருக்கும். தயவு செய்து பயப்படாதீர்கள். அவனைப் பேச விடுங்கள். பிதற்ற விடுங்கள். குறிப்பிட்ட இடத்துக்கு வரச் சொல்லுங்கள். பிறகு, நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்...''

எலியை உணவுப்பொருள் காட்டி இழுப்பது போல வெகுவேகமாக இழுத்தார்கள். அவனும் பசியால் தூண்டப்பட்டு உமிழ்நீர் வழிய ஓடுகிற ஒரு ஜந்துவைப் போல வந்து சிக்கிக் கொண்டான்.

''இந்தப் புடவையை உடுத்திக் கொண்டு வா. அழகாக இருக்கும்...'' என்று அவளிடம் பேசினான். அவள் உடுத்திக் கொண்டு வந்தபோது, அவனே அவளுக்கு அருகில் வந்து தான் இன்னார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். 'அப்படியா...?' என்று திரும்பினாள். அவன் மீது ஆறு பேர் பாய்ந்தார்கள்.

சுற்றி நின்ற ஒட்ட வெட்டப்பட்ட கிராப்புத் தலைகளை பார்த்ததுமே அவனுக்குப் புரிந்து போயிற்று. போலீஸ்காரர்களைக் கையெடுத்துக் கும்பிட்டான் 'சார், சார்' என்று கெஞ்சினான். அவர்களின் காலில் விழுந்தான். அவளை நோக்கியும் கைகூப்பினான்.

காமத்தால் தவறு செய்பவர்களை நமது ஊர் மிகக் கடுமையாகத் தண்டிக்கும். மிகக் கேவலமாக நடத்தும்.

அவன் வீடு, விஷயமறிந்து திணறிற்று. அவன் வீட்டுக்கு எதிரே அவன் தாயைப் பார்த்து 'தூ' என்று பல பேர் தரையில் துப்பினார்கள். 'இப்படியொரு புள்ளையைப் பெத்ததுக்குச் செத்துப் போகலாம்' என்று உரக்கக் கத்தினார்கள். ஆனால், கத்தியவர்கள் யாரும் உத்தமர்களல்ல. கத்தியவர் மனசுக்குள் இதைவிட மோசமான காமவெறி உள்ளிருக்கிறது. இவன் நாயை அவிழ்த்துவிட்டு விட்டான். பலர் சங்கிலி போட்டு, உள்ளுக்குள்ளே பத்திரமாக வைத்திருக்கிறார்கள். எப்போது வேண்டுமானாலும் சங்கிலி அறுந்து, மிருகம் வெளியே வரும். அடக்கி வைக்கப்பட்ட உணர்வுகள் பொங்கி எழும். மறைத்து வைக்கப்பட்டவை தன் முகம் காட்டும்.

நம் வாழ்க்கையில் காம இரட்டை முகத்தோடு உலாவருகிறது. வெளிப்பார்வைக்கு ஒழுக்கம் பற்றி அதிகம் பேச, அதிகம் சிந்தித்து, அதிகம் செயல்பட்டிருந்தாலும் உள்ளுக்குள் மிக அசிங்கமான குரூரம் தாண்டவமாடுகிறது. அந்தக் குரூரத்தைப் பல்வேறு விஷயங்கள் தூண்டிவிடுகின்றன.

இதற்கு என்ன காரணம்...

தகவல் தொடர்பு மூலமாகக் கலாசார மோதல்கள் மிகக்கடுமையாக மாறிவிட்டன. ஐம்பது வருடத்துக்கு முன்னால் உடுத்தப்பட்ட உடையும் இன்று பெண்கள்

உடுத்துகிற உடையும் மிகப்பெரிய மாறுதலைக் கொண்டிருக்கிறது. ஆனால், இளைஞர்கள் வாழ்க்கை அப்படியேதான் இருக்கிறது இந்த கலாச்சார மாறுதலினால், எந்த விடுதலையும் பெறாமல் வெறும் சௌகரியங்களை மட்டும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பச்சை. நீலம், சிவப்பு, மஞ்சள் என்று சில வர்ணங்களில் மட்டுமே பருத்திப் புடவைகள் கிடைக்க, அந்தப் பருத்திப் புடவைகளை உடம்பில் சுற்றிக் கொண்டு, இழுத்துப் போர்த்திக் கொண்டு கழுத்தி லிருந்து உச்சந்தலை வரைக்குமே தன்னைப் பெண் என்று காட்டிக் கொண்டிருந்த வழக்கம் மெல்ள நகர்ந்து. விதவிதமான பூக்கள் டிசைனுக்கு உடைகள் மாறின. சின்னச் சின்ன வட்டங்கள் போட்ட சுங்குடி புடவைதான் கண்ணைப் பறிக்கிற விஷயமாக இருந்த காலம் போய், முதுகிலும் பின்பக்கத்திலும் தொடையிலும் பெரிய பூக்கள் மலர்ந்தன. அவர்கள் நடக்க, அசைந்தன, அவர்கள் ஓட, குலுங்கின. வாலிபர்கள் பாதிக் கண்களை மூடிக் கொண்டு, அப்படி நடப்பவர்களைக் கிறக்கத்தோடு பார்த்தனர்.

விரைவிலேயே பெண்கள் எடுப்பான தோற்றம் காட்ட ஆரம்பித்தனர். பிறகு சற்று இறுக்கமாக உடையணிய ஆரம்பித்தார்கள்.வேலைக்கு வந்தார்கள். ஆண்களோடு கலந்து பழகினார்கள. நன்கு படித்தார்கள் புலமை பெற்றார்கள். தான் ஆணுக்கு எத்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபித்தார்கள். ‘சம அந்தஸ்து கொடு’ என்று சண்டையிட்டார்கள்.

மின்சார ரயிலிலும்பஸ்ஸிலும்அலுவலகத்திலும்பள்ளியிலும் ஆண்களுக்கு அருகே அவர்கள் நிற்கும்படி நேர்ந்தது ஆனால், அவர்களுக்குக் காலம் காலமாகச் சொல்லப்பட்ட ஒழுக்க விதிகள் சிறிதும் தளரவில்லை. பனியன் போட்டு ஜீன்ஸ் அணிந்த பெண்ணோடு ஒருவன் முகமன்

கூறிப் பேசினால், அதைப் பார்க்கும் மற்றொரு இளைஞன், 'மாமா...டாவா...?' என்று உடனே கேட்கிறான். இந்த ஒற்றைக் கேள்வி மனதைத் திசை திருப்புகிறது. இதற்குத் தலை கொடுத்து விட்டால், அவளை காமத்தோடு பார்ப்பது சந்தோஷமாகி விடுகிறது. உள்ளுக்குள் ஆபாசமாக யோசித்துப் பார்ப்பதும் வெளியே பொய்யாக முகமன் கூறுவதுமாக இரண்டு தோற்றங்கள் அவனுக்குள் ஏற்பட்டுவிடுகின்றன

ஒரு சமயம் முன்தோற்றம் நகர்ந்து, பின்னால் உள்ள குரூர முகம் தெரிய...'ச்சூ...ச்சூ...நாயே...' என்று அவன் ஒதுங்கிவிடுகிறான். இந்தக்கணங்கள் மிகமோசமானவை. சீழ் பிடித்து, பெரும் ரணமாகி, வலி கொடுத்து, அவனை வெறியனாக்கி விடுகிறது. 'சரி, சரி...என்ன செய்ய வேண்டும்...? தப்பித்துக் கொள்ள என்ன வழி...? எந்த விதமான இந்தப்பிரச்னையை நான் அணுகவேண்டும்...?' மனசு பரபரக்கும்.

காயப்படாமல் வாழ்வதே எல்லோருக்கும் பிடிக்கும். எல்லாப் பெண்களையும் தாயாக நினைத்தால், இந்தப் பிரச்னை தீர்ந்து விடும் என்று எவரேனும் பதில் சொல்லலாம். மனம் செத்துப் போனவர்களாலதான் எல்லாப் பெண்களையும் தாயாக நினைக்க முடியும், மனம் செத்துப் போவது என்பது மிகப் பெரிய விஷயம். கோடியில் ஒருவருக்குத்தான் கைக்கூடும்.

இப்படி எகிறுகிற மனதைச் சமாதானப்படுத்துவது என்கிற புத்திசாலித்தனத்தை இளைஞர்கள் கைக்கொண்டால் அது நன்மை பயக்கும் மிகுந்த ஆர்வத்தோடும் அமைதியோடும் நான் இதுபற்றி போதித்ததில் எனக்கு ஒரு விஷயம் புலப்பட்டது.

பெண் என்பவள் வெறும் உடம்பு மட்டும் இல்லை. வெறும் வடிவழகு மட்டுமல்ல...வெறும் கவர்ச்சியான

அம்சம் அல்ல...வெறும் வடிவழகு மட்டும் சிறிது நேரம் இருந்துவிட்டுப் போகட்டும் என்று நாம் வற்புறுத்த முடியாது. உன்னுடைய புற அழகு மட்டுமே எனக்குத் தேவை, மற்றவை தேவை இல்லை என்று ஒரு பெண்ணிடம் சொல்ல முடியாது.

பெண் என்பவள். ஒரு முழுமையான பிரகிருதி ஒரு உயிரான விஷயம் உடம்பு என்று உற்று நோக்கும்போது உள்ளுக்குள்ளே மனம், புத்தி, பழக்கவழக்கங்கள். கலாசாரம், வாழ்ந்து வளர்ந்த இடம் என்று பல்வேறு விஷயங்கள் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

ஒரு பெண், ஒரு ஆணுக்கு அருகே வரும்போது ஒரு கலாசாரம், ஒரு வாழ்க்கை அருகே வருகிறது. வெறும் உடல் கூறாகப் பெண்ணை யோசிப்பதிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள வேண்டும். 'நான் அழகாக இருக்கேனா...?' என்பது போல் ஒரு பெண் உடுத்திக்கொண்டு எதிரே வருகிறபோது, பார்க்கிற ஆண் சற்று நிதானமாக உன் பின்னே எத்தனை பிரச்னைகள் இருக்கின்றன என்று யோசித்தால் மனம் நிதானப்பட்டு விடுகிறது.

'சரி, ரொம்ப அழகா இருக்கே...என்னா அதுக்கு...?' என்று எதிர்க்கேள்வி கேட்டால், 'எதுவும் இல்லை' என்கிற பதில் உடனே வருகிறது.

'ஒண்ணுமில்லே...சும்மா பாரு' என்று அந்தப் பெண் கண்களுக்கு விருந்து வைத்தால், 'சரி...உன்னைப் பார்த்துக்கிட்டே இருந்தால் பசி அடங்காது. எனக்கு வேற வேலை இருக்கு. அந்த வேலையை ஒழுங்கா செய்தாதான் இந்தப் பசி ஒழுங்கா அடங்கும். உன்னைப் பார்த்துட்டிருந்தா, என் வேலையும் போகும். என் பசியும் அதிகரிக்கும். அதனால உன்கிட்ட இருந்து நகர்ந்துக்கறதுதான் நல்லது, என்று ஒரு ஆண் சிந்திப்பானேயானால் அவன் ஆரோக்கியமாகி விடுகிறான்.

ஆனால், இதில் ஒரு ஆபத்து இருக்கிறது. 'வேண்டாம்' என்று ஒதுங்கிப் போகிறபோது, மனம் நேரடியாக அனுபவிக்க மறுக்கப்பட்டதால், கற்பனையில் அனுபவிக்க வேகமாக முடிவுகள் எடுக்கிறது.

கற்பனையில் அனுபவிக்கப் பல்வேறு கலைகள் உதவி செய்கின்றன. பாட்டு, இசை, வசனம், காட்சி ஆடல், பாடல் என்று பல்வேறு விஷயங்கள் கிளறுவதற்குக் காத்திருக்கின்றன. இது அல்பமானது. கொதிக்கிற எண்ணெய்க்குத் தப்பி எரிகிற நெருப்பில் விழுவது போன்ற விஷயம். எண்ணெயில் இருக்கிற அப்பம் கூடப் பொன் நிறமாகிவிடும். நெருப்பில் விழுந்த அப்பம், கருகித் தீய்ந்து விடும்.

மனசின் கற்பனை உடம்பைத் தாக்கும். உடம்பு சக்தியைத் துரிதமாக இழக்கும். உடம்பு சக்தியை இழக்கும்போது, ஓய்வு தேவைப்படும், ஓய்வுக்காகச் சுருண்டு படுத்துக் கொண்டிருக்கும்போது, கற்பனைகள் மனதில் அதிகமாகும். கற்பனைகள் மனதில் அதிகமாக உடல் உபாதை இன்னும் வேகமாக வளரும் குதிரை போன்று ஓடித் திரியவேண்டிய வாலிப வயதில் அடிபட்டுப் போவார்கள். செயலாற்றுகிற நேரம் நெருங்கும் போது செயல்பட முடியாத ஆண்மகனாகத் துவண்டு போவார்கள்.

உலகத்தில் மிகமிகக் கொடுமையான விஷயம்—மனைவி இருந்தும் மகிழ முடியாத தன்மைதான். இது கழுமரத்தில் சிக்கி உயிர் வாழ்வது என்று ஒரு பழைய வடமொழிப் பாடல் சொல்கிறது. எனவே பெண் என்பவளை நெருங்க முற்படுகிறபோது, காமம் என்பதை வெளிப்படுத்துகிறபோது, பெண்ணினுடைய எல்லாக் குணநலன்களும் சேர்ந்துதான் நமக்கு எதிரே வீற்றிருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

காமம் எவ்வளவு தேவை...எப்போது தேவை... எப்படி தேவை என்பதை யோசிக்க வேண்டும்.

# 9

'கணவனின் துணையோடுதானே காமனை வென்றாக வேண்டும்' என்று கண்ணதாசன் பாடுவார். இது ஆணுக்கும் பொருந்தும். நல்ல மனைவி காமத்தைச் சரியானபடி பகிர்வதற்கு முன்வந்துவிட்டால், அந்த வாழ்க்கையைவிடச் சொர்க்கம் வேறெதுவும் இல்லை.

திருமணம் என்பது அருகில் இல்லை. எனக்கு இருபத்து மூன்று வயது. முப்பது வயதில் ஒருவேளை திருமணம் ஆகலாம் அல்லது இன்னமும் தள்ளிப் போகலாம். ஆனால், காமம் வெகு அருகில் இருக்கிறது. என்ன செய்வது? வேறு வழியே இல்லை. காமத்தைச் சற்று விலக்கியே வைக்கவேண்டும். 'விலகிப் போ' என்று கட்டளையிட வேண்டும். உங்கள் திருமணம் என்கிற விஷயத்தை முறையாக்குவதற்கு எத்தனைகடினமாக உழைக்க வேண்டுமோ, எத்தனை வெறியாக செயல்பட வேண்டுமோ எத்தனை கூர்மையாக ஈடுபட வேண்டுமோ... அதைச் செய்யவேண்டும்.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு, அதாவது—படித்து வேலையில் அமர்ந்து சம்பாதிப்பது அல்லது சொந்தத் தொழில் செய்து முன்னேறுவது என்று மனம் செலுத்த, திசைதிரும்ப, திருமணம் என்கிற விஷயம் அதிக முக்கியத்துவம் பெறாது போகும்.

'அதெல்லாம் இல்லை...காமத்தை அனுபவித்துவிடு' போய்த்தேடு, வண்ணமாய்ச் சாப்பிடு...' என்று சில தத்துவஞானிகள் சொல்லலாம்.

சாதாரண இந்தியனின் சூழ்நிலை தெரியாது அப்படி சொல்வார்கள் இது ஐரோப்பா இல்லை...அமெரிக்கா இல்லை...ஆஸ்திரேலியா இல்லை. நம்மூர் சூழ்நிலை வேறு நம் முன்னோர்கள் வேறு நம் பாரம்பரியம் வேறு நம்முடைய கதைகளும் பாடல்களும் அமெரிக்க வாழ்க்கைக்கு முற்றிலும் எதிரானது அமெரிக்காவில் பட்டினத்தார் இல்லை. அருணகிரிநாதர் இல்லை. 'மது, மாமிசம் மங்கை, மரணம் எல்லாம் நியாயம் என்று பேசப்பட்ட போக பூமி அமெரிக்கா அந்தச் சிந்தனை இங்கே சரி வராது.

எதுசரி என்ற கேள்விக்கு இப்போது போக வேண்டாம். பிறகு யோசிப்போம். தொலைக்காட்சிப் பெட்டியில் அமெரிக்க வாழ்க்கையைப் புரிந்துகொண்டு உடுத்தலாம். உண்ணலாம் உறவுகொள்ள இயலாது. நம்மூரில் பெண் நட்பு எளிதல்ல. அது பெண்களால் அங்கீகரிக்கப்படவில்லை. பெண்களுக்கு இதில் விருப்பம் இல்லை. பெண்கள் இந்த நட்பை நம்பவில்லை. 'என்னை நீ ஒன்றும் செய்ய முடியாது' என்கிற திமிர் இன்னும் நம் தேசத்துப் பெண்களுக்கு முழுமையாக வரவில்லை. இது வராதவரையில், அவர்கள் நட்போடு வருவது என்பதும் நடக்காத விஷயம், லேசாகத் தலைநீட்டி எட்டிப் பார்ப்பார்களே தவிர, மனக்கூடு விட்டு அருகேவந்து சிரித்துவிட்டு, மறுபடியும் கூட்டுக்குப் போய்விடுவார்களேயொழிய, நட்பு என்பதைக் கையில் எடுத்து வருவதற்கு அவர்கள் தயாராக இல்லை. வருவதற்கு பெண்கள் தயாராக இல்லாத போது, ஆண்கள் முன்னேறிப்போவது பிரச்னையை உண்டு பண்ணிவிடும்.

வழியறான் பார்' என்று உங்களுக்குத் தனிப்பெயர் கொடுத்துவிட சமூகம் துடிதுடிக்கும்

தயவுசெய்து, மிகச் சரியாகச் சொல்லுங்கள். எப்படிக் காமத்தை ஜெயிப்பது...?' என்று நீங்கள் கேள்வி கேட்கலாம்.

காமத்தை தூண்டக்கூடிய விஷயங்களிலிருந்து விலகியிருப்பது உங்களைபலப்படுத்தும் உங்களைஎது பலவீனப் படுத்துகிறதோ, அதைத் தள்ளி வைப்பது உங்களைச் சரியாக வழிநடத்தும் ஒலியும் ஒளியும் உங்களின் காமத்தை தூண்டுகிறது. கிறங்க அடிக்கிறது என்றால், பளிச்சென்று ஒலியும் ஒளியும் பார்ப்பதை உடனே நிறுத்துங்கள். புத்தகங்களின் மேலட்டைகள். கதைகள், கட்டுரைகள், கவர்ச்சிப் படங்கள் உங்களைத் தூண்டுகின்றன என்றால், அதை மெள்ள வாழ்க்கையிலிருந்து அப்புறப்படுத்துங்கள்.

நீங்கள் உள்ளுக்குள் பலமாகிறவரைக்கும் அவற்றை அண்டவிடாதீர்கள். 'கதறக் கதறக் கற்பழித்தார்கள்' என்பதைப் படித்துவிட்டுக் காமவசப்படாதீர்கள். மாறாக, 'ஐயோ...யார் வீட்டுப் பெண்ணோ...? இவள் என் வீட்டுப் பெண்ணாயிருந்தால், நான் எப்படித் தவித்திருப்பேன்...?' என்று எண்ணிப் பாருங்கள்.

பெண்களை வெறும் உடம்பாக நோக்காமல், அவர்களுடைய வீட்டோடும் அவர்கள் பின்புலத்தோடும் அவர்கள் அறிவோடும் அவர்கள் குணாதிசயங்களோடும் சுவீகரித்து நினைத்துக் கொள்ள வேண்டும், ஏங்க... நான் அழகா இருக்கேனா...? என்று ஒருவேளை யாரேனும் கேட்டால், 'இந்த வயசுல எல்லாரும் அழகாத்தாங்க இருப்பாங்க. வாழ்க்கைங்கறது உடம்பா...? நீங்க எப்படிப் பழகுறீங்கங்கிறதை வெச்சுத்தான் உங்க அழகைப் பத்திப் பேசமுடியும்...என்று சொல்லிப் பாருங்கள்.

பொய் சொல்லாத பெண்ணாகவும் புறங்கூறாத நேர்மையாளியாகவும் பெண் இருந்தால் பழகுங்கள். இல்லையெனில், 'நீ எனக்கு முக்கியமில்லை' என்று அந்நியப்படுத்துங்கள். கவர்ச்சியை மட்டும் மூலாதாரமாகக் கொண்டு, ஜனங்களிடையே புழங்கும் எந்தவொரு விஷயத்துக்கும் நமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதைத் தெளிவாக்கிக் கொள்ளுங்கள்.

பெண் என்பவள் அறிவு. பெண் என்பவள் அன்பு. பெண் என்பவள் அக்கறை, பெண் என்பவள் ஆதரவு என்று நினைத்துக் கொண்டால், உடம்பு பற்றிய சிந்தனை உடனே மறைந்து போகும். நீங்கள் எதிர்பார்க்கிற அதே அன்பையும், அழகையும். ஆதரவையும், அவளுக்குக் கொடுப்பதற்கு உங்களுக்கும் தோன்றும்.

'என்னங்க, ரொம்ப டல்லா இருக்கீங்க... என்ன சமாசாரம்...? என்று உங்களுக்குத் தெரிந்த பெண்ணைப் பார்த்துக் கேளுங்கள். 'உடல்நிலை சரியில்லை' என்று சொன்னால், 'நான் இருக்கிறேன்' என்று வைத்தியரிடம் கூட்டிப் போகிற அன்பை வெளிப்படுத்துங்கள்.

'ஓவர் டைம் முடிஞ்சு போனா, மணி பத்தரை ஆவும். ஓவர்டைம் பண்ணணும்னு ஆசை...ஆனா, பத்தரை மணிக்கு எப்படி வீட்டுக்குப் போறது...?' என்றால், 'நான் வரேங்க...' என்று வலிந்து போய் உதவி செய்யுங்கள்.

'தலை முழுக்கப் பொடுகு. பிய்ச்சிக்கலாம் மாதிரி இருக்கு. எண்ணெய் தேய்ச்சுக்குளிக்கலாம்னா, வாரத்துல ஒருநாள் தான் லீவு...எப்படி இதை சால்வ் பண்றதுன்னே தெரியலை...' என்று கூறினால், "அடடே! இதுக்குனு தனியா ஷாம்பு இருக்குதுங்க. அந்த ஷாம்பு போட்டா பட்'னு போயிடும். எனக்கும் கொஞ்சம் இருந்துச்சு. போட்டவுடனே சரியாயிடுச்சு. நான் என்கிட்ட இருக்

கிற பாதி ஷாம்பு உங்களுக்குத் தரேன். நீங்க அதைப் போட்டுப் பாருங்க...' என்று சின்ன உதவி செய்யுங்கள்.

பெண் வெறும் உடம்பு மட்டுமல்ல...அவள் ஒரு நல்ல சிநேகிதி. சிநேகிதத்தில் நேர்மை முக்கியம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத் தன்மை முக்கியம். எத்தனை சோதனை வந்தாலும் 'இவர் என் சிநேகிதி,' 'இவர்-என் சிநேகிதர்' என்று இருக்கிற உறுதி முக்கியம். இப்படிக் குணநலன்கள் முக்கியமாக வந்து விட்டால், எடுப்பான மார்பும், உருண்டையான பிருஷ்டமும் 'கனிவான உதடும், ரசமான கண்களும், கன்னக் கதுப்புகளும், முக்கியமே இல்லை என்று புரிந்துவிடும்.

இதற்குப் பிறகு, கடும் பிரம்மச்சரியம் என்பது மிக உற்சாகமான விஷயம் இப்படிச் சக்தியைச் செலவழிக்காத ஆண் மிகப் பலமாகிறான். அவனுக்குத் தூக்கம் குறைவாக இருந்தாலும் போதும், குறைவான நேரத்தில் தூங்கி, அதிக நேரம் விழித்திருக்க அவனால் இயல்கிறது. அப்படி விழித்திருக்கிற நேரத்தில், இன்னும் அதிகமான வேலைகள் செய்வதற்கு அவனால் இயல்கிறது. படிப்போ, எழுத்தோ அல்லது வேறு சில கடின உழைப்போ மேற்கொள்ள, அவனுடைய வாழ்க்கை வெற்றிப்பாதை நோக்கிப் போகிறது.

செய்ய வேண்டியவற்றைக் குறித்த நேரத்தில் செய்து மேலும் நேரம் இருக்க...மேலும் புதிய விஷயங்கள் சற்று வேகமாக வளருகிறபோது வருமானம், மற்ற கௌரவங்கள் அதிகரிக்கின்றன. இவை அதிகரிக்க, இவன் நல்ல வேலைக்காரன். கடின உழைப்பாளி, என்று தெரியவர சமூகம் அவனைப் பாராட்டுகிறது. பாராட்டப் படுபவர்களைப் பெண்கள் எளிதில் விரும்புகிறார்கள். நெருங்கி வந்து பேசுகிறார்கள். இப்படிப்பட்ட நல்ல ஆண் மகனைப் புருஷனாக அடையவேண்டுமே என்று யோசிக்கிறார்கள்.

''என்ன சேகர், உங்க வீட்டுல கல்யாணத்துக்குப் பாக்கறாங்களாமே...? என் பேரைச் சொல்லக் கூடாதா...?''

''சொல்லலாம் கிருஷ்ணவேணி...'கிருஷ்ணவேணியை உனக்குப் பார்க்கட்டுமா?'னு நம்ம ஆபீஸ்லகூடக் கேட்டாங்க. 'தங்கச்சி கல்யாணத்துக்குக் கொஞ்சம் செலவு பண்ணது தவிர, சுத்துப்பத்துல முப்பதாயிரம் ரூபா கடன் இருக்கு. கடன் கொடுத்த ஒரு ஆளு, 'என் பொண்ணைக் கட்டிக்கோ'னு விரட்டறான். எங்க வீட்டுல, என் மூஞ்சியை மூஞ்சியைப் பாக்கறாங்க...'

'முப்பதாயிரம்தானே...நான் தரேன், எங்கப்பாவைக் கொண்ணாந்து தரச்சொல்றேன். கடனை அடைச்சிடுங்க...'

'வரதட்சணையா...? வேணாம் கிருஷ்ணவேணி... என் தங்கச்சிக்கு நாப்பதாயிரம் வரதட்சணை கொடுத்த போது, கண்ணுல ரத்தம் வந்தது மாப்பிள்ளை நல்லவன்தான். அவங்கம்மா கேக்கறாளே...எப்படி மாட்டேன்றது...? கொடுக்கிறபோதே நெனைச்சேன் ...என்ன ஆனாலும் சரி...இந்த வாதட்சணை கேட்கற பாவத்தைச் செய்யக் கூடாது. எனக்கு வேணாம், இதுக்கு அர்த்தம். நீ வேணாங்கறது இல்ல...கிராமத்து நிலம் ஒண்ணு விக்கறோம். மூணு பேரு பங்கு. எங்க பங்குக்கு ஏதோ கிடைக்கும். அதுல கடனை அடைச்சுடுவோம். அடைக்கிறவரைக்கும் வேற எதப்பத்தியும் யோசிக்கிறதாயில்ல...,

கிட்ட வந்து கிருஷ்ணவேணி கேட்டுடுச்சேங்கிறதுனால, நீ சாதாரணமாயிடலை, அதுக்குப் பதிலா, ரொம்ப சந்தோஷமாயிடுச்சு. ரொம்பத் தெளிவாயிடுச்சு.

'கிருஷ்ணவேணின்னு ஒரு பொண்ணு, என்கூட வேலை செய்யுது. இதான் அட்ரஸ்...போய்ப் பார்த்

துட்டு வாங்கனு நிச்சயம் சொல்வேன். கிடைச்சா தங்க புதையல்...கிடைக்காட்டி, எது கெடைச்சுதோ...அதுவே புதையல்.'

சேகர் பேச்சுக்கு, கிருஷ்ணவேணி கிறங்கிப் போனாள்.

'கிராமத்து நிலம் நல்லபடியா போகணும்னு திருவல்லிக்கேணி பிள்ளையாருக்கு வேண்டிக்கறேன்'னு தினம் கைகூப்பி நிற்பாள் அவள் நிற்பதைப் பார்த்த சேகருக்குக் கண்ணோரம் நீர்த்துளி. 'கடவுளே...இந்தப் பெண்ணை எனக்குக் கொடு. இந்தப் பெண்ணை எனக் குக்கொடு...' மனம் பதறும்.

இது காதலா...? இல்லை. இது காமமா...? நிச்சயம் இல்லை. வாழ்க்கைத் தந்திரமா...? ஒரு நாளும் இல்லை. இதன் பெயர் நட்பு. கிருஷ்ணவேணி என்கிற அழகான பெண்ணை, அவளின் பின்புலத்தோடு யோசித்தல் யோசித்த பின் நேசித்தல்.

'ஐயையோ...இப்படியெல்லாம் என்னால் யோசிக் கவே முடியலையே...' அலறல் வருகிறதா...? 'முடிய வில்லையே...' என்று உண்மையாய் யோசித்தால் போதும். எதையும் சாதிக்க முடியும் எப்படி...?

# 10

'காமத்தை பற்றி ஒரு தெளிவில்லை. உள்ளுக்குள் பொங்குகிற காமத்தை ஒரு வரையறைக்குள் கொண்டு வர முடியவில்லை. மனம் அடங்க மறுக்கிறது. பேயாய் ஆடுகிறது. பிசாசாய் அலறுகிறது' என்று எவரேனும் சொன்னால் அவருக்குச் சூழ்நிலை சரியாக அமைய

லில்லை என்றே அர்த்தம். அவரை அன்பாக அனுசரித்துப்பேச, ஆதரவாக வளர்க்க. அவரை வேறு பக்கம் திசை திரும்பிவிட அவருக்கு உறவோ, நட்போ இல்லையென்று அர்த்தர்.

எனவே, இவ்விதம் சிக்கிக் கொண்டவர்கள் உடனடியாக செய்ய வேண்டிய விஷயம், தன் சூழ்நிலையை ஆராய்வது. நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்வது.

'இது என் கையிலா இருக்கிறது?...' என்று ஒரு கேள்வி வரும். வெகு நிச்சயமாய் ஒரு சூழ்நிலையை மாற்றிக்கொள்வது உங்கள் கையில்தான் இருக்கிறது மாற்றிக் கொள்ளும்முன், மாறவேண்டும் என்கிற தாபம் வேண்டும். அந்த தாபமில்லாது போனால், காமத்தை பல்வேறு விதங்களில் வழிநடத்திக் கொண்டு போனால், ஒருநாள் நீங்கள் அசிங்கப்பட வேண்டியிருக்கும். உங்களால் உங்கள் குடும்பம் அவமானப்பட வேண்டியிருக்கும்.

'என் பொண்டாட்டியை போன்ல கூப்பிட்டு அசிங்கமா பேசினியே...உன் தங்கச்சியை, உன் . எதிர்க்க நிக்க வெச்சி நான் அசிங்கமா பேசட்டுமா...பன்னெண்டு வயசு பொண்ணு. நான் கேட்டா செத்துடுவா. அதுக்காக நான் சும்மா இருக்கேன், ஆனா, நான் இல்லன்னாக்கூட வேற ஒருத்தன், நீ பண்ண பழிபாவத்துக்கு இதேமாதிரி உன் தங்கச்சியை நடத்துவான். உன் கண்ணுல ரத்தம் வர வைப்பான் இது சத்தியம்'' என்று சொல்ல, இடி விழுந்ததுபோல முகம் திருப்பிக் கொள்ள வேண்டியிருக்கும்.

நீங்கள் செய்த தவறுக்கு, உங்கள் முட்டாள்தனத்துக்கு, எந்த பாவமும் அறியாத, குருத்தாய், புதிதாய் மலர்ந்த உங்கள் தங்கை அவமானப்படுவதா...எவ்வளவு பெரிய வேதனை இது...யோசித்துப் பார்த்தால் அத்து மீற எவருக்கும் தோணாது.

மனதைக் கட்டுத்தெறிக்க விட்டு விட்டோம். கெட்ட புத்தகங்கள் படித்து, கெட்ட படங்கள் பார்த்து, மனதை நர மாமிசம் தின்னும் ஓநாயாக மாற்றி விட்டோம். அதை மெள்ள வசப்படுத்த வேண்டும் கயிறு வீசி, இறுக்கி நம் பக்கம் இழுக்க வேண்டும் என்று யோசித்தால் போதும் காரியம் தானாக நடக்கும்.

ஆசை இருக்கிற அளவுக்கு மனதிலே வலுவில்லை. என்று பலருக்குத் தோன்றலாம். ஆரம்பித்தால் போதும். வலிமை தானாக வந்து சேரும்.

அலைபாய்கிற மனதை உற்றுப் பார்ப்பதற்குத் தெரிந்து கொள்ள வேண்டும்.

''ஏன்...ஏன் அலைபாய்கிறாய்...எதற்காக இப்படி எகிறிக் குதிக்கிறாய். உனக்கும் அந்தப் பொண்ணுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. நீ அவளை அடையப் போவதில்லை. அதற்குண்டான எந்த யோக்கியதையும் உனக்கு இல்லை. எனவே, உனக்குச் சம்பந்தமில்லாத உனக்கு எந்த விதத்திலும் நெருக்கமில்லாத அந்தப் பெண்ணைப் பற்றி யோசிப்பதை அறவே நிறுத்து. விலகி வா...விலகி வா...' என்று பேசத் துவங்குங்கள் போதும். பாதி காரியம் முடிந்து போகும்.

நம்மில் பல பேருக்கு நம்மோடு பேசத் தெரியவில்லை. ஆனால், தன்னோடு பேசுவதுதான் மிக எளிதான வழி.

தன்னோடு பேசுவது பற்றி ஒரு சிறிய குறிப்பு தருகிறேன். இது ஒன்றும் பைத்தியக்காரத்தனமல்ல. நான் காலையில் எழுந்து என்னுடைய கடமைகளை முடித்து இருள் பிரியும் நேரம் வெளியே 'வாக்கிங்' போகும் போது, கொஞ்சும் பேச ஆரம்பிப்பேன். என்னோடு எனக்கு மட்டும் கேட்கும்படி ஓர் உரையாடல் நிகழ்த்து

வேன். 'பின்பு என்ன செய்ய வேண்டும் என்னென்ன வேலைகள் இருக்கின்றன. யார் யாருக்கு என்னென்ன வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறேன். எதை முதலில் ஆரம்பிக்க வேண்டும். எது பிறகு எதற்கு அடுத்தது என்பதை ஒரு உரத்த பேச்சாக நான் யோசிக்க ஆரம்பிப்பேன் அன்றைய வேலையை எந்தக் காரணம் கொண்டும் மறக்காமல் இருப்பதற்கு இப்படி சற்று உரக்கப் பேசுவது எனக்குப் பயனாக இருக்கிறது.

அன்றைய திட்டங்கள் மட்டுமல்ல, ஒரு கதையைப் பற்றி யோசிக்கும் போதும். நான் எனக்குள் விரைவாகப் பேசத் துவங்குவேன். 'இது எதைப் பற்றிய கதை' யாரை முன் வைத்து இந்தக் கதை எழுதப்படுகிறது...என்ன பின்புலம்...இந்த பின்புலத்துக்கும் சொல்லும் கருத்துக் கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா...சம்பந்தம் இருக்கும் படி ஒரு பின்புலம் கிடைக்குமா...இந்தப் பின்புலம் புதிதா...அல்லது பழையதா...பின்புலமே இல்லாமல், வெறும் கதையையும் பிரச்னைகளையும் மட்டும் சொன்னாலென்ன...' என்று யோசித்துக் கொண்டே நடக்கிறபோது, அந்தக் கதை உருப்பெற்று விடுகிறது.

இந்த சூட்சுமம்தான் உங்களைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ளவும் எளிதாக உதவும்.

'என்ன உனக்கு தொந்தரவு...ஏன் இப்படி ஓநா யாக அலைகிறாய்...உன்னை ஒழுங்காக நிலைநிறுத்திக் கொள்ள ஏன் முயற்சியே செய்வதில்லை. உன்னால் உன் தங்கைக்கு எத்தனை கஷ்டம்...உன் அம்மா உன் னைப் பார்த்தவுடன் தலையிலடித்துக் கொள்கிறாளே, உன் தந்தை சீறி, 'வெளியே போ' என்று சொல்கிறாரே, இவ்விதம் ஒரு அசிங்கமான வாழ்க்கை வாழ்வதற்குத் தான் நீ பிறந்திருக்கிறாயா...நீ நல்லவனல்லவா... உனக்குள் நல்ல குணங்கள் இருக்கின்றனவே...ஏன் நீ இன்னும் வெளியே வரவில்லை...' என்று எங்கேனும்

போய் தனியே உரக்கப் பேசுங்கள். இது ஒரு நாளும் தவறாகாது.

டெலிபோனில் ஆபாசமாகப் பேசி, போலீஸிடம் மாட்டிக்கொண்டு மூன்று வாரம் வெறும் காவல் சிறைத் தண்டனை அனுபவித்து இருபது நாளில் வீடு திரும்ப, அந்த வீட்டைச் சுற்றியுள்ள எவரேனும் அப்படி சிறைக்குப் போய்வந்தவனை மதிப்பார்களா...எந்தப் பெண் மணியாவது அவனோடு பேசுவார்களா...சிறைத் தண்டனையை விட மிகக் கொடுமையானது ஊரும் உறவும் புறக்கணிப்பதல்லவா...'இப்படி இருப்பதை விட.. சிறையே மேல்' என்று தோன்றிவிடுமல்லவா...இந்த நிலைக்கு நீங்களும் ஆளாகலாமா...

ஆகவே, அவமானப்பட்டவர்களைப் பற்றி, அவர்கள் குடும்பங்கள் படுகின்ற அவஸ்தையைப் பற்றி யோசித்துப் பாருங்கள். உங்களால் தவறாக ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது.

இப்படிப் பேசினால் காம உணர்வு தீர்ந்து விடுமா?

இல்லை காம உணர்வு தீர்வதற்கான விஷயமில்லை இது அத்துமீறாமல் இருப்பதற்கான விஷயம். அளவுக் கதிகமாய் ஆண்கள் போகாமல் இருப்பதற்குண்டான விஷயம். புத்தி பேதலித்து, நிலைமை தெரியாமல் போய் சிக்கிக்கொண்டு, தர்ம அடி வாங்காமல் தப்பிப்பதற் குண்டான விஷயம்.

மற்றவர்பட்ட அவமானங்களிலிருந்து வாழ்க்கையைப் புரிந்து கொள்ளுதல் என்பது ஒரு கெட்டிக்காரத் தனம். புகைப்பதைப் பொறுத்துக்கொள்ளும் உலகம், குடிப்பதைப் பொறுத்துக் கொள்ளும் உலகம் போதை மருந்து உபயோகிப்பதையும் தாங்கிக்கொள்கிற உலகம், காமத்தால் மற்றவர்க்குத் தீங்கு செய்ய முற்படுகிற

போது வெகுண்டெழுந்து கடுமையாகத் தண்டிப்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள்.

காமத்தை அடக்கச் சொல்லவில்லை காமத்தை தவறென்று பறை சாற்றவில்லை. காமம் மிக அற்புத மான விஷயம். ஆனால், அதை எந்தவித இடைஞ்சலு மின்றி எந்தவித மனச்சுருக்கமுமின்றி, எந்தவித கள்ளத் தனமுமின்றி அனுபவிக்கிற போதுதான் அதனுடைய பிரகாசம் மிகப்பெரியதாக இருக்கிறது. அந்த அனுபவம் தேனாய் இனிக்கிறது. இல்லையெனில். எங்கோ ஒரு மூலையில் கசப்புத் தட்டி, விஷமாக மாறி குமட்டல் ஏற்பட்டு விடுகிறது. குமட்டி நீங்கள் வாந்தி எடுக்கிற போது, உங்களை ஊர் அருவருப்புடன் பார்க்கிறது.

'உங்கள் கட்டுரை எல்லாம் ஆண் வாசகர்களுக்குத் தானா...அவர்களுக்குத்தான் தொடர்ந்து எழுதுகிறீர் களா...பெண்கள் காம வசப்பட்டு எத்தனை தவறுகள் செய்கிறார்கள்...ஏன் இதைப்பற்றி எவரும் எழுதுவதே இல்லை. பெண்கள் உத்தமர்கள் போலவும், ஆண்கள் அலைகிறவர்கள் போலவுமே இடைவிடாது கதை களிலும் கட்டுரைகளிலும் சொல்லப்படுகிறதே தவிர, பெண்களின் அலையல்பற்றி எவரும் எழுதுவதே இல்லையே...ஏன்?'

குதிரை தலைதெறிக்க ஓடாது ஒரு கட்டுக்குள் வந்து விட்டால். அதை எதை நோக்கி செலுத்துவது. எப் போது செலுத்துவது என்பதும் தானாகத் தெரிந்து விடும், பெண்ணை உற்றுக் கவனித்தால், காமம் என்பது வெறும் உடல் அவஸ்தை மட்டுமல்ல மனதின் விதி. மனம், ஒரு பெண்ணை ஆளுமை செய்ய ஆசைப்படு கிறது. அவளை அருகே வைத்துப் பேசுவதற்கு விரும்பப் படுகிறது. அவளால் பாராட்டப்பட ஏங்குகிறது. அவளை வர்ணித்துப் பாராட்ட விரும்புகிறது.

'இன்றைக்கு உங்களுக்குப் பிறந்த நாள். என்னால் முடிந்தது இது. என்று ஒரு பரிசைக் கொடுக்கிறபோது மனம் நெகிழ்ந்து கரைந்து போகிறது. உங்கள் சிநேகி திக்கு பிறந்த நாள் என்கிற போது பல கடைகள் ஏறி இறங்கி, எது அவளுக்கு ஏற்ற பரிசாக இருக்கும் என்பதைத் தீர்மானித்து, அதைக் கொண்டுபோய் அவளிடம் கொடுத்து, அவள் பிரித்து முகம் மலர்வதை பார்க்கிற போது ஏற்படுகின்ற சந்தோஷம் நூறு கூடலுக்குச் சமம்.

இதையெல்லாம் அனுபவித்து விஷயம் தெரிந்தவனாய் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். என் இளமைப் பருவத்தில் உண்மையோடும் ஆத்மார்த்தமான நேசத்தோடும் ஏற்பட்ட சிநேகங்களை நினைவுக்குக் கொண்டுவந்து உங்களோடு பேசுகிறேன். காமத்தைக் காட்டிலும் இந்த நேசம் அளவு கடந்த சந்தோஷத்தையும் நிம்மதியையும், நிறைவையும் தருவதை அனுபவித்திருக்கிறேன்.

இன்று ராதிகாவுக்குப் பிறந்தநாள் என்ன வாங்குவது...என்று யோசித்து கடைக்குப்போய் எது வாங்குவது என்று தெரியாமல் சின்னச் சின்ன பொருள்களாக ஐடெக்ஸ், ஒட்டுப்பொட்டு. லிப்ஸ்டிக், பவுடர் டப்பா, ஹேர் பின் சேஃப்டி பின் தலைவலித் தைலம் வெந்தயப் பொட்டலம், பிளாஸ்டிக் முத்து மாலை, பர்ஸுக்குள் வைத்துக்கொள்ளும் கண்ணாடி முகம் துடைத்துக்கொள்ளும் வாசனைப்பேப்பர் கண்ணாடிக்கல்லாலான அழகிய தோடு என இப்படி இருபத்து மூன்று பரிசுப் பொருட்கள் வாங்கி ஒருபையில் போட்டு, 'மனம் கனிந்தவாழ்த்துகள்' என்று அந்தப் பெண்ணிடம் கொடுக்க, அந்த பெண் அதையெல்லாம் பிரித்துப் பார்த்து 'இது என்னவெந்தயப் பொட்டலம் நடுவே என்று வியக்க, 'உனக்கு வயிற்றை வலிக்குமே வெந்தயம் பார்த்தபோது உன் வயிற்று

வலிக்கு மருந்து என்று ஞாபகம் வந்தது. அதனால் கொடுத்தேன் என்று சொல்ல, காதலுடன் அவள் பார்த்த பார்வை ஆயிரம் கூடலுக்குச் சமம்.

'இருபத்துமூன்று வயதுக்கு இருபத்து மூன்றுபொருள் கள் பரிசா?' என்று தோளில் சாய்ந்து கொண்டது ஆயிரம் யானை பலம். இந்த அனுபவம்தான் இந்த பலந்தான் என்னை எழுத்தாளனாக்கியது. மனதை ஒருமுகப் படுத்த இந்த நட்புகள் உதவிற்று. ஒரு பெண்ணின் பிறந்த நாளுக்காக மனம் முழுவதும் ஒரே முனைப்பில் இருந்து, ஒவ்வொரு பொருளாய் வாங்குகின்றதன்மையை எழுத்தில் திருப்ப நான் எளிதாக ஜெயித்தேன்.

நல்ல பெண் நட்பு ஏற்பட்டு, உண்மையான சிநேகம் வந்துவிட்டால். பெண்ணினுடைய பல்வேறு அவஸ்தை கள் அவர்களால் வாய் திறந்து சொல்லப்பட்டு விட்டால், அவர்களுடைய பயமும் பீதியும், நமக்குத் தெரிவிக்கப் பட்டு விட்டால், அவள்மீது கருணை பொங்கும். உண் மையான காதல் தோன்றும். நல்ல காதல் தோன்றிய பிறகு காமம் விலகி நிற்கும். எப்போது தேவையோ அப்போது கைகட்டி அருகே வந்து சேவைகள் செய்யும் வெறும் காமம் அபத்தம். காதலோடு கூடிய காமம் சொர்க்கம்.

பெண்களும் உணர்ச்சிவசப்பட்டு எல்லை மீறுகிறார் களே...என்று கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பெரிய விளக்கங்கள் தர வேண்டியது இல்லை. ஏனெனில், பெண்களிடம் இயல்பாகவே அதை அடக்கிக் கொள்கிற ஒரு வலு இருக்கிறது. வெளியே காட்டிக் கொள்ளாமல் உள்ளுக்குள் மறைத்துக் கொள்கிற ஒரு தன்மை அவர் களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆண்களைப்போல அசடு வழிவதில்லை. எக்குத்தப்பாய் கால் வைத்து மாட்டிக் கொள்வதில்லை. வெகு சிலரே

சில சமயம் தவறாகக் கணக்குப் போட்டு விடுகிறார்கள். அல்லது மிக வஞ்சனையாய் ஏமாற்றப்பட்டு விடு கிறார்கள்.

பள்ளியில் ஆரம்பம் முதல் இறுதிவரை ஒன்றாகப் படித்து பழகி வந்த தோழிக்கு சட்டென்று திருமணமா கியது. திருமணமான பிறகு மெள்ள வெவ்வேறு திசைக் குப் பிரிந்திருக்க வேண்டும். ஆனால், பிரியாமல் அருகருகே வாழ்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டு விட்டது. இதுவரை நான்கு தெரு தள்ளியிருந்த தோழி, இப்போது எதிர் வீட்டுக்கு புதுக்குடித்தனம் வந்து விட்டாள். வந்தது மட்டுமல்லாமல் இவளையே சமையலுக்கும் வேறு சில உதவிகளுக்கும் நம்புகின்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. ''இவளுக்கும் இன்னும் திருமணமாகவில் லையே' என்று கருதாமல், திருமணமானவள் அவளிடம் பல விஷயங்கள் உரையாடினாள். நட்பை பயன்படுத்த எண்ணினாள்.

திருமணமாகாத தோழி, திருமணமானவளிடம், என்ன நடக்கிறது இரவு...' என்று கேட்க, 'இவளை நட்பாகத் தக்க வைத்துக்கொள்ள இது ஒரு நல்ல வழி' என்று நினைத்து தானும் தன் புருஷனும் இரவில் செய்த சல்லாபங்களை வெளியிட, திருமணமாகாதவளுக்கு தீப் பற்றிக் கொண்டது. தலைக்கு மேலே ஒரு அடி வரை காமம் கொழுந்துவிட்டு எரிந்தது. இது மிகப் பரிதாப மான நிலைமை.

ஆண் கட்டுத்தெறித்தாலே காலை வெட்டுகின்ற உலகம், பெண் அத்துமீறினால் என்ன செய்யும்...நூறு சவுக்குகள் ஒரே நேரத்தில் அவள் மீது பாய்ந்தன. அவ ளுக்கு உதவி செய்யப் போனவர்களும் உண்ணத் துடித் தார்களே தவிர, உணர முற்படவில்லை. ஒரு பெண் உணர்ச்சி வசப்பட்டுத் தடுமாறிவிட்ட நிலை இது.

# 11

“என்னடி, பிங்க் கலர் புடவைக்குப் பச்சை ஜாக்கெட் போட்டுனு வர்றே...என்ன ஆச்சு...? நீ பிங்க் கலர் வெச்சிருந்தியே...?”

“அந்த ஜாக்கெட்டெல்லாம் சாப்பாடாயிப் போச்சு...”

“ஏன்...அதுல போய்ச் சாப்பாட்டைக் கொட்டினே...?”

“நான் எங்கே கொட்டினேன்...? அவரு கொட்டினாரு...”

“புரியலையே...”

“மடியில உட்காரவெச்சு சாப்பாடு ஊட்டினாரு... மொத்த ஜாக்கெட்லயும் சாப்பாடு கொட்டிப்போச்சு. கழட்டி. அலசி, உலர்த்தறதுக்குள்ள...ஏகப்பட்ட குறும்பு வீட்டுக்குள்ள இருந்தாதான தொந்தரவு பண்றாருனு, வீட்டைவிட்டு வெளியே வந்தா...அங்கயும் அதே தொந்தரவு. யாரும் பார்க்காதபோது, வெடுக்குனு கிள்ளிடுறாரு...”—திருமணமானவள் அடிக்குரலில் சொல்ல, அவள் நெளிந்தாள்.

இதே விஷயங்களை தன்னை முன்னிறுத்தி, வேறு ஆளோடு மனதுக்குள் செய்து பார்த்தாள். வெட்கப் பட்டாள், கண் சிவந்தாள்.

“சரி, வீட்லதான் ஆம்பளைக்கு ஏதோ ஆசை இருக்கும். ஒழிஞ்சு போட்டும்னா, சினிமா தியேட்டர்லாம் பண்ற கூத்து சகிக்கலே...”

''என்ன...என்னா செய்தாரு...?''—இவள் ஆவலோடு கேட்டாள்.

''போற போதே நியூஸ் பேப்பர் வாங்கிக்கிறாரு...''

''வாங்கட்டுமே...'

''படிக்கறதுக்கு இல்லே...பெரிய ஹிண்டு பேப்பர். அதை வாங்கி மடியில வெச்சுக்கிட்டாரு...''

''எதுக்கு...?''

''லைட்டை அணைச்சுப் படம் போட்டதும் பேப்பர் மறைப்பா மாறிடுச்சு. யாராவது பாத்திடப் போறாங் கன்ற பயத்துல, நான் படமே பார்க்கலே...போயேன்.''

திருமணமானவள் தொடர்ந்து பேச... திருமணமா காதவளுக்கு, வயிற்றில் மாறி மாறிக் கத்தியைச் செரு கியது போல் ஒரு சுகவாதை படர்ந்தது. 'தனக்கு எப்போது திருமணமாகும்...தான் எப்போது இந்த மாதிரி சல்லாபங்களில் ஈடுபடப்போகிறோம்' என்று மனதுக்குள் ஏக்கம் பொங்கியது.

'இப்போதைக்கு திருமணமாகிற வழி இல்லை. இன்னும் ஒன்று அல்லது ஒன்றரை வருடம் போக வேண்டும். போன வருடம் வெளிநாட்டுக்குப் போயி ருக்கிற அண்ணன் திரும்பி வந்து, ஏதாவது காசு கொடுத் தால் இதுபற்றி வேகமாகப் பேசுவார்கள். சிந்திப் பார்கள்.

மனம் விசித்திரமானது ஒன்றை நூறாக்கும் தன்மை படைத்தது. அவளுக்குச் சில சம்பவங்கள் காதில் விழுந் ததும் அந்தச் சம்பவங்களை வைத்துக் கொண்டு, தொடர்ந்து அவளே சம்பவங்களைப் பின்னினாள். தனக்குள் ஒரு புருஷனைத் தேடி, அவனைத் திருமணம் செய்து கொண்டு, அவனுடன் குடித்தனம் செய்து அவன் செய்கிற அட்டகாசங்களுக்கு ஈடுகொடுத்தாள்.

தெருவில் குடியிருந்த திருமணமான இவளது சிநேகிதியை, அவள் தாய்வீடு அழைத்துக்கொண்டுபோயிற்று. முதல் இரண்டு மாதம் வயிறு புரட்டி, வாந்தி எடுக்கிற வேதனை ஏற்பட்டதால். தாய் வீட்டிலேயே தங்கி சிஷ்ருஷை செய்து கொண்டாள் அந்த சிநேகிதி.

கணவன் தனியே விடப்பட்டான். நான்கு தெரு தள்ளியிருக்கிற வீடு என்பதால், சாப்பிட தன் மனைவியின் தாய் வீட்டுக்குப் போய் விடுவான், படுப்பதற்கு மட்டும் அவன் வீட்டுக்கு வந்து விடுவான்.

''ஒரு டம்ளர் காபிக்குகூட சைக்கிளை எடுத்துனு இங்க வர்றாருடி அவருக்கு காபி வைக்கக்கூடத் தெரியலை. முடிஞ்சா, ஏதாவது கேட்டா பார்த்துக்கயேன். வீடு பெருக்கவே இல்லையாமே...நீ எப்பவாவது சாவி வாங்கிப்பெருக்கிடறியா...?' 'துணி துவைக்க வேணாம்... கொண்ணாந்து இங்க போட்ருங்க. நான் பாத்துக்குறேன்'னு சொல்லி இருக்கேன் பெருக்கறது மட்டும் நீ கவனிச்சுக்கிட்டாப் போதும்டி...''-சிநேகிதியே இவளுக்கு உத்தரவிட்டாள். அவள் மனநிலை தெரியாது பேசினாள்.

''ஏங்க, சாவி குடுத்துட்டுப் போனீங்கன்னா...நான் ஒட்டடை அடிச்சு, வீடு பெருக்கி, மெழுகி வைக்கிறேன். உங்க வொய்ஃப் அப்படிச் செய்யச் சொன்னாங்க...''

''அடடா. நீங்க என்னத்துக்கு அதெல்லாம் செய்யணும்...?''

''நாங்க சிநேகிதிங்க...ஒருத்தருக்கொருத்தர் நிறைய செய்துக்குவோம். நீங்க போறபோது எங்கிட்ட சாவி குடுத்துடுங்க, போதும்...''—அவள் பணிவாகக் கேட்டாள்.

''உன்னுடைய நகைகளும் வெள்ளிப் பாத்திரங்களும் வீட்டு பீரோவில் இருக்கின்றன. இவற்றை பீரோ சாவி

போட்டு, யார் வேண்டுமானாலும் எடுத்துவிட முடியும். உன் சிநேகிதியை நம்பிச் சாவி கொடுக்கலாமா...? அவள் பீரோவைத் திறக்க மாட்டாள் என்பது உறுதிதானா...?'' அவன், மனைவியை அப்பாவித்தனமாகக் கேட்டான்.

''நல்லாயிருக்கு...நானும் அவளும் ஒண்ணாங்கிளாஸ் லேருந்து படிக்கறோம். உங்க வீட்டு வெள்ளிப் பாத்தி ரங்களையும் நகையையும்...அவ எடுக்க வேண்டிய அவசி யமே கிடையாது அவ அப்படி எடுக்கற பொண்ணும் இல்லே...மத்தவங்க பொருளுக்கு அவ ஆசைப்படவே மாட்டா. அவளைப் பத்தித் தெரியாமலா அவளைப் பெருக்குடினு சொல்லுவேன்...? அவளைப் பெருக்க மட்டும்தான் சொன்னேன். வேற எந்த வேலையும் அவ செய்ய வேண்டாம்...''

ஆனால், தோழி போய் வீடு திறந்து பார்த்ததும் அடுக்கி வைப்பதற்கே அரைநாள் ஆகும் என்று தோன்றி யது. படுக்கைகளை உதறிச் சீர்செய்து, விரிப்பை இழுத்து விரித்து, மேஜையைச் சுத்தம் செய்து, அலமாரி களில் இருக்கிற தூசியைத் தட்டி, ஒட்டடை அடித்து, பின் பக்கம் பாத்ரூமை வீச்சம் போகக் கழுவிவிட்டு, அறையைத் துணிபோட்டு மெழுகி, வாசலில் ஒரு கோல மிட்டு, ஊதுவத்திக் கொளுத்திவிட்டு வந்தபோது அவன் மகிழ்ந்து போனான்.

''அடேயப்பா...வீட்டைக் கோயில் மாதிரி பண்ணிட் டீங்க'' உள்ளே நுழைந்து கையெடுத்துக் கும்பிட்டான்

அவளுக்கு மிகச் சந்தோஷமாக இருந்தது, 'என் சிநேகிதியைச் சந்தோஷமா வெச்சுக்கறீங்க இல்லே... அதுக்காக என்னுடைய பரிசு' என்று மனம் சொல்லியது.

ஆனால், இரண்டே நாளில் மறுபடியும் அந்த இடத்தை அவன் குப்பையாக்கினான். அவள் உள்ளே புகுந்து, ''ஏங்க...இப்படி மூலைக்கு மூலை குப்பையாப்

போடறீங்க...? கொஞ்சம் ஒழுங்காதான் செய்யுங்களேன்...'' என்று லேசாக அதட்டினாள்.

''மன்னிச்சுக்குங்க...''—அவன் எழுந்து நின்று, கை கட்டி மன்னிப்புக் கேட்டான்.

''அதனால பரவாயில்லை...துணியைப் போடறத்துக்குனு ஒரு இடம் வெச்சுக்குங்க. குப்பை போடறதுக்குனு ஒரு கூடை வெச்சுக்குங்க. இது பெரிய கஷ்டமா...?''

அவள் இரண்டையும் நேர்செய்து கொடுத்தாள். அவ்விதமே செய்வதாக வாக்குக் கொடுத்தான்.

சமையலறையில் எல்லாப் பாத்திரங்களுமே தரையில் இறைபட்டுக் கிடந்தன. எல்லாமும் உபயோகப்படுத்தப் பட்டுக் கழுவப்படாமல் இருந்தன.

''சாப்பாடு அங்கே சாப்பிடறீங்க...இங்க இத்தினி பாத்திரங்களைக் கீழே போட்டு உருட்டி வைப்பானேன்...?''

''இல்லீங்க...காபி போட்டேன்...''

''நீங்க ஏன் காபி போடறீங்க...? என்கிட்ட ஒரு வார்த்தை சொன்னா. நான் வந்து போடமாட்டேனா?'

''இல்லே...நேத்திக்கு நாலு பேர் வந்தாங்க. எந்தப் பாத்திரத்துல காபி போடறதுன்னே எனக்குத்தெரியலை கொஞ்சம் தடுமாறி, ஏதோ ஒரு பாத்திரத்துல போட்டேன். ஃபிரெண்ட்ஸும் ஹெல்ப் பண்ணாங்க, காபி... சுமாராதான் இருந்திச்சு.''

''இனிமே காபி வேணும்னா என்னைக் கேளுங்க...''

''ஆமாங்க...எனக்குக் காலையிலேயே காபி இருந்தா நல்லா இருக்கும்...''

''கேட்க வேண்டியதுதானே...''

''அவ...ரொம்பத் தொந்தரவு பண்ணாதீங்கனு சொல்லியிருக்கா...''

''இதுல என்னங்க தொந்தரவு...? பால்கவரை கொண்டு வந்து குடுத்துடச் சொல்லுங்க. நான் காபி போட்டு, காலையிலே ஒரு காபியும் நீங்க ஆபீஸ் கிளம்பறதுக்கு முன்னாடி ஒரு காபியும் கொண்ணாந்து தரேன்...''

மறுநாள் லுங்கியும் மார்புமாகக் கதவு திறந்தான். காபி வாங்கிக் கொண்டான். கலங்கிய கண்களோடு சோபாவில் அழுந்த உட்கார்ந்து காபி குடித்தான்.

''பல்லைத் தேய்ச்சுட்டு காபி குடிக்கக்கூடாதா...?'' அவள் முணுமுணுத்தாள்.

அவன் காபி டம்ளரை அப்படியே கீழே வைத்து விட்டுக் கொல்லைப்புறம் போனான். பல் தேய்த்தான். முகம் கழுவினான். பின்பக்கம் போய் கால் அலம்பிக் கொண்டு வந்தான். அறைக்குள் காபி ஆறியிருந்தது.

அவன் காபி எடுப்பதற்குள், அவள் பாய்ந்து எடுத்து, அவன் வீட்டு காஸ் அடுப்பை மூட்டி, காபி சூடுபடுத்திக் கொடுத்தாள். அவன் நன்றியோடு பார்த்தான்.

ஒருமுறை அவன் மாதாந்திரப் பெண்கள் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான்.

''என்ன...இந்த புஸ்தகமெல்லாம் படிப்பீங்களா...?''

''எப்பவும் வாங்கறதில்லை. என்னவோ அட்டைப் படம் பார்த்ததும் வாங்கணும்னு தோணிச்சு. வாங்கிட்டேன்...''

அவள், அவனிடம் புத்தகம் வாங்கிப் போனாள். முதுகு அரிக்கிறதென்று வேர்க்குரு பவுடர் வாங்கிப்

போனாள். ஒட்டும் பொட்டு, அவர்கள் வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டாள். மருதாணி பவுடர் எடுத்துக் கொண்டாள்.

ஒரு நாள் அவன் மாமியார் வீட்டுக்கு டிபன் சாப்பிடப் போன கையோடு மறுபடியும் வந்தான்.

"இப்பதான் அஞ்சு நிமிஷம் முன்னாடி போனீங்க... உடனே திரும்பிட்டீங்க..."

"அங்க ஒண்ணும் சரியா இல்ல..."

"என்ன ஆச்சு...?"

"இல ஏதோ சுருண்டு படுத்துக்கினு இருக்கா மாமியாருக்கும் உடம்பு சரியில்லை. நான் ஓட்டல்ல சாப்பிட்டுக்கறேன்னு சொல்லி வந்துட்டேன். அவங்களுக்கும் எதனா வாங்கித் தரணும்....'

"ஐயையோ...ஓட்டலுக்குப் போக வேணாம். இங்கயே எதனா செய்து தரேன்..."

அவள் சமையலறையைப் புரட்டிப் போட்டாள். ரவை வறுத்து, உப்புமா கிளறினாள். தொட்டுக் கொள்ள பாம்பே சட்னி செய்தாள். பதினைந்தே நிமிடத்தில் அவனுக்குப் பரிமாறினாள். தோழிக்கும் அனுத்துக் கொடுத்தாள். அவன் ரசித்துச் சாப்பிட்டான். மனைவிக்கு எடுத்துக் கொண்டு போனான்.

"அவளையா தொந்தரவு பண்ணீங்க...? ஆனா, உப்புமா நல்லா இருந்திச்சு. நாளைக்கும் அம்மாவால கண்ணு முழிக்க முடியும்னு தோணலை. நெஞ்சுவலி... அதனால, நாளைக்கும் ஏதாவது பண்ணச் சொல்லிடுங்க. இந்த மூணு நாள் மட்டும் கொஞ்சம் உதவி பண்ணச் சொல்லுங்க...நான் வேணா வரட்டுங்களா...?'.

''வேணாம்...வேணாம்...உன்னால முடியாது...''—அவன் அவசரமாக மறுத்தான்.

வீட்டுக்கு மளிகைச் சாமான்கள் வாங்கி வந்தான். அவன் உள்ளே நுழைந்ததும் மனைவி சொன்னதைச் சொன்னான்.

''நல்லவேளை...சொன்னீங்க...எங்க வீட்டுல எல்லாரும் ஊருக்குப் போறதா இருந்தது. சரி, நான் போகாத நின்னுடறேன்...''

''அடடே. நீங்க ஊருக்குப் போங்க. நான் ஓட்டல்ல பாத்துக்குறேன்...''

''உங்களுக்கே ஓட்டல் சோறு ஆவலை. புள்ளைத் தாய்ச்சி பொண்ணுக்கும் வயசான பொம்பளைக்கும் எப்படி ஓட்டல் சரியா வரும்...? வேணா. நான் செய்து தரேன்...''

''நீங்க ஊருக்குப் போக வேணாமா...?''

''இல்ல...நான் ஊருக்குப் போகலை...''

அவள் வீடு திகைத்தது.

''என்னம்மா சொல்றே...?''

''அவள் ஒண்ணாங்கிளாஸ்லேர்ந்து என்கூட படிச்ச சிநேகிதி. அவளால முடியல...வாந்தி எடுத்து, வாந்தி எடுத்து சுருண்டு கிடக்கறா. அவங்கம்மா செய்யணும்... இப்ப, அவங்களாலயும் முடியலை. ஒரு புள்ளைத்தாய்ச்சிக்கு உதவி செய்யக்கூடாதா...? நான் இவருக்குன்னே சமைக்கலை. அவளுக்காகத்தான் செய்யறேன்...'.

''சரி. இத்தினி நாள் தெரிஞ்ச பொண்ணு...செஞ்சுக்க.''—வீடு உத்தரவு கொடுத்தது முட்டை முடிச்சு

கனோடு 'மூன்று நாள் பயணம்' என்று சொல்லி வெளி யேறியது.

அவனுக்குச் சமைப்பதில் அவள் குதூகலமானாள். அவள் செய்த மீதியை...

# 12

அவள் அரிசியும் உளுந்தும் ஊறப் போட்டு விட்டு டி.வி-யில் படம் பார்த்தாள். படம் முடிந்ததும் எதிர் வீட்டைத் திறந்து, உள்ளே போய் ஊற வைத்த அரிசியை யும் உளுந்தையும் கல்லில் போட்டு, அருகே முக்காலி போட்டு கால் நீட்டி அழுத்தமாக அமர்ந்து கொண்டு, மடமடவென்று அரைக்கத் துவங்கினாள்.

அவன் படியேறியபோது, வீட்டின் கதவு ஒருக் களித்துத் திறந்திருந்தது, அவன் உள்ளுக்குள் நுழைந் ததும் ''யாரு...?'' என்று அவள் சமையலறையிலிருந்து குரல் கொடுத்தாள். ஆட்டுக்கல்லை தொடர்ந்து ஆட்டிக் கொண்டிருந்தாள்.

அவன் செருப்பைக் கழட்டி விட்டுப் போய் எட்டிப் பார்த்தான். அவள் மிகத் தளர்வாக, உடைகளில் ஒழுக்க மில்லாமல் உட்கார்ந்திருந்தாள். அவனுக்கு, நேற்று பார்த்த ஆங்கிலப்படம் நெஞ்சில் முட்டியது. ''நீங்க தானா...?'' என்று சொல்லி முகம், கழுவப் போனான். சோப்புப் போட்டு முகம் கழுவினான். வேட்டிக்கு மாறி னான். முகத்தைத் துடைத்துக் கொண்டு ஹாலுக்கு வந் தான். ஹாலின் கதவிடுக்கு வழியே, அவன் மறுபடியும் பார்த்தான், மீண்டும் அவள் கவர்ச்சிகரமாகத் தென் பட்டாள்.

'கடவுள் ஒருவரே என்பது உண்மை. அது ஒரு நியாயமான விஷயம். ஆனால், ஒரே ஒரு மனைவி என்பது நியாயமான விஷயமா...? இல்லை என்றுதான் தோன்று கிறது. ஒரு மனைவி மகப்பேறுக்குப் போயிருக்கிறபோது இன்னொருத்தி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்..? கிட்டத்தட்ட அந்த விஷயத்தைத்தானே இவள் செய்து கொண்டிருக்கிறாள் என்று மனம் கதை எழுதியது. புத்தி வக்கிரமாகியது.

'டேய்...வேணாம். விடுறா. அது என்னமோ வந்து, வாய்க்கு ருசியா ரெண்டு விஷயம் பண்ணிப்போடுது. வீட்டைச் சுத்தமா வெச்சுக்குது. அதைப்போய் கெடுத் துக்காத...'

'நான் அதைக் கொடுத்துக்கலடா...பர்மனெண்ட்டா வெச்சுக்கணும்னு பாக்கறேன்' என்று மனதின் இன் னொரு பக்கம் பதில் சொல்லியது.

'உன்னால முடியுமா...? நீ சம்பாதிக்கிற 'சாடே ஸாத்' அணாவுக்கு, இன்னொரு குடித்தனம் எப்படிப் பண்ண முடியும்...?'

'எப்படியாவது பண்ணணும்...? பண்ணாத்தான் நல்லா இருக்கும். இன்னொண்ணுக்கு நாம பொறுப்பு ஏத்துக்கிட்டா, சம்பாத்தியம் தானா நடக்கும். இல் லேன்னா, இப்படி வெறுமனே, ஒண்ணும் இல்லாம அலைய வேண்டியதுதான். எனக்கு என்னமோ இவளும் இருந்தா நல்லா இருக்கும்னு தோணுது...'

எனவே, அவன் தன் நல்ல உணர்வுகளைப் பின்னுக் குத் தள்ளிவிட்டு, மற்றவர்களுடைய உணர்வுகள் எவ் வளவு கேவலப்படும் என்பதை மறந்துவிட்டு அறிவு ரீதியாக புத்திசாலித்தனமாக அவளுக்கு வலை விரிக்க,

ஆரம்பித்தான். அது கொழுத்த நண்டு. எளிதில் சிக்கிக் கொண்டது.

ஊடுருவி, ஊடுருவி மனிதர்களை மனிதர்கள் பார்க்கிறபோது, அங்கே அபிப்பிராயங்கள் மாறுகின்றன. ஆணும் பெண்ணும் பார்க்கிறபோது, 'நீ யார்...என்ன செய்வதற்கு இங்கே வந்திருக்கிறாய்...?' என்று கேள்வி எழும்.

அவன் பத்திரிகை வாங்கி வந்தால் நாவல்கள் எடுத்து வந்தான். மல்லிகைப்பூ கொண்டு வந்தான் வீடியோ டெக்கில் கமலஹாசன், ரஜினிகாந்த் படம் போட்டான். 'காதல் பாடல்கள்' என்ற காஸெட்டை வாங்கி வந்து சன்னமாக ஒலிக்க வைத்தான்.

''இந்தப்பாட்டு உங்களுக்குப் பிடிக்குங்களா...? நான் இதைக் கண்கிறங்கக் கேட்பேன்...'' என்று விவரித்தான். தன் படிப்புப் பற்றியும் உத்தியோகம் பற்றியும் பேசினான்.

''எதனா மொறு மொறுனு பண்ணிக் குடுங்களேன்..'' என்று கேட்டான் ''நானும் உதவி செய்யட்டுமா...?'' என்று அருகே வந்தான்.

அவளைப் பல்வேறு இடங்களில், பல்வேறு முறை உற்றுப்பார்த்தான். அவள் பயந்தாள். தயங்கினாள். அதேசமயம் உள்ளுக்குள் நெருப்பைக் கிளறிவிட்டாள். 'இவன் மட்டும் பின்பக்கம் வந்து தழுவிக்கொண்டால் எப்படியிருக்கும்...?'' என்று ஒருகணம் யோசித்துச் சோம்பல் முறித்தாள். 'கடவுளே...இந்தத் தெருவுல, நான் அடிபட்டுச் சாகப்போகிறேன்' என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள்.

'நாளை காலை அப்பாவும் அம்மாவும் வந்துவிடுவார்கள். இந்த இரவு மட்டும்தான் இருக்கிறது ஏதேனும்

பேசவேண்டுமென்றால், இப்போது பேசினால்தான் ஆயிற்று. இதற்குமேல் பேசமுடியாது' என்று அவளுக்கு எண்ணம் வந்தது. அதே எண்ணத்தை அவனும் வெளியிட்டான்.

"என்ன இருக்கு பேச...?"—அவள் கேட்டாள்.

"உங்களைப் பிடிச்சிருக்கு..."—அவன் நேரடியாக நெஞ்சுக்கு அம்பு செலுத்தினான். அவள் சுருண்டு விழுந்தாள்.

"என் ஃபிரெண்டு நம்பி என்கிட்டே சாவி குடுத்திருக்கா...நான் துரோகம் பண்ணமாட்டேன்..."

"இது துரோகமில்லே...உதவி அவளுக்கு நீ உதவி உனக்கு அவ உதவி..." என்று அவன் பொய்யான கணக்குக் காட்டினான்.

"இருந்திருந்து, இது என்ன பொய்...? உங்க வொய்ஃப் எவ்ளோ சிவப்பு, எவ்ளோ சுருள்முடி..."

"யார் சொன்னா...? பூஞ்சை. ஒரு பிடிக்குக் காணாது. உன் உடம்பு வாட்டம் அவகிட்ட இல்லவே இல்ல..." என்று அவன், அவளை வர்ணித்தான்.

அவள் கண் செருகினாள். நிற்க முடியாமல் சுவரில் சாய்ந்துகொண்டாள். அவன் அருகே வந்து இரண்டு கைகளையும் பக்கத்தில் வைத்து நின்றான்.

"உன்னை ஒண்ணும் பண்ணமாட்டேன், பயப்படாதே...ஆனா, நல்ல பதிலா தயவுசெய்து சொல்லு. நீ இருந்தா, என் வாழ்க்கை ரொம்ப நல்லாயிருக்கும் என்ன சொல்றே...?" என்று முகத்துக்கு அருகே வந்து மூச்சு விட்டான். "எதுவும் செய்யவில்லை. எதுவும் செய்யவில்லை" என்று அருகே நின்று உற்றுப் பார்த்தான்.

அவனுக்குக் கிளறியது. மெள்ள அவன் கையைத் தள்ளுவது போல் இறுகப் பிடித்துக் கொண்டாள். தள்ள முயற்சிப்பது போல் நடித்தாள்.

அவன் கையை இறுக்கமாக, நகர்த்த முடியாமல் வைத்துக்கொண்டான். ''தள்ளிட்டுப் போ'' என்று கட்டளையிட்டான்.

அவளால் தள்ளமுடியவில்லை. கையால் தள்ள முடிய வில்லை என்பதால், மார்பில் கைவைத்துத் தள்ள முயற் சித்தாள். அவளால் அசைக்கக்கூட முடியவில்லை.

மெள்ள அவள் ஓய்ந்தபோது அவன் வாரி இழுத்து அணைத்துக் கொண்டான். இறுகத் தழுவிக் கொண்டான் உதடோடு உதடு வைத்து முத்தமிட்டான்.

அவள் உடம்பு முழுவதும் பற்றியெறிந்து சாம்பலா யிற்று.

உடம்பில் உடம்பு பட்டு உன்மத்தம் ஏறிவிட்டால், பிறகு எவர் செய்யும் உபதேசமும் காதில் ஏறாது. எந்த சாஸ்திர, சம்பிரதாயங்களும் மனதில் தைக்காது. 'தான் செய்வதே சரி' என்று மனம் உரத்த குரலில் விடாப் பிடியாகச் சொல்லிக் கொண்டிருக்கும். தொடர்ந்து செய்து கொண்டிருக்கும்.

காய்ந்த புல்லைப் போட்டு, நெருப்பை மூட முடி யுமா...? புல்லில் தீ பற்றாதா...? புகையாதா...? புகை உயரே எழும்பாதா...? ஊருக்குத் தெரியாதா...?

தெரிந்தது. வாயும் வயிறுமாக அவள் சிநேகிதி ஓடி வந்து வீட்டுவாசலில் நின்று கத்தினாள். எல்லோரையும் கூப்பிட்டு வந்து நியாயம் கேட்டாள்.

'நான் அவனோடுதான் வாழ்வேன்' என்று இவள் பிடிவாதமாகச் சொல்ல, அவள் வீடு அவளைப் பாய்ந்து அடித்தது. அரிவாளைக் காட்டி மிரட்டியது.

அவனை அலுவலகமும் கண்டித்தது. இடமாற்றம் செய்தது.

இடம் மாறிய பிறகு இடம் மாறிய இடத்தில் இவன் அவளைக் கூட்டிக் கொண்டுபோய்க் குடித்தனம் வைத்தான்.

மனைவி பிள்ளை பெற்றாள். பார்க்கப் போகாமல் இருந்தான். மாமனாரும் மாமியாரும் வந்து கூப்பிட, பிள்ளையைப் பார்ப்பதற்குப் போனான்.

இவள் ஏதோ ஒரு ஊரில் தனியே பல் கடித்துக் கிடந்தாள். பக்கத்து வீடும் போகிறவர்களும் வருகிறவர்களும் காய்கறிக்காரனும் எவர்சில்வர் பாத்திரக்காரனும் விவரம் தெரிந்து' வெவ்வேறு விதமாகக் கேள்வி கேட்டார்கள்

''அந்தாளு ஒழுங்கா காசு குடுக்கறானா...? இல்லன்னா சொல்லு...நான் அப்பப்ப 'ஹெல்ப்' பண்றேன். ஒண்ணும் கவலையே படாத...'' என்று தன்னுடைய கரிசனத்தைக் காட்டினார்கள்.

'எதுவும் உதவி அல்ல... எல்லாம் கொடுக்கல், வாங்கல்தான்' என்று புரிய அவளுக்கு நேரமாயிற்று.

''என்னைக் கைவிட மாட்டாயே...'' என்று கெஞ்சிய போது, அவன் கன்னத்தில் அடித்தான்.

''சும்மா சும்மா இதையே கேட்டுட்டு இருந்தே, கொன்னு குழி வெட்டிப் புதைச்சுடுவேன்'' என்று சொன்னான்.

அவள் அப்பாவுக்கு. மன்னிப்புக் கேட்டு நீண்ட கடிதம் எழுதினாள். 'தான் திருமணமே இல்லாமல் தனியே இருக்க விரும்புவதாகவும் தன்னைக் கூட்டிக் கொண்டு போகும்படியும்' சொல்லியிருந்தாள்.

அப்பா வந்து, அவன் வரும்வரை காத்திருந்து, அவன் வந்ததும் கூட்டிக்கொண்டு போனார். அவன் விட்டது சனியன் என்று அந்த இடத்தைக் காலி செய்து விட்டு, மனைவியோடு வேறொரு ஊருக்குப் போனான். தன் குடித்தனத்தைத் தொடர்ந்தான்.

இவள், பாதி தின்னப்பட்ட பழமாய்...அவள் வீட்டிலேயே எந்தப் பிடிப்புமின்றி, எந்தச் சந்தோஷமுமின்றி, எந்த லட்சியமுமின்றிக் குமைந்து கிடந்தாள்.

அவள் நேராவதற்கு ஏழு வருடங்கள் பிடித்தன. ஏழு வருடங்களுக்குப் பிறகு 'வஞ்சிக்கப்பட்ட பெண்' என்று அவளுக்கு 'டீச்சர்' படிப்புக்கு இடம் கிடைத்தது. முப்பது வயதுக்குப் பிறகு, அவள் டீச்சர் படிப்புக்குப் புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு போனாள்.

பிறகு, அவளுக்கு டீச்சர் வேலையும் கிடைத்தது. மனம் பழைய விஷயங்களை நினைத்து அவ்வப்போது வேதனைப்பட்டது செத்துப் போய்விடலாம் என்ற எண்ணம் அடிக்கடி எழுந்தது.

'வயதான என் பெற்றோரை நான்தான் காப்பாற்ற வேண்டும். என் தம்பி எங்களுக்குத் தெரியாமல் திருமணம் செய்துகொண்டு போய்விட்டான். எனவே அப்பாவையும் அம்மாவையும் என்னுடைய காசில்தான் காப்பாற்ற வேண்டும். காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன். மனம் அமைதியாக இருக்க என்ன வழி...?' என்று அந்தப் பெண் எனக்குக் கடிதம் எழுதியிருந்தாள்.

நான் தியான மையங்களுடைய விலாசங்கள் கொடுத்து, தியானம் கற்றுக்கொள்ளச் சொன்னேன்.

'எப்போது தடம் புரண்டாய் என்று சொல்ல முடியுமா...?' என்று பலபேரிடம் நான் கேட்டிருக்கிறேன்.

யாராலும் சொல்ல முடியவே இல்லை ஒரு கற்பனை உலகத்தில் காலடி எடுத்து வைத்தவுடன், அது இழுத்துக் கொண்டு வெகுதூரம் போய்விடுகிறது. கடலலை போல வாரிக் கொண்டு போய் அடி சமுத்திரத்தில் செருகிவிடுகிறது. இழுத்துக் கொண்டு போகிற நேரம் கூடச் சிரிப்பாக இருக்கிறதே தவிர, சாவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம் என்பதை அவர்கள் உணர்வதில்லை.

எனவே, மனம் எந்நேரமும் முழு விழிப்போடு இருக்க, முற்றிலும் தெளிவோடு இருக்க, எந்த மயக்கமுமின்றி இருக்க, தியானம் கற்றுக் கொள்வது நல்லது என்று பலருக்கு சொல்லியிருக்கிறேன்.

காமத்தை, கோபத்தை, ஆத்திரத்தை, அவசரத்தை ஜெயிப்பதற்குத் தியானம் ஒரு நல்ல வழி. 'எப்படித் தியானம் செய்வது...? என்பதைச் சொல்லித் தர, பல பேர் இங்கே இருக்கிறார்கள்.

ஆர்வமுள்ளவர்கள் இதைக் காது கொடுத்துக் கேட்கட்டும். அவசியமுள்ளவர்கள் பழகிப் பார்க்கட்டும்.

சோம்பலற்று இருப்பதைப் பற்றிச் சொல்ல நினைக்கிறேன். சோம்பலை எதிர்ப்பது எளிதல்ல அதற்கு மிகுந்த வலிவு வேண்டும். அந்த வலிவு எங்கே இருக்கிறது...?

# 13

**சோம்**பலை எதிர்ப்பதற்குதேவையானஅந்த வலிவு எங்கே இருக்கிறது?

புத்தியில் இருக்கிறது. அந்த வலிமைக்குப் பெயர் வைராக்கியம்.

காலையில் நான்கு மணிக்கு எழுந்திருக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தால், இரவு படுக்கும் போதே நாளை காலை நான்கு மணிக்கு விழிப்பு வந்து விட வேண்டும் என்று புத்திக்கு உற்சாகம் கொடுத்துவிட வேண்டும் புத்தி அந்த உத்தரவை முழுவதுமாக உள் வாங்கிக் கொள்ள வேண்டும். புத்தி சக்தியுள்ளதாகவும் கட்டளையை சரியாக உள்வாங்கிக் கொள்ளக் கூடியதாகவும் இருப்பின், வெகு நிச்சயமாக பளிச்சென்று புத்தி நான்கு மணிக்கு விழித்துக் கொள்ளும். எழுந்து மணி பார்த்தால் மூன்று ஐம்பத்தைந்து, நான்கு அல்லது நான்கு ஐந்து இருக்கும் அந்த நேரத்தில் பளிச்சென்று படுக்கையை விட்டு எழுந்திருத்தல் வேண்டும்.

புத்தி உங்களை எழுப்பி விட்டு விட்டது. ஆனால், அப்போதும் பிரச்னை முடியவில்லை. எழுந்து, உட்கார்ந்து படுக்கையைவிட்டு நீங்கி, பின்பக்கம் போய் முகத்தை கழுவிக்கொண்டு முற்றிலும் புதியவராக மாறும் வரையில் நீங்கள் தூங்கியிருப்பவராகவே கருதப்படுவீர்கள் அப்படி முகத்தில் நீர் தெளித்து புத்துணர்ச்சியோடு வேலையில் இறங்கிவிட்ட பிறகு, எழுந்திருத்தலை நாம் கர்வமாகவே நினைத்துக் கொள்ளலாம். சோம்பலை உதறியதை ஒரு சாதனையாகவே நாம் பாராட்டிக் கொள்ளலாம்.

புத்தியின் சோம்பலுக்கு இன்னொரு முக்கியக் காரணம் என்னவென்று சொல்லட்டுமா?

கற்பனைகள் காரணம். பெரிய கனவுகள் காண்பவர்கள், பகற்கனவு காண்பவர்கள், தன்னைப்பற்றி ஏதேனும் கற்பனை செய்து கொண்டு, தனக்குத்தானே பேசிக் கொண்டு திரிபவர்கள், புத்தியைக் கூர்மையாக வைத்துக் கொள்ளவே முடியாது.

அது எப்படி கற்பனை செய்யாமல் இருக்க முடியும்...? ஒரு அழகியைப் பார்த்தால், 'இவள் எனக்கு மனைவியாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்' என்று எப்படி யோசிக்காமல் இருக்க முடியும்?

முடியும். கற்பனை கலக்காமல் முழுக்க முழுக்க யதார்த்தமாக வாழ்வதற்கு இயலும். கற்பனை கிளம்புகிறபோதே. கற்பனையில் மனசு ஆழ்கிறபோதே இதனால் நமக்கு என்ன லாபம் என்று உடனே விசாரிக்க வேண்டும்.

'சரி, அந்தப் பெண் அழகாக இருக்கிறாள். கெட்டிக்காரியாக இருக்கிறாள். பணக்காரியாக இருக்கிறாள். பத்து பேர் பாராட்டக் கூடிய நிலையில் இருக்கிறாள். அவளை என் மனைவியாக மனதுக்குள் ஆக்கிக் கொள்வதால் என்ன லாபம்? இது நடக்கப் போவதே இல்லை. எனக்கு கிடைக்காத ஒரு விஷயத்தைப்பற்றி நான் எதற்கு கற்பனை செய்து கொண்டு அவஸ்தைப்பட வேண்டும்? ஒருவேளை, இவள் நிச்சயம் கிடைக்க வேண்டுமென்றால் அதற்கான ஆயத்தங்களை நாம் செய்யவேண்டுமே தவிர, எனக்குக் கிடைத்துவிட்டதாக நான் எப்படி நினைத்துக் கொள்வது?' என்று கேட்டுக் கொள்ள வேண்டும்.

என்னிடம் ஒரு வாசகர் வந்தார். உதவி இயக்குநராக சேர்த்துவிட வேண்டுமென்று கைகூப்பினார். நான், 'எதனால் உதவி இயக்குநராக வேண்டும் என்று ஆசைப்படுகிறாய்?' என்று கேட்டேன். அதற்கு அந்த இளைஞர் மிக விநோதமான ஒரு பதிலைச் சொன்னார்—

''நான் என் மனதுக்குள் பெரிய டைரக்டராகி விட்டேன் சார். அதனால் என்னால் உதவி இயக்குநராக வேலை செய்ய முடியும் என்று தோன்றுகிறது'' என்று சொன்னார்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அருகில் உட்கார வைத்து, மெள்ள பேச்சு கொடுத்து அவர் வாயைக் கிளறினேன்.

இதுவரை அந்த இளைஞர் தன் கற்பனையில் ஐந்து படங்களை இயக்கியிருக்கிறார். ஐந்து படங்களும் இரு நூறு நாட்களைத் தாண்டிவிட்டன. ஐந்து படத்தில் ஒரு படம் கமலஹாசனையும் இன்னொரு படம் ரஜினிகாந்த்தையும் வைத்து மிக அற்புதமான ஒரு கதை செய்திருக்கிறார்.

நான் அவரை பல கேள்விகள் கேட்க கேட்க அவருடைய மனதின் எல்லா பகுதிகளும் எனக்குப் புரிந்தன.

''படத்தை டைரக்ட் பண்ணி ஜெயிக்கறது மட்டும் இல்ல சார் முதல் படம் ஜெயிச்சவுடனே நான் இப்படி நடந்துகிட்டேன். இரண்டாவது படம் சூப்பர்ஹிட். அப்ப நான் இப்படி நடந்தேன். மூன்றாவது படம் சூப்பர்ஹிட். அப்புறம் நான் எப்படி நடந்தேன்.'' என்றெல்லாம் அவர் நடித்துக் காட்டினார்.

''ஐந்து படங்களும் சூப்பர் ஹிட். எப்படி நடந்து வருவாய்?'' என்று கேட்டேன்.

அவர் எழுந்து வாசலுக்குப் போனார். அங்கிருந்து உள்ளே மிக தளர்ச்சியாக—அதுவே ஒரு ஸ்டைலாக நடந்து வந்தார். கையில் சிகரெட் இருப்பது போல பாவனை செய்து கொண்டார். மூக்கை லேசாக தேய்த்து துடைத்துக் கொண்டார்.

''என்ன பாலகுமாரன்...நல்லா இருக்கீங்களா? நம்ம படத்துக்கு வசனம் எழுதறீங்களா...ஆங்...என்ன சொல்றீங்க...ஆங்...டப்புன்னு சொல்லுங்க ஒரு வார்த்தை...'' என்று லேசான அதட்டலோடு கேட்டார். அவர் கற்பனைகள் எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அதோடு நிற்கவில்லை. அவருக்கு திருமணம் ஆகிவிட்டதாம். ஆனாலும் ஒரு பிரபல நடிகையோடு தொடர்பு இருக்கிறதாம். 'வீட்டுக்கு போவதா...அல்லது

நடிகை வீட்டுக்குப் போவதா?' என்று தினமும் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவாராம்.

எவ்வளவு ஆபத்தான ஒரு விளையாட்டை இவர் விளையாடிக் கொண்டிருக்கிறார் என்று பார்த்து நான் பயந்து போனேன். நெல் முனையளவு பிசகினாலும்இவர் வைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டிஇருக்கும்.

மனதுக்குள் இடைவிடாது பேசும் இந்த வசனங்களை அவர் சட்டென்று வாய்விட்டு உதிர்த்துவிட்டால், அவரை வெகு நிச்சயமாக பைத்தியம் என்று சொல்லிவிடலாம்.

இதற்குக் காரணம் சோம்பல். உண்மையாகப் போராடி உழைக்க வேண்டிய விஷயங்களை புரிந்து கொள்ளாமல், அதோடு போராடாமல், அதை அறிந்து கொள்ள சிரமப்படாமல், ஜெயித்துவிட்டதாக வெகு எளிதாக தன்னை நினைத்துக் கொண்டு, தன்னை மாற்றிக் கொண்டு, அதன்படி நடந்துகொண்டு, முற்றிலும் வேறான, தனக்குள்ளே இருக்கின்ற ஒரு கற்பனை உலகத்தில் வாழ்ந்து வருவது தவறான காரியம்.

''எப்பப்பா கற்பனை பண்ணுவே...'' என்று அந்த இளைஞரிடம் கேட்டேன்.

''இதுக்குன்னு தனியா 'டைம்' ஒதுக்கிடுவேன் சார். எங்க போனா தொந்தரவு இல்லாம இருக்கும்னு யோசிப்பேன். மியூசியம் தியேட்டர் போயிடுவேன் சார். அங்க போய் மல்லாந்து படுத்துக்குவேன். நான் பாட்டுக்கு யோசனை பண்ணிக்கிட்டு இருப்பேன் சார்.

மியூசியம் தியேட்டரைவிட 'பீச்' கூட நல்ல இடம் சார். போய் தனியா உட்கார்ந்துக்குவேன் சார். கொஞ்சம் இருட்டின உடனே தானாபேசிக்க ஆரம்பிச்சிடுவேன் சார். சில சமயம் அமாவாசை டைம்ல கும்மிருட்டா

யிடும் சார். அப்ப நான் எழுந்து டைரக்டர் மாதிரியே நிப்பேன் சார். எப்படி நடிக்கணும்னு நடிச்சிக் காட்டு வேன் சார் அழுது காட்டுவேன். சிரிச்சு காட்டுவேன் சார்...'' என்றார் அந்த இளைஞர்,

''என் எதிரே செய்ய முடியுமா?'' என்று கேட்டேன்.

அவர் கொஞ்சம் டைரக்டர் ஸ்ரீதர் போல நகத்தைக் கடித்துக் கொண்டு, ஆழ்ந்த யோசனை செய்துகொண்டு, 'காமிரா இங்க வா' என்று சொல்லி காமிராவை நிற்க வைத்து, 'இங்க எண்ட்ரி அங்கே எக்ஸிட்' என்று எல்லா விஷயங்களையும் சொல்லி, என்னிடம் ஸீனை விவரித்து விட்டு, 'எப்படி அந்தக் காட்சியை எடுக்கப் போகிறேன்' என்று என்னிடம் விளக்கிச் சொன்னார்.

அவருடைய ஆர்வம் மிக அற்புதமாக இருந்தது. அவர் பசி நன்கு தெரிந்தது. ஆனாலும் அவர் இதை இருட்டில் தனியே உட்கார்ந்து பேச ஆரம்பித்தால், கற்பனை செய்ய ஆரம்பித்தால் நேரடியாக பிரச்னை என்ன என்பதை உணராமல், ஜெயித்து விட்டதாக நினைத்துக்கொள்ள ஆரம்பித்தால் அவர் முடிவு மிக மோசமானதாக இருக்கும்...சந்தர்ப்பமே கிடைக்காமல் ஒருபடி கூட மேலே ஏறாமல் அவர் முடிந்து போவார்.

நான் இதை அந்த நண்பருக்கு விளக்கினேன். என்ன செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தேன்.

'கடற்கரைக்குப் போய் தனியே உட்காரக்கூடாது. மியூசியம் தியேட்டருக்குப் போய் கண்மூடி, தூணில் சாய்ந்து கற்பனை செய்யக்கூடாது...மூன்று நான்கு நண்பர்களாக சேர்ந்து கொள்ள வேண்டும். நண்பர் களிடம் சொல்ல வேண்டும். அது பற்றிய அபிப்பிராயங் களைக் கேட்க வேண்டும், தனித்து தனக்குள்ளே பேசாது நான்கு நண்பர்களிடம் பேசும்போது அவர்கள் அதிலுள்ள குற்றங்குறைகளை எளிதில் காட்டுவார்கள்.

அதிலுள்ள நியாயமான சங்கடங்களை வெளிக் கொணரு வார்கள். அதை நிகழ்த்தும்போது, என்னென்ன பிரச்னை கள் ஏற்படும் என்று ஓரளவு கோடி காட்டுவார்கள். இது தான் ஜெயிப்பதற்கு உபயோகமாக இருக்குமே தவிர, வெறுமே தனக்குள் பேசுவது என்பது சோம்பலை வளர்க் கும். சோம்பலாக வளரும்' என்று சொன்னேன்.

நான் சொல்வது மிகமிக சூட்சுமமான விஷயம். கற்பனை உங்களுக்குள் என்ன அளவில் இருக்கிறது என்று நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். உங்கள் கற்ப னைக்கு ஒரு அளவுகோல் வைத்துக் கொள்ளவேண்டும்.

கற்பனை இல்லாத மனிதரே இல்லை கனவுகள் இல்லாத மனிதரே இல்லை. ஆனால், கனவுகளுக்கும் கற்பனைகளுக்கும் மெல்லிய கடிவாளம் போட்டு, நில் லென்றால் நிற்கவும், ஓடென்றால் ஓடவும் செய்யும் பழகிய குதிரையாக வைத்துக் கொள்ள வேண்டும். புத்தியை பழகிய குதிரையாக வைத்துக் கொள்வதற்கு வைராக்கியம் அதிகம் உதவும்.

வைராக்கியத்தைப் பெறுவது எப்படி?

அது வேறு ஒரு விதமான யோசனை. இன்று காலை நான்கு மணிக்கு நான் எழுந்திருக்கவில்லையென்றால், நம்மை நாமே லேசாக கோபித்துக் கொள்ளலாம். 'நாளைக்கு காலைல நாலு மணிக்கு எழுந்தே ஆகணும்' என்று மறுபடியும் புத்தியை முடுக்கிக் கட்டளை போட லாம். நான்கு மணிக்கு எழுந்திருக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்யலாம். நிறைய தண்ணீர் குடித்துவிட்டு வயிறு கனத்து படுத்தால் உடம்பு சில்லிட்டு உங்களை சீக்கிரமே எழுப்பிவிடும்.

மணி பார்த்தால் மூன்றரை, 'நான்கு மணிக்குத்தானே எழுந்திருக்க வேண்டும். மூணரைக்கே எழுந்து விட் டோமே... ஒரு அரை மணி நேரம் உறங்குவோம் என்று

நினைக்கக்கூடாது, மூணரைக்கு எழுந்து விட வேண்டும். பின்பக்கம் போய், கைகால் கழுவி, முகம் துடைத்து நான்கு மணி ஆகும் வரை உடம்பில் காற்றுப்பட, வெட்ட வெளியில் ஜன்னலோரத்தில், பால்கனியில் நின்று நான்கு மணிக்காக தவம் செய்ய வேண்டும்... நான்கு மணி ஆனதும் சட்டென்று எந்த வேலைக்காக எழுந்தோமோ அதை துவங்கிவிட வேண்டும். 'தூங்கு, தூங்கு' என்று மனம் கெஞ்சும், நிர்தாட்சண்யமாக மறுத்துவிட வேண்டும்.

'இன்னும் அரைமணி நேரம் தூங்கக்கூட வேண்டாம் வெறுமனே படுத்திருடா' என்று மனம் சொல்லும். 'முடியாது எழுந்து உட்கார்' என்று அதட்டுங்கள். மனம் அழகிய பெண்களை அல்லது இறுக்கின புடவையை கற்பனை செய்து கொண்டு அலைகிறபோது 'நில். இதனால் என்ன ஆகும். வெறுமே உனக்கு நீயே பேசித்திரியாதே. போதும் பேச்சை நிறுத்து. மௌனமாக இரு' என்று அதட்டி, எந்த எண்ணமும் சொல்லும் இல்லாது மனம் மௌனமாக இருப்பதை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

யார் கற்றுத் தெளிந்தவர்களோ அவர்களோடு பழகுங்கள். நமக்குத் தெரியாது என்று தெரிந்தால், தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் நிச்சயமாக ஏற்பட்டுவிடும். தெரியும் என்று அலட்டினால் தெரிந்தவர்களை உதாசீனப்படுத்தத் தோன்றும்.

அலட்டுகிற நிறைய பேர் கற்பனையில் இருக்கிறவர்கள்... அலட்டுகிறவர்கள் ஜெயித்ததாக சரித்திரம் இல்லை.

சோம்பலும் கற்பனையும் அருகருகே இருக்கின்றன என்பது இப்போது உங்களுக்குப் புரிகிறதா?

கூர்மையாக இருப்பதற்கு வேறு என்ன பயிற்சிகள் வேண்டும்?

# 14

பழங்காலத்துப் பெரியவர்கள், குழந்தைகள் தும்மினால் உடனே 'தீர்க்காயுசு' என்று ஆசீர்வாதம் செய்வார்கள். தும்மலுக்கு தீர்க்காயுசு என்று ஆசீர்வாதம் செய்வானேன்.

தும்மல்தான் ஆரம்பம். சளியினுடைய அச்சாரம். நுரையீரல் முழுவதும் சளியால் பாதிக்கப்பட போகிறது என்பதற்கான சங்கேதம், எனவே, அவ்விதம் நேரா திருக்க வேண்டுமென்பதற்காக 'தீர்காயுஷ்மான் பவஹு' என்று சொல்வார்கள்.

எதற்கு பாதிப்பு ஏற்பட்டாலும் 'நுரையிரலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது' என்று பெரியவர்கள் முக்கியமாக சொல்வார்கள்.

சோம்பலுக்கும் நுரையீரலுக்கும் சம்பந்தம் இருக்கிறதா?

ஆமாம். சுவாசத்துக்கும் சோம்பலுக்கும் சம்பந்தம் இருக்கிறது. நன்கு சுவாசிக்காது போனால் சோம்பலும் சோர்வும் நிச்சயம் ஏற்படும். எனவே, சுவாசத்தை சரிசெய்து கொள்ள நம்முடைய முன்னோர்கள் பல வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். விடியற்காலை' சூரியோதயத்துக்கு முன்பு எழுந்திருப்பதும் அந்தப் பயிற்சிகளுள் ஒன்று.

''சூரிய உதயத்துக்கு முன் எழுந்திருப்பதில்லை. எழுந்திருக்க முடியாது'' என்று ஒரு இளைஞர் சொன்னதால், அவருக்கு வெகுசீக்கிரம் வயதாகி விடும் என்று நான் நினைப்பதுண்டு.

இளமையிலேயே வில் வைத்து, நாணேற்றி குறி பார்த்து அடிக்க முடியாதவரால் எப்படி முதுமையில் ஜெயிக்க முடியும்? விடியற்காலை எழுந்திருக்கிற பழக்கம் நடுத்தர வயதில் எப்படி வரும்? உடம்பு நிறைய தொய்வுறுகிற அந்த நடுத்தர வயதில், நோய்களால் பலமாகத் தாக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சம்தான் எழும். அதிகச் சோர்வுதான் ஏற்படும்.

இரவு பத்தரை மணிக்கு டி.வி-யில் நாடகங்கள் இருப்பதால், பதினோரு மணிவரை தூக்கம் வராது போவதால், எழுவது என்பது காலை ஏழு மணிக்குப் பிறகுதான் நிகழ்கிறது. குறிப்பாக நாலிலிருந்து ஏழுமணி வரைதான் நல்ல தூக்கமே ஏற்படுகிறது என்று சொல்வாரும் உண்டு.

பட்டணத்துத் தெருக்களில் வாகனங்கள் ஓட ஆரம்பித்து நச்சுப்புகை பரவியதும், அதை சுவாசிக்கவே சிலபேர் எட்டுமணிக்கு எழுந்திருக்கிறார்கள் ஒன்பது மணிக்கு புகையினூடே அலுவலகம் போகிறார்கள். முப்பத்தைந்து வயதில் மூச்சுத்திணற ஆரம்பித்துவிடுகிறார்கள். வேகமாக மாடிப்படி ஏறினால் படபடப்பு அதிகமாகிவிடுகிறது. ஓடுவதென்பது இயலாத காரியமாகி விடுகிறது. சற்று உரக்க கத்தி, சண்டை போட்டால் தலை சுற்றுகிறது, நாற்பது வயதுக்குள் முதுமை வெகு வேகமாய் முகத்தில் படிந்து விடுகிறது.

நான் சொல்வது வெறும் உடம்பு ஆரோக்கியம் மட்டும் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல. சோம்பல் என்பது மனதின் தூக்கம். மனம், உடம்போடு பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கிறது. உடம்பு சரியாக இல்லாவிட்டால், மனம் நன்றாக இயங்காது. ஆறு கடக்கும் வரை ஓடத்தை ஒழுங்காக வைத்துக் கொள்ளத்தான் வேண்டும். பிறகு ஓடத்தை மறுகரையில் இழுத்துபோட்டு

விட்டு நடந்து போய்விடலாம். அதுவரை ஓடத்தை மிக நன்றாய், பாதுகாப்பாய் கவனித்துக்கொள்ள வேண்டும்.

இளமையிலேயே நன்றாக சுவாசப்பயிற்சி செய்து, உடம்பை வளைத்து வில்போல் வைத்துக்கொள்ள கற்றுக் கொண்டால், நுரையீரலையும் குடலையும் சுத்தமாக வைத்துக்கொண்டால் மனம் மிக அமைதியாகவும் தெளி வாகவும் இயங்கும்.

'கடும் ஜலதோஷத்தில் இருக்கிறவர்கள் மனனம் செய்ய இயலாது பொறுமையாய்ப் பேசமுடியாது' என்பது உங்களுக்குத் தெரியுமா?

கடும் ஜலதோஷத்தில் உள்ளவர்கள், உள்ளுக்குள் புதைந்து கிடக்கும் ஒரு விஷயத்தை ஆழ்ந்து யோசித்து நிதானித்து வெளிக்கொணரவும் முடியாது.

எதிரே ஒரு நண்பர் உட்கார்ந்திருக்கிறார். அவரை பத்து வருடங்கள் முன்பு பார்த்தது. அவருடைய பெயர் அடிமனதில் இருக்கிறது. ஆனால் ஞாபகத்துக்கு வர வில்லை. ஜலதோஷம் இருப்பின் அந்த இடத்தை யோசிக்க யோசிக்க அறுபட்டுக்கொண்டே போகும். அந்த இடத்தை ஜலதோஷம் போகும் வரையில் தொடவே முடியாது. அல்லது அவராகத் தன் பெயர் சொல்லும் வரை நமக்கு புரியவும் புரியாது.

ஆகவே, நுரையீரலின் பலம். இரைப்பையின் செரி மானம் மிக முக்கியம். இவையிரண்டும் பின்னிப் பிணைந் தவை நுரையீரல் நன்கு இயங்கினால் செரிமானமும் நன்றாக இருக்கும், செரிமானம் நன்றாக இருந்தால், சிறு நீரகங்கள் நன்கு இயங்கும். சிறுநீரகங்கள் நன்கு இயங் கினால் நுரையீரலை சளி தாக்காது. இது ஒரு வட்டம்.

பரத கண்டத்தின் மிகப் பெரும் பழம் பொக்கிஷம் ஹட யோகம். ஹட யோகத்தில் நூற்றுக்கணக்கான மூச்சுப் பயிற்சிகள் இருக்கின்றன. அவற்றில் பைரவ பிராணாயாமம் காக்க பிராணாயாமம் என்று சிலவும். கும்பகம் என்ற மூச்சை அடக்குதலும், மூக்கின் வழியே மூச்சை இழுத்துவிடலும், 'ஓம்' என்பதைப் பிரித்து அ, உ, ம் என்று உரக்கக் கூவுதலும், ஒவ்வொரு முறை பிராணாயாமம் செய்த பிறகும் எஞ்சியிருக்கும் காற்றை சுத்தமாக வெளியே விடுவதற்கு உட்கார்ந்த நிலையிலேயே குனிந்து நுரையீரலை அழுத்திக் காற்றை வெளியே விடுகிற பயிற்சியும் உண்டு.

எத்தனை படம் போட்டாலும் ஒரு பத்திரிகையில் இதை சொல்லித் தரவே முடியாது. தொலைக்காட்சியில் சொல்லித் தருகிற போதும் புரியாமல் போவதற்கு வாய்ப்புகள் உண்டு. இவை ஒரு தெளிந்த குருவிடம் நேரடியாக உட்கார்ந்து கற்றுத் தேற வேண்டியவை. கற்பது மட்டும் போதாது காலையும் பிற்பகலும் மாலையும் இருபது நிமிடங்கள் ஒதுக்கி பயிற்சி செய்யவேண்டும் பிராணாயாமம் கற்றுக் கொடுக்கப்படும் என்று சொல்லப்படும் இடங்களுக்குப் போய் நான் மேற்சொன்ன பிராணாயாமங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு நாய் சுவாசிப்பதை போல் நாக்கை வெளியே தொங்கவிட்டு காற்றை இழுத்து, காற்றை வேகமாக வெளியிடுதல்தான் பைரவ பிராணாயாமம் முழங்கால்களில் உட்கார்ந்து கொண்டிருக்கிற வஜ்ராசனத்தில் இதைச் செய்ய, பலன் அதிகரிக்கும். அதே போல, தொண்டையின் நடுக்குழியிலிருந்து ஒரு காக்கையின் சத்தத்தை அழுத்தி வெளியேவிட்டு, காக்க பிராணாயாமம் செய்கிறபோது நாடி நரம்பெல்லாம் புத்துணர்வு பெறுகிறது. சில முத்திரைகளோடு மூச்சை இழுத்து கும்பகம் பண்ணி வெளியே விடுகிறபோது நுரையீரல்

அகன்று பெரிதாகிறது. நாடிசுத்தி என்று இடது நாசி வழியாக மூச்சை இழுத்து வலது நாசி வழியாக விட்டு பிறகு வலது நாசி வழியாக மூச்சை இழுத்து இடதுநாசி வழியாக விடுவது என்கிற பயிற்சி சுவாசக் குழலை வெகு நிச்சயமாய் சுத்தம் செய்கிறது.

ஆரம்பத்தில் பைரவ பிராணாயாமம் செய்கிறபோது கொத்து கொத்தாய் சளி வெளியே வந்து விழும். இருமல்வரும். மூச்சுத் திணறும் நம்மாலெல்லாம் இதை செய்ய முடியாது என்று அயர்ச்சி ஏற்படும். ஆனால், இதை மெள்ள மெள்ளத் தாண்ட வேண்டும்.

சுருண்டு சுருண்டு படுத்துக் கொள்கிற சுகம் மனதில் படிந்துவிட்டால், ஜெயித்தவர்களைக் காணும்போது எரிச்சலாகத்தான் இருக்கும். புறம்பேசத் தோன்றும். அப்படித் தோன்றினால், அப்போது மன நோயும் சேர்ந்துவிட்டது என்றே பொருள். சில விஷயங்கள் வாழ்க்கையில் ஒரு முறைதான் கேட்கக் கிடைக்கும். அதை விட்டு விட்டால் போயிற்று பிறகு மறுபடியும் ஒருநாளும் அதை செய்ய முடியாது பிறகு நீங்களும் பிராணாயாமம் செய்கின்ற மற்றவர்களை கேலி செய்ய ஆரம்பித்து விடுவீர்கள் இது நரகத்தின் நுழைவாயில். குழப்பத்தின் முதல்படி. சோம்பலின் சிம்மாசனம். நல்ல விஷயங்களை நீங்கள் புறந்தள்ளுவதோடு மட்டுமல்லாது அதை கேலியும் செய்யும்போது மிகப்பெரிய சமூக எதிரி யாக மாறி விடுகிறீர்கள்.

'இந்த சிகரெட் நுரையீரலைத் தாக்கும். இதய நோயைக் கொண்டுவந்து கொடுத்துவிடும்' என்று உள் ளுக்குள்ளே ஒரு குருவி சொன்னபோது, அலாரம் அடிக்கத் துவங்கிய போது நான் சட்டென்று ஒரே வீச்சில் இந்த சிகரெட்டை அறுத்தெறிந்தேன். கோப மில்லாமல். எரிச்சலில்லாமல். ஆத்திர மில்லாமல் அந்த

கெட்ட பழக்கத்தை என்னிடமிருந்து தூக்கி போட்டேன் இதற்கு என் குருநாதரும் பிராணாயாமமும் காரணம்.

பிறகு தொடர்ந்து பயிற்சிகள் செய்து நுரையீரலை நல்ல நிலைக்குக் கொண்டு வந்து விட்டேன். சிகரெட் பிடிக்காத மது அருந்தாத நண்பர்களுக்கு இப்போது நான் சொல்கிற விஷயங்கள் மிகமிக உபயோகமானவை, இந்த பிராணாயாமங்கள் நாடி நரம்புகளில் படர்ந்து, வாழ்க்கையில் ஏற்படும் அவஸ்தையை வெகுவாக குறைக்கிறது.

வெகு நேரம் பிராணாயாமத்தால் கண் செருக வெகு நேரம் அமர்ந்திருக்க முடியும். தொடர்ச்சியாக ஒன்பது விதமான பயிற்சிகள் இருபது நிமிடங்களில் செய்துவிட்டு அடுத்த இருபது நிமிடங்கள் சுவாசத்தை கவனித்துக் கொண்டிருக்கலாம்.

மூக்கு நுனியிலிருந்து மூக்கின் நடுப்பகுதி வரை மூக்குக்குள் காற்று போவதையும் வருவதையும் வெறுமே பார்த்துக் கொண்டிருப்பது மிகப்பெரிய ஆறுதலை, ஒரு தெளிந்த ஓய்வை நிச்சயம் தரும்.

அது என்ன தெளிந்த ஓய்வு?

# 15

**தெ**ளிந்த ஓய்வு என்பது, நீங்கள் சுருண்டு விழுந்து பாதித் தூக்கம் தூங்குவதல்ல. தெரிந்து கொண்டு, ஓய்வு உடம்புக்குத் தேவை என்பதைப் புரிந்து கொண்டு சுவாசத்தைக் கவனிப்பதன் மூலம் உடம்பின் சகல அவயங்களையும் தளர வைத்து விடலாம். அப்படித் தளர்ந்த பிறகு, தளர்ந்து ஓய்வான பிறகு மறுபடியும் இருபது நிமிடத்தில் உடம்பின் சகல அங்கங்களும் போருக்குத்

தயாராகிவிடுகின்றன. 'ஓடு, ஓடு' என்று அவைகளே உற்சாகம் கொள்கின்றன, நான் இதைச் சில நண்பர்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறேன்.

பிராணாயாமம் செய்த பிறகு கண்மூடி மூச்சை கவனித்தவர்கள் எந்த மந்திரமும் சொல்லாது. வெறுமே மூச்சைக் கவனித்தவர்கள் கண்ணைத்திறந்து பார்ப்பதைக்கூட விரும்பாதவர்களாகி விடுவார்கள். இப்படியே இன்றும் நெடுநேரம் இருக்கலாமே என்று எண்ணுவார்கள். எத்தனை சுகம் என்று சந்தோஷப்படுவார்கள் அடுத்த இருபது நிமிடத்தில் எழுந்து முகம் கழுவி, சிறிது நேரத்துக்கு பிறகு எந்த வேலையும், எந்த நேரம் வேண்டுமானாலும் சுறுப்சுறுப்பாகச் செய்யத் துவங்கிவிடுவார்கள்.

பிராணாயாமம் தவிர, சோம்பல் இல்லாமல் இருக்க வேறு ஏதும் வழிகள் இருக்கிறதா?

இருக்கிறது. பாதி வயிறு சாப்பிடுவது.

பாதிவயிறு சாப்பிடுவது என்கிற விஷயத்தை நிறைய பேர்கள் உற்றுப் பார்த்திருக்க மாட்டார்கள். 'எதிரே உணவு இருக்கிறது. அருகே நாம் இருக்கிறோம். சாப்பிட எந்தத்தடையும் இல்லையென்று உணவின் ருசிமீது மனது வைத்து, ருசியான விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு, வயிற்றுக்குள்ளே இடைவிடாது திணித்துக் கொண்டிருப்பார்கள், ஆனால், குடல் என்ன செய்கிறது...இரைப்பை என்ன செய்கிறது என்று யோசிக்க மறந்து விடுவார்கள். உள்ளுக்குள் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முடியாமல் வெளியில் இருக்கும் உணவை முக்கியமாக நினைத்துக் கொள்வார்கள். ஆனால், உணவு உண்ணும்போது இரைப்பை என்னசொல்கிறதுஎன்று யோசிக்க வேண்டும்.

இந்த அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா? ஓட்டலுக்குப் போகிறீர்கள். என்ன வேண்டும் என்று

சர்வர் கேட்கிறபர். இரண்டு மைசூர் போண்டா, ஒரு மசால்தோசை, ஒரு காபி என்று ஆர்டர் செய்கிறீர்கள் மைசூர் போண்டா சாப்பிட்ட பிறகு, மேலே ஒரு டம்ளர் தண்ணீர் குடித்தபிறகு. கொஞ்சம் இரைப்பையை யோசித்துப் பார்த்தால், 'இப்போது ஒரு அரைக் காபி போதுமே' என்றுதான் அது சொல்லும், ஆனால், எதிரே ஒரு டேபிளில் ஒண்ணேமுக்கால் அடி நீளத்துக்கு ஒரு தோசை போக, 'அட...நாமும் தோசை சாப்பிட லாமே' என்று ஆசை ஏற்படும். உள்ளுக்குள் இரைப்பை யோடு ஏற்படுத்திய தொடர்பு சட்டென்று அறுத்து போகும். ஆனால் விடாது மறுபடியும் இரைப்பையைக் கேட்க வேண்டும். உனக்கு தோசை வேண்டுமா?' என்று இரைப்பை தெள்ளத் தெளிவாகச் சொல்லும். இல்லை. 'எனக்குப் பசியில்லை.' நாம் அதைக் கேட்பதுமில்லை. அப்படிக் கேட்டாலும், இரைப்பையின் பதில் காதில் விழுவதுமில்லை,

தோசையே அதிகபட்சம். காபி...? வெகு நிச்சயமாகக் கூடுதல். என்ன செய்வது? சொல்லியாகிவிட்டது. காபி வந்ததும் அதையும் குடித்துவிடுவீர்கள். இப்போதுமூச்சுத் திணறும் அளவுக்கு இரைப்பை பிதுங்கிக் கொண்டி ருக்கும்.

இது தவறு, மிகப்பெரிய தவறு. இந்த நிலையில் நூறுகெஜம் போனதும் வெகுநிச்சயமாக உங்களுக்குத் தூக்கம் வரும். இத்தனை உணவு வயிற்றில் இருக்கும் போது ரத்தஓட்டம் முழுவதும் உணவின் மீது இருக்குமே தவிர, உங்கள் மூளைக்குச் சிறிதும் போகாது. நீங்கள் வைத்த பொறியில் நீங்களே மாட்டிக் கொண்டு விட்டீர் கள் ஒவ்வொருமுறையும் இப்படி ஆர்டர் செய்துவிட்டு, பசிக்கு மிஞ்சிச் சாப்பிடுகிறீர்கள்.

போண்டாவின் பச்சைமாவு, தோசையின் எண் ணெய் மிதக்கல், மசாலாவில் சேர்ந்திருக்கிற உப்பு,

உறைப்பு வகைகள் இவையெல்லாம் சேர்ந்து மிகக் குழப்படியான ஒரு வயிறு சங்கடத்தை ஏற்படுத்தும், அதோடுகூட காலையிலிருந்து திரும்பத் திரும்ப காய்ச்சிக் கொண்டிருக்கின்ற அந்தப்பாலின் அடர்த்தி வேறு உங்கள் வயிற்றில் இறங்கியிருக்கிறது. அத்தனை அடர்த்தியான பாலில் போடப்பட்ட காபி ஜீரணமாக வெகு நேரம் ஆகும் அதீத கலோரியை வயிற்றிலிருந்து உடம்புக்கு அனுப்பும்.

அந்த அதீத சக்தியை நீங்கள் ஓடிக் குறைக்கப் போவதில்லை. ஆடிக் குறைக்கப் போவதில்லை. மேலே ஏறி இறங்கி இறைக்கப் போவதில்லை. இப்படியே மிதக்க, மிதக்கப் போய்க் கொண்டிருக்கப் போகிறீர்கள். பாதித் தூக்கமும் பாதிப் பேச்சுமாக வாழ்க்கையை இழக்கப் போகிறீர்கள்.

'கடவுளே. மனுஷன் உயிர் வாழறதே சாப்பிடறதுக்கு அதையும் கெடுக்கிறயேடா பாவி' என்று நினைக்கத் தோன்றுகிறதா?

எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம். அத்தனைக்கும் உழைப்பிருக்கிறதா என்பதுதான் மிக முக்கியமான கேள்வி. நாம் சாப்பிடுவதை உழைத்துக் கரைக்க முடியவில்லையென்றால், உணவில் கவனமாக இருக்க வேண்டியது கட்டாயம்.

சோம்பல் என்பது உடம்பின் காரியம் மட்டுமல்ல. புத்தியின் யோசிப்பும்கூட. புத்தி பாதியில் யோசிப்பதும், யோசிக்காமலேயே பேசுவதும் இயல்பாக நடக்கும் பத்து பேருக்கு முன்னால் கெட்டிக்காரன் போல நடக்க வேண்டிய அவசியமிருப்பதால் எல்லாம் தெரிந்தது போல பொய் சொல்லும் போஸ் கொடுக்கும்.

இவைகள் நான் என்னையே உற்றுப் பார்த்துக் கண்டுகொண்ட விஷயம். எப்போது பொய்யும் போஸும்

அதிகமாக இருக்கிறதோ அப்போது உறவுகள் மிகச் சிக்கலாகப் போய்விடுகின்றன. எனவே, நான் இதற்குக் காரணத்தைக் கண்டு பிடித்து, உணவுக் கட்டுப்பாட்டை அதிகடபடுத்தினேன். அது மட்டுமல்லாது, சமைக்காமல் செய்த உணவைச் சாப்பிடுவது எவ்வளவு பெரிய சுக மென்று தெரிந்து கொண்டேன்.

வெறும் காரட்டும் வெண்டையும் கோஸ் துருவலும் வெள்ளரித் துண்டுகளும் பீட்ரூட்டும் ஓரிரு பழங்களும் அள்ளி அள்ளிச் சாப்பிட நல்ல செரிமானம் ஏற்படுகிறது உடம்பு புத்துணர்ச்சி பெறுகிறது வயிற்றில் மிச்சம், மீதி எதுவும் தங்காமல் சுத்தமாகிறது. அடிவயிறு கனக் காமல் உடம்பை ஒரு, ஒரு இலைபோல உணர்ந்தால், நடப்பதும், நிற்பதும் சட்டென்று எழுந்திருக்கவும், உட்காரவும் ஓடிப்போப் வரவேற்கவும் வெகுநேரம் நிற்கவும் நேரே நிமிர்ந்து உட்காரவும் எதிரே இருப்பவர் பேசும் பேச்சை முழுவதுமாகக் கேட்கவும் எளிதாக முடியும்.

எதற்கு இவையெல்லாம் என்று கேட்கிறீர்களா? வெற்றி பெற வேண்டுமென்றால் இயக்கம் சுறுசுறுப் பாகவும், தெளிவாகவும். கவனமாகவும் இருக்க வேண்டும்.

உனக்கு என்னப்பா தெரியும் எங்க நிலைமை...? மயிலாப்பூர்ல பஸ் பிடிச்சு பெரம்பூர் வரைக்கும் போய், பெரம்பூர்ல பஸ் பிடிச்சு மாதவரம் வரை போய், அங்கேர்ந்து ஃபேக்டரிக்குள்ள போய், காத்தால ஏழரை யிலிருந்து, சாயங்காலம் ஆறுமணிவரைக்கும் நாய் மாதிரி உழைச்சா, உடம்பு சோர்ந்து போகாம இருக்குமா?

இல்லை, இதிலிருந்தும் தப்பித்துக்கொள்ளலாம். இந்த உடல் அயற்சியை நீக்கவும் நல்ல வழி இருக்கிறது.

இதையும் நம் முன்னோர்கள்தான் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

வீட்டுக்கு வந்து கைகால் அலம்பி, குடல் சுத்தம் செய்து கொண்டு ஒருமுறை பல் தேய்த்து, வாய் கொப்பளித்து, லேசாக ஏதேனும் உணவருந்தி, வீட்டின் படுக்கையறையில் தரையில் துண்டு விரிந்து மல்லாக்கப் படுத்துக் கொள்ளுங்கள்.

உடம்பு முழுவதும் அயற்சியாக இருக்கும் அல்லவா? கண் சொருகித் தூக்கம் வருவது போல் இருக்கிறது அல்லவா? சாப்பிட்டுவிட்டு தூங்க வேண்டாம். சாப்பிடுவதற்கு முன்மல்லாக்கப்படுத்துக்கொள்ளுங்கள் உடம்பை தளர வைத்துக் கொள்ளுங்கள் கால் கட்டை விரலை மனம் கவனிக்கத் துவங்கட்டும். பிறகு அடுத்து மொத்தமாகக் கால்விரல்கள் எல்லாவற்றையும் மனம் கவனிக்கட்டும் மனம் மெள்ளப் பயணம் செய்து உள்ளங்காலின் அடிப்புறத்துக்கும் குதிகாலுக்கும். குதிகாலின் வழியே கணுக்காலுக்கும் கணுக்காலின் வழியே புறங்காலுக்கும், புறங்காலிலிருந்து சற்று மேலேறி ஆடுகால் தசைக்கும் முழங்கால் முட்டிக்கும், தொடைகளுக்குள்ளேயும், இடுப்பு ஜாயிண்ட்களிலும் குறியிலும், தொப்புளுக்கு அருகேயும், குடல் முழுவதையும் பெருங்குடல் முழுவதையும் சுற்றி இரைப்பைக்கும் போகட்டும் நெஞ்சைக் கவனிக்கட்டும். இதயத்தைப் பார்க்கட்டும். தொண்டைக்குழியைப் பார்க்கட்டும் கை புஜங்களை உணரட்டும். முழங்கைகளை அறியட்டும் பிறகு மெள்ள அந்த மனம் நகர்ந்து உள்ளங்கைக்குள் உட்கார்ந்து, விரல்களையெல்லாம் கவனித்து, அப்படியே திரும்பி, மறுபடியும் தோளுக்கு வந்து, தொண்டைக் குழிக்குச் சென்று தொண்டைக் குழியிலிருந்து அடிநாக்குக்குப் போய், அடிநாக்கிலிருந்து

நுனி நாக்குக்குப் போய், நுனி நாக்கிலிருந்து பற்கள் பார்த்து, பற்களுக்குப் பிறகு கன்னக்கதுப்பு உணர்ந்து, கன்னக்கதுப்பிலிருந்து மூக்கை உணர்ந்து, சுவாசத்தை உணர்ந்து பிறகு கண்களைக் கவனித்து, கண்களிலிருந்து காதுகளுக்கு இறங்கி, பின் நெற்றியைப் பார்த்து, நெற்றிப் பொட்டை கவனித்து, பின் மெள்ள உச்சிக்குப் போகட்டும். உச்சியில் சிறிது நேரம் தங்கட்டும். பின் உச்சியிலிருந்து அதே விதமாக மறுபடியும் கால் கட்டை விரலுக்குப் பயணப்படுங்கள்.

இவை எதுவும் நான் கண்டுபிடித்த விஷயமல்ல. இங்கு இருப்பவர்களின் கண்டுபிடிப்பும் அல்ல பல ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன் ரிஷிகளும். முனிவர்களும் கண்டுபிடித்த அற்புதமான ஹடயோகத்தின் ஆரம்பக் கட்ட விஷயங்கள் இவை.

இது உங்களுக்குத் தெரிந்திருக்கும். இதைப் பற்றி உங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கும். ஆனால், செய்யத் தான் மனம் இருந்திருக்காது நேரமில்லை என்ற ஒரு பொய்யை நிரந்தரமாக வாழ்க்கையில் எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நல்ல விஷயங்களை நீங்கள் ஆரம்பிப்பதே இல்லை. ஏனெனில், உங்களுக்கு ஜெயிப்பதில் ஆர்வமில்லை.

ஜெயித்தவர்கள் எல்லோரும் இதை செய்துகொண்டு இருக்கிறார்களா?

ஆமென்றுதான் நான் நினைக்கிறேன். ஆனால், அவர்கள் இந்த விஷயங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில்லை. எந்தவிதமான உடற்பயிற்சிகள் செய்கிறோம்? எப்படி உடம்பைப் பேணிக்காக்கிறோம்? எப்படிச் சுறுசுறுப்பைக் கொண்டுவருகிறோம்?' என்று பலபேர் தங்களுடைய ரகசியங்களை உங்களுக்குச் சொல்வதில்லை. தன் நண்பர்களுக்குக்கூட அவர்கள் இவற்றைத் தெரியப்படுத்துவதில்லை.

சரி...வேலை பிடிக்கவில்லை என்று சொல்கிற போதுதான் சோம்பல் வர வாய்ப்பிருக்கிறது. வேலையைப் பிடித்துச் செய்பவர்களைப் பற்றியும் பிடிக்காது செய்பவர்களைப் பற்றியும் தொடர்ந்து பேசுவேன்.

# 16

அந்த இளைஞனுடைய வேலை தச்சுவேலை. மரத்தில் புடைப்பு பொம்மைகள் செய்வதுதான் அவனுடைய தொழில். முழுங்கை நீள பலகையை எடுத்துக்கொண்டு, அதில் படம் வரைந்து கொண்டு, அந்தப் படத்தைச் சுற்றியுள்ள மரத்தை மெள்ள மெள்ள நீக்கி, படத்தைத் தனிமைப்படுத்தி அதற்குப் பிறகு மெல்லிய கருவிகளைக் கொண்டு சுத்தியின் உதவியில்லாமல் கையாலேயே குடைந்து, குடைந்து ஆறு மடிப்பில் புடவை உடுத்திய லட்சுமி. தரை முழுவதும் முந்தானை பரவிக்கிடக்கிற அளவுக்கு உட்கார்ந்திருக்கிற சரஸ்வதி, பஞ்சகச்சம் கட்டிய விநாயகர் என்று மிக அழகாக அவன் கைகள் பொம்மைகளை உருவாக்கியது.

அவன் படித்தது பத்தாம் வகுப்பு, ஊர் தஞ்சை மாவட்டத்தில் காவிரிக்கரை ஓரமுள்ள ஒரு கிராமம். அவன் தகப்பனாருக்கு தொழில் விவசாயம். அவன்பெரிய தந்தை, சிறிய தந்தை, அத்தையின் கணவர். தங்கையின் புருஷன் எல்லாருக்குமே விவசாயம்தான் வேலை. எல்லோருக்குமே காவிரிப்பகுதியில் நிலங்கள் இருந்தன. அவர்கள் நல்லதுக்குக் கூடினாலும் கெட்டதுக்குக் கூடினாலும் விவசாயம் பற்றிதான் பேசுவார்கள்.

அங்கிருந்துதான் இந்த இளைஞன் மர பொம்மைத் தொழிலுக்கு வந்திருந்தான். 'எப்படி இந்தத் தொழிலில் நாட்டம் வந்தது?' நான் கேட்டேன்.

வயலில் உட்கார்ந்து கொள்வதற்கு வசதியாக அவனுடைய அப்பா ஒரு அடிக்கு முக்காலடியில் ஒரு பலகை வைத்திருந்தாராம் ஒருநாள் அவன் யதேச்சையாக அதைப் புரட்டியபோது, மரத்தின் ஒரு பக்கம் சமானமாகவும், மறுபக்கம் வளைந்தும் நெளிந்தும இருந்தது. என்னவென்று உற்றுப்பார்த்தபோது யாரோ மரத்தில் ஒரு புடைப்புச் சிற்பம் செய்ய முயற்சி செய்து பாதியில் விட்டிருக்கிறார்கள். நீரில் கழுவிப் பார்த்தபோது பென்சில் கோடுகள் கூடத் தெளிவாகத் தெரிந்தன. சங்கு சக்கரத்தோடும் இடது கையில் கதையோடும் வலது கையில் அபய முத்திரையோடும் பின்னால் சூரிய ஒளியோடும் கழுத்தில் ஆரத்தோடும் மகாவிஷ்ணுவின் படம் வரையப்பட்டு, சற்று செதுக்கப்பட்டிருந்தது. அவன் உற்றுப் பார்ப்பதைப் பார்த்து அதைப் பிடுங்கி வைத்துக் கொண்டாராம் அப்பா.

அவன் வயலை விட்டு வெளியே வந்து, அதைவிடஒரு பெரிய மரப்பலகையை ஒரு வீட்டிலிருந்து கண்டெடுத்து வந்து அப்பாவிடம் கொடுத்து. ''அப்பா, இது உட்கார்றதுக்கு வாட்டமா இருக்குமா...பாரு'' என்றான். அப்பா புரட்டிப் பார்த்தார். கால்களைக் குத்துக்காலிட்டு உட்காராமல் சம்மணம்கட்டி உட்காரும் அளவுக்கு பலகை பெரிதாக இருந்தது.

''சரி. நான் இதை வெச்சிக்கிறேன். இந்த சின்னப் பலகையை வர்றவங்க யாராவது உபயோகப்படுத்தட்டும்''—அப்பா சொன்னார்.

''நல்லா இருக்கே கதை. அதை உன்கிட்டேயிருந்து வாங்கறதுக்குதான் இந்தப் பலகை கொண்ணாந்தேன்.

சாமி படம் போட்ட பலகையைத் தரமாட்டேன்'' என்று சொல்லி அந்தப்பலகையை எடுத்துக்கொண்டு போனான்.

மறுபடிமறுபடி உற்றுப்பார்த்தான். அவனுக்கு அதை செதுக்குகிற ஆசை வந்தது. ஆனால் கருவிகள் ஏதும் இல்லை. வெறும் பேனாக்கத்தி, உடைந்த உளி, இரும்புக் கரண்டி, ஆணி என்று கைக்கு கிடைத்த விஷயங்களை வைத்து கோடு போடப்பட்டிருந்த இடத்தை சுற்றியுள்ள மரத்தை நீக்கிவிட்டு அதை ஒரு முடியாத புடைப்புச் சிற்பமாகப் பார்த்தான். மெள்ள, மெள்ள நாசுக வேலைகள் செய்து முடித்தான.

வீட்டில் எல்லோருக்கும் காட்டினான். 'நீயா செய்தே? என்று நம்ப மறுத்தார்கள். அப்பா சொன்னார். ''அவன்தான்டி பண்ணியிருக்கணும். நான் பார்க்கும் போது வெறும் மேடும் பள்ளமுமா இருந்துச்சு என்னவோ பண்ணி பொம்மையாக்கிட்டான். நல்லாயிருக்குடா...எங்க கத்துக்கிட்டே?'' அப்பா கேட்டார்.

''எங்கும் கற்றுக் கொள்ளவில்லை'' என்று சொன்னால், அவர்கள் நம்ப மறுத்தார்கள்.

''எவனாவது சிநேகிதக்காரன் செஞ்சிருப்பான். அதைப் பார்த்து இவனும் செய்யறான். கேட்டா, பொறக்கும் போதே தானா வந்திருச்சினு பீலாவிடுறான்' வீடு காலி செய்தது. வாய்விட்டுச் சிரித்தது

அவன் இதற்காக ஆசானைத் தேட ஆரம்பித்தான், குடந்தையில் தேர் செய்கிற கும்பலுக்குள் தன் ஆசிரியரைக் கண்டுபிடித்தான். கற்றுக்கொள்ள விரும்புவதாகச் சொன்னான். தன் பரம்பரைத் தொழில் பற்றி விளக்கினான்.

''இதில ஒண்ணும் அவ்வளவு லாபம் கிடைக்காது தம்பி. இதை வாங்கி விக்கிறவனுக்குத்தான் பெரிசா

துட்டு கிடைக்குமே தவிர, செய்யறவனுக்கு ஒண்ணும் நிறையக் கிடைக்காது. சாதாரணமாத்தான் போகும். நாள் முழுக்க உட்கார்ந்தா ரெண்டு பொம்மை பண்ண லாம். அதுக்குக் கூலியா நூறு ரூபா கிடைச்சா அதுவே பெரிய விஷயம் இதுலயா மாட்டணும்னு நெனைக் கிறே...நானே விட்டுடலாம்னு யோசனை பண்ணிக்கிட்டு இருக்கேன். உனக்கு ஏம்பா தலையெழுத்து? நிலம் இருக் குல்லே பூமித்தாய் பொய் சொல்ல மாட்டா, வஞ்சனை பண்ணமாட்டா. ஏமாத்தமாட்டா. அங்கேபோய் கடு மையா உழைச்சின்னா நல்லா முன்னுக்கு வந்திட லாம்பா.''

''எனக்குப் பிடிக்கலைங்க.''

''எது?''

''விவசாயம்.''

''அடப்பாவி நூறு தலைமுறையா விவசாயியா இருந்திட்டு பட்டுன்னு 'எனக்கு பிடிக்கலை'னு சொல் றியே...தப்புப்பா.''

''நான் விவசாயத்தை மட்டமாச் சொல்லலீங்க. எனக்கு வேணாம்னு சொல்றேன்.''

''சரி. பட்டணத்துக்கு போ. ஆபீஸ்ல வேலை பாரு. சினிமாவுல சேரு, அதெல்லாம் விட்டுட்டு துண்டு மரத் தில பொம்மை பண்றேன்னு வந்து உக்காந்துக்கினு இருக் கிறியே. நான்தான் சொல்றேனே...இதுக்கு ஒண்ணும் பெரிய மரியாதை இல்லை...''

''பரவாயில்லைங்க. எனக்கு இதைக் கத்துக்கணும். எந்த மரப்பலகையைப் பாகத்தாலும் இதில என்ன பொம்மை பண்ணலாம்னுதான் யோசனை போகுது. மரப்பலகை கிடைக்காட்டி, ஏகாவது பெரிய மரத்தைப் பார்த்தா அப்படியே நின்னுடறேன். மனசுக்குள்ளேயே

அந்த மரத்தை அறுத்து பலகை எடுத்து, அந்தப் பலகையில பொம்மை பண்ண ஆரம்பிச்சிடறேன். எங்க வீட்டு வாசல்ல இருந்த இரண்டு மரத்தை மனசுக்குள்ள வெட்டிட்டேன்''

அவர் அவனைக் கூர்ந்து கவனித்தார்.

''சரி...இதுதான் உன் விதின்னா...என்ன பண்ண முடியும்? அமாவாசைம்போது வா.''

அவன் வந்தான். அவர் பாதம் பணிந்தான். மர வேலையைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தான். இந்த முடிவை அவன் எடுக்கும்போது அவனுக்கு வயது பதினெட்டு. அதற்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது.

''முட்டாள், விவசாயம் பண்ணமாட்டேன்னு சொல்லாதே. அப்படிச் சொன்னா என்னாகும் தெரியுமா? அவனுக்குத்தான் பயிர் பண்றதுலே விருப்பமில்லையே. நிலத்தை நான் எடுத்துக்கறேன்னு உனக்குமேல இருக்கறவனும், கீழே இருக்கிறவனும் போட்டி போடுவான்.''

''எடுத்துக்கட்டுமே.''

''கடவுளே, இப்படி மக்கா ஒரு புள்ளை பொறந்திருக்கே. நிலம்ன்றது பொக்கிஷம்டா. சொக்கத் தங்கம் எடுத்துக்கட்டுமேனு சர்வசாதாரணமா சொல்றியே''

''என் கையில தொழில் இருக்கும்மா.''

''போடா பொல்லாத தொழில்''—அம்மா கத்தினாள்

''தலைமுடி முழுக்க மரத்தூளா இருக்கு. சட்டை முழுக்க பச்சைமர வாசனை.''—வீடு அவனை எதிர்த்தது உறவினர்களிடம் புகார் சொல்லியது. உறவுகள் கேலி

செய்தன. எங்கேயாவது அவன் கல்யாணம், கார்த்திக்கு போகிறபோது நினைவில் வைத்துக்கொண்டு அவனை மட்டும் தட்டிப் பேசியது.

''இது யாருனு சொல்லட்டுமா அவங்கம்மா அவனை வயத்தில சுமந்திட்டிருந்தபோது பக்கத்து வீட்டுல மர வேலை நடந்துகிட்டிருந்திச்சி. இராப்பகலா லொட்டு, லொட்டுனு சத்தம். அந்தச் சத்தத்தைக் கேட்டுக்கினே இவங்கம்மா இவனைப் பெத்திருக்கா. அதான் இவனுக்கு தச்சு வேலை முக்கியமா போச்சு.''

காரணங்கள் கண்டுபிடித்து, கண்டுபிடித்து அவனை கேலி செய்தார்கள், நிலம் வேண்டாம் என்று மறுத்த போது கோபப்பட்டார்கள்.

''மெட்ராஸ்ல கவர்ன்மெண்ட் வேலை ஒண்ணு வந்திருக்கு. தசாவதார பீஸே ஆறு பண்ணனும். ரெண்டு பேரா உட்கார்ந்தோம்னா 'சரசர'னு முடிச்சிடலாம்.'' ஆசிரியர் கேட்டார்.

அவன் வீட்டில் அனுமதி கேட்டான்.

''அந்த ஆச்சாரிய கையை காலை உடைச்சிடுவேன்னு சொல்லு. என்னா...கத்துக்குடுக்கிறேன். கத்துக்குடுக்கிறேன்னு பையனை கெடுத்துக் குட்டிச்சுவராக்கிறான். உனக்குத்தான் அறிவில்ல...அவன் வெயசாளிதானே... 'அவன் உன்னை சொல்லித் திருப்புவானா... 'போடா, போய் உழுது பயிர் பண்ணு' அப்படினு அனுப்புவானா இரு. எங்கே பார்த்தாலும் அவனை நாக்கைப் புடுங்கிக்கிற மாதிரி கேள்வி கேட்கறேன்.''

அந்த ஆச்சாரியைத் தேடிப்போய் அவன் வீடு அவமானப்படுத்தியது. அவன் துடித்தான். குடந்தையில் அவர் வீடு நோக்கி ஓடினான். அதற்குள் அவர்கள் அவமானப்படுத்திவிட்டுப் போயிருந்தார்கள். அவன் வாசல்

படியை பிடித்துக் கொண்டு விக்கி விக்கி அழுதான். 'என்னால் தானே...என்னால் தானே...' என்று விசும்பினான். அவருக்கும் அந்த அவமானத்தால் உறுதி படர்ந்தது. 'நீ வாடா...அவனுங்க கெடக்குறானுங்க, நான் பார்த்துக்குறேன்' என்றார். அவனையும் அழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்தார்

அவர் மிகப்பெரிய தொழிலதிபர். உணவும் உறைவிடமும் கவலையே இல்லை. அதைத் தவிர தினமும் உலாவுவதற்கு அந்த வீட்டில் மிகப்பெரிய தோட்டம் இருந்தது. பெரிய நர்ஸரி இருந்தது. அந்தச் சாலையின் இறுதியில் மான்கள் பூங்கா இருந்தது, பாம்புப் பண்ணை இருந்தது. அதைத் தாண்டினால் அடர்த்தியான வனம் இருந்தது, கிராமத்தில் இல்லாத புதிய வகை மரங்களெல்லாம் கிண்டி கவர்னர் மாளிகை தோட்டத்தில்தான் அவன் அடையாளம் தெரிந்து கொண்டான். ஆசிரியர் வேலை செய்வதை அவன் மிக உன்னிப்பாகக் கவனித்தான். அது அவனுக்குக் கிட்டத்தட்ட குருகுலம் போல இருந்தது.

தினமும் பிற்பகல் அவர் நிச்சயம் படுத்துத் தூங்குவார். அப்படித் தூங்குகிற போது கால் மிதிக்க வேண்டும். முழங்காலிலிருந்து உள்ளங்கால்வரை அவருக்குக் குடைச்சல் இருக்கும் மிக பக்குவமாய் மிதித்தால் அயர்ந்து தூங்குவார், பிற்பகல் நன்கு தூங்கினால், நான்கு மணிக்கு எழுந்து உற்சாகமாகிவிடுவார். அதிலிருந்து ஏழு மணிவரை, நன்றாக இருட்டும் வரை வேகமாக வேலை செய்வார். பிறகு மரங்கள் பற்றி விவரிப்பார், அங்க லட்சணங்கள் பற்றி சொல்லிக் கொடுப்பார். 'யார் யாருக்கு என்ன விதமான உருவங்கள் என்று விளக்குவார். அப்படி உருவங்கள் இருக்கிற புத்தகத்தை அவ

னுக்குப் படிக்கக் கொடுத்தார். 'காளியிலேயே பதினாறு வகை காளி இருக்கு' அவனுக்கு வித்தியாசம் காட்டினார்.

வேலையோட வாழ்வதற்கு, வேலை செய்யும் ஆச்சாரியனோடே வசிப்பதற்கு எல்லோருக்கும் வாய்ப்புக்கிடைத்து விடாது. அவன் அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டான். மரம் தவிர, பொம்மை தவிர வேறு எது பற்றியும் அவன் சிந்திப்பதே இல்லை.

# 17

இது வேறு கதை. இவன் அப்பாவுக்கு சென்னைப் பட்டணத்தில் மிகப் பெரிய கோயிலில் அர்ச்சகர் உத்தியோகம். அரசாங்க சம்பளம். ஆறாவது தலைமுறை என்பதால், கோயிலைப்பற்றிய பல விஷயங்கள் அவருக்கு நன்கு தெரிந்தது.

''நான் சின்னவனா இருக்கும்போது அவ்வளவு காசில்ல. இப்ப கோயில்ல நல்ல காசு. ஜனங்கள்கிட்ட பேசற விதத்தில பேசினா, நடக்குற விதத்தில நடந்தா ஒவ்வொரு குருக்களும் லட்சாதிபதி ஆகலாம். வெறும் தட்டுக்காசு மட்டும் போறாதுதான், ஆனா, அதைத் தாண்டி சம்பாதிக்க கோயில்ல ஆயிரம் வழியிருக்கு.

அதில முதல்படி, கோயிலுக்கு வர்ற ஆயிரமாயிரம் ஜனங்களை வியக்க வைக்கணும். 'அட, நல்லவனா இருக்கானே' அப்படினு உன்னை பார்க்க வைக்கணும் நீ சொல்ற மந்திரம், விக்கிரகத்துக்குப் பண்ற அலங்காரம். வரவாளை உபசரணை பண்ணி பிரசாதம் குடுக்கற தன்மை, வழியிலே பார்த்தா கைகூப்புற பவ்யம். இது மாதிரி ஒரு பன்னிரண்டு விஷயம் இருக்கு.

அப்புறம் நமக்கு கோயிலோட சரினு நினைச்சிக்காத. பதினோரு மணிக்கு கோயில் மூடிடுவான். எங்கயாவது போய் ஹோமத்துல உட்கார்ந்திடு. கூட்டத்தோட கூட்டமா ருத்ரம் சொல்லு. ஹோமம் முடிஞ்ச பிறகு அந்தப் பிரசாதத்தை வாங்கிண்டு, 'இது நம்ம கோயில் பிரசாதம்'னு எல்லாருக்கும் கொடு. நூறு ரூபா நிச்சயம் கிடைக்கும்.

கிராப் வெச்சிண்டா ஒண்ணும் தப்பில்லே. குடுமி வெச்சுக்கிட்டேனு வெச்சிக்கோ, பிரமாதமா இருக்கும். உன் முகத்துக்கு குடுமி ரொம்ப அழகா இருக்கும் குடுமி வெச்சி, கடுக்கன் போட்டு, கழுத்துல ஸ்படிக மாலை தொங்கவிட்டு, இடுப்பு வேட்டி மேல துண்டு இறுகக்கட்டி

'ஓம் லம்போதராய நமஹ
ஓம் விக்ன விநாயகாய நமஹ
ஓம் கணேசாய நமஹ'

அப்படினு மந்திரம் சொல்ல ஆரம்பிச்சின்னா, கூட்டம் அமைதியா நின்னுடும். கூடப் பத்து நிமிஷம் ஆனாலும், கலையாத உன்னையே பார்த்துண்டிருக்கும். இந்த கோயில்ல அர்ச்சகரா இருக்கறதுக்கு உனக்கு ரைட் உண்டு. இதை விட்டுறாதே.

நீ வேற எங்கயும் போய் சம்பாதிக்கறதைவிட, இங்க நல்லா சம்பாதிக்கலாம். இந்த நேரத்துல கூடவே சம்பாதிக்கலாம். ஒரு நாளைக்கு பத்து பன்னண்டு ரூபா வருதுய்யா. சுலபமா பாக்கெட்லேர்ந்து பத்து ரூபா காசை எடுத்து பட்டுனு தட்டுல போடறா. யார் பத்து ரூபா போடறானு பார்த்து வெச்சிண்டு, ஒரு சிரிப்போட அவாளை 'வாங்கோ'னு சொன்னாப் போதும் சந்தோஷமாயிடுவா. கோயில் ரொம்ப சென்ஸிடிவ்வான இடம். நாமளும் சென்ஸிடிவ்வா நடந்துண்டா. சின்சியரா நடந்துண்டா கொடி கட்டிப் பறந்துடலாம்.''

ஆனால், அவனுக்குப் பிடிக்கவில்லை. கருவறையில் சந்தனக்காப்பு செய்கிறபோது மூச்சுத் திணறியது. சரிகையை ஒட்டியபோது கண்கள் இருண்டன. திரும்பத் திரும்ப குறுக்கும், நெடுக்கும் நடந்து ஒரு நாளைக்கு இருபது இருபத்து மூன்று அஷ்டோத்திரங்கள் செய்கிற போது அலுப்பு ஏற்பட்டது. கொட்டாவி வந்தது. நின்று கொண்டே தூங்கலாமா என்று முயற்சி செய்ய வேண்டிய தாயிற்று. 'மூலவருக்கு அபிஷேகம் நடக்கிறது அங்க போங்கோ, அங்க போங்கோ...' தன் எதிரே உள்ள கும்பலை விரட்டுவதற்கு புத்தி போயிற்று. வெறும் மார்பும் பித்தளைத் தட்டும் நெற்றியில் விபூதியும், உடம் பெல்லாம் நல்லெண்ணை வாசனையுமாக ஒரு வாழ்க்கை நடத்த அவனுக்குப் பிடிக்கவில்லை.

அதற்கு வேறொரு காரணமும் இருந்தது. எதிர் வீட்டில் அவனோடு படித்த சுமலதாவை, வலது பக்க வீட்டிலுள்ள ராமஷ் காதலித்தான். ஆனால், சுமலதா இடது பக்க வீட்டிலுள்ள சுரேஷை மனதார விரும்பி னாள். ஏனெனில், ரமேஷைவிட சுரேஷ் அதிகம் சம்பா திக்கிறான். மோட்டார் சைக்கிளில் போகிறான். அற்புத மாக ஆங்கிலம் பேசுகிறான். சுரேஷ் வேலை செய்யும் கம்பெனி உலகெல்லாம் பரவியிருந்தது. அவனுக்கு தேசம் விட்டு தேசம் போகக்கூட வாய்ப்பிருக்கிறது. மேற் கொண்டு ஒரு படிப்பு படித்தால் வெளி தேசத்திலேயே நிரந்தரமாகத் தங்கவும் முடியும்.

'ரமேஷ் எம்.ஏ. படித்தவன் சுரேஷ் எம்,பி.ஏ. படித் தவன் எம்.ஏ.யை விட எம்.பி.ஏ.வுக்குத்தான் மதிப்பு. எம்.பி.ஏ. படித்தவர்களுக்குத்தான் காலம்.'

அவன் வீட்டுக்கு அருகே நண்பர்கள் கூடிப் பேசுகிற போது தான் வெறும் பிளஸ் டூ என்பது உறுத்தியது. எல்லோரும் ஆங்கிலத்தில் பேசுகிறபோது அந்த முயற்சி

யைக்கூடச் செய்ய முடியாத தன்னைப்பற்றி யோசிப்பதே பாவமாக இருந்தது.

'இனிய சுரேஷ்...ரமேஷை நான் வெறுக்கிறேன். ஏனெனில் உன்னை நான் நேசிப்பது தெரிந்து ரமேஷ் என்னைத் தொந்தரவு செய்கிறான் என்னைக் கேலி செய்கிறான் உன்னைக் காதலிப்பதைப் பற்றி என் வீட்டில் சொல்லப்போவதாக மிரட்டுகிறான். 'பிளாக் மெயில் செய்கிறான். இனிமேல் நீ எனக்கு நேரடியாகக் கடிதங்கள் கொடுக்காதே கோயில் அர்ச்சகராக வேலை செய்யும் கனகசபாபதி மூலம் கடிதங்கள் கொடு, கனக சபாபதி நல்லவர். ஒரு வம்புக்கும் போகாதவர்' என்று சுமலதா கடிதம் எழுதியிருந்தாள்.

கனகசபாதி என்ற அவனுக்கு, அது பெரிய அவமானமாகப் போயிற்று. 'என்ன இது...ஒண்ணும் தெரியாதவன்னு எழுதியிருக்காளே இவ...' என்று ஆத்திரம் வந்தது. அவன் வேறு வேலைக்குப் போகத் திட்டமிட்டான். "உங்க ஆபீஸ்லே ஏதாவது வேலை கிடைக்குமாடா?" நண்பனைக் கேட்டான்.

"பிளஸ் டு படிச்சவனுக்கு என்ன வேலை கிடைக்கும்...? நீ கரஸ்பாண்டண்ட கோர்ஸ்ல பி. ஏ. முடி. அப்ப ஏதாவது ட்ரை பண்ணலாம்."

அவன் அஞ்சல் வழிக் கல்வியில் காசு கட்டி, தமிழில் சரித்திரம் படிக்கப் பாடங்கள் வரவழைத்தான்.

"போடா, லூஸ், இதைப் போய் காசு கட்டி படிப்பாங்களா? இங்கிலீஷ் கத்துக்கணும்டா. சுமலதாவை சுரேஷ் மயக்கினதே இங்கிலீஷை வெச்சிதான். இங்கிலீஷ் தெரியலைன்னா ஒரு ஆபீஸ்ல வேலை செய்யவே முடியாது. மதிக்கவே மாட்டான் எங்க ஆபீஸ்லெல்லாம் நான் மறந்து போய்கூடத் தமிழ்ல பேசவே மாட்டேன்."

அவன் கோயிலுக்குப் போகும் போது வேட்டி யோடும் வெளியே போகும்போது ஜீன்ஸ் பாண்ட் டீ-ஷர்ட்டோடும் உலாவ ஆரம்பித்தான். அவன் பாண்ட் போடுவதை அவன் நண்பர்களே எதிர்த் தார்கள்.

"உனக்கு பாண்ட், அழகா இல்லைடா. என்னவோ மாதிரி இருக்கு.உன்னை வேட்டியில பார்த்துட்டு டக்குனு பாண்ட்ல பார்த்தா அடையாளமே தெரியலை. வெளிய வந்தாலும் வேட்டியிலேயே வாயேன் "

அவன் ஒரு முறை வேட்டியில் வந்தான். தெருவி லுள்ள எல்லோரும் கிஷ்கிந்தா போவதாக இருந்தது. அவனும் அவர்களோடு சேர்ந்து கொண்டான். கிஷ் கிந்தாவுக்கு வேட்டியில் வந்ததால் கூடவந்த எந்த பெண் களும் அவனோடு பேசவே இல்லை, வலியப் போய் பேசினாலும் முகம் திருப்பிக் கொண்டார்கள். அவனைப் பற்றி மெள்ளக் கேலி பேசிச் சிரித்தார்கள். வேகமாக அவனை விலக்கினார்கள். விலகினார்கள்.

'இவனை ஏன்ப்பா இந்த இடத்துக்குக் கூட்டிக்கிட்டு வந்தே?' இவன் நம்ம குரூப்பே இல்லப்பா, 'கொண கொண கொண'னு மூக்காலயே பேசறான் இனிமே இவனை கழிச்சிக் கட்டிடு' என்று நண்பர்களில் ஒருவன் பேசியதாகச் செய்தி வந்தது. அந்தச் செய்தி அவனுக்குக் கோபத்தைத் தந்தது.

'எப்படியாவது தபால் மூலம் ஆங்கிலக் கல்வி பயின்று அலுவலகத்தில் வேலை செய்து, நானும் பாண்ட் சட்டையுமாக வலம் வருவேன்' என்று மனதுக்குள் சபதம் செய்தான். ஏழாவது தலைமுறையாக செய்யப் பட வேண்டிய குருக்கள் வேலையை அறவே வெறுத் தான்.

"யாரு தட்டு தூக்கிக் கற்பூர ஆரத்தி காட்டறது... மணி அடிக்கிறது...சிக்கு புடிச்ச பொம்மையை எண்ணை ஊத்தி அலம்பறது...? எனக்குப் புடிக்கலை. விரல் நகமெல்லாம் அழுக்காவுது." என்று அப்பாவிடம் சீறினான். இவன் வீடு கவலைப்பட்டது.

விவசாயத்தை விட்டுவிட்டு பொம்மை செய்யப் போன பையனைப் பற்றி அவன் வீடு கவலைப்பட்டது. ஏழாம் தலைமுறையாக குருக்களாக வரவேண்டிய கை நிறைய சம்பாதிக்கிற வாய்ப்பிருந்தும் கோயிலுக்கு வராமல், பாண்ட்டும் டீ ஷர்ட்டுமாய் குமாஸ்தா வேலைக்கு அலைந்து கொண்டிருக்கிறவனைப் பார்த்து அவன் வீடு கோபமடைந்தது.

எந்த வேலை சரி? எது உத்தமம்? எது மரியாதை? எதில் காசு அதிகம்? எதில் வாழ்க்கையில் வெற்றி காணலாம்?

பிடித்த வேலை செய்கிற போதுதான் வெற்றி பெற லாம். பிடிக்காத வேலை செய்கிற போது அவமானம் தான் படமுடியும்.

"ஐயா இங்க வாங்க"—மரவேலை செய்கிற அந்தச் சிற்பியை வேறொரு பணக்காரர் அழைத்தார்.

"ஐயா வீட்டுல நிலைப்படி வேலை செய்யறீங்க கவனிச்சேன். ரொம்ப ரொம்ப நல்லாருக்கு. வீட்ல செய்ததைவிட. அந்த ஆபீஸ்ல ஒண்ணே முக்காலடி உயரத்துக்கு பத்து அவதாரமும் பெரும் பலகையில் அடிச்சீங்க பாருங்க. பார்த்துக்கிட்டே இருக்கலாம் போல இருந்தது வெறும் அவதாரம் மட்டும் பண்ணாத பின்னால அப்படியே அவதாரத்துக்குச் சம்பந்தமான விஷயங்களையும் போட்டிருக்கீங்களே... அடடா... ரொம்ப ரசிச்சேன். இப்ப நான் எதுக்குக் கூப்பிட்டன்னா இதே போல ஒரு வேலை எனக்கு செய்து தரணும்,

என்ன செலவானாலும் சரி நீங்க உதவி பண்ண முடியுமா'' பணிவாகக் கேட்டார்

''முடியும்ங்க. என்கிட்ட வேலை தெரிஞ்ச பையன் இருக்கான். நான் பலகை வாங்கி அளவு பார்த்து படம் போட்டுக் குடுத்துட்டா மெள்ள மெள்ள வேலை செஞ்சிடுவான். நான் அப்பப்ப வந்து பார்த்து திருத்தம் செஞ்சி பாலீஷ் போட்டுக் குடுத்துடறேன். நீங்க இவ்வளவு தூரம் கேக்கிறபோது முடியாதுனு சொல்ல முடியுங்களா...என்ன ஒண்ணு இப்ப நான் வேலை செய்யற இடத்தில இந்த விஷயம் தெரியாம வெச்சிக்கணும்.''

''அடடே...சொல்லவே மாட்டேன். எவ்வளவு அட்வான்ஸ் வேணும்?''

சிற்பி பெருந்தொகை சொன்னார். உடனே கொடுக்கப்பட்டது. அவனைக் கூப்பிட்டார். வந்த முன்பணத்தில் பாதியை அவனிடம் கொடுத்தார். கடைக்குப்போய் மரப்பலகை வாங்கிவந்து அதில் படம் வரைந்து விளக்கினார். அவன் ஆவலாகக் கவனித்தான். வேறு ஒரு வீட்டில் கார் ஷெட்டில் தங்கி இரவு பகலாக வேலை செய்யத் தொடங்கினான்.

''எனக்கு வேலை கிடைச்சிடுத்துப்பா'' குருக்கள் பையன் துள்ளி குதித்துக் கொண்டு ஓடி வந்தான்.

''எங்கடா...எங்க கிடைச்சது வேலை...?'' அப்பா பதறினார்.

ஆயிரத்து முந்நூறு ரூபாய்க்கு குமாஸ்தாவாகச் சேர்ந்திருப்பதாய் ஒரு கம்பெனி பெயரைச் சொன்னான். பிரபலமான இடம்தான் அது. ஆனால் வேலை தற்காலிகமானது. இன்றில்லையெனில், ஏதேனும் ஒருநாள் வேலை

உறுதியாகும் என்று அவனுக்குச் சொல்லப்பட்டது. அதை அப்பாவிடம் சொன்னான்.

''என்னடா ஆயிரத்து முந்நூறு ரூபா நாம இதை ஒரு வாரத்தில சம்பாரிச்சுடலாம்.''

''பிடிக்கலைப்பா.''

''எது பிடிக்கலை?''

''தட்டு தூக்கறது பிடிக்கலை.''

''உன்னை வளர்த்த தொழில்டா அது, அதைக் கேவலமாப் பேசாத.''

''கோயில் விட்டு இறங்கினா குருக்களுக்கு மதிப்பில்லப்பா.''

''எவன்டா சொன்னான்.''

''என் அனுபவம்'' அவன் சுமலதாவை நினைத்துக் கொண்டான்.

தவறான ஆட்கள் தன்னை மதிக்க வேண்டும் என்று நினைக்கிறபோது முடிவுகளும் தவறாகத்தான் எடுக்கப் படும்.

''நீ தப்பு பண்றே கனகசபாபதி.''

''இல்லப்பா இதான் என் வழி. என்னால தட்டு தூக்கமுடியாது வெறுமனே விபூதி குடுத்துண்டு ஒத்தைக் கால்ல கூட்டத்தைப் பாத்துண்டு நிக்க முடியாது. கை, விரல் நகமெல்லாம் அழுக்காவுதுப்பா.''

''நான் பண்ண பாவம் எனக்குப் புள்ளையா பொறந்திருக்கு'' அப்பா ஊர் முழுவதும் சொல்லித் தீர்த்தார்.

அவன் கவலையே படவில்லை. அரைகுறையாக ஆங்கிலத்தை போலியாகப் பேசக் கற்றுக்கொண்டான். பாண்ட் மாட்டி பெல்ட் அணிந்து, சட்டையை உள்ளுக்குள் இறுக்கி செருகி தலையைச் சிலுப்பிக்கொண்டு காலில் புதிய கேன்வாஸ் ஷூ பளபளக்க அவனுக்கு அதிகம் விளங்காத ஹிண்டு பேப்பரை அக்குளில் செருகிக் கொண்டு ஆபீஸுக்குப் போனான்.

அவன் அப்பா கோயிலில் கற்பூரம் காட்டித் திரும்புகிறபோது ஒரு நிமிடம் தள்ளாடினார். கால் புரண்டு 'நங்'கென்று கல்தூணில் முட்டிக் கொண்டார். அள்ளிக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

மூன்று நாள்கழித்து தலையில் அடிபட்ட காரணமோ என்னவோ வலதுபக்கம் செயலிழந்து போயிற்று. அப்பா அவன் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினார்.

"என்ன ஆனாலும் கோயில் வேலையை விட்டுறாத இதை உன் பிள்ளைக்குக் கொடுக்கணும்டா தயவு செய்து இந்தக் கோயில் வேலையை எடுத்துக்கோ ஆயிரத்து முந்நூறு ரூபா ஒரு காசே இல்லை பாண்ட் போட்டுக் கறதுக்காக ஒரு வேலைக்குப் போகாதடா கோயில் வேலை முடிஞ்சபிறகு பாண்ட் போட்டுக்கோ" என்று கெஞ்சினார்.

வேறு வழியில்லாமல் அவன் வேலையை ராஜினாமா செய்தான். பழுப்பு வேட்டியும் சிகப்புத் துண்டும் பித்தளைத் தட்டும் பூணூலும் ஸ்படிக மணிமாலையுமாய் பிள்ளையாரிடம் போய் நின்றான். பிள்ளையாரைப் பார்த்து பல் கடித்தான். கோபப்பட்டான்.

'நீயெல்லாம் ஒரு சாமியா' என்று ஏசினான். தட்டிலிருக்கிற சந்தனத்தை உருட்டி 'சொட்'டென்று பிள்ளையார் முகத்தில் அடித்தான். 'எனக்கு பிடிக்கலே...

பிடிக்கலே...இந்த வேலை கொஞ்சம்கூடப் பிடிக்கலே' என்று அழுதான்.

''நான் வேலைய விட்ட மூணாம்நாள் எல்லாருக்கும் 'சாலரி இன்கிரீஸ் பண்ணியிருக்கா என்னை இங்க கொண்டாந்து உட்கார வெச்சிட்டியே'' என்று கடவுளிடம் புலம்பினான். பிடிக்காமல் அந்த வேலையைத் தொடர்ந்தான்.

# 18

ஒரே வருடத்தில், தச்சு வேலையில் புடைப்பு பொம்மைகள் செய்கிற அந்த இளைஞன் சிலை செய்வதற்கு வழிமாறினான். முழுத் தேரை எப்படி செய்வது என்று அவனுடைய ஆசிரியர் சொல்லிக் கொடுத்திருந்தார். செய்ததை அறுத்து கை, கால்களை இணைப்பது பற்றி கற்றுக் கொண்டான். மரத்தில் அடித்து, அடித்து பொம்மை செய்தவனுக்கு, மெழுகில் பொம்மை செய்வதற்கு எளிதாக வந்தது. மெழுகில் பொம்மை செய்தவன் மூன்று வருடத்துக்குள் உலோகம் காய்ச்சி ஊற்றக் கற்றுக் கொண்டான்.

முழங்கை உயர நடராஜர், ஒன்றரை சாண் பார்வதி நான்கு விரற்கடை அளவில் ராமர், லட்சுமணன், சீதை, ஐந்து விரற்கடை அனந்தபத்மநாபன் என்று விதம்விதமாக மோல்டுகள் தயாரித்தான். பழைய வெண்கலச் சாமான்களை வாங்கி புதிய வெண்கலத்தோடு சேர்த்து, உருக்கி சிறியதாய் நிறைய பொம்மைகள் செய்ய, அவை எளிதாய் விற்பனையாயின.

இருபத்தேழு வயதில் அவனுடைய வருமானம் மாதத்துக்குப் பதினைந்தாயிரம் என்று ஏறிற்று. ஆனால், அவனைப் பார்க்கும்போது பதினைந்தாயிரம் ரூபாய் சம்பாதிக்கிறவனாய் காணப்படமாட்டான். வேட்டியும் சாதாரண அரைக்கை சட்டையும் தோல் செருப்பும் கையில் துணிப்பையுமாய் நடந்து வருகின்ற அவனை, படிப்பறிவில்லாத பாமரத் தொழிலாளியாய்த்தான் நினைத்துக் கொள்வார்கள். அவனோடு பேசிப்பழகி அவன் செய்கிற தொழில் தெரிந்ததும் பலபேர் மரியாதையோடு சிநேகிதமானார்கள்.

அவன் சென்னைக்குச் சென்று தானே சிலைகளை விற்க முயற்சி செய்தபோது, வாடிக்கையாளரான ஒரு நண்பர் அவருக்குத் தெரிந்த பலபேருக்கு டெலிபோன் செய்து அவனை அறிமுகப்படுத்தினார், படம் தாண்டி, பூஜையறையில் அலங்காரமாக வைப்பதற்கு நிறையப் பேருக்கு டேபிள்கள் தேவைப்பட்டன இவனும் அவரவர் விருப்பத்திற்கேற்ப செய்து கொடுத்தான்.

குடந்தையில் வேலை செய்வதை தொழிலாகவும் பட்டணத்துக்கு விற்கப்போவதை ஓய்வாகவும் மாற்றிக் கொண்டான். ஆனால், எந்த நேரமும் அவன் தன் தொழிலைப்பற்றிய எண்ணத்தோடேயே இருந்தான்.

எங்கு பொம்மைகளைப் பார்த்தாலும் நின்றான். இயேசுநாதரை வெகுநேரம் உற்றுப்பார்த்தான். புத்தர் பொம்மை செய்ய வேண்டுமென்று மியூசியம் முழுவதும் சுற்றினான். படம் வரைந்து கொண்டான். அவனுக்கு அதுதான் சம்பாத்தியம் அவனுக்கு அதுதான் பொழுது போக்கு. அவனுக்கு அதுதான் வேலை. அவனுக்கு அதுதான் ஓய்வு. அவனுக்கு சினிமா தெரியவில்லை. சினிமா எப்போதாவது பார்த்தாலும் ஞாபகம் இருப்பதில்லை.

ஒருமுறை, ஒரு சினிமா நடிகை வீட்டுக்கு பொம்மை கொடுக்கப் போய் விட்டு, ‘எங்கயோ பார்த்தாப்போல

இருக்கே' என்று யோசித்தான். வேலையாளை விசாரித்து 'அடடே. அவங்கதானா...? என்று சந்தோஷப்பட்டான்.

அவன் வீடு, அவன் உறவுகளான விவசாயிகள் அனைவரும் அவனை மிக மரியாதையாகப் பார்த்தார்கள். அவன் விவசாயக் குடும்பத்தில் சம்பந்தம் வைக்காமல், அவன் தொழில் கற்றுக் கொண்ட ஆசிரியரின் தூரத்து சொந்தக்காரப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். அவளின் அப்பாவும் வார்ப்படம் ஊற்றுகிற வேலைதான் செய்து வந்தார்.

திருமணம் முடிந்தபிறகு மாமனாரோடும் மாமியாரோடும். மனைவியோடும் முப்பது, நாற்பது கோயில்களுக்குப் போய் விதவிதமான நடராஜரைத் தரிசனம் செய்து விட்டு வந்தான். மாமனார் அவற்றைப்பற்றிவேகமாய்க் குறிப்புகள் கொடுத்தார். வித்தியாசங்களைச் சுட்டிக் காட்டினார்.

',அம்மன் விளக்கில் அஷ்டலக்ஷ்மி போட்டு குடுங்க நல்லா விக்கும்'' மனைவி ஆலோசனை சொன்னாள்.

''ஏன்...வள்ளி, தெய்வானையோட முருகர் போடக் கூடாதா...இன்னும் நல்லா விக்கும், அறுகோண முக்கோணம் போட்டு, நடுவுல வேல் போட்டு, ஓரமா மயில் போட்டு அம்மன் விளக்கு செய்துட்டாப் போதும். விளக்குக்கு விளக்குமாச்சு. இயந்திரத்துக்கு இயந்திரமும் ஆச்சு. நிறையப் பேர் பிரியப்பட்டு வாங்குவாங்க' மாமியார் சொன்னார்.

ஆயிரக்கணக்கில் அம்மன் விளக்கு ஊற்றினான். லட்சக்கணக்கில் பணம் சம்பாதித்தான்.

இன்றைக்கு குடந்தையில் மிகப்பெரிய வார்ப்படத் தொழிற்சாலை அவனுக்குச் சொந்தம்.

''சாதி இருக்குங்க, எழுத்தாளரைய்யா. சாதி இல்லைனு சொல்றது பொய். நான் சாதிங்கறது நாம செய்யற தொழிலை. நமக்கு ஒரு தொழில் கிடைச்சிதுனு வெச்சுக்கங்க. அந்தத் தொழிலுக்குரிய சாதியாவே நாம மாறிடணும். அந்த சூழ்நிலையிலேயே இருக்கணும். வீடும் நம்மளை நூத்துக்கு நூறு ஆதரிக்கணும். வீட்ல இருக்கிற வங்க ஒரு புத்தி, நாம ஒரு புத்தியா இருந்தா, தொழில்ல முன்னேறவே முடியாது.

மண்ணு பார்த்தா எனக்கு நெல்லு ஞாபகம் வராது. பொம்மை ஞாபகம்தான் வரும் அந்தமண்ணைப்பிசைய முடியுமானுதான் நான் பார்ப்பேன். இப்படி ஒரே புத்தியா இயங்கினாதான் ஜெயிக்க முடியும்.

நான் குமாஸ்தாவா போனேன்னு வெச்சுக்கங்க, அப்புறம் நான் இங்கிலீஷ் தவிர வேற பாஷை பேசமாட் டேன். ஹிண்டு பேப்பர் தவிர வேற பேப்பர் படிக்க மாட் டேன். இப்ப ஹிண்டு பேப்பரை நான் தொட்டுக் கூட பாக்கிறதில்லே, என் பேப்பர் தினமணி தான். என்கிட்ட மூணு பாண்ட், நாலு முழுக்கை சட்டை இருக்கு. மத்த படிக்கு பீரோ முழுக்க வேட்டியும் அண்டர்வேரும் அரைக்கை சட்டையும்தான். என் தொழிலுக்கு அதுதான் வசதி,

கும்பகோணத்திலிருந்து பதினைஞ்சு கிலோ மீட்டர் தள்ளி என் கிராமம் எனக்கு கிராமம்தான் வசதி. தோட்டமும் தொரவுமா வீடு இருக்கறதுதான் சந்தோஷம், என்னால பட்டணத்துக்குக் குடிபோக முடியுங்களா... நான் போடற புகையை பட்டணம் தாங் குமா... அதனால என்னுடைய உலை அடுப்புக்கும் மெழுகு உருக்கறதுக்கும் கும்பகோணத்திலிருந்து தள்ளி நாலு பக்கமும் தோட்டம் இருக்கிற வீட்டில் குடி இருக்கேன். வீட்ல ஏஸி ரூம் கிடையாது. எனக்குத் தேவையில்லை. கட்டில் வாங்கிக் குடுத்தாங்க மாமனார் வீட்டில். எனக்கு

அதில படுக்க புடிக்காது. பொண்டாட்டியோட சந்தோஷமா இருந்துட்டு திண்ணைக்கு வந்துருவேன், காத்தாட தூங்கறதுதான் என்னால முடியும். இல்லன்னா மூச்சு முட்டும். சும்மா திடீர்னு நெனைச்சிக்கிட்டு, ராத்திரியிலே எழுந்து மோல்டெல்லாம் எடுத்துப் பார்ப்பேன். தூக்கம் வரலையா, ஒரு பொம்மையை மடியில் போட்டுக்கிட்டு உப்புக் காகிதம் போட்டுத் தேய்ச்சுக்கிட்டிருப்பேன்.

ஒரு கோயில்ல சாமி சிலை கை தவறி கீழே விழுந்து உடைஞ்சுபோச்சு. என்னைத்தான் கூப்பிட்டாங்க, ஒட்ட வைக்கிறதுக்கு. அந்த பொம்மையை பாக்கற சாக்குல அந்தக் கோயில்ல இருந்த நூத்திச்சொச்சம் பொம்மையும் தடவித் தடவிப் பார்த்தேன். புரட்டிப் புரட்டி பார்த்தேன். ஐந்நூறு வருஷமோ, ஆயிரம் வருஷமோ...எப்ப பண்ண பொம்மையோ...ஒவ்வொண்ணும் என்ன கனம் தெரியுமா...கையாலயே கைலாயமலை ஏறுனாங்களே... அந்த அம்மா பேர் என்னா... ஆ... காரைக்கால் அம்மையார். அவங்களை அப்படியே ஒரு வெண்கல பொம்மை பண்ணியிருக்காங்க தெரியுங்களா...அதைப் பார்த்ததும் அழுகை வந்திடுச்சு. அப்படியே நெஞ்சோட வெச்சுக்கிட்டு அழுதுட்டேன். யாரு இதை செஞ்சிருப்பா எந்தக் கை இதை செஞ்சது...அவனை நெனைச்சு அப்படியே விக்கி விக்கி அழுதுட்டேன்.

நாங்க விவசாயக் குடும்பம் சார். மொத்தமா, ஒட்டு மொத்தமா, வெண்கலம் உருக்குற ஆசாரியா போயிட்டேன். ரொம்ப சந்தோஷமா இருக்கேன் சார். வருமானம் வருது, வரலை—அதைப்பத்தி எனக்கு அக்கறை இல்லை. எனக்கு என்ன தொழில் புடிக்குமோ, என்ன தொழிலை நான் விரும்புனேனோ அதுதான் சார் எனக்கு இருபத்திநாலு மணிநேரமும், வேற எதைப்பத்தியும் எனக்குத் தெரியாது''—அவன் மிக சந்தோஷமாய்ப் பேசினான்.

இங்கே இத்தனை சந்தோஷமாய் இந்த பொம்மை செய்கிறவன் இருக்க, அங்கே முற்றிலும் வேறாய் அவன் இருந்தான்.

பதினோரு மணிக்கு பஸ் விட்டிறங்கி ஒரு வட இந்திய கூட்டம் உள்ளே நுழைந்தது. 'ஹர ஹர மஹாதேவ்' என்று கூவியது இவன் பிள்ளையாருக்கு ஆரத்தி காட்டிக் கொண்டிருந்தான். வட இந்தியர்களின் பழக்கம் சாமியை நோக்கி காசு விட்டெறிவது. எட்டணாவாய், ஒரு ரூபாயாய் முப்பது பேர், குனிந்து ஆரத்தி காட்டிக் கொண்டிருந்தவன் மீது சரசரவென்று விட்டெறிந்தார்கள். லொட்டு லொட்டென்று அவன் தலையிலும் முகத்திலும் மூக்கிலும் கண் மேலும் முதுகிலும் முழங்காலிலும் காசு வந்து விழுந்ததும் கற்பூரத்தட்டோடு வெளியே வந்தான். தட்டைக் கீழே போட்டான். யார் பையிலிருந்து காசை எடுத்தானோ அவன் சட்டையைப் பிடித்து கன்னத்தில் அறைந்தான். மல்லாக்கத் தள்ளினான்.

வடஇந்தியக் கூட்டம் மிரண்டது. கச்சலாய் கையில் கறியில்லாதவன் பாய்ந்து அடிக்கிறான் என்பதை பார்த்துக்கொண்டது. 'என்ன தவறு செய்துவிட்டோம்' என்று இந்தியில் கேட்டது. அங்கிருந்த பெண்மணி ஒருத்தி, அவன் வந்த வேகத்தையும் கோபத்தையும் குமுறலையும் பார்த்தாள். 'ஒரு பிராமணனுக்கு இந்தக்கோபம் ஆகாது' என்றாள். அவளையும் பார்த்து 'தூ'வென்று துப்பினான் அவள் அவன் அருகே போய், அவனைக் கொத்தாகப் பற்றி சுவரோடு தேய்த்து அடித்தாள்.

அங்கு பெரும் கலவரம் நடந்தது. விசாரணை செய்யப்பட்டது. அவனை 'ஒரு மாதம் கோயிலுக்குள் வர வேண்டாம்' என்று சொன்னார்கள். அவனைப் பற்றி 'கோபக்காரன்' என்று குறிப்பு எழுதினார்கள்.

தமிழ்நாட்டில் மக்களிடையே ஒரு பழக்கம் உண்டு. எவனாவது கோபம் கொண்டு நடுத்தெருவில் சண்டை போட்டால் அவனை 'குடிகாரன்' என்று சுலபமாகச் சொல்லி விடுவார்கள். இதே விதமாய் அவனுக்கும் பெயர் வந்தது.

''தண்ணி போட்டுட்டு பூஜைபண்றாம்மா யாராவது எதனா சொன்னா அடிக்க வரான். அவனுங்க பழக்கம், சாமியைப் பாத்துநாலணா எட்டணா வீசுவானுங்க. வாங்கி போட்டுக்கினு போக வேண்டியதுதானே? காசு வீசும்போது ஓரமா போய் நின்னுக்க வேண்டியதுதானே 'எப்படி மேல காசை வீசலாம்னு' அவனை அடிக்கலாமா எல்லாம் அந்த குடிபண்ற விவகாரம்' என்று சிறிதளவும் குடிக்காத அவனை மிகப் பெரிய குடிகாரனாய் படம் போட்டுக் காட்டினார்கள்.

அவன் உண்மையிலேயே குடிக்க ஆரம்பித்தான்.

மது என்பதை உழைப்புக்குப் பிறகு எடுத்துக்கொள்ளும் உற்சாக பானமாக வைத்துக்கொள்ள பல பேருக்குத் தெரியவில்லை. அதை உன்மத்தம் கொடுக்கின்ற விஷயமாகவே எல்லாரும் சுவீகரித்துக் கொள்கிறார்கள். நினைவற்றுப் போகிற நிலையில், தன் உள்ளுக்குள்ளே இருக்கிற அத்தனை குப்பைகளையும் வெளியே கொட்டுகிற கழிவு நீர் சாக்கடையாகத் தன்னை மாற்றிக் கொள்வதற்காக நிறைய குடிக்கிறார்கள்.

அவன் கோயிலில் வேட்டி அவிழ இடதும், வலதும் நடந்து, 'வெட்டிடுவேன், கொன்னுடுவேன், கொலை பண்ணிடுவேன்' என்று பேசினான். அவனை அந்தக் கோயில் ஒதுக்கி வைத்தது.

''அவருடைய புள்ளையா அவன், சண்டாளப்பாவி'' என்று சொல்லித் திட்டியது.

வாழ்க்கையில் தவறுகள் மேல் தவறு செய்து மிகப் பெரிய மன அழுத்தத்துக்கு அவன் ஆளானான். எல்லாம் உதறிவிட்டு, 'காசி யாத்திரைக்குப் போகிறேன்' என்று காசு எடுத்துக்கொண்டுப் போனான். அங்கிருந்து எங்கு போனான் என்று இன்றுவரை தெரியவில்லை,

'கங்கையோடு காணாமல் போனானா அல்லது கால் போன போக்கில் நடந்து கொண்டிருக்கிறானா...' அவன் அப்பாவுக்கு தகவல் ஏதும் இல்லை.

என் கண்ணெதிரே இரண்டு பேர் வாழ்க்கை வெவ் வேறு விதமாக மாறிபதை நான் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

''எல்லாருக்கும் புடிக்கிற வேலை கெடைக்குமா... என் தலையெழுத்து இந்த வேலைதான் செய்தாகணும். எனக்கு வேலைசெய்யவே புடிக்கலை. வீட்டோட உக் காந்துக்கினு டி. வி. படம் பாக்கத்தான் புடிக்குது. எனக்கு பிடிச்சமான வேலை சினிமாதான் சார். இப்ப இருக்கிற ஆறாயிர ரூபாய் வேலையை விட்டுட்டு சினிமா வுல சேர்ந்துடட்டுமா?''

''எனக்கு என் வேலை பிடிச்சிருக்கு. சார். ஆனா மூணு வருஷத்துக்கு அப்புறம் அந்த வேலை அலுத்துப் போகுது. வேற வேலைக்குப் போகணும்னு தோணுது. இது தப்பா சார்''

''எனக்கு பிடிச்ச வேலை ஓவியம் வரையறதுதான். நானும் பன்னிரண்டு வருஷமா செய்யறேன். முன்னேற முடியலையே...''

என்று பலவிதமாக அலுத்துக் கொண்டவர்களும் என்னிடம் உண்டு. இவற்றைப் பற்றியும் நான் விரிவாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். உங்கள் மனம் உங்களை பல்

வேறு விதமாய் ஏமாற்ற முயற்சிகள் செய்யும். அதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது பற்றி...

## 19

நான் திரும்பத் திரும்ப இந்த விஷயத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வதில், நான் ஏற்கெனவே பல இடங்களில் கட்டுரையாகவும் கதையாகவும் சொன்னதை எங்களுக்கு மீண்டும் சொல்வதில் எனக்கு நெல்முனையளவும் வருத்தமில்லை. இந்த விஷயம் மனதில் தைத்து, உருமாறி, மிக உறுதியான மரமாய், மனதைவிட்டு அகலாத விஷயமாய் மாறக் கொஞ்சம் மெனக்கெட வேண்டியிருக்கிறது.

இவற்றை மிகக் கண்டிப்பாக ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஓர் இளைஞன் அல்லது யுவதி உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். எந்த நாளிலும், எந்தக் காரணம் கொண்டும் இதை உதறிவிட்டுப் போகாத புத்தியோடு இருக்க வேண்டும். அப்படி என்ன விஷயம் அது...?

மிதமான உணவு, மிதமான தூக்கம், மிதமான பேச்சு...இவை மட்டுமேதான் வாழ்க்கையின் வெற்றிக்கு அடிப்படையா? இவை இல்லாதவர் ஜெயித்தது இல்லையா...?

எங்கேனும் ஓரிருவர் இருக்கலாம். ஆனால், இது இல்லாமல் அவர்களால் வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ள முடியாது. ஏதோ ஒரு வேகத்தில் மூத்தோர் புண்ணியத்தில் மேலே வந்துவிட்டு, வந்த இடத்தில் அரசாட்சி செய்ய முடியாமல் அடிபட்டுக் கீழே விழுந்து

விடுவார்கள். காரணம்...மிதமான உணவு மிதமான தூக்கம், மிதமான பேச்சு இல்லாததால் தான்.

இதில், பேச்சு என்ற விஷயத்தைப் பற்றி நான் பேச விரும்புகிறேன். மிதமான பேச்சு ஒருவருக்கு உள்ளே படிந்து விட்டால். மற்றவருக்கு அதைப் பற்றி உபதேசம் செய்யத் தோன்றாது எக்கேடும் கெட்டுப் போகட்டும். இல்லையெனில். அடிபட்டுத் தெரிந்து கொள்ளட்டும் அல்லது கேட்டால் சொல்லிக் கொள்ள லாம் என்று தான் எண்ணத் தோன்றும்.

ஆனால், இது சொல்லப்பட வேண்டும். மற்றவருக் குப் புரிய வேண்டும் என்று நினைப்பு வேகமாக எழ, இதைப்பற்றி விரிவாகப் பேசவே நான் ஆசைப்படு கிறேன்.

பொழுது போகாமல் பேசுகிற போது, பேச்சு தன் னைப் பற்றியோ, தனக்கு எதிரே இருப்பவர் பற்றியோ இல்லாமல். அந்த இடத்தில் இல்லாத ஒரு மூன்றாவது மனிதர் பற்றிய பேச்சாக அது மாறி விடுகிறது.

''அவன் என்னப்பா...ரொம்ப அலட்டிக்கிறான். ஒன்னும் சரியா இல்லையே...'' என்பது போன்று எகத் தாளமாக மூன்றாவது மனிதரைப் பற்றிய பேச்சு ஆரம் பித்து விட்டால், அந்தப் பேச்சுக்கு எந்த வரைமுறையும் இல்லை. எந்த நியாய தர்மமும் இல்லை. மாறாக தனக்கு எல்லாம் தெரியும் என்கிற அலட்டல் வந்துவிடு கிறது. சம்பந்தப்பட்ட நபர் அருகே இல்லை என்கிற சுதந்திரத்தை முழுவதுமாக அனுபவித்துக் கொண்டு, நாக்கு நாலாப் பக்கமும் பரவி, எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பேசுகிறது பேசுகிற சந்தோ ஷத்துக்காகவே பொய்த் தகவல்கள் சொல்லப்படு கின்றன.

''அவனுக்கும் அவன் வொய்ஃப்புக்கும் பிரச்னை லேசா அடிதடி மாமியார் வீட்டுக்குப் பொண்டாட்டியை பேக் பண்ணி அனுப்பிச்சுட்டான். தனியாத்தான் இருக்கிறான். நிஜத்தைச் சொல்லணும்னா அவன் பொண்டாட்டியால தான் பிரச்னை. அவதான் சரியில்லை...'' என்று மிகப் பெரிய ஒரு வாழ்க்கை விமரிசனத்தைச் சட்டென்று சபையில் வைப்பார்கள். சகல விஷயத்தையும் அருகே இருந்து பார்த்தது போலப் பேசுவார்கள்.

''அப்படியா! அப்படியா சொல்றீங்க...? அவங்க வொய்ஃப்பைப் பபர்த்தா, அப்படித் தெரியலையே... சாதாரணமாத்தானே இருந்தாங்க...''

''அட, நீங்க ஒண்ணு...அது பண்ற அட்டூழியம் மொத்தம் எனக்குத் தெரியுங்க...அவனே சொல்லியிருக்கான். கல்யாணத்துக்கு முன்னாடியே யார்கூடவோ காண்டாக்ட் இருந்திருக்கும் போல...இவன்கிட்டே வந்தும் விடாம தொடர்ந்து நடந்திருக்கும் போல...'' என்று பேச ஆரம்பிப்பார்கள்.

இதைவிட நோயான ஒரு வாழ்க்கை, நோயான நடத்தை இந்த உலகத்தில் வேறு எதுவும் இல்லை. யாரோ ஒரு பெண்ணைச் சொல்லிவிட்டார்கள் என்பதால், நான் இந்த விமரிசனத்தைச் செய்யவில்லை. ஒழுக்கம் பற்றி இத்தனை அக்கறைப்பட்டுப் பேசுபவர்கள், ஒழுக்க மீறலை மிக எளிதாகச் செய்வார்கள்.

என்னுடைய கேள்வி வேறு. இதுபற்றி ஒருவர் பேசி என்ன ஆகப்பேரகிறது...? இதுபற்றி ஒருவர் பேச வேண்டிய அவசியம் என்ன...? எந்த விதத்தில் தனக்கோ எதிரே நின்று பேசுபவருக்கோ அல்லது பாதிக்கப்பட்டவருக்கோ இது உதவி செய்யப்போகிறது என்றால், எதுவும் இல்லை. மாறாக, பாதகங்கள் பலவற்றையும் இந்தப் பேச்சு ஏற்படுத்தும்.

"அவன் வொய்ஃப் சரியில்லையாம்...இவன் சொன்னான்...அவ அப்படி இருக்கிறதை இவனே நேர்ல பார்த்தானாம்..."

இது பெரிதாகும். மெல்ல மெல்ல ராட்சத உருவம் பெறும்.

"அவன் மட்டும் இதைச் சொல்லலைப்பா...இவர் கூட இதைச் சொல்றாரு. இவர் சொல்றதாலதான். இந்த மேட்டரை நான் நம்பறேன்..." என்று இன்னும் பெரிதுபடுத்துவார்கள்.

இப்படியாக இரண்டு பேர் பேசிய விஷயம் பதினாறு பேருக்குத் தாவி, பதினாறு பேர் பேசிய விஷயம் இன்னும் பெரிதாகப் பரவி, ஒரு வாரத்தில் ஒரு பெண்ணின் வாழ்க்கை முற்றிலுமாக அந்தப் பேச்சு ஒழித்து விடுகிறது.

"நீ பாவம்ப்பா...உன் பொண்டாட்டி சரியில்லைன்னா. நீ என்ன செய்ய முடியும்...?" என்று முப்பது, நாற்பது ஆள் மாறி, கடைசியாகச் சம்பந்தப்பட்டவரிடமே அந்தப் பேச்சு போய் முட்டி நிற்கும்.

இந்தப் பேச்சு ஏன் எழுந்தது...? அந்தப் பெண்ணை அவமானப்படுத்த இவருக்கு ஏதேனும் காரணம் உண்டா...?

இல்லை. சும்மா பொழுதுபோகாமல் பேசிய பேச்சுதான். இது ஒருவர் வாழ்க்கையைப் பிடுங்கியெறிந்து சூறையாடிவிட்டுப் போய்விடும்.

வெறும் பேச்சு என்பதைப் பற்றி நீங்கள் புரிந்து கொள்ள, இன்னொரு உதாரணம் சொல்லட்டுமா...? பிள்ளையார் பால் குடித்தது, பேச்சினால்தான்.

தனக்கு எல்லாம் தெரியும். தான் சொல்வதெல்லாம் உண்மை என்று தானே நம்பி, தானே வாய்நிறையப் பேசத் துவங்கியதால்தான், பொழுது போகாமல் இந்த விஷயத்தைப் பரப்பியதால்தான் இது நிகழ்ந்தது.

''நீங்க கண்ணால பார்த்தீங்களா...?''

''ஆமாம்... நான் பார்த்தேன்...''

''பிள்ளையார் பால் குடிக்கிறாரா...?''

''ஆமா. உறிஞ்சி 'சர்'னு சத்தத்தோட குடிக்கி றாரு...''

''எவ்ளோ குடிச்சாரு...?''

''ஒன்றரை லிட்டர் பால் குடிச்சாரு...''

ஒருவர் பொழுதுபோகாமல் கேட்க, இன்னொருவர் பொழுதுபோகாமல் பதில் சொல்ல, பக்கத்தில் பொழுது போகாமல் சுற்றி நின்று கொண்டிருந்த பத்துப் பேரில் ஆறு பேர் அல்லது ஏழு பேர், பிள்ளையார் ஒன்றரை லிட்டர் பாலை சர்னு சத்தம் 'போட்டுக் குடித்ததைத் தாங்கள் பார்த்ததாகச் செய்தி பரப்பத் துவங்கி விடு வார்கள்.

இது ஒன்றும் இந்தியர்களுக்கு மட்டுமானதல்ல. உலக மக்களின் குணம். மனித ஜென்மத்தின் இயல்பு. ஆனால், வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்ற விருப் பமுள்ளவர்கள். ஏதேனும் சாதிக்க வேண்டும் என்ற ஆசை உள்ளவர்கள். ஜெயிக்க வேண்டும் என்ற வெறி உள்ளவர்கள் இந்த நாசகார வலையில் சிக்கிக்கொள்ளக் கூடாது. அதிகம் பேசுகிறவர்களை அருவருப்பாகப் பார்க்கத் தெரிந்து கொள்ள வேண்டும்.

''நீ அதிகம் பேசுகிறாய்'' என்று சொல்வதுகூடத் தேவையற்ற பேச்சு. அதிகம் பேசுகிறவர்களை, வெறும்

அரட்டைக்காரர்களை, கேட்காமல் தகவல் சொல்கிறவர்களை, மற்றவர் அந்தரங்கத்தைக் கூச்சமின்றிப் பேசுகிறவர்களை ஒதுக்கிவிடுவதே நல்லது. விலகியிருப்பதே உத்தமம்.

''இப்படிப்பேசுவதில் என்ன தவறு...? சரி, எவர் ஒழுக்கம் பற்றியும் பேசவில்லை. ஒருவருக்குத் தெரிந்ததை இன்னொருவருக்குச் சொல்லலாம் அல்லவா...? உதாரணமாக. என்னுடைய ஊர் மதுரை. சென்னையில் இருப்பவருக்கு மதுரையைப் பற்றியும் மதுரையினுடைய அம்சங்கள் பற்றியும் நான் சொல்லலாம் அல்லவா...? ஒருவேளை, அவர் மதுரைக்குப் போனால் இது அவருக்கு எளிதாக விளங்குமல்லவா...? இதை ஏன் பாஸிடிவ்வாக யோசிக்க மாட்டேன் என்கிறீர்கள்...?'' என்று உங்களில் கெட்டிக்காரர்கள் எவரேனும் என்னிடம் கேட்கலாம்.

அதிகம் பேசுகிற மனிதர்கள் யாரும் வேண்டுமென்ற தகவலைச் சுருக்கமாகச் சொல்ல முயல்வதே இல்லை, பேச்சு அதிகமாக அதிகமாக, அது தறிகெட்டுத்தான் நாலாப்பக்கமும் போகிறதே தவிர, தெரிந்துகொள்ள வேண்டிய தகவல்கள் அவர்களிடமிருந்து கிடைப்பதில்லை.

பேச்சு அதிகமானால் என்ன செய்யும்...? சிந்தனை மழுங்கிப்போகும், தெளிவற்றுப் போகும். சிந்தனையிலொரு முனைப்பாடு இல்லாமல். அது எல்லா இடத்தையும் முகர்ந்து முகர்ந்து நகர்கிற நாய்போல, எல்லா இடத்திலும் அலைய ஆரம்பித்துவிடும். புத்தியின் அலையல் புத்திக்கு மிகப்பெரிய பலவீனம். மனம் ஒரு முகப்படுதலை இந்தப் பேச்சு, பேச்சின் தொடர்பால் ஏற்படும் மன அலையல் தடுத்துவிடும்.

நீங்கள் பேசுகிறபோது, உங்கள் மனதை உற்றுப் பாருங்கள். அது எத்தனை விதமாகத் திட்டங்கள் போடுகிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். திட்டம் போட்டு நீங்கள் பேசுகிற பேச்சு, நாலாப்பக்கமும் தறி கெட்டு ஓடுவதை நீங்கள் பார்க்க முடியும்.

பேசிப் பேசி மனது அலையத் துவங்கிவிட்டால். ஒரு காரியத்தை முற்றிலும் ஈடுபட்டு, அதை முழுமையாகச் செய்வது என்பது முடியாது போய்விடும். ஒட்டடை அடித்து, வீடு பெருக்குற சாதாரண காரியத்தைக்கூட அழகாகவும் நறுவிசாகவும் செய்ய முடியாமல் போய், விடும். வரவு—செலவு கணக்கைக் கூட்டிப் போடுவதற்கு ஆறேழு முறை முயற்சி செய்ய வேண்டியிருக்கும். 'என்னுடைய இந்தக் கடையில் எது அதிகம் விற்கிறது...? எது அதிகமாக விற்பதில்லை...? என்ன காரணம்...?' என்கிற விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையும் அலசலும் மறந்து போகும். அவ்வாறு செய்வதற்கு முயற்சி செய்யும்போதெல்லாம் வேறு ஏதேனும் விஷயங்கள் உள்ளே புகுந்து, காலை வாரி விட்டுவிடும். என்ன காரணம் என்பதைக் கடைசிவரை கண்டுபிடிக்க முடியாமல் போய் விடும்.

எப்போதும் பேச ஆசைப்படுகிற மனிதருக்கு, அப்படிப் பேச கேட்கிற மனிதரோடுதான் தொடர்பு இருக்கும். அப்படிப் பேசக் கேட்கிற மனிதர்களை நோக்கித்தான் இவர்களுடைய வாழ்க்கை அமையும். அப்படிப்பட்ட மனிதரோடு சிநேகம் அதிகமானால், வீட்டிலுள்ள மனிதர்களை அவர்கள் வெகுசுலபமாக அலட்சியம் செய்வார்கள். 'நான் ஒரு அவசர வேலையா வெளியே போறேன்' என்று வீட்டில் பொய் சொல்வார்கள். வெளியே போய், எந்த அவசரமுமில்லாமல் ஒரு நண்பரைத் தேடிச் சந்தித்து, அரட்டையடித்து, நான்குமணி

நேரம் கழித்து வீடு திரும்புவார்கள். வீடு, இவனுக்கு எந்த மரியாதையும் தராது. வீட்டோடு அவனுக்கு இருக்கும் தொடர்பு அற்றுப்போகும்.

சரி, மிதமிஞ்சிய பேச்சு வேறென்ன செய்யும்...?

கொலையும் செய்யும்

பாபுவும் பூமாவும் ஒரே பேட்டை. ஒரே தெரு. அவர்கள் காதலிக்கப் பல காரணங்கள் இருந்தன. ஆகவே, காதலித்தார்கள். 'அட, இந்தப் பையன் நல்லா இருக்கானே...' என்று அவள் பார்த்து வியந்தாள். 'ஐயோ என்னையே பார்க்குது. என்மேல ரொம்ப லைக் கிங்போல...' அவன் பின்தொடர்ந்தான். சாதாரணமாக ஆரம்பித்தது நெருக்கமாயிற்று. பேச்சும் பாட்டும், அடுக்கடுக்கான சந்திப்பும், தியேட்டரில் நெருங்கி உட்கார்ந்து கொள்வதும் தொட்டுக் கொள்வதுமாகத் தொடர்ந்தது. தொடர்ந்த கதை பற்றி...தொடர்ந்து பேசுகிறேன்.

# 20

"எங்கக்காவுக்குக் கல்யாணம் ஆயிடுச்சு. அடுத்தது எனக்குத்தான். நீங்க என்ன செய்யப் போறீங்க...?" காதல் சிறகடித்துப்பறந்த ஒருநாளில் பாபுவைப் பார்த்து பூமா கேட்டாள்.

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்..." என்று பாபு பதில் சொன்னான்.

"அப்ப, வீட்ல வந்து பேசுங்க..."—பூமா உற்சாகப் படுத்தினாள்.

"நீ கேட்டுச் சொல்லு, வரலாமானு..."— பாபு யோசனை சொன்னான்.

பூமா வீட்டில் கல்யாணப்பேச்சு துவங்கும்போது தன்னுடைய நிலைமையைச் சொன்னாள். வீடு அவர்கள் காதலை ஏற்றுக்கொள்ளவில்லை.

"உனக்குப் பத்தொன்பது வயசு அவனுக்கு இருபத்தோரு வயசு. பையன் ரொம்பச் சின்னப்பையன். பேசறதுக்கு, பாடறதுக்கு, சினிமா போறதுக்குத்தான் அந்த மாதிரி பையனுங்க சரியா வருவாங்க. குடித்தனம் நடத்தறதுக்கு இந்த வயசுல அவனால முடியாது. உனக்கு முப்பது வயசு ஆகும்போது, நீ கிழவியாயிடுவே...அவன் முப்பத்திரண்டு வயசு வாலிபனா இருப்பான். உனக்கு நான் சொல்ற விஷயம் புரியாது. நிறைய இருக்கு..."—அம்மா அவள் காதோரம் பல்வேறு விஷயங்களை விவரித்துச் சொன்னாள்.

"நீ சொல்றது எனக்குப் புரியுதும்மா...அவனுக்குப் புரியணுமே..." பூமா கவலைப்பட்டாள்.

பூமாவின் அப்பாவும் அம்மாவும் பாபுவிடம் போனார்கள்.

"இப்பத்தானே படிப்பு முடிச்சிருக்கே... உனக்கு வேலை இன்னும் கெடைக்கல இல்லே...வேலை கிடைச்சு நிறைய சம்பாதிச்சு...அதுக்கு ரொம்பநாள் ஆவும். இப்பவே ஏன் குடித்தனத்துக்குள்ள நுழைய ஆசைப் படற...மெதுவா போய்க்கலாம் இப்ப, உங்க தங்கச்சிக்குப் பதினைஞ்சு வயசு. அதுக்கு ஒரு கல்யாணம். காட்சி பண்ணிட்டு, அப்புறம் நீ பண்ணிக்கறதுதான் நல்லது. டக்குனு தலைகுடுத்து மாட்டிக்காத...பின்னால ரொம்பக் கஷ்டமாயிடும். இப்போதைக்கு ஒண்ணும் அவசரப் படாதே..."—மெல்ல நகர்ந்து வந்து, அவனுக்கு உபதேசம் சொன்னார்கள். அவனும் புரிந்து கொண்டான்.

பிரச்னை நல்லபடியாக முடிந்ததென்று பூமாவின் வீட்டில் திருமணத்துக்கு நிச்சயம் செய்தார்கள், ஆனால்

துரதிர்ஷ்டவசமாக பூமாவின் வீட்டைச் சுற்றிச் சோம் பேறிகள் இருந்தார்கள் மிதமிஞ்சிய பேச்சில் அவர்கள் சிக்கியிருந்தார்கள்.

"ரெண்டுபேரும் கோயில்ல பார்த்துக்குவாங் களாமே...இப்படக்குனு கட்சி மாறி, பொண்ணுக்குப் புள்ளை பாக்கறாங்க..."

"பொண்ணு புடிச்ச கொம்பு புளியங்கொம்பா இருந்தா, வளைச்சுப் போட்டிருப்பாங்க. அவன் வெறும் வேப்பங்குச்சி...பல் துலக்கிட்டுக் கீழே போட்டுட் டாங்க..."

"இது தப்பில்லையா...?" மிக அக்கறையாக யாரோ கேட்க.

"நீயும் நானும் பண்ணாதான் தப்பு...கெட்டிக் காரங்க பண்ணா எல்லாம் சரி. போ..."

"அதெப்படி...? இதை விடக்கூடாது..."— சுற்றி யுள்ளவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டார்கள்.

"கோயிலோட நிக்கலையாம்...சினிமாவுக்குக் கூட்டி கிட்டுப் போயிட்டானாம். மொத்தம் மூணு சினிமா பாத்தானாம். சினிமாவோட முடிஞ்சு போச்சா...மகா பலிபுரமெல்லாம் கூட்டிக்கினு போயிருக்கான். காலை யிலே போயிட்டு, சாயந்திரம் வந்திருக்காங்க..."

"பொண்ணு ஒண்ணும் சுத்தமா இல்லைனு சொல்லு..."

"இருந்தா என்னா, இல்லாட்டி என்னா...? எப் படியோ யாரையோ ஏமாத்தித் தலையிலே கட்ட வேண் டியது தானே..."

"வந்த புள்ளைக்குத் தெரிஞ்சு போச்சுன்னா..."

''ஐயோ...உடைச்ச பிறகுதானே அழுகின 'தேங்கானு தெரியும். ஓடு மோந்து பார்த்தா கண்டுபிடிக்க முடியும்...?''

பேச்சு...பேச்சு...ஓயாத பேச்சு...

பெண் பார்த்துவிட்டுப் போய் சரி என்று சொன்னவன் காது எட்டும் வரைக்கும் அவர்கள் பேசினார்கள். நிச்சயிக்கப்பட்ட கல்யாணம் நின்று போயிற்று.

''காதலித்தவனும் கிடைக்காமல் கல்யாணம் செய்து கொள்கிறேன்'' என்று சொன்னவனும் தங்காமல் வாழ்க்கை யார் யாராலோ உருட்டப்படுகிறது என்பதைப் பார்த்து பூமா விசும்பினாள் அவர்களிடம் போய் 'ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?' என்று உரக்கக் கேட்டு வந்தாள்.

கேட்டதும் குற்றமாகப் போயிற்று. பேட்டை முழுவதும் அவள் விஷயம் பரவியது.

''ஊர் அப்படித்தான் பேசும்...உன்னுடைய கெட்ட நடத்தையால்தான் உன் வாழ்க்கை பாழாயிற்று...'' என்று அப்பா உரக்கக் கத்தினார். ஊரின் மிதமிஞ்சிய பேச்சை புரிந்து கொள்ளாமல் மகளைக் கோபித்துக் கொண்டார்.

பூமாவுக்குச் சொல்லியழ யாருமில்லை. அவள் பாபுவிடம் ஓடினாள் பாபு அவளை இறுக்கக் கட்டிக் கொண்டான். ''செத்துரலாமா...?'' என்று கேட்டான். அவள் சரியென்று சொன்னாள். இருவரும் கட்டிக் கொண்டு, ரயிலுக்கு முன்பாய்ந்து, அடிபட்டு, நசுங்கி செத்துப் போனார்கள். ஊர் இதற்குத் தற்கொலை என்று பெயரிட்டது வம்பு பேசியவர்களைத் தண்டிப்பதற்கு எவரும் இல்லை என்று நினைத்துக்கொண்டது. அவர்கள் மரணம் வெறும் பத்திரிகைச் செய்தியாயிற்று. அவர்கள் மனம் மிதிக்கப்பட்டது மறந்து போயிற்று.

ஆனால், எந்தக் குற்றமும் தண்டனையிலிருந்து தப்பி விடமுடியாது. மிதமிஞ்சிய பேச்சால், தேவையற்ற வம்பால் ஒரு இளஞ்ஜோடியைச் சிதைத்த குற்றத்துக்குச் சம்பந்தப்பட்டவர்கள் நிச்சயம் தண்டனை பெறுவார்கள்.

அபராதமும் சிறையும் தூக்கும் மட்டுமே தண்டனை அல்ல. வாழ்க்கையில் பல வழிகளில் தண்டனை கிடைக்கும். தண்டிக்கப்படும்போது. எதனால் இந்தத் தண்டனை நமக்கு ஏற்பட்டது என்று மனதுக்கு நிச்சயம் தெரியும். அது சூசகமாக அவர்களுக்குச் சொல்லப்படும்

சரி, புரிகிறது...பேசாமல் இருப்பதினுடைய பலம் என்ன...?

பேசாமல் இருப்பது என்பது ஒரு தவம். புராணக் கதைகளில் முனிவர்கள் காட்டுக்குப் போனார்கள் தவம் செய்தார்கள் என்று சொல்லப்படுகிறதே...அது என்ன என்று உற்றுப்பார்த்தால் உங்களுக்குப் புரிந்துவிடும்.

ஒருவர் நகரத்திலேயே இருந்தால், நாட்டிலேயே இருந்தால் நாலு பேரோடு பேசத்தான் வேண்டியிருக்கும். அதனாலேயே காட்டுக்குப் போய்விடுகிறார்கள் காடு என்பது பேச்சற்ற, பேச்சுத் துணையற்ற ஓர் இடம் பேச ஆட்களே இல்லாத இடம்.

தவம் செய்தால்தான் வரம் வாங்க முடியும். அதாவது தனிமையில் இருந்தால்தான், தனித்துப் பேசாமல் இருந்தால்தான் வெற்றி பெறுகின்ற உறுதி உள்ளுக்குள் பிறக்கும்.

மனம் யோசிப்பது நின்றுபோனால், உள்ளம் வேறொரு சக்தி நுழைந்துகொள்கிறது. இதுதான் உண்மை. இதற்குமேல் இதைச் சொல்ல முடியவில்லை. வேண்டுமானால் இப்படிச் சொல்ல முயற்சிக்கிறேன்.

மனம் ஒரு பக்கமாகச் சிந்திப்பதை நிறுத்திவிட்டு அமைதியாகிவிட, ஒரு நடுநிலைமைத்தன்மை, ஒரு தெளிவான பார்வை, ஒரு கூர்மையான புத்தி உங்களுக்குள் வந்துவிடுகிறது. இந்த நடுநிலைமை பார்வை வருவது எளிதல்ல.

எது பற்றியும் நமக்கு விருப்பு, வெறுப்பு இருக்கிறது. அந்த விருப்பு வெறுப்போடே யோசித்து, விஷயங்களைத் தவறாகப் புரிந்துகொள்கிறோம். விஷயங்களைத் தவறாகப் புரிந்து கொள்வதாலேயே தவறான முடிவுகள் எடுக்கிறோம். முடிவில் முட்டிக்கொண்டபிறகு, 'தெரியாத பண்ணிட்டேன்' என்று வருந்துகிறோம்.

இந்த விருப்பு, வெறுப்பு இல்லையெனில் பார்வை அமைதியாகவும் இந்த விஷயம் எப்படிப்பட்டது என்று விஞ்ஞானப்பூர்வமாகச் சிந்திப்பதாகவும் அமையும் கோணலாகவும், குதியலாகவும், நல்லதாகவும் கெட்டதாகவும் யோசிப்பதையெல்லாம் ஒரே வீச்சில் துடைத்தெடுத்துவிட்டு, 'இது ஒரு செய்தி இந்தச் செய்திக்கு என்ன அர்த்தம் என்று மனம் பதறாமல், வெகுநிதானமாக அதை யோசிக்க ஆரம்பித்துவிடுகிறது.

தேடித்தேடிப் போய்ப் பேசுகிறார்களே...அவர்களுக்கெல்லாம் ஒரு காலக்கட்டத்துக்குமேல் சமூக அங்கீகாரம் கிடைக்காது. யார் அவர் பேச்சைச் சந்தோஷமாக ரசித்தார்களே, அவர்களே அவரைப்பற்றிப் புறங்கூறி விலக்க முயற்சிப்பார்கள். ஏனெனில், கேட்டவருக்குச் சட்டென்று ஒரு முக்கியமான ஞானோதயம் வந்திருக்கும். இப்படி மற்றவருடைய வாழ்க்கையைப் பற்றி நம்மிடம் 'வந்து விவரமாக, விலாவாரியாகப் பேசுகிறாரே...இவர் நம்மைப் பற்றி எங்கு என்ன பேசுகிறாரேர...?' என்று பயம் வந்துவிடும், எங்கேயாவது லேசாகப் பேசுகிறார் என்பது தெரிந்துவிட்டால், உடனடியாக அவரைத் தன்

வாழ்க்கையிலிருந்து அப்புறப் படுத்தவே முயற்சி எடுக்க ஆரம்பிப்பார்கள்.

அப்போதும் இவர்கள் ஓய்வதில்லை. "நல்லாத் தான்பா பேசிக்கினு இருந்தாரு...திடீர்னு எவன் என்னா சொல்லிட்டான்னு தெரியலை. நம்மள ஒதுக்க ஆரம்பிச் சிட்டாரு. நான் விட்டுட்டேன், அவரு ஒண்ணும் சரியான ஆள் இல்லப்பா. அவரு வீட்ல ஏகப்பட்ட பிராப்ளம்..." என்றுதான் ஒதுக்கப்பட்டதாலேயே ஒதுக்கப்பட்ட ஆத்திரத்தின் காரணமாக அதுவரை சந்தித்துப் பல தகவல்களைச் சொல்லிக் கொண்டிருந்த வரைப் பற்றியே பலரிடம் சொல்லத் துவங்குவார்கள்.

மௌன விரதம் என்பது அதிகம் பேசாதிருக்க முயற்சி செய்வதில் ஒரு ஆரம்பம் கடற்கரையில், தோட் டத்தில் உலாவப்போவது அதிகம் பேசாதிருக்கச் செய்யும் இன்னொரு முயற்சி.

அதிகம் பேசுகிற எவரும் தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்ததாகச் சரித்திரம் இல்லை. அவர்களுக்கு வேலை தெரியாது என்றுதான் ஒதுக்கப்பட்டிருக்கிறார் கள். வெறும் பேச்சுக்காரன் என்று புறக்கணிக்கப்பட்டி ருக்கிறார்கள்

அதிகம் பேசுகிறவர், ஆரம்பத்தில் கவர்ச்சிகரமாகக் காட்சியளித்தாலும் வெகுவிரைவிலேயே அந்த நிறம் மங்கி, 'இவன் பேசாமல் இருக்கமாட்டானா...?' என்று அனைவரும் எரிச்சலாக நினைக்கத் துவங்கிவிடுவார்கள்.

எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் மத்திய அரசு அலுவ லகத்தில் வேலை செய்துவந்தார். அவருக்கு சாதாரண குமாஸ்தா வேலைதான். ஆனால் வாழ்க்கையில் முன்னேறப் பல வசதிகள் அங்கு இருந்தன. தேர்வுகள் எழுதினால், வேலை செய்துகாட்டினால், வெகு நிச்சய மாக உயர் பதவிக்கு வந்துவிட முடியும். ஆனால் நண்பர்

பேச்சில் ஆர்வம் உடையவர். தான் பேசுவதைப் பல பேர் வாய்பிளந்து பார்க்க வேண்டும் கேட்க வேண்டும் என்று விரும்பியவர். பேசி ஜெயித்துவிடலாம் என்று தவறாகக் கணக்கு போட்டவர். எனவே. பேசுவதற்கு வசதியான ஒரு விஷயத்தை அவர் எடுத்துக்கொண்டார். என்ன விஷயம்? அதை...தொடர்ந்து பேசுகிறேன்.

## 21

அப்போதெல்லாம் தொலைக்காட்சியின் ஆளுமை அதிகமில்லை. கிரிக்கெட் பற்றி நேர்முக வர்ணனையை வானொலியில் மட்டுமே ஒலிபரப்புவார்கள். இவர் யாரிடமோ ஒரு டிரான்சிஸ்டர் கடன் வாங்கி தன்னுடைய மேஜையறையில் வைத்துக் கொண்டு, தனக்கு மட்டும் கேட்கும்படி வசதி செய்து கொண்டு ஒவ்வொரு அரைமணிக்கும் 'இப்போது ஸ்கோர் என்ன' என்று எழுதி அனுப்புவார். அலுவலக வேலையின் அயர்ச்சியிலிருப்பவர்கள் நடுவே வரும் இந்தக் காகிதத்தை உற்றுப் பார்த்துவிட்டு, 'அட' என்று வியப்பார்கள்.

அப்படி வியப்பது அவருக்கு உற்சாகமாகப் போயிற்று. எனவே அவர் எந்த நேரமும் கிரிக்கெட் பற்றிப் பேச ஆரம்பித்தார். வர்ணனையாளர் என்ன சொல்கிறாரோ, அதைக் கவனித்து அப்படியே தானும் பேச கற்றுக்கொண்டார். ஹிண்டு பேப்பரில் போட்டிருக்கிற விமரிசனத்தைப் பாதித் தமிழும் பாதி ஆங்கிலமுமாகச் சொல்லத் தெரிந்துகொண்டார்.

அந்த அலுவலகத்தில் இவரைப்போல கிரிக்கெட்மீது பற்று கொண்டவர்கள் மூன்று நான்கு பேர் இருந்தார்கள் அவர்கள் அத்தனை பேரும் ஆங்கில நாளிதழ்கள் படிப்பவர்கள். அலுவலகத்தில். ரேடியோவைக் காதோரம் வைத்துக்கொண்டு விளையாட்டு வர்ணனையைக் கேட்பவர்கள். அவர்கள் நாலு பேருக்கும் என்ன தெரியுமோ, அதைப் பற்றியே பேசிக்கொண்டு இருந்தார்கள். அடிப்படையான புதிய தகவல் பரிமாற்றம் அங்கு நடைபெறவில்லை. இவருக்குத் தெரிந்ததையே எதிரில் உள்ளவர் பேசிக்கொண்டிருக்க. எதிரில் உள்ளவருக்குத் தெரிந்ததையே அடுத்தவர் பேசிக்கொண்டிருக்க...ஒரு அபத்தமான சூழ்நிலை அங்கு நிலவியது.

ஐந்து நாட்கள் மேட்ச் முடிந்துவிட்டது மறுபடியும் இரண்டு நாள் கழித்து வேறொரு மாநிலத்தில் நடைபெறப்போகிறது. இந்த இரண்டு நாளும் என்ன செய்வது...? பேசுவதற்கு எதாவது வேண்டுமே? எனவே இந்தியாவில் அதிகம் ரன் எடுத்தவர் யார்...? ஆஸ்திரேலியாவில் அதிகம் விக்கெட் எடுத்தவர் யார்...? இங்கிலாந்தில் அதிகம் கேட்ச் பிடித்தவர் யார்...?' என்று தகவல் சுரங்கம் திறக்கப்பட்டது. தேவையோ, தேவையில்லையே...எதிராளியிடம் போய் இந்தத் தகவல் சுரங்கம் திறந்து கொட்டப்பட்டது. மற்றவர்கள் வெறுமே கேட்டுக்கொண்டிருக்க. இவர்கள் இடைவிடாது பேசிக்கொண்டு இருந்தார்கள்.

சமீபத்தில் வேலைக்குச் சேர்ந்த இளைஞர்கள் எல்லாம் பதவி உயர்வு வாங்கிக்கொண்டிருக்க...இவர், கிரிக்கெட் மிக முக்கியமான விஷயம் என்பதுபோல் தன் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு நின்றார். இவரோடு தேர்வு எழுதி அதிகாரியானவருக்கு ரிட்டயரான பின் பன்னிரண்டாயிரம் ரூபாய் பென்ஷன் வருகிறது. இவருக்கு. இன்று நாலாயிரம் ரூபாய்தான் பென்ஷன்

வருகிறது. வாழ்க்கையின் கடைசிக் காலத்தில், இவர் காபிக்கும் சட்டை பித்தானுக்கும் மற்றவரிடம் கை யேந்திக் கொண்டிருக்கிறார். அப்படிக் கையேந்து வதற்காகப் பேசிக்கொண்டிருக்கிறார்.

அதீத பேச்சுப்போல், இன்னொரு அபத்தமான விஷயம்—அதீதத் தூக்கம்.

என்னுடைய அபிப்பிராயத்தில், கணக்கர் வேலை செய்யும் ஒரு இளைஞன் ஐந்து மணி நேரம் தூங்கினால் போதுமானது. கார் மெக்கானிக்காகவோ, வெல்டிங் வேலையோ தச்சுப்பட்டறையோ, இரும்பு வேலையோ செய்கிற இளைஞனாயிருந்தால், ஏழு மணி நேரத்தூக்கம் போதுமானது. நடுவே ஒரு இருபத்து நான்கு மணிநேரம் தூங்கவில்லை... தூங்குகிற நேரம் வேலை செய்யும்படி நேரிட்டு விட்டது' என்று வைத்துக் கொண்டோ மானால், அப்போது எட்டு மணி நேரம் ஒருவன் தொடர்ந்து தூங்கலாம். மற்றபடிக்குப் பத்து மணி நேரம் பதினோரு மணி நேரம் என்று தூங்குகிறவர்கள் எல்லாம் மிகப்பெரிய தவறு செய்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

இளைஞனாக இருக்கும்போது அதிகமாகத் தூங்கு வது ஒருவித மயக்கமான கற்பனையை மனதில் ஏற் படுத்திவிடுகிறது. தூக்கம் போதும். ஆனால் இன்னும் சற்று தூங்கிக் கொண்டிருக்க வேண்டும் போல் தோன்று கிறது. எழுந்து என்ன ஆகப்போகிறது என்று ஒரு அலுப்புவருகிறது. தூக்கமும் இல்லாத விழிப்பும் இல் லாத, ஒரு நிலை தான் மிகப் பயங்கரமான விஷயம். அந்த நேரத்தில், மனம் தன் இச்சைப்படி ஏதேதோ யோசிக்க ஆரம்பிக்கிறது. தன்னால் இயலாத வற்றையெல்லாம் இயலும் என்று ஒரு கதை நெய்யத் துவங்குகிறது.

அரைகுறை தூக்கத்தில் ஏற்படும் சிந்தனைகள் அநேகமாகக் காமத்தைப் பற்றியதாகத்தான் இருக்கிறது. நீங்கள் பணத்தைப் பற்றி யோசித்துக்கொண்டே வரும்போது, பணத்தின் வெற்றியைக் காமத்தின் மூலமாகத்தான் கொண்டாடுவீர்கள். அதிகாரத்தின் வெற்றியை காமத்தின் மூலமாகத்தான் செலவழிப்பீர்கள். அல்லது...

"நம்மபேட்டையில, அப்பா கடையில எண்ணைப் புண்ணாக்கு வித்துட்டுருந்தான் இப்ப எம்.எல் ஏ. கைத்தறி அமைச்சர் பதவி கிடைக்கும்னு சொல்றாங்க. அப்படிக் கிடைச்சுட்டாக்கா, ரொம்ப நாளைக்கு அப்புறம் நம்ம ஏரியாவுலர்ந்து ஒரு அமைச்சர் வந்துடுவாரு. ஆனா என்னா, எண்ணைக்கடை பையன்தான் மந்திரிங்கிறதை என்னால் ஏத்துக்கவே முடியலை..."

ஊர் வியக்க, அந்தச் செய்தி காதுக்கு வரும் 'அடடே நாம் அன்று உழைத்திருந்தால், இன்று எம்.எல்.ஏ. ஆகியிருக்கலாமே...' என்று கற்பனை பிறக்கும் உழைக்காமல் மனம் உழைத்ததாக நினைத்துக் கொண்டு உள்ளுக்குள்ளே ஒரு நாடகம் நடத்தும்.

"நம்ம தெருவுல இருந்த சித்ரலேகா, சௌந்தர பாண்டி, தமிழ்மணி, வெங்கடாசலம் எல்லாருமே டாக்டராயிடடாங்க. அதுல சித்ரலேகாவும் வெங்கடாசலமும் யு.எஸ் போறாங்க. தமிழ்மணி புரூனேபோறான் ஒரு டாக்டருக்கு அங்க என்ன சம்பளம் தெரியுமா...? எடுத்தவுடனேயே ஒரு மாசத்துக்கு ஒரு லட்ச ரூபாயாம்..."

'ஆங்...ஒரு லட்சமா?" திடுக்கிட்டு நெஞ்சை அடைத்து விடுவதுபோல் ஒரு அதிர்ச்சி உடம்பெல்லாம் பரவுகிறது. "ஒரு மாசத்துக்கு ஒரு லட்சமா...?' திரும்பத் திரும்பக் கேள்வி எழுகிறது 'ஒரு மாசத்துக்கு ஒரு லட்சமா...?' திரும்பத் திரும்பக் கேள்வி எழுகிறது.

'ஒரு மாசத்துக்கு ஒரு லட்ச ரூபாய் சம்பாதிச்சா, நான் எப்படி நடப்பேன்...? எப்படி திரும்புவேன்...?' மனம் மெல்ல கற்பனை செய்கிறது. இது ஒருவகை தூக்கம். ஒருவகை சோம்பல்தனம் ஒரு சின்ன சந்தோஷத்துக்காக' இந்தக் கற்பனை யாருமற்ற நேரத்தில் அதிகப்படுத்திப் பார்க்கப்படுகிறது.

''நான் டாக்டராயிட்டனாம்... அடுத்த வாரம் ஃபாரின் போகப் போறேனாம் ஃபிரண்ட்ஸ்லாம் வந்து கைகுலுக்கிச் சந்தோஷப் படறாங்களாம்...'' அவன் கண்ணாடி முன் நின்று நடிக்க ஆரம்பித்தான். நாலைந்து முறை நடந்து பார்க்க ஆரம்பித்தான். சுழல் நாற்காலியில் உட்கார்ந்து திரும்பித் திரும்பிப் பார்க்க ஆரம்பித்தான்.

இந்த மாதிரியான கற்பனையும் அதீதத் தூக்கமும் அருகருகே இருக்கின்றன. உடம்பு அயர்ச்சியில் உறங்கிவிட்டு அயர்ச்சி நீங்கியதும் துள்ளி எழுந்திருக்கிற மனோபாவம் போய் வெறுமே படுத்துக் கிடக்கிற ஒரு சோம்பல்தனம் நிறைந்து விடுகிறது. இந்தச் சோம்பல் என்கிற சேற்றிலிருந்துதான் இத்தகைய கற்பனைக் கொடிகள் நாலாபக்கமும் வேகமாகக் கிளைத்துப் பரவுகின்றன. பூவும் இல்லாமல் காயும் இல்லாமல் எந்த புண்ணியமும் இல்லாமல் ஆற்றங்கரை மேலெல்லாம் விரவிக் கிடக்கின்றன. இந்த மாதிரியான கற்பனைக்குள் வெகு எளிதாகப் பெண்களைப் பற்றிய சிந்தனையும் நுழைந்து விடும்.

டாக்டரான தன்னை ஒரு பெண் துரத்தித் துரத்திக் காதலிப்பது போல் ஒரு தோற்றம் நமக்கு நாமே ஏற்படுத்திக்கொண்டு விடுவோம் டைரக்டராகிவிட்டதால் காலின்கீழ் பலநூறு பெண்கள் மண்டியிட்டுக் கிடப்பதாக யோசனை செய்துகொள்வோம்.

ஆனால் ஆறு, ஏழு, எட்டு மணி நேரங்கள் கற்பனை சுகத்தில் வெறுமே காலாட்டி முக்கால் நினைவாகவும், முணே அரைக்கால் நிலையாகவும் நாம் படுத்துக்கிடப்போம். உதறி எழுந்திருக்கும் வலுவற்று கிடப்போம். 'இது நல்லாத்தான் இருக்கு இப்படியே இருக்கலாம்' என்று நினைத்துக் கொள்வோம்

வெகு நிச்சயமாக நிஜத்தைவிட உண்மையை விட கற்பனை சுகம்தான் கற்பனை இல்லாவிட்டால் நிஜத்தின் வெம்மை தாங்காமல் மனிதனுக்குப் பைத்தியம் பிடித்துப் போய்விடும். அதேபோல் கற்பனைக்குள்ளேயே வெகு நாள் இருந்தாலும் பைத்தியம் பிடித்துப் போய்விடும். நிஜம் எதுவென்று தெரியாமல் புத்தி பேதலித்துவிடும். வெகுநிச்சயமாக தோல்வி உங்களைத் தழுவும் எனவே உள்ளுக்குள் நீங்கள் போடும் நாடகத்தை சரட்டென்று நிறுத்தி 'என்ன என்னைச் சுற்றி நடந்து கொண்டிருக்கிறது? நான் எதற்கு யோக்கியதை? என்ன எனக்குத் தெரியும்? எது தெரியாது' என்று தீவிரமாக, வெகு வெகு தீவிரமாக யோசிக்க ஒரு இளைஞன் துவங்கினால்தான், அவன் தூக்கத்தை ஒழிக்க முடியும். தூக்கத்தை ஒழித்தால்தான் இந்த விதமான யோசிப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

'காது உள்ளோர் கேட்கக் கடவர், என்று வேதாகமத்தில் ஒரு வாக்கியம் வரும் இதற்கு அர்த்தம் உடம்பின் உறுப்பான காது இல்லை, 'கேட்கிற ஆர்வமுள்ளவர்கள் கேட்கிற திறன் உள்ளவர்கள் கேட்க வேண்டும் என்று எண்ணமுள்ளவர்கள் கேட்கட்டும்' என்றுதான் அர்த்தம் புரிந்து கொள்ளட்டும் என்பதுதான் சூட்சுமமானசெய்தி இது எல்லோருக்கும் கேட்கக் கிடைக்காது.

உடம்பின் அயர்ச்சிதானே தூக்கம்? மூளையின் மௌனம்தானே தூக்கம்? இதை வேறுவிதமாக நாம் கைகொள்ள முடியும். அது என்ன என்பதை... தொடர்ந்து பேசுகிறேன்.

# 22

நம் அயற்சிக்கு முக்கியக் காரணம் என்ன தெரியுமா?

தந்திரம். தந்திரம் அதிகமுள்ளவர்கள் வெகுசீக்கிரம் அயர்ந்து போகிறார்கள். அப்படி அயர்ந்து போகாமல் இருப்பதற்கு மறுபடியும் சுறுசுறுப்பு ஏற்றிக்கொள்வதற்கு காபி டீ போன்ற பானங்களை அடிக்கடி எடுத்துகொள்கிறார்கள். தத்திரம்தான் வாழ்க்கை என்று தீர்மானித்து விட்டு, எல்லா நேரமும் எதிரில் இருப்பவரை எடை போட்டு, மனதுக்குள் வேகமாக சாதகபாதகங்கள் பற்றிய கணக்குகள் போட்டு, அப்படி உள்ளுக்குள் கணக்கு போட்டுக்கொண்டே இருக்கிற போதும் எதிராளியிடம் பேச்சுக்கொடுத்து அவருடைய நிலையை அறிந்து கொண்டு நம்மைவிட உயர்வா, தாழ்வா என்று அளவிட்டு அதற்கேற்ற வகையில் பேச்சை திசைதிருப்பி எதிரே இருக்கிற ஆள் நகர்ந்து போவதற்குள் இரண்டு மணி நேர தூக்கம் நிச்சயம் தேவை என்கிற அயற்சிக்கு ஆளாகி விடுகிறார்கள்.

''தந்திரமில்லன்னா வாழ்க்கையில ஜெயிக்க முடியாதுப்பா வாழ்க்கையில வெற்றி இல்லன்னா வாழ்ந்தே புண்ணியமில்லப்பா''—என்று தந்திரசாலிகள் பேசுவதை கேட்டிருக்கிறோம்.

தந்திரமில்லாது வாழ்க்கை சரியாக வருமா? ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் தந்திரம் தேவையாக இருக்கிறதே...?

மனைவியிடம், மக்களிடம்கூட நந்திரமாக நடக்க வேண்டியிருக்கிறதே...? தாயிடம் கூட பொய் சொல்ல

வேண்டியிருக்கிறதே...? என்று எவரேனும் சொன்னால் மெல்ல அவரை நோக்கி சிரிக்கலாம்.

இந்த தந்திரத்துக்கு மூலகாரணம் வெற்றிகொள்ளும் ஆசை. வெற்றி கொள்ளும் ஆசைக்கு அடிப்படையான விஷயம் தன்னை மற்றவரோடு ஒப்பிடல். 'அடடா... அவர் என்ன உயரத்தில இருக்காரு. அதைவிட உயரமா நாம போக வேண்டாமா' என்று தன் பலமறியாது, தன் நிலை அறியாது, தான் ஏதோ ஒரு இடத்துக்கு நகர்வதற்கு ஆசைப்படுவதுதான் இதற்குக் காரணம்.

என்ன விலை கொடுத்து. எதை வாங்குகிறோம் என்பதில் தெளிவாக இருப்பது நல்லது சகல நிம்மதிகளையும் இழந்து, அதற்குப்பதிலாக புகழை வாங்கி என்ன செய்யப் போகிறோம் என்று கேட்டுக் கொள்வது உத்தமமான காரியம். புகழின் உச்சிக்கு போயே ஆக வேண்டும் என்று எண்ணுபவர்களெல்லாம் தங்களைவிட தங்களைச் சுற்றியுள்ளவர்களைப் பற்றியே அக்கறையுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

'இவர் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்? இவருடைய பார்வையில் நான் என்னவிதமாக காட்சியளிக்கிறேன்? இவர் என்னைப் பாராட்ட வேண்டாமா? இவர் என்னைப்பார்த்து பொறாமைப்பட வேண்டாமா' என்ற எண்ணம்தான் முன்னேற்றம் என்ற வழிக்கு நம்மை அழைத்துப்போகிற விஷயமாக இருக்கிறது. இதுதான் அயற்சியின் ஆரம்பம் எப்பொழுது மற்றவரைப் பற்றிய அபிப்ராயங்கள் மனதுக்குள் அதிகமாகிறதோ, எப்பொழுது மற்றவர் அபிப்ராயங்கள்தான் தன் வாழ்க்கையில் முக்கியமான விஷயம் என்று முடிவாகி விட்டதோ அப்பொழுது வெகு நிச்சயமாய் அயற்சி அதிகமாகி விடும். படபடப்பு கூடும் எப்போதுமே நிரந்தரமாய் ஒரு வேடம் போட்டுக் கொண்டிருக்கிற நிலைமை ஏற்படும்.

'நாலுபேர் பாக்கறாங்க, அதனால நிமிர்ந்து உக்காருங்க. நாலுபேர் பாக்கறாங்க, அதுக்காக சட்டை போட்டுக்குங்க. நாலு பேர் பாக்கறாங்க, அதனால தலையை ஒழுங்கா வாரிக்குங்க என்று வாழ்க்கை முழுவதும் மற்றவர்கள் அபிப்ராயப்படி போய்விடும்.

இது தொடர்பாக யோசித்துக் கொண்டிருந்தபோது பாடகர் சங்கர் மகாதேவன் சொன்னதாக ஒரு விஷயம் படித்தேன். 'என் படிப்பான கம்ப்யூட்டரைவிட, இசையின் மீது எனக்குண்டான காதல் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டிருந்தது. மற்றபடி புகழெல்லாம் பறந்து போகிற விஷயம். இந்த நிமிஷம் இருப்பது போல மறு நிமிஷம் இருக்காது. ஒரு கோஷ்டி சூழ்ந்துகொண்டு 'ஆட்டோகிராப்' கேட்டால் சந்தோஷமாகத்தான் இருக்கும். அப்பொழுது என் பாதங்களை பூமியில் அழுந்த பதித்தே இருப்பேன்.'

இதற்கு பெயர் தான் தெளிவு. இதற்கு பெயர்தான் தன்னை உற்றுப்பார்த்தல். இதற்கு காரணம் அமைதி. இந்த அமைதிக்கு காரணம் மற்றவரோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்து எல்லா இடத்துக்கும் மனதை பரவவிடாமல், தன் இனம் என்ன...தன் வலிமை என்ன என்று தெரிந்துகொண்டு மிருதுவாக இருத்தல்.

மாலைகள் விழும்போதும் சபைகளில் பாராட்டப்படும்போதும், விருது பெறும்போதும் இந்த அமைதி ஏற்பட்டுவிட்டால், மற்றவர் விருது வாங்கும்போதும் எந்த சலனமும் இல்லாமல் இருக்கலாம். தான் விருது வாங்கிய மயக்கமோ அல்லது மற்றவர் விருது வாங்கிய எரிச்சலோ இல்லாமல் தன்னுடைய தெளிவில் மிகுந்த அக்கறை செலுத்தலாம். இந்த அக்கறை, தெளிவோடு கூடிய அமைதி மேலும் பல விருதுகளை நமக்கு பெற்றுத் தரும்.

இதை மறந்துவிட்டு, விருதுக்கு குறிவைக்கிற போது பரபரப்பு அதிகமாகி விடுகிறது. அயற்சி கூடிவிடுகிறது. அந்தப் பரபரப்பும் அயற்சியும் உடல்நலத்தை பாதிக்கின்றன இப்படி ஆரவாரமாக இருக்கிறவர்களெல்லாம் தனிமையில் இருக்கும்போது தனக்குத்தானே பேசத் துவங்கி விடுகிறார்கள், சுவரைப் பார்த்து கோபப்படுகிறார்கள். கண்ணாடியில் தன்னைப் பார்த்து பாராட்டிக்கொள்கிறார்கள். இது கிட்டத்தட்ட மன பிழற்சிக்கு அடுத்த நிலை.

இப்படிப்பட்ட பேச்சு உள்ளுக்குள் அதிகமாகி விட்டால் உடம்பு சூடு மிகுதியாகி விடுகிறது. இது ஜீரண உறுப்புகளையும், சுவாசத்தையும், இருதயத்தையும், மூளையையும் வெகு நிச்சயமாய் பாதிக்கும்.

'தந்திரமில்லாத மனிதனை மக்கு என்று சொல்கிறார்களே? வளைத்துப் போடத் தெரியாதவன், அசடு என்று விளிக்கிறார்களே? வெற்றி பெறாதவனை நீ வாழ்ந்ததே வீண் என்று சொல்கிறார்களே?' என்று உங்களில் எவரேனும் கேட்கலாம், வெற்றி பெறுதலை, அல்லது வெற்றியை நோக்கி போதலை நான் தடுக்கவே இல்லை. ஆனால், வெற்றி பெறுவதற்கு தந்திரம் ஒருநாளும் உதவி செய்யாது. உழைப்பு மட்டுமே உதவி செய்யும். உழைப்பில் வருகிற வெற்றிதான் வெகுநாள் உங்களோடு நிற்கும்

அமைதியாய் இருப்பதை இன்னும் ஒரு உதாரணத்துடன் சொன்னால் நன்றாகப் புரியுமென்று நினைக்கிறேன். கதை எழுத வேண்டும் என்கிற ஆவல் என் இருபத்து நான்கு வயதில் மிக பலமாய் என்னைப் பிடித்துக் கொண்டது. எளிதில் புகழ்பெற வேண்டும். மக்களுக்கு நடுவே மரியாதையாக வலம் வர வேண்டும் என்ற ஆசை வேகமாக என்னுள் எழுந்தது.

எழுத்தாளன் ஆகிவிட வேண்டும் என்று தீர்மானித்து விட்டால் அவன் எழுத்தாளன்தானே...ஆகவே எழுத்தாளர் பாலகுமாரன் என்று 'லெட்டர் பேடு' அடித்துக் கொண்டால் என்ன?

இது மிகப் பெரிய அறிவீனம். குழந்தைத் தனம் ஆனால், நல்லவேளையாக எனக்கு ஒரு நண்பன் இருந்தான். என்னைவிட இரண்டு வயது சிறியவனாக இருந்தாலும் மிகுந்த தெளிவுள்ளவனாக இருந்தான். அவன் எனக்கு தெளிவை அற்புதமாக ஊட்டி விட்டான்.

''இது பைத்தியக்காரத்தனம். இதைச் செய்யவே கூடாது. எழுத்தாளனாவதற்கு அடிப்படையான விஷயம் படிப்பு. நீ நிறைய நாவல்கள் படிக்க வேண்டும். ஆங்கில மொழிப் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ் தவிர வேறு ஏதேனும் தென்னிந்திய மொழியைக் கூட நீ அறிந்து கொள்ளலாம். அதிலேயும் நாவல் படிக்க முயற்சி செய்யலாம். படிப்பதைப் புறக்கணித்து விட்டு எழுத்தாளனாக முடியாது. எனவே, எழுத்தாளனாக வேண்டும். என்ற ஆசையிருந்தால் அதற்கு அடிப்படையாக என்ன செய்ய வேண்டுமோ அதை முதலில் செய்'' என்று நெறிப்படுத்தினான். தானே போய், இரண்டு வாசக சாலையில் எனக்காக காசுகட்டி 'கார்டு' வாங்கி வந்தான்.

அந்தப் பொறுமை, கரிசனம், உண்மையான அன்பு என்னை வீழ்த்தியது. இன்னும் உற்றுப் பார்த்த போது, என்னைப் போலவே சிலர் லெட்டர் பேடில் எழுத்தாளர் என்று அடித்துக் கொண்டு, பேனாவைப் பிடித்து எழுதுவது போல் மேஜைமுன் அமர்ந்து போட்டோவுக்கு போஸ் கொடுத்து அல்லது கன்னத்தில் கைவைத்து ஆழமாய் சிந்திப்பது போல் போட்டோ எடுத்துக் கொண்டும் அவைகளை வீட்டில் மாட்டிக் கொண்டு அவஸ்தைப் படுவதையும் உணர்ந்தேன். அந்தப் பொய்மை என நண்ப

னுடைய உதவியால் என் மனதில் ஆழமாகப் பதிந்தது. எழுத்தாளனாக வேண்டுமென்றால் படிக்க வேண்டும் என்பது பட்டவர்த்தனமாக சிறிதுகூட பிசகின்றி புரிந்தது.

அதன் பிறகு படிப்பது என்பதை ஒரு முழு நேரத் தொழிலாக நான் வைத்துக் கொண்டேன்.

உறங்கும் நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் புத்த கத்தோட இருந்தேன். படித்த புத்தகத்தைப் பற்றி நோட்டுப் புத்தகத்தில் சிறிய குறிப்புகள் எழுதினேன். அடுத்தடுத்த புத்தகங்கள் என்று போய்க் கொண்டு இருந் தேன். நான் எழுத்தாளனாகப் போகிறேன் என்று எவ ரிடமும் சொன்னதில்லை. அது எனக்குள் நான் வைத்துக் கொண்ட திட்டமாக, குறிக்கோளாக இருந்தது.

எப்போதும் எழுத்தாளர்கள் மத்தியிலிருந்தேன், அவர்கள் பேசுவதை அமைதியாகக் கேட்டேன். எது சரி. தவறு என்று அவர்களோடு விவாதத்துக்கு போகாமல் அவர்களைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம் செலுத் தினேன்

கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் படிப்பதும், கேள்வி களும், கேள்விகளுக்கு பதில் பெறுவதும் இலக்கிய கூட் டங்களில் பங்கேற்பதுமாய் இருந்தது. கதை எழுத முடியும். ஆனால், எழுதவில்லை. நாவல் எழுதுவதற்கு முயற்சி செய்யலாம். ஆனாலும் முயற்சி செய்யவில்லை. அந்த சக்தியை அடிமனதில் தேக்கிக் கொண்டு ஒவ்வொரு நாவலையும் இது எப்படி படைக்கப்பட்டிக்கும் என்பது போல் தான் கவனமாய் பார்த்து வந்தேன். அந்த நாவல் முழுவதும் மனதில் ஆழமாய்ப் போய் சேரும்வரை போராடினேன். நாவல் சொன்ன செய்தியை மட்டுமல் லாது அந்த நாவல் எப்படி கட்டப்பட்டிருக்கிறது என்ற

கட்டுமான வித்தையும் எனக்கு அப்போதுதான் கை வந்தது.

நான் சொல்வது இந்த அமைதியை, இந்தக் காத்திருத்தலை. இந்த லார்வா பருவத்தை, கூட்டுப்புழுவாய் உள்ளே தவம் செய்து கொண்டிருக்கிற திறமையை ஒரு பொழுதும் இழந்து விடாதீர்கள் எப்போதும் நீங்கள் கூட்டுப் புழுவாய், அமைதியாய் இருக்க முடியும். இது வெட்கக்கேடான விஷயம் அல்ல. மற்றவர்களால் இது கேலி செய்யப்பட்டாலும் சிறிதளவும் அந்த கேலிக்கு காது கொடுக்காதீர்கள். இது உங்களுடைய அமைதியான காலம் என்று புரிந்து கொண்டால் எவர் கேலியும் உங்களை எதுவும் செய்யாது அதனால் வினையும் பயன் பற்றி...தொடர்ந்து பேசுகிறேன்.

# 23

நமக்கு என்ன தேவை என்று நாம் நம்மை கவனிக்காமல் எதையெதையோ தேடிப்போக என்ன காரணம்?

பொறாமை காரணம். அடுத்தவரோடு நம்மை ஒப்பிடல் காரணம் எப்போதுமே அடுத்தவருடைய மறைவான ரகசியங்களை முகர்ந்து பார்த்துக்கொண்டிருப்பது காரணம். அடுத்தவருடைய முகத்தைப் பார்த்து, அவர் சிரித்தால் தான் சிரித்து, அவர் கோபப்பட்டால் தான் கோபப்பட்டு, தன் வாழ்க்கை முழுவதும் அடுத்தவருடைய கைகளில் கொடுத்துவிட்டு இருப்பது காரணம். ''சாராயம் காய்ச்சி வித்த அண்ணன் மந்திரி ஆயிட்டாரே...நான் ஆக முடியாதா?'' என்கிற தவறான கணக்கு காரணம்.

ஒப்பிட்டுக்கொள்ளாமல் இருப்பதற்கு என்ன வழி?

உங்களை நீங்கள் அதிகம் உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கிறபோது அல்லது உங்களை எல்லோரையும் விட மிகத் தாழ்மையானவர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறபோது தான் ஒப்பிடுதல் குணம் வருகிறது

இந்த ஒப்பிடுதல் ஒரு பொறாமையை வளர்க்கிறது. இந்த பொறாமை வெகு எளிதில் முகத்தின் லட்சணத்தை மோசமாக்குகிறது. ஒரு கீழ்வெட்டுப் பார்வையையும் ஒரு கோணல் புத்தியையும் எளிதே இது கொடுத்துவிடுகிறது. விருப்பு, வெறுப்போடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மற்றவர்களைப் பற்றி தவறாக எடை போடுவது மட்டுமல்லாமல் உங்களுடைய சுயமதிப்பீடும் உங்களுக்குள் சரியாக வந்து தங்காமல் போகிறது. உங்களை நீங்கள் அறிவதற்கு மிகபபெரிய இடைஞ்சலை இது ஏற்படுத்துகிறது.

நாராயணன் ஓவியக் கல்லூரியில் நான்கு வருடம் படித்துவிட்டு மிகத்திறமையுள்ள மாணவனாக முதல் வகுப்புச் சான்றிதழோடு வெளியே வந்தான். படித்த நான்கு வருடத்திலும் மூன்று வருடங்கள் 'போர்ட், ரெய்ட்' எனப்படும் ஆளை உரித்து வைத்தாற்போல் வரையும் கலையைப் பழகிக் கொண்டான். அதில் நல்ல தேர்ச்சி பெற்றான்.

"ஏன் இப்ப போய் போர்ட்ரெய்ட் கத்துக்கறே...?" கூடப் படித்தவர்கள் கேட்டார்கள்.

"அதுதானே ஓவியம்?"—நாராயணன் பதில் கேள்வி கேட்டான்.

"இல்ல...மாடர்ன் பெயிண்டிங் கத்துக்சலைன்னா உன்னை வெளியே மதிக்கமாட்டாங்க."

"யார் என்னை மதிக்கணும்? தாடி வெச்சுக்கினு ஜில்பா தலை வெச்சிக்கினு இருக்கிறவனா? தேவையில்ல

ஓவியம்கிறது பார்த்ததை பார்த்தபடி வரையறது. அந்தத்திறமை என்கிட்ட இருக்கு. உங்ககிட்ட இல்லை. அதனால மாடர்ன் பெயிண்டிங்னு ஏமாத்தறீங்க...''

''இல்லை நாராயணா...நீ செய்யற இந்த வேலைக்கு சாதாரண அம்பது ரூபா காமிரா போதும் அந்த காமிரா இந்த போர்ட்ரெய்ட் வேலையைச் செய்யற போது. நீ உட்கார்ந்து பதினைந்து நாள் ஒரே படத்தை வரைஞ்சுகிட்டு இருக்கவேண்டிய அவசியம் இல்லே...''

''காமிராவுல எடுக்கற படமும் என்னோட போர்ட்ரெய்ட்டும் ஒண்ணா? உங்களுக்கு வரையறதுக்கு வரலை. அதனால என்னை திசைமாத்தறதுக்கு ட்ரை பண்றீங்க'' என்று சீறினான்.

வந்து பேசியவர்கள் ஒதுங்கிக்கொண்டார்கள். அவன் பதிலுக்கு நவீன ஓவியத்தைக் கேலி செய்யத் துவங்கினான், அதிலும் குறிப்பாக சீனிவாசனின் ஓவியத்தைக் கேலி செய்யத் துவங்கினான்.

''சீனிவாசன் வரையற படத்தைப்பார்த்தா, பல்லால வரைஞ்ச மாதிரியா இருக்கு, கையால வரைஞ்ச மாதிரியா இருக்கு?''

அவனே சொல்லிவிட்டு, அவனே உரக்கச் சிரித்து மற்றவர்களையும் லேசாகச் சிரிக்க வைத்தான்.

ஓவியக் கல்லூரியில் படித்தவர்கள் எங்கு போனாலும் எதிரும், புதிரும் முட்டிக்கொள்வதுபோல்தான் போவார்கள். அவர்கள் கூடும் இடத்திலெல்லாம் தெரிந்தவர்களைப் பார்க்கின்ற சந்தர்ப்பம் வெகு நிச்சயமாக அவர்களுக்கு ஏற்படும். நகரத்தின் நாலைந்து முக்கிய மையங்களில் மட்டுமே அவர்கள் பழகுவதால், அந்த மையங்களுக்கு வந்து போகிற மற்ற ஓவியர்களை அவர்களுக்கு நன்கு தெரியும். படிப்பு முடிந்தபிறகும் சீனிவாசனை

அநேகமாக வாரத்துக்கு மூன்று, நான்கு முறைகள் நாராயணன் சந்தித்தான்.

''என்னப்பா பண்றே?''—சீனிவாசன் ஒருநாள் ஆதரவாகக் கேட்க...

''இன்னும் போர்ட்ரெய்ட்தான் வரைஞ்சுகிட்டிருக்கேன். வேற இடத்துக்கு மாறல...'' என்று நாராயணன் பதில் சொன்னான்.

''இன்னும் அதையே நினைச்சுக்கிட்டிருக்கியா...? போர்ட்ரெய்டும் நல்ல விஷயம்தாம்பா, ஆனா, அதை விட நவீன ஓவியத்துக்கு மரியாதை ஜாஸ்தியா இருக்குனு சொல்ல வந்தேன்.''

''எனக்கு இதுமேல மரியாதையே இல்ல வரையத் தெரியாதவன்தான் நவீன ஓவியம் வரையறான்.''

''விட்டுடுப்பா. நாம அதைப் பத்திப் பேசவேணாம்''

சீனிவாசன் சொல்ல பேச்சு பட்டென்று அறுந்தது. பேச்சு அறுந்துவிட்டதே தவிர, நாராயணனின் மனம் கெட்டியாக சீனிவாசனைப் பற்றிக்கொண்டது. 'ஓவியன்ங்க' என்றே எவரிடமும் தன்னை நல்ல தமிழில் அறிமுகப்படுத்திக்கொள்ளும் வேகம் ஏற்பட்டது அவன் மொழி கலாசாரம், உடை, நடை, உணவுப் பழக்கம், ஓவியப்பயிற்சி எல்லாமும் எதிராளியைப் பொறுத்தே அமைந்தன. அவனுள், அவன் யார் என்று அவன் கேட்டுக் கொள்ளவே இல்லை.

''தம்பி...மெட்ராஸ்ல கடைகளுக்கு போர்டுல படம் வரையறது இல்லே, ஆனா, பாண்டிச்சேரிக்கு அப்பால கன்யாகுமரி வரைக்கும் எல்லா கடைகளிலும் படம் போட்டு நல்ல போர்டு வைக்கணும்னு ஆசைப்படறாங்க நீங்க ஏன் மெட்ராஸ்ல கிடந்து அவஸ்தைப்படறீங்க.

அந்தப் பக்கம் வந்துடுங்களேன்...'' வேலை தெரிந்தவர்கள் கூப்பிட்டார்கள் அவன் தெற்குப் பக்கம் போனான்.

''எப்படிடா இருக்கான் சீனிவாசன்?'' நாராயணன் வெகுநாள் கழித்து ஓவிய நண்பன் ஒருவனைச் சந்தித்த போது விசாரித்தான்.

''அவனுக்கு என்ன கேடு? அந்த மலையாளத்துப் பொம்பளையைக் கல்யாணம் பண்ணிக்கிட்டான்.''

''யாரு?''

''நமக்கு ஒரு வருஷம் சீனியரா இருந்துதே...அந்தப் பொண்ணு.''

''அட நல்லா இருப்பாளேப்பா. எப்படி இவன்கிட்ட மாட்டினா?''

''எல்லாம் பேச்சு சாமர்த்தியம்தான். இங்கிலீஷ்ல பேசி கவுத்துர்றானுங்க.''

நாராயணன் வரைந்த ஒரு ஓவியம் முகமெல்லாம் சுருக்கமாக அறுபது, எழுபது வயது கிழவன் புகை பிடிப்பது தத்ரூபமாக வரையப்பட்டிருந்தது. அதேபோல, பெரிய தங்க ஹாரம் அணிந்திருந்த நகைக்கடைப் பெண்ணை அவன் ஓவியமாக வரைந்திருந்தான். அதைப் பார்க்காமல் அந்த இடத்தை விட்டு நகர முடியாது. உள்ளது உள்ளபடி வரைந்திருந்தான். அது மிகச் சிறப்பாக இருந்தது.

ஆனால், உள்ளது உள்ளபடி இருக்கும் படத்தில் ஒரு நிமிடத்துக்கு மேல் பார்ப்பதற்கு எதுவுமில்லை என்பதை நாராயணன் உணரத் தவறிவிட்டான். அவனோடு இருந்தவர்களும் அவனுக்கு உணர்த்த முற்படவில்லை. உணர்த்தினால் புரிந்து கொள்வானா என்ற சந்தேகத்

தோடே அவனிடம் அது பற்றிப் பேசாமல் நகர்ந்து போனார்கள்.

"எப்படி அந்த மலையாளப் பொம்பளையை மடக்கினான்?' என்று அறிவதற்கு இவன் ஆவலுற்றான். 'நான் எப்ப கல்யாணம் பண்ணிக்கப் போறேன்?" என்று யோசிக்கத் துவங்கினான்

"என்னத்துக்கு லவ் பண்றது? நீ சரினு சொல்லு... நல்ல துட்டோட லட்சணமா ஒரு பெண்ணைக் கொண்ணாந்து நிறுத்தறேன்..."—அவனின் சொந்த தாய்மாமன் பீடிகை போட, குழப்பமாகத் திருமணம் செய்து கொண்டான். அவன் கடை வைத்துக் கொண்டிருக்கிற கொட்டகையைக் காசு கொடுத்து வாங்கி, அவனுக்குச் சீராக அவன் மாமனார் கொடுத்தார்.

முதலிரவில் மனைவியை அருகே வைத்துப் பார்க்கிற போது, ஏனோ சீனிவாசனின் மலையாள மனைவி ஞாபகத்துக்கு வந்தாள். 'இவள் அழகா...அவள் அழகா...?' என்று மனம் எடை போட்டது. 'வண்ணத்தமிழ் பெண்ணொருத்தி என் எதிரில் வந்தாள்...' என்று தன் மனைவியைக் கொண்டாடத் தோன்றியது. என் மனைவி தமிழ்ப் பெண் என்று அழுந்தந்திருத்தமாகச்சொல்வதற்கு ஆசை வந்தது.

அது வரை மலையாளத்துப் பெண்கள் மீது எந்த அபிப்பிராயமும் இல்லாத நாராயணன், தனக்குப் போட்டியான ஒருவன் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறான் என்பதாலேயே அந்தப்பெண்களைப் பற்றி மட்டமான அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொண்டு விட்டான். மாடர்ன் ஓவியம் பிடிக்கவில்லை என்பது கூட ரசனை சம்பந்தப்பட்ட விஷயமாக இருக்கலாம். மலையாளத்துப் பெண்களையே பிடிக்கவில்லை என்று சொன்னபோது, மனம் திரிபு வாதத்துக்குத் தயாராகி விட்டது என்று அர்த்தமாகிறது.

''என்னப்பா பண்றான் சீனிவாசன்?'— இரண்டு வருடம் கழித்து மறுபடி விசாரித்தான். அதற்குள் நாராயணனின் படங்கள் பாண்டிச்சேரி முதல் கன்யாகுமரி வரை பல்வேறு இடங்களில் பல்வேறு கடைகளின் முகப்பில் அவன் கையெழுத்துத் தாங்கி பளபளத்து நின்றன.

''சீனிவாசனா...கோடம்பாக்கத்துல கடை போட்டிருக்கான் போல...''

''கடையா?''

''கம்பெனின்றான் போல...''

''கம்பெனியா...?''

''சினிமாவுக்கு செட்டுப் போடற ஆர்ட் டைரக்டர் போல...''

''சினிமாவா...ஏன் அங்க போய்ச் சேர்ந்தான்?''

''என்னமோ அதுல காசு வரும்னு நெனைச்சான் போலருக்கு...''

''எதனா படம் பண்ணானா?''

''ஏதோ ஒரு படம் பண்ணானாம். துட்டும் வரலை படமும் வரலை...அவன் கையவிட்டு நாப்பதாயிரம் ரூபா செலவாயிடுச்சாம் அவ்வளவுதான்.''

''நல்ல ஓவியன்ப்பா...இப்படி பாழாப் போயிட்டானே...''

''ஆமாம்...ஆமாம்...''

எதிராளி பின்பாட்டுப்பாட, அவனுக்குத் தன்னைப் பற்றிய கர்வம் அதிகரித்தது. தான் ஜெயித்துவிட்டதாகவும் வேறு யாரோ தோற்றுவிட்டதாகவும் அவனாகவே நினைத்துக் கொண்டான்.

ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இந்த அபத்தம் ஏற்படத் தான் செய்யும். நீங்கள் ஜெயித்துவிட்டீர்களா...அல்லது தோற்றுவிட்டீர்களா என்பதை ஒப்பிட்டுப் பார்த்து ஒரு நாளும் தெரிந்து கொள்ள முடியாது. உங்களை உற்றுப் பார்த்துதான் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாராயணனுக்கோ உலகமே தன் காலின் கீழ் இருப் பதுபோல் தோன்றியது. அவன் மலையாளத்துப் பெண் களை வெறுத்ததுபோல சினிமாவையும் வெறுக்கத் துவங் கினான். 'ஏன்ப்பா ரொம்ப மோசமான இடமாமே அது?' என்று விசாரிக்கத் துவங்கினான்.

கோணலற்ற பார்வையை கைக்கொள்ளுதல் என்பது எளிதல்ல. அதற்கு மிகுந்த பயிற்சி வேண்டும். மனதில் அமைதி வேண்டும். அமைதிக்கு அடிப்படை தெளிவு. தெளிவுக்கு அடிப்படை சத்தியம், சத்தியத்துக்கு நிதர் சனம் என்கிற இன்னொரு பெயரும் உண்டு. அதைப் பற்றி விளக்கமாக...

# 24

ஒரு சிறிய பட்ஜெட் படம் சீனிவாசனுக்குக் கிடைத் தது. காசு செலவழிக்கவே முடியாத ஒரு நிலையில் தயாரிப்பாளர் இருக்க, என்ன கிடைக்கிறதே...அதை வைத்து 'செட்' என்கிற பின்புலத்தைக் கண்ணைக் கவரும் வண்ணம் செய்யவேண்டும். தன்னுடைய பெயர் நிலைத்து நிற்கவேண்டும் என்பதற்காக, சீனிவாசன் கைக்காசைப் போட்டுக் காகிதங்களும் மலர்த் தோரணங் களும் அட்டைகளும் கட்டைகளும் கொண்டுவந்து கண்ணைக் கவரும் விதமாக அடுக்கி, ஷூட்டிங் நடக்கும் போதே 'அட!' என்று பலரை வியக்க வைத்தான்.

பத்து நாள் எந்தக் காசும் வாங்காமல் அவன் 'செட்' நிர்மாணம் செய்தான். திடீரென்று ஒரு நாள் தயாரிப்பாளர் அருகே வந்தார் "நீ பாட்டுக்கு நிறைய செலவு பண்ணிட்டு, அப்புறம் என்கிட்ட வந்து கேக்காதப்பா...' என்று ஆத்திரத்தோடு பேசினார். "இது வரைக்கும் ஆணிக்கு மட்டும் நாற்பது ரூபா ஆகியிருக்குங்க, மத்த படி, வேற எந்தச் செலவும் இல்ல..." என்று சீனிவாசன் சொன்னதும் திகைத்துப் போனார்.

சில சமயம், சில இடத்தில் உழைப்பை இலவசமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த உழைப்புக்கு வேறு விதமான பரிசு, பதக்கம் கிடைத்துவிடுகிறது.

தயாரிப்பாளர் அந்தப் பதிலில் திகைத்துப்போய் "மன்னிச்சுக்கப்பா..." என்று கைகூப்பினார். "சும்மா இருங்கண்ணே...நீங்க ஜெயிச்சுட்டீங்கன்னா, உங்ககிட்ட வட்டியும் முதலுமா வாங்கிடுவேன்..." என்று மிரட்டலாகச் சொன்னான். அவரும் சிரித்தபடி அந்த மிரட்டலை ஏற்றுக் கொண்டார்.

இங்கே நாராயணனுக்கும் உழைப்பு அதிகமாக இருந்தது. ஒரு போர்டு எழுத ஆறு நாட்கள் தேவைப் பட்டன.

"அந்த லேடி படம் இன்னிக்கெல்லாம் பார்த்துட்டு இருக்கலாம். பசங்க தினம் நின்று பார்த்துட்டுத்தான் போறாங்க. அதே மாதிரி, சோடா கலருக்கு படம் வரைஞ்சீங்களே...சைக்கிள் எடுத்துட்டுப் போய் ஒவ்வொரு போர்டா பார்த்துட்டு வந்தோம். எல்லாம் ரொம்ப நல்லாயிருக்கு. ஆனாலும் ரஜினி ரசிகர் மன்றத்துக்கு வரைஞ்சு கொடுத்தீங்களே...அதுதான் இருக்கிற எல்லாத்தையும் விட சூப்பர். பலபேர் உங்க படத்தைப் பார்த்துட்டு. பேப்பரும் பென்சிலும் கொண்டாந்து தானும் வரையறதுக்கு 'ட்ரை' பண்ணாங்க. யாருக்கும் உங்க 'ஸ்ட்ரோக்' வரவே இல்லை. இப்பல்லாம் கடைக்காரங்க

மத்தியில போர்டு எழுதணும்னு பேச்சு வந்தா உங்க பேர்தான் அடிபடுது.''

இங்கே உழைப்புக்கும் கிடைக்கிற காசுக்கும் பெரிய வித்தியாசமில்லை. ஆனால், வயிறு நிரம்ப, அது நாராயணனுக்கு போதுமானதாக இருந்தது. ஆனால், இத்தனை கடின உழைப்பு எவ்வளவு நாள் செய்ய முடியும் என்ற கேள்வியும் அவனுக்குள் இருந்தது.

தரையில் மோதிய காற்று, கீழே கிடந்தவற்றை வாரி எடுத்துக்கொண்டு போவதுபோல, சீனிவாசனும் அவனைச் சார்ந்த அந்த சினிமா குழுவும் பளிச்சென்று உயரே போனார்கள்.

''நாலு கம்பு நட்டு, ரெண்டு புடவை மாட்டி செட்டு போட்டிருக்கான். என்னமா இருக்குது தெரியுமா...? யாரோ புது ஆளு...சீனிவாசனாம்'' என்று சினிமா உலகத்தினர் அவனைப் பற்றிப் பேசத் துவங்கினர்

''பழைய சாமானைத் தூசு தட்டி, பெயிண்ட் அடிச்சுக் கொண்டாந்திருக்கான்பா...ஆணி, பெயிண்ட் தவிர வேற செலவே வைக்கலையாம்.'' அவனைப் பற்றிச் செய்தி பரப்பினார்கள்.

தயாரிப்பாளர், அவனுக்கு காசு கொடுக்கவில்லை. ஆனால். பல தயாரிப்பாளர்களிடம் அவன் திறமையைச் சொன்னார். ''நம்மால் காசு கொடுக்க முடியவில்லை. நாலு தயாரிப்பாளர்களிடம் கைகாட்டியாவது விடுவோம்—'' என்று அவரையும் அறியாமல், அவனுக்கு உதவிகள் செய்தார். அவர் கைநீட்டிய இடங்களெல்லாம் அவனுக்கு வாய்ப்புகள் கிடைத்தன.

படங்களை தேர்ந்தெடுத்து, அவன் முழுவீச்சில் களத்தில் இறங்கினான், காசில்லாதபோதே 'வேலை அற்புதமாக இருந்தது' என்று பாராட்டியவர்கள் சிறிது

செலவழித்து செட்டு போட்டதும் திகைத்துப் போனார்கள்.

“இப்படியெல்லாம் செய்யமுடியுமா. என்ன...? கிரீன் செட்டுன்னா, அசல் கிரீன் செட்டாவே இருக்கு சார், எனக்கு இந்த இடத்தைவிட்டுப் போறதுக்கே மனசில்லே...” உதவி இயக்குநர்கள் கொண்டாடினார்கள். மிகப்பெரிய கம்பெனிகள் அவனைத் தேடிக் கொண்டு வந்தன. விதவிதமாக அவன் ஆலோசனைகள் சொல்ல, அவனுக்குப் பெருத்த தொகை கொடுத்து. அவனைத் தங்கள் பக்கம் இழுத்துக் கொண்டன. சீனிவாசனின் வாழ்க்கை விரைவாக மேல்நோக்கி உயர்ந்தது.

பணம் சம்பாதிப்பு, தொழில், வீடு அமைதல், மனைவி, குழந்தைகள் இவையெல்லாம் பூர்வஜென்மத்து மிச்சங்கள். அதன் விளைவால் நமக்கு லயிப்பவை. மிகச் சாதாரண நிலையிலிருந்து மிக உயர்ந்த நிலைக்கு வருவதற்கு, வெறும் உழைப்பு மட்டுமே காரணமாகி விடாது. கடுமையாக உழைப்பவர்கள் பலபேர். ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தாண்ட முடியாமல் தவிப்பதை, உங்களில் பலர் நன்கு பார்த்திருக்கக்கூடும். அதிர்ஷ்டம் என்கிற காற்றுதான், நம்மை உழைப்போடு அள்ளிக் கொண்டு போய் உச்சாணிக் கிளையில் வைக்கும். இதில் பொறாமைப்படுவதற்கு ஏதுமில்லை. ஒப்பிட்டுப் பார்ப்பதில் லாபமில்லை.

ஆர்ட் டைரக்டராக இருந்த சீனிவாசன் வாழ்க்கையின் மிக உச்சாணிக் கிளையில் பல்வேறு சுக, சௌக்கியங்களுடன் வாழ்ந்து வருவதைப் பார்த்துத் தமிழகத்தின் தென்பகுதியில் இருக்கிற நாராயணனுக்கு வருத்தமாக இருந்தது. ‘இரண்டு பேரும் ஒன்றாகப் படித்தும் அவனுக்கு மட்டும் அட்டைப்படத்தில் வரக்கூடிய அளவுக்கு சிறப்பா...?” என்று வேதனை வந்தது.

தமிழகத்தில் ஓவியத்தைக் குறித்து எந்தப் பத்திரிகையும் இல்லை. ஆனால், சினிமாவுக்கென்று ஏகப்பட்ட பத்திரிகைகள் இருக்கின்றன. அந்தப் பத்திரிகைகள் திரையுலகில் உள்ள பலரையும் விதவிதமாகப் பேட்டிகள் எடுத்துப் போட வேண்டிய அவசியத்துக்கு உள்ளாகின்றன, அதில் எவரெல்லாம் அந்தக் கால கட்டத்தில் பரபரப்பாகப் பேசப்படுகிறாரோ, அவரைப் பற்றிச் சற்றுத் தூக்கலாகவும் எழுதுகின்றன.

அப்படி ஒருமுறை நாராயணனைப் பற்றி ஒரு புத்தகத்தில் கட்டம் போட்டு சிறிய தகவல் வந்தது. 'நாராயணன் எழுதிய மிடி விளம்பரத்துக்கு பெரிய மவுசு இருப்பதாய் அதில் குறிப்பிட்டிருந்தது. அப்போது நாராயணனும் சினிமாவில் வரவேண்டுமென்று முயற்சி செய்து முட்டி மோதி,அடிவாங்கி,, ஒரு வருடத்துக்கு பிறகு அதில் பலன் ஏதுமில்லாமல் போகவே, விலகி மீண்டும் பீடி போர்டு எழுத உட்கார்ந்து விட்டான்.

தூரிகை எடுக்கும் போதெல்லாம் நாராயணனுக்கு சீனிவாசன் முகம்தான் ஞாபகம் வந்தது. பஸ்ஸுக்குக் காத்திருக்கும் போதெல்லாம் சீனிவாசனின் கார்தான் நினைவில் முட்டியது. வீட்டில் உட்கார்ந்து பேசும் போதெல்லாம் சீனிவாசனின் மலையாளத்து மனைவி தான் ஞாபகதநுக்கு வந்தாள். இதனால் சந்தோஷம் போனது. கோபம் அதிகரித்தது. கொதிப்பு அதிகமாகியது. இடைவிடாத ஒரு வேதனை நெஞ்சை அரிக்கத் துவங்கியது.

நாராயணன் சீக்கிரம் கிழடு தட்டிப் போனான். மனம், உடம்பு இரண்டுமே பாதிக்கப்பட்டது. தூரிகை எடுத்த கைகள் நடுங்கத் துவங்கின.

'வரைஞ்சு என்ன ஆகப் போகுது? எதுக்கு வரையணும்? இவன் கொடுக்கிற பத்தாயிரம் ரூபாய்க்கு ராவும்

பகலும் உட்கார வேண்டியிருக்கே' என்று மனம் நொந்தான். பாராட்ட எவரும் இல்லை என்பதால், தனிமையில் இருப்பது அதிகரித்தது. எவரும் பாராட்டினாலும் மனம் நம்ப மறுத்தது. இந்த நோயிலிருந்து நாராயணனால் மீளவே முடியவில்லை.

சீனிவாசனுக்கோ அடுத்தவரைப்பற்றிய பிரக்ஞையே இல்லை. ஒவ்வொரு வேலையும் புதியதாக இருந்தது. தான், தன் வேலை என்று மனம் லயித்ததால் வேறு சிந்தனைக்கு இடமில்லாமல் போனது.

ஒப்பிடுதல் செய்யச் செய்ய உங்களுக்குத்தான் வேதனை. ஒருவரின் வெற்றியின் ரகசியம் எது என்று தெரியாமலேயே, அவர் உயர்வதைப் பற்றி மட்டுமே மனதுக்குள் பொருமி வேதனைப்படுவது எந்த விதத்திலும் லாபம் தராது. ஆனால், புத்தி இதை எவ்வளவு தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தாலும், ஒப்பிடுதலை விட்டு நகர்வதே இல்லை. இதைச் சற்று வன்முறையாக வலுக்கட்டாயமாக நம்மிலிருந்து பிரித்து விலக்கி வெளியே வீசியெறிந்து, 'நான், என்திறமை, என் வேலை, இதில் உண்டான சாதக பாதகங்கள் என்ன என்று யோசிப்பதற்கு மிகுந்த மனோபலம் வேண்டும்.

பலம் குறைந்தவர்கள்தான் ஒப்பீடு செய்து பார்க்கிறார்கள். ஒப்பீடு செய்யச் செய்ய இன்னும் பலம் குறைந்துபோகிறது. ஒப்பிட்டுப் பார்ப்பது திகைப்பை ஏற்படுத்தி, அந்தத் திகைப்பு சில சமயம் 'நான் ஜெயித்தால், எனக்கு வாய்ப்புக் கிடைத்தால், நான் மட்டும் அந்தவிதமாக முன்னேறிவிட்டால்' என்று கனவுக்கு வழி வகுத்துவிடும். கனவு இப்போது கையிலிருக்கும் வேலையையும் நழுவவிட வைத்துவிடும்.

என் சக எழுத்தாளர்களுடைய வளர்ச்சியை, வேகத்தை, அவர்களுடைய செயல்திறனை, அவர்கள்

எழுதும் புத்தகங்களை நான் உன்னிப்பாகக் கவனிப்பது வழக்கம். ஆனால், ஒருபோதும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வது கிடையாது, அவர்களின் வளர்ச்சி என்ன என்று அளந்து பார்ப்பது கிடையாது. அவர் வாழ்க்கையின் பலம், பலவீனம் என்ன என்று முகர்ந்து பார்ப்பது கிடையாது, 'அவர் தோற்ற இடங்கள் எத்தனை? மாறிய பத்திரிகைகள் என்னென்ன? செய்ய முடியாத வேலைகள் என்ன என்று நான் பட்டியலிடுவது இல்லை.

ஒரு எழுத்தாளன் 'கம்யூனிஸ்ட் கட்சியா? அது எப்படி தோற்றது? அது எப்படி ஒரு தமிழனை, இந்தியனை பாதிக்கிறது' என்று நாவல் எழுதினால், "அடடே, இதை நாவலாய் எப்படி எழுத முடிகிறது" என்று நான் ஆச்சர்யப்பட்டு, அந்த நாவலுக்காகக் காத்திருப்பதுண்டு வாங்கிப் படிப்பதற்குப் பரபரப்பது உண்டு. இந்த மாதிரி விஷயத்தை நாம் கையாள வேண்டும் என்று முயற்சியில் இறங்குவது உண்டு.இப்படி வேறு எந்த விஷயத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று சிந்திப்பது உண்டு.

அடுத்தவர்களின் வெற்றிகள் நமக்கு ஏணிப்படிகள் என்றுதான் நான் நினைக்கிறேன். அடுத்தவர்களின் தோல்விகள் நமக்கு நல்ல பாடங்கள் என்று நினைக்கிறேன்.

ஒப்பிட்டு அசூயைப்படாத இடத்தைப் பற்றிச் சொன்னேன் அல்லவா? அதேபோல அடுத்த அத்தியாயத்தில் பரபரப்பாக இல்லாமல் இருப்பது பற்றி பேசப்போகிறேன். எதைக் கற்றுக் கொள்கிறீர்களோ, இல்லையோ பரபரப்பில்லாமல் மென்மையாய், நிதானமாய். அமைதியாய் இருக்க சில உபாயங்கள் இருக்கின்றன. அவற்றைத் தயவுசெய்து கற்றுக்கொள்ளுங்கள்.

# 25

படபடப்பாக இருப்பது மரபணுவோடு சம்பந்தப் பட்டதோ அல்லது பரம்பரையின் காரணமோ என்று எனக்கு சில சமயம் தோன்றுவதுண்டு. இல்லையெனில் இளம்வயதில் பெற்றோர்கள் பரபரப்பாக இருப்பதை உற்றுப் பார்த்துவிட்டு, குழந்தைகள் தானும் அப்படி நடிக்கத் துவங்கிவிடுகிறார்களோ என்ற எண்ணமும் ஏற்பட்டதுண்டு.

ஆனால் படபடப்பாக இருக்கிற போது விரயமாகும் சக்தி கொஞ்சநஞ்சமல்ல. அவ்வாறு படபடப்பாக இருப் பது திறமையின்மையின் ஒரு அடையாளமாகவே எனக் குப் படுகிறது. மிகுந்த படபடப்போடோ அல்லது பரவசத்தோடோ இருப்பதில் ஒரு குழந்தைத்தனம் வெளிப்படுகிறது. அந்தக் குழந்தைத்தனத்தை இளம் வயதிலேயே சற்று ஒதுக்கி வைத்து விட்டால் பிறர் பேசு வதைக் கவனிப்பதும், கவனித்துப்பேசுவதும், பேசுவதைப் புரிந்து கொள்வதும், புரிந்து கொண்ட பிறகு, அதை மறுபடியும் உட்கார்ந்து ஆறஅமர யோசிப்பதும், தெள்ளத் தெளிவான ஒரு முடிவுக்கு வருவதும் எளிதாக ஆகிறது. இல்லையெனில், இந்த நிலைக்கு வரவே முடியா மல் எப்போதும் பரபரப்புக்காகவே எதிர்பார்த்து இருக் கின்ற ஒரு ஆவல், அசட்டுத்தனம் நம்மிடையே பரவி விடுகிறது. சிறிய விஷயத்தையும் மிகைப்படுத்திச் சொல் கிற பொய்மை குணம் படர்ந்துவிடுகிறது.

நான் அப்போது இன்சூரன்ஸ் கம்பெனியில் வேலைக் குச் சேர்ந்த புதிது. ராயப்பேட்டை பீட்டர்ஸ் ரோட்டில்

அந்த இன்சூரன்ஸ் கம்பெனி இருந்தது. நான் அங்கு வேலை செய்து கொண்டிருந்தேன். ஒருநாள் தெருவில் ஒரு கார் கிரீச்சிட்டு நிற்கும் சத்தமும் டமாரென்று ஒரு வாகனத்தின் மீது இன்னொரு வாகனம் இடிபடுகிற சத்தமும் கேட்டது. அலுவலகத்தில் அமைதியாக வேலை செய்து கொண்டிருந்த அத்தனை பேரும் நிமிர்ந்து பார்த்தார்கள். எல்லோரும் அந்தச் சத்தத்தில் ஆவலாகக் கவனம் செலுத்தியதை நான் உற்றுப் பார்த்தேன். என்ன நடந்தது என்று இறங்கிப் போய் தெரிந்து கொள்ள நானும் ஆசைப்பட்டேன். ஆனால், செய்து கொண்டிருக்கிற வேலையோ மிக முக்கியமானது. அவசரமானது.

அந்தவேலையிலிருந்து மனம் விலகி, வாசலில் கேட்ட சத்தத்தின் மீதே இருந்து, 'என்ன நடந்தது, ஏது நடந்தது' என்று பேசத் துவங்கி, வலப்பக்கம் ஜன்னல் வழியே பல பேர்கள் எட்டிப் பார்த்து சத்தம் வந்த இடத்தை உற்றுப் பார்ப்பதையும் கவனித்து, அதே நேரம் வெளியே போகவும் முடியாமல்நான் இரண்டுங்கெட்டானாக அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தேன்.

அப்போது தொலைவிலிருந்த அதிகாரி என்னை அழைத்தார். "கீழே போய், தெருவில் இறங்கி என்ன நடந்தது என்று பார்த்து விட்டு வந்துவிடு ஒரு முறை பார்த்து விட்டாயென்றால் உன் படபடப்பு அடங்கும். அதன் பிறகு கையிலிருக்கிற வேலையை நீ ஒழுங்காகச் செய்வாய். வேலையும் செய்யாமல், போய்ப் பார்க்கவும் பார்க்காமல் வெறுமே குட்டி போட்ட பூனையாக ஏன் அலைந்து கொண்டிருக்கிறாய்...?" என்று சொன்னார்.

நான் இறங்கிப் போய்ப் பார்த்த போது, ஒரு ஆட்டுக் குட்டிக்காக ஒரு லாரி பிரேக் போட்டிருக்கிறது. லாரியின் உள்ளே வைத்திருந்த தகடுகள் முன்னே நகர்ந்து, லாரிக் குள்ளேயே இடதும் வலதும் அடிபட்டு பெருத்த சத்தத்தை

ஏற்படுத்தியிருக்கிறது. ஆட்டுக்குட்டி போனதும் லாரியும் போய் விட்டது. வாயிற்காப்போன் நடந்ததைச் சொன்ன போது, எனக்கு சப்பென்று ஆகிவிட்டது. 'இதற்காகவா இத்தனை பரபரத்தோம்' என்று வெட்கம் ஏற்பட்டது.

இதற்கு இரண்டு காரணங்கள் ஒன்று கையிலிருக்கின்ற வேலையின் மீது நாட்டமின்மை. இரண்டாவது எந்நேரமும் பரபரப்பாக ஏதாவது ஒரு விஷயத்தை மென்று கொண்டே இருக்க வேண்டிய அவசியம், அந்த அவசியத்தால் ஏற்படுகிற ஒரு ஆத்திரம்.

இந்தக் குழந்தைத்தனம் பலபேரிடம் நாற்பது ஐம்பது வரைகூடத் தொடர்ந்து இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். வேலையில் ஒருமுகப்படுதலை, பேச்சின் போது ஒருமுகப்படுதலை, அமைதியாக இருத்தலை இந்தப் பரபரப்பு அறவே கெடுக்கிறது இதில் யாருக்கும் எந்த லாபமும் இல்லை

அப்படிப் போய் விபத்து ஏதும் இல்லை என்று பார்த்து விட்டு வந்த பிறகு, என் பரபரப்பு பற்றி அந்த அதிகாரி எனக்கு எடுத்துக் காட்டினார். அதற்குப் பிறகு நான் பரபரப்பாக இருப்பதை மிகக்கவனமாகத் தவிர்த்து வருகிறேன்

மனம் பரபரக்க வாட்டமாய் பரபரப்பான செய்திகள் ஏதும் இல்லையென்றால், அந்த மனம் சும்மா இல்லாது பரபரப்பான செய்திகளைப் பொய்யாகவேனும் வெளியே சொல்லத் தொடங்கிவிடும். வாசலுக்குப் போய் அந்த விபத்து பார்த்துவிட்டு திரும்பும் போது, அட, ஒரு நல்ல விபத்து இங்கு ஏற்பட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். போய் விலாவாரியாக உள்ளே இருக்கிறவர்களுக்கு விளக்கிச் சொல்லலாமே 'எதிரே ஒரு பஸ் வந்தது. இந்தப் பக்கம் ஒரு லாரி வந்தது, லாரி ஆட்டுக்குட்டிக்காக

வலதுபுறம் ஒதுங்க, பஸ்ஸின் மீது பட்டு பஸ் திசைமாறி இடப்பக்கச் சுவரில் மோதி, உள்ளுக்குள்ளே பதினாறு பேருக்குக் காயம்' என்று மனம் உடனடியாக ஒரு பொய்யைக் கற்பனை செய்து கொண்டது இப்படிச் சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டது. பொய்யான பரபரப்பு நமக்குள் நுழைகிற நேரம் இது.

கிட்டத்தட்ட என் வயதுடைய இன்னொரு நண்பர் இந்தப் பரபரப்பு தேவைப்பட்டு. எப்போதும் ஆண்—பெண் விஷயங்களையே அதிகம் பேசிக் கொண்டிருப்பார். 'இவன் இவளோடு தொடர்பு, அவன் அவளோடு தொடர்பு' என்று கதையளந்து கொண்டிருப்பார். வெறுமே வெகு சாதாரணமாக ஒரு ஆணும் பெண்ணும் பார்த்துக் கைகூப்பினால் கூடப் போதும். அதை மிகப் பெரிதாகப் கொண்டு வந்து விடுவார். அவர் பேச்சினால் தாக்கப்பட்டுச் சீரழிந்த குடும்பம்கூட ஒன்று உண்டு. அதைப்பற்றி அவர் சிறிதும் கவலைப்பட மாட்டார். ஆனால், அவருக்குத் திருமணாகி, அவருடைய வயதுக்கு வந்தமகள் ஓடிப்போன போதுதான் இந்தவிஷயம் பற்றிய வேதனை என்னவென்பது அவருக்குப் புரிந்தது.

நகரத்தைவிடக் கிராமங்களில் இருந்த பரபரப்புக்கு ஏங்குதல் அதிகமிருக்கிறது. ஏனெனில், பலருக்குக் காலையில் எழுந்து செய்ய வேண்டிய வேலை என்று எதுவும் இல்லை. அப்படியே வேலைகள் இருப்பின் திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான வேலைகளாக இருப்பதால், அதைச் செய்வதில் நாட்டமில்லை ஏதோ திடீரென்று வெடித்து எல்லோரும் திகைத்து அந்த திசைநோக்கி ஓடினால், அந்த ஓட்டம் மிகச் சுகமாக இருக்கிறது.

தூங்குமூஞ்சி மரங்களும் கருவேலஞ்செடிகளும் சூழ்ந்துள்ள ஒரு கிராமம் பெரிய லாரிப்பாதை ஒன்றின்

அருகே இருக்கிறது. அந்த லாரிப் பாதையிலிருந்து நூறு கெஜம் தூரத்தில் ஊர் உள்ளடங்கி இருக்கிறது. விவசாயம் தவிர, கோழி, ஆடு, வளர்ப்பு தவிர, அங்குள்ள ஜனங்களுக்கு பெரிய வேலைகள் ஏதுமில்லை. அந்த நீண்ட நெடுந்தூர லாரிப் பாதையில் ஏதேனும் ஒரு விபத்து ஏற்பட்டதென்றால், அங்கு காரோ, பஸ்ஸோ, லாரியோ அந்தக் கிராமத்துக் கோழியையோ ஆட்டையோ ஆட்களையோ லேசாக உரசிவிட்டதென்றால் ஒரு நானூறு ஜனங்கள் ஓடிவருவார்கள்.

கையில் ஆளுக்கு ஒன்றாகக் கத்தியோ. கட்டையோ கல்லோ எடுத்து வருவார்கள், எடுத்தவுடனேயே தாக்க ஆரம்பித்து விடுவார்கள். பரபரப்புக்கு ஏங்குகிற பரிதாப குணத்தின் வெளிப்பாடுதான் இது.

அடிபட்டுக் கிடக்கிற உயிரை ஆஸ்பத்திரிக்கு எடுத்து போகவோ அல்லது அப்படி அடிபட்டுவிட்டார் என்று தெரிந்து கையோடு ஒரு மருத்துவப் பெட்டியை எடுத்துப் போகவோ அங்குள்ள யாருக்கும் உடனே தோன்றாது.

''ஒரு வருடத்துக்கு பத்து பன்னிரண்டு விபத்துக்கள் இந்த நெடுஞ்சாலையில் நடக்கிறது என்று சொல்கிறார்களே...ஒரு முதலுதவிப் பெட்டியை நீங்கள் இங்கு தயார் செய்து வைத்துக் கொள்ளக்கூடாதா...?'' என்று கேட்ட போது, ''அப்படி ஒரு எண்ணம் தங்களுக்கு இதுவரை வந்ததே இல்லை.'' என்று வருத்தத்தோடு அவர்கள் பதில் சொன்னார்கள்.

இன்னொரு கிராமத்தின் கல்வெட்டுக்களைப் படிக்கப் போனபோது ஏற்பட்ட ஒரு சம்பவத்தைப் பார்த்து நான் திகைத்துப் போனேன்,

ஒரு சைக்கிள்மீது மாருதிவேன் ஒன்று மோதிவிட்டது. அந்த மாருதிவேனை மடக்கி, அதனுள்ளிருந்தவர்களிடம் 'அஞ்சாயிரம் கொடு' என்று அவர்கள் மிரட்டினார்கள். இரண்டாயிரம் கிடைத்தது. உடனே அவர்கள் அதைப் பங்கு போட்டுக் கொண்டார்கள். 'நாங்க எப்பவுமே இப்படித்தான்' என்று பெருமை பேசிக் கொண்டார்கள். சிறுவர்—சிறுமியர் ஆண்—பெண் இளையோர்கள்—முதியோர் ஒட்டுமொத்தமாக இதில் ஈடுபட்டார்கள். அவர்களோடு பத்து நாட்கள் தங்கினால் அவர்களுடைய பரபரப்பு. பரபரப்புகளை ஏற்படுத்தும் தன்மை, பரபரப்பை ஏற்கும் மனநிலை நம்மையும் பற்றிக் கொள்ளும் என்பது எனக்குத் தெளிவாகப் புரிந்தது.

நன்றாக உற்றுப் பார்த்தீர்களென்றால் சாதித்தவர்களெல்லாம் அமைதியாக உட்கார்ந்திருக்கிறார்கள். அமைதியாக உட்கார்ந்து யோசித்திருக்கிறார்கள். அந்த அமைதி உங்களுக்கு வேண்டுமெனில், உங்களைச் சுற்றி என்ன பரபரப்பான நிமழ்ச்சிகள் நடந்தாலும் நீங்கள் அதிராமல் மற்றவர் எல்லோரையும் பேசவிட்டு, ஆடவிட்டு வேடிக்கை பார்க்க வேண்டும். எப்படியெல்லாம் மக்கள் பேசுகிறார்கள்...எப்படியெல்லாம் அதிர்வடைகிறார்கள் என்று கவனிக்கவேண்டும். அந்த அதிர்வடைதலைப்பற்றி, அது ஆபாசமான செயல் என்கிற எண்ணம் உங்களுக்கு வரவேண்டும்.

உலகில் மிக ஆபாசமான விஷயம் அம்மணமாகத் திரிவது கூட அல்ல. அதிர்ந்து பேசுவதுதான். கடிவாளம் இல்லாமல் மனதைச் செலுத்தி, வார்த்தைகளைக் கண்டபடி இறைப்பதுதான். இப்படிப் பேசுகிறவர்களுக்குப் பதில் தாக்குதல் வந்தால், எதிர்விளைவு ஏற்பட்டால் என்னவாகும்?

# 26

வார்த்தைகளைக் கண்டபடி இறைத்துப் பேசுகிற வர்களுக்கு எதிர்த் தாக்குதல் வந்தால் ஒரேயடியாகப் பதுங்குவார்கள். அந்த எதிர் விளைவுக்குப் பயந்து அவர்கள் 'மன்னிச்சுக்குங்க ஐயா, தெரியாமப் பண்ணிட்டேன்,' என்று வெட்கமின்றிச் சொல்வார்கள். வார்த்தைகளைக் கண்டபடி இறைத்தது தவறு என்று உடனே உணர்ந்து விட்டது போலச் செயல்படுவார்கள்.

இந்தப் பரபரப்பில் இன்னொரு விஷயமும் அடங்கியிருக்கிறது. இந்த பரபரப்புக்கு ஏங்குகிற மனம்தான் குடிப்பதற்கும் ஏங்குகிறது. மது அருந்துவது பரபரப்பை அதிகமாக்குகிற விஷயம் என்பதால் தான், மது அருந்துவது நிறைய பேருக்குப் பிடிக்கிறது தீர யோசித்தால், மது அருந்துவது மட்டுமல்ல, காதலிப்பதும் கூட அப்படித்தான்.

காதலிப்பது என்பது இன்னொரு மனதை ஜெயிக்கிற விஷயம். அதற்கு திட்டமிடல் வேண்டும். திட்டமிடலுக்கு அமைதி வேண்டும். அந்த அமைதியில் ஆலோசனை செய்து, ஒரு முடிவுக்கு வந்தால்தான் ஒரு பெண்ணை ஜெயிப்பது எளிதாகக் கைக்கூடும். அதனால் தான் பரபரப்புக்கு ஏங்குகிற பலராலும்கூட, அதே

அளவு பரபரப்புத் தருகிற விஷயமான காதலில் ஜெயிக்க முடிவதில்லை.

மது அருந்துவது அவ்விதம் அல்ல வெறுமே ஓய்வாக வெகுநேரம் இருந்து விட்டு, அந்த ஓய்வு நேரத்தை, அமைதியைத் தாங்க முடியாமல் ஏதேனும் பரபரப்பாக நடந்தால் நன்றாக இருக்குமே என்று யோசித்து, காசு கொடுத்து மதுவை வாங்கி, வாயில் ஊற்றிக் கொண்டு தானே கத்தி, தன்னைத்தானே பார்த்து ஆனந்தப்பட்டு, நாலு பேரின் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தாக அமைகிற முட்டாள்தனம்தான் அது.

குடிகாரர்கள் தன்னைச்சுற்றி எதுவும் பரபரப்பாக நடக்காது போனால் தானே பரபரப்பாக நடந்து கொள்வது என்று முடிவு செய்து குடிக்க ஆரம்பிக்கிறார்கள் 'கொன்னுடுவேன்' என்று தள்ளாடியபடி பனைமரத்தைப் பார்த்துப் பேசுகிறார்கள். சுவரோடு சண்டை போடுகிறார்கள். தன் நிழலிடம் தானே மன்னிப்பு கேட்கிறார்கள். பெரிய வீரர்களாகத் தங்களை எளிதில் நினைத்துக் கொள்கிறார்கள். 'இந்தப் படை போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா?' என்று குழு மனப்பான்மையோடு குதித்து ஆடுகிறார்கள். யார் யாருக்குத் துணை எப்போது துணை, எவ்வளவு நாள் துணை என்கிற நிதானம் இல்லாமல் பெரிய கட்டுக்கோப்புப் பட்டாளம் போல ஆட்டம் போடுகிறார்கள். 'நாம் எல்லோரும் நண்பர்கள்' என்று இறுக்கிக் கட்டிக் கொள்கிறார்கள். பிரச்னை வரும்போது, அந்த நட்பு வெகு எளிதில் முறிந்து போகிறது ஏமாற்றிவிட்டு ஓடிப் போகிறது.

குடித்துவிட்டு கூக்குரலிடுகிறவர்கள் எவரும், எப்போதும் எவருக்கும், எந்த விஷயத்திலும் உதவியாக இருந்ததாகச் சரித்திரமில்லை. கூச்சல் உள்ளவர்கள் ஜெயித்ததாயும் சரித்திரமில்லை. தோல்விதான் அவர்களைத் தழுவி வந்திருக்கிறது.

வயதாகி, உடல் சோர்ந்து, ஒத்துழைக்க மறுக்கிற நேரத்தில்தான் அவர்களைத் தனிமை சூழ்ந்துகொண்டு கொல்கிறது. அப்போது திரும்பிப் பார்க்கும் போது, எவருக்கும் உபயோகமில்லாமல், எந்த லாபமுமில்லாமல், எந்த முயற்சியும் இல்லாமல், எந்த வெற்றியும் இல்லாமல் வெறுமே வாழ்ந்திருக்கின்ற வேதனை புரியும். அப்போது ஏற்படுகிற வேதனையைக் குறைக்க, மீண்டும் குடிப்பார்கள். அப்படி குடிக்கிற அநேகம் பேர் தற்கொலைக்கு முயற்சிப்பார்கள். ஏனென்றால், அவர்களால் தோல்வியால் கிடைக்கிற இந்த தனிமையைத் தாங்கவேமுடியாது.

ஒரு தினசரியை மூன்று மாதங்கள் சேர்த்து வைத்து தற்கொலையை மட்டும் குறிந்துக் கொண்டு வந்தோமென்றால், ஆண்களின் கணக்கு அதிகமாக இருப்பதை வெகு நிச்சயமாக நாம் அறிந்து கொள்ள முடியும். பெண்களைவிட ஆண்கள் அதிகம் பரபரப்புக்கு அலைவதே இதற்குக் காரணம்

தற்கொலைக்கு மட்டுமல்ல, கொலைக்கும் இந்தப் பரபரப்பே காரணம். வன்முறைகளுக்கும் இந்தப் பரபரப்பே காரணம்

உண்மையில் ஜெயித்தவர்கள் யார் என்று உற்றுப் பார்த்தால். யார் நெடுநாள் தங்கள் வெற்றியைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள் என்று ஆழ்ந்து யோசித்தால், கவனமாக அவர்கள் வாழ்க்கைச் சரித்திரத்தைப் புரட்டி பார்த்தால், தினசரி ஏதோ ஒரு நேரம் அவர்கள் அமைதி யாக அமர்ந்து தன்னைப் பற்றி யோசிக்கிறார் என்பது தெளிவாகிவிடும்.

பரபரப்பு எப்படி பழக்கமாகிறதோ, அதேபோல் அமைதியும் பழக்கத்தினால் ஏற்படுவதுதான் உங்களுக்கு ஒரு நண்பர் இருந்து, அவர் அமைதியாக இருப் பதைக் கவனித்து விட்டீர்களென்றால்,அந்த அமைதியால் ஈர்க்கப்பட்டீர்களென்றால், அந்த அமைதி உங்களுக்கு வேண்டுமென்று ஆசைப் பட்டீர்களென்றால் வெகு எளிதில் அந்த அமைதியை நீங்கள் கைக்கொள்ளமுடியும் உங்கள் நண்பர் கூட்டம் பரபரப்பாக, அலட்டலாக, ஆக்ரோஷமாக இருப்பின், உங்களுக்குள்ளும் இந்தக் குணங்கள் அதிகம் படர்ந்து விடும்.

ஆத்திரமான நண்பர்கள் அதிகமிருப்பின் தவிர்த்து விடுங்கன். அவர்களை விட்டு விலகி வந்து விடுங்கள். அப்படி விலகவில்லையெனில், சில நாட்கள் கழித்து, உங்களால் பிரிய முடியாதபடி அவர்களிடம் ஒரு பற்றுதல் ஏற்பட்டுவிடும். அவர்களைத் தேடி நீங்களே போவீர்கள் வாழ்க்கை திசைமாறிப் போகிறது என்பது இங்கு உங்களுக்குப் புரிந்துவிடும். இருப்பினும், தவிர்க்க முடியாதபடி நீங்கள் போய்க் கொண்டுதான் இருப்பீர்கள்.

சில இடங்களில் இந்த ஆத்திரங்கள் ஜெயிக்கலாம், ஆனால், பல நேரங்களில் இந்த ஆத்திரச் செயல்கள் மிகக் கடுமையான விளைவை ஏற்படுத்திவிடும்.

பரபரப்பு மனசுக்குள் வந்து விட்டால், அது நம்மை விட்டு விலகிப் போவது மிகமிகக் கடினம் என்பதைத் தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். அதனால், உங்கள் குணம் சாகும் வரை பரபரப்பான குணமாக மாறித் தொலைத்து விடுகிறது. பிரியமான மனைவியிடம் அன் பான குழந்தைகளிடம் நீங்கள் ஆத்திரமாக நடக்கும் புருஷனாக, தகப்பனாக மாறி, அவர்களுடைய வெறுப் பையும் சம்பாதித்துக் கொள்கிற அசிங்கம்தான் ஏற்படு கிறது.

பரபரப்பில்லாமல் இருப்பதற்கு என்ன வழி...? எது செய்தால் அமைதியாக இருக்கலாம் என்று உடனே உங் களில் சிலருக்குக் கேட்கத் தோன்றும். அப்படிக் கேட் கவும்கூட சிலருக்குத்தான் தோன்றும். சுருக்கமாகச் சொல்கிறேன். புரிந்து கொள்ளுங்கள்.

உண்மையான ஒரே வழி—தியானம் செய்தல். ஆசன சித்தி ஏற்பட்டால்தான் அந்த வித்தை வரும்.

**அந்த ஆசன சித்தி எப்போது ஏற்படும்...?**

நான் பெரியவனல்ல. நான் இங்கு தற்காலிகம். என் வாழ்க்கை தற்காலிகம். என் உடல்பலம் தற்காலிகம், என் புத்தி தற்காலிகம் என்கிற அடக்கம் ஏற்பட வேண்

டும். தான் மிகப்பெரிய கொம்பு என்று நினைத்த எல்லோருமே உடைக்கப்படுகிறார்கள். ஒதுக்கப்படுகிறார்கள்.

**இந்தத் தற்காலிகம் பற்றிய நினைப்பு எப்போது ஏற்படும்...?**

பெரிய கொம்பு என்று அலைந்தவர்கள் எல்லாம் தரையோடு தரையாகத் தேய்க்கப்பட்டதைக் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தால், அது நமக்கு நன்கு புரிந்து விடும்.

**இது எப்போது பார்க்கக் கிடைக்கும்...?**

என்ன வாழ்க்கை இது...? என்ன செய்து கொண்டிருக்கிறேன். ஏன் இவன் பெரிய ஆள்...? ஏன் இவன் சிறிய ஆள் என்று மற்றவர்களை உற்றுப் பார்க்கத் துவங்கினால், இந்தத் தோல்வியின் தேய்மானங்கள் உங்களுக்குப் புரிந்து போகும். கொம்புகள் உடைவது பிடிபட்டுப் போகும்.

**எப்போது அந்த மாதிரி கேள்விகள் உள்ளுக்குள் எழும்...?**

உங்களுக்குத் தோல்விகள் ஏற்படும்போது எழும். அவ்வாறு தோல்விகள் ஏற்படும்போது, நமக்குள் உண்டாகும் அமைதியை இதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**அதை எப்படி பயன்படுத்திக் கொள்வது...?**

உங்களுக்குத் தோல்விகள் வந்து விட்டதல்லவா...? ஏதேனும் ஒரு இடத்தில் அமர்ந்துக் கொண்டு 'இறை நாமம்' சொல்லுங்கள். நான் சொல்வது, மத சம்பந்தமான விஷயமல்ல. யோக சம்பந்தமான விஷயம். அதாவது, மனதை அடக்கி ஆள்கிற விஷயம், இறை

நாமத்தைத் திரும்பத் திரும்பச் சொல்கிறபோது மனது அடங்கி ஒரு அமைதி ஏற்படுகிறது. அந்த அமைதியால் பார்வை திசை மாறுகிறது. பார்வை திசை மாறுதலால், பழகுவது எப்படி என்று தெரிகிறது.

மனத்தெளிவு வந்த பிறகு, நீங்கள் எந்தக் காரியம் செய்தாலும் அது சீராக இருக்கும். அவ்வாறு காரியம் சீராகச் செய்யப் பழகிவிட்டால், அதிர்ஷ்டக் காற்று அழைக்கும்போது நீங்கள் நிச்சயம் உச்சிக்குப் போய்விடுவீர்கள்.

உழைப்பவர்களுக்கு அதிர்ஷ்டம் ஏற்படும்போது, அவர்களுடைய வாழ்க்கை உன்னதமான இடத்துக்கு உறுதியாகப் போய் அமர்ந்து கொள்கிறது. இந்த மாதிரி உறுதியான, உன்னதமான இடம் உங்களுக்குக் கிடைக்க வேண்டும். அன்று என் சத்குருநாதர் யோகி ராம் சுரத் குமார் அவர்களைப் பிரார்த்தித்து, இந்தக் கட்டுரையை இதோடு முடித்துக் கொள்கிறேன்.


சொல்ல இன்னும் அதிக விஷயங்கள் உள்ளன. ஏனெனில், நான் அதிகம் பட்டிருக்கிறேன். உங்கள் எல்லாரையும்விட மிக மோசமான, தாழ்ந்த நிலையில் இருந்து மெள்ள மெள்ள மேலேறி வந்து இருக்கிறேன். எனவே, வாழ்க்கை என்பது என்ன என்று எனக்கு நன்கு தெரியும்

என்னுடைய வாழ்க்கையை, என் அனுபவங்களை உங்களோடு பங்கிட்டுக் கொள்வதுபோல, உங்களோடு பகிர்ந்து கொள்வது போல ஒரு சந்தோஷம் எனக்கு இந்த உலகத்தில் வேறெதுவும் இல்லை.

வணக்கம்.

**முற்றும்**

# எனக்குள் பேசுகிறேன்...



விசா பப்ளிகேஷன்ஸ்

## பாலகுமாரன்